வருட75 இல. 16 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
தினகரன் வாரமஞ்சரி
24 பக்கங்கள் 100/-
2023 ஏப்ரல் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
April 23 Sunday, 2023
















## பொருளாதார முன்னேற்றத்தில் தனியார் துறைக்கு பங்குண்டு

**'பிஸ்னஸ் டுடே' விருது விழாவில் ஜனாதிபதி அழைப்பு**



இலங்கையின் பொருளாதாரத்தை வலுவாக்குவதற்கான பொருளாதார முகாமைத்துவக் கொள்கை தயாரிப்பு பணிகள் எதிர்வரும் மாதத்துக்குள் நிறைவு செய்யப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

06

## அரசின் நலன்புரி திட்டத்தின் கொடுப்பனவு ஜூலை முதல்

**அதிவிசேட வர்த்தமானி வெளியானது**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு திட்டத்தை ஜூலை முதலாம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

06

## A/L தமிழ்மொழி விடைத்தாள் திருத்தும் பணிகள் ஆரம்பம்



உயர்தரப் பரீட்சை தமிழ் மொழி மூல விடைத்தாள்களைத் திருத்துவதற்கான முதற்கட்டப் பணிகள் கடந்த 21ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்து சமயம், கிறிஸ்தவம், இந்து நாகரிகம், பரதநாட்டியம், கீழைத்தேய சங்கீதம், கர்நாடக சங்கீதம், மேற்கத்திய சங்கீதம், சித்திரம், நாடகமும் அரங்கியலும் மற்றும் ஹிந்தி ஆகிய

06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்

## முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும்

**பேராயர் கர்தினால் மெல்கம் தெரிவிப்பு**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முழுமையான விசாரணைக்குச் செல்ல வேண்டுமென அரசாங்கத்திடமும் சட்ட மாஅதிபரிடமும் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

06

### 03 மாதங்களுக்குள் போக்குவரத்துத்துறையில் QR முறைமை

# டிஜிட்டல் மயமாகும் ரயில், பஸ் பயணச்சீட்டு ஆசன முன்பதிவு

## ஊழல், மோசடிகளை தடுத்து கடமைகளை இலகுவாக்க திட்டம்

**போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்



மூன்று மாத காலத்துக்குள், பஸ்கள் மற்றும் ரயில்களுக்கும் QR முறைமையை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பொதுப் போக்குவரத்துத் துறையை சிறந்த பயனுள்ளதாக முன்னேற்றுவதற்கும் ஊழல் மோசடிகளை இல்லாதொழிக்கும் நோக்கிலும் மூன்று மாதங்களுக்குள் பயணிகள் பஸ் மற்றும் ரயில் பிரயாணச்சீட்டுக்களை விநியோகித்தல், ஆசனங்களைப் பதிவு செய்தல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் QR முறைமையின் கீழ் மேற்கொள்ளும் வகையில் முழுமையான டிஜிட்டல் மயப்படுத்தலுக்குட்படுத்த தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

06



இலங்கை மேமன் சங்கம் ஏற்பாடு செய்த "ஈதுல் பித்ர்" ரமழான் பெருநாள் தொழுகை மற்றும் குத்பா பிரசங்கம் நேற்று கொழும்பிலுள்ள மேமன் சங்கத் தலைமையகத்தில் நடைபெற்றது. மௌலவி முப்தி முஸ்தபா ராசா, பெருநாள் தொழுகை மற்றும் பிரசங்கம் நடத்தியபோது... (படம் ருஸைக் பாரூக்)



நாட்டிலுள்ள சகல அரச நிறுவனங்களிலும்

## தமிழ்,சிங்கள மொழிகளிலும் சேவைகளைப் பெற வசதி

06



## அரசில் இணையும் செய்திக்கு மறுப்பு

**பொய் என்கிறார் மனோ எம்.பி**

06



அக்குறணையில் தாக்குதல் நடக்கும்

## பொய்யான தகவல் வழங்கியவர் கைது

06

## SLPP யின் புதிய தலைவராக தேரர்

**GL க்கு பதிலாக உதுருவெல தம்மரத்ன தேரர்**



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியிலிருந்து ஜீ.எல். பீரிஸ் நீக்கப்பட்டு புதிய தவிசாளராக உதுருவெல தம்மரத்ன தேரர் நியமிக்கப்பட்டுள்ளதாக கட்சி அறிவித்துள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வருடாந்த பொதுக் கூட்டம் நேற்று

06

## TID யில் ஆஜராகுமாறு தப்புலவுக்கு அறிவிப்பு

**நாளை முன்னிலையாகுமாறு அழைப்பு**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில், வாக்குமூலம் வழங்குவதற்காக நாளை 24ஆம் திகதி பயங்கரவாத விசாரணைப் பிரிவில் ஆஜராகுமாறு முன்னாள் சட்ட மாஅதிபர் தப்புல டி லிவேராவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நாளையும் அவர் ஆஜராகாவிட்டால்,

06

## யாழ். நெடுந்தீவில் நேற்று கொடூரம்

# 02 ஆண்கள், 03 பெண்கள் வெட்டிக் கொலை

**ஒரு பெண் படுகாயங்களுடன் உயிர் தப்பினார்**



**குற்றவாளிகளை உடன் கைது செய்யுமாறு அமைச்சர் டக்ளஸ் பணிப்பு**

**நெடுந்தீவு படகுச்சேவை நிறுத்தம்**



யாழ்.விசேட, யாழ்.குறூப் நிருபர்கள்

யாழ்.நெடுந்தீவு பகுதியில் நேற்று அதிகாலை இரண்டு ஆண்களும் மூன்று பெண்களும் ஒரே வீட்டில் கொடூரமான முறையில் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை

06






# கைத்தொழில் அமைச்சு

## தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்வதற்கான ஒரு அறிய வாய்ப்பு....

**இலங்கையின் கைத்தொழில் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் நிர்வாகத்தின் கீழ் பின்வரும் பகுதிகளில் நிறுவப்படவுள்ள புதிய கைத்தொழிற்பேட்டைகளில் அல்லது நிறுவப்பட்ட கைத்தொழில் பேட்டைகளில் உள்ள வெற்று நிலங்களில் சூழலுக்கு உகந்த கைத்தொழில் திட்டங்களை ஆரம்பிப்பதற்காக தகுதிவாய்ந்த முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

### அமைக்கப்படவுள்ள கைத்தொழிற்பேட்டை

| இல. | தொழிற்பேட்டையின் பெயர் | மாவட்டம் | பிரதேச செயளாலர் பிரிவு | நிலத்தின் பரப்பளவு (ஏக்கர்) | எதிர்பார்க்கப்படும் முதலீட்டின் தன்மை |
|---|---|---|---|---|---|
| 01 | அலுத்தாபொல கைத்தொழிற்பேட்டை | கம்பஹா | திவுலபிட்டிய | 07 | நடுத்தர அளவிலான கலப்பு முதலீடுகள் |
| 02 | கட்டுநாயக்கா கைத்தொழிற்பேட்டை | கம்பஹா | கட்டான | 100 | தன்னியக்க மற்றும் நிறுவல் முதலீடுகள் |
| 03 | ரிதிபெந்தி அல்ல கைத்தொழிற்பேட்டை | குருணாகல் | மஹவ | 23 | கலப்பு முதலீடுகளுக்காக |
| 04 | தம்புள்ளை கைத்தொழிற்பேட்டை | மாத்தளை | தம்புள்ள | 24 | விவசாயம் தொடர்பான பொருட்கள், உணவு மற்றும் முதலீடுகள் |
| 05 | சந்தமல்கம கைத்தொழிற்பேட்டை | அனுராதபுர | ரம்பாவ | 16 | கலப்பு முதலீடுகள் |
| 06 | புலத்சிங்ஹல கைத்தொழிற்பேட்டை | களுத்துறை | புலத்சிங்ஹல | 4.5 | கலப்பு முதலீடுகள் |
| 07 | சூரியவெவ கைத்தொழிற்பேட்டை | ஹம்பாந்தோட்டை | சூரியவெவ | 20 | கலப்பு முதலீடுகள் |

### ஏற்கனவே நிறுவப்பட்ட கைத்தொழிற்பேட்டைகளில் காணப்படும் வெற்று நிலங்களின் விபரங்கள்.

| இல. | தொழிற்பேட்டையின் பெயர் | மாவட்டம் | பிரதேச செயளாலர் பிரிவு | லொட் இல. | வெற்று நிலத்தின் பரப்பளவு |
|---|---|---|---|---|---|
| 01 | களுத்துறை (புல்லர்டன்) தொழிற்பேட்டை | களுத்துறை | களுத்துறை | 570 பிரிவு ஒன்று | 20 பர்ச் நிலப் பகுதி 01 |
| | | | | லொட் 530/2/2 | 84 பர்ச் நிலப் பகுதி 01 |
| 02 | நாலந்த எல்லாவல - தொழிற்பேட்டை பிரிவு II | இரத்தினபுரி | குருவிட்ட | B A லொட் | 80 பர்ச் நிலப் பகுதி 01 |
| 03 | எம்பிலிபிட்டிய தொழிற்பேட்டை | இரத்தினபுரி | எம்பிலிபிட்டிய | லொட் 01 | 76 பர்ச் நிலப் பகுதி 01 |
| | | | | லொட் 26 | 104 பர்ச் நிலப் பகுதி 01 |
| | | | | லொட் 04 | 180 பர்ச் நிலப் பகுதி 01 |
| 04 | தங்கொட்டுவ தொழிற்பேட்டை | புத்தளம் | தங்கொட்டுவ | லொட் 02- B | 01 ஏக்கர் 11.30 பர்ச் நிலப் பகுதி 01 |
| 05 | புத்தளம் தொழிற்பேட்டை | புத்தளம் | புத்தளம் | லொட் 20 -B | 40 பர்ச் நிலப் பகுதி 01 |
| | | | | லொட் 23-D | 120 பர்ச் நிலப் பகுதி 01 |
| 06 | மினுவாங்கொட தொழிற்பேட்டை | கம்பஹா | மினுவாங்கொட | லொட் 01 | 29 பர்ச் நிலப் பகுதி 01 |
| 07 | மன்னார் தொழிற்பேட்டை | மன்னார் | மன்னார் | லொட் 04, 05, 11, 12, 15, 16, 19, 20 மற்றும் 23 | 73-100 பர்ச் நிலப் பகுதி 09 |
| | | | | லொட் 03,10,13,14,17, 18, 21 லொட் 22 | 100-195.2 பர்ச் நிலப் பகுதி 08 |
| 08 | வெலிஓயா தொழிற்பேட்டை | முல்லைத்தீவு | வெலிஓயா | லொட் 05, 06, 07, 08 மற்றும் 09 | 05 ஏக்கர் நிலப் பகுதி 05 |
| | | | | லொட் 10 | 08 ஏக்கர் நிலப் பகுதி 01 |
| 09 | திருக்கோணமலை தொழிற்பேட்டை | திருக்கோணமலை | நகரம் மற்றும் கிரவட்ஸ் | லொட் 12, 13, 14, 15, 28, 29 மற்றும 30 | 01 ஏக்கர் நிலப் பகுதி 07 |
| | | | | லொட் 11 | 2.5 ஏக்கர் நிலப் பகுதி 01 |
| 10 | நவகம்புர தொழிற்பேட்டை | அம்பாறை | அம்பாறை | லொட் 13-A, 17, 18, 46, 47 மற்றும் 48 | 12-40 இடையில் ஏக்கர் நிலப் பகுதி 06 |
| 11 | மட்டக்களப்பு தொழிற்பேட்டை | மட்டக்களப்பு | மன்முனை வடக்கு | லொட் 16 - A | 80 பர்ச் நிலப் பகுதி 01 |
| | | | | லொட் 02, 03, 05, 06, 10, 14, 15 மற்றும் 22 | 01 ஏக்கர் நிலப் பகுதி 08 |
| 12 | கரந்தெனிய தொழிற்பேட்டை | காலி | கரந்தெனிய | லொட் 01 மற்றும் 19 | 01-2.5 ஏக்கர் நிலப் பகுதி 02 |
| | | | | லொட் 07A, 10, 12, 15, 17, 20, 25 மற்றும் 36 | 40 - 130.8 பர்ச் இடையில் நிலப் பகுதி 08 |
| 13 | பட்டஅத்த தொழிற்பேட்டை | ஹம்பாந் தோட்டை | அம்பலாந் தோட்டை | லொட் 02, 5 B மற்றும் 19 | அண்ணளவாக 01 ஏக்கர் நிலப் பகுதி 03 |
| | | | | லொட் 01, 22, 26 மற்றும் 28 | அண்ணளவாக 02 - 04 ஏக்கர் நிலப் பகுதி 04 |
| | | | | லொட் 10B, 10C, 12B, 21, 22 மற்றும் 24 | 50 - 130 ஏக்கர் நிலப் பகுதி 04 |
| 14 | புத்தல தொழிற்பேட்டை | மொனராகலை | புத்தல | லொட் AM, AN, X, S மற்றும் AQ | 40 - 140 ஏக்கர் நிலப் பகுதி 05 |

**மூன்றவத்தை மின்சாரம், நீர், அகன்ற பாதையமைப்பு உள்ளடங்கலாக அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பல்துறை கைத்தொழிற்பேட்டையாக நிறுவப்படவுள்ள இக் கைத்தொழில் வலயங்களில் முதலீடு செய்யவுள்ள உங்களுக்கு,**

- தகுதிவாய்ந்த முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- கைத்தொழிலிற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் (மூன்றவத்தை மின்சாரம், நீர், அகன்ற பாதையமைப்பு)
- கைத்தொழில்களை ஆரம்பித்தல் மற்றும் நடாத்திச் செல்வது தொடர்பில் ஏனைய அரச நிறுவனங்களுடன் மேற்கொள்ள வேண்டிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்.
- மின்சாரத்தைப் பெற்றுக்கொள்கையில் கைத்தொழில்களுக்காக வழங்கப்படும் சலுகைக் கட்டண முறையை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு

**பின்வரும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்**

I. ஏற்றுமதி சார்ந்த தொழில்கள் அல்லது இறக்குமதி மாற்றீட்டின் மீதான தொழில்களுக்கான முதலீடுகள்.

II. ஏற்கனவே அந்தந்த பகுதிகளில் வெற்றிகரமான தொழில்களை நடத்தி வரும் நுண், சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான தொழில்முனைவோரின் முதலீடுகள்.

III. ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் தனித்துவ பாரம்பரிய கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் பிராந்தியத்திற்குரித்தான விசேட மூலப்பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யும் தொழில்முனைவோரின் முதலீடுகள்

IV. தேசிய பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தவல்ல தொழில்நுட்பத்தை மையப்படுத்திய முதலீடுகள்

V. வெளிநாடுகளில் வதியும் இலங்கைப் பிரஜைகள் உழைத்த வெளிநாட்டு நாணயத்தினூடு இலங்கையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள்

**புதிய தொழிற்பேட்டைகள் மற்றும் ஏற்கனவே நிறுவப்பட்ட தொழிற்பேட்டைகளில் உமது கைத்தொழில்களை தொடங்க அல்லது வணிகத்தை விரிவுபடுத்த விரும்பின், 2023.05.23 திகதிக்கு முன்னர் அமைச்சின் இணையத்தளத்தில் காணப்படும் விண்ணப்பத்துடன் திட்ட அறிக்கையொன்றை இவ் அமைச்சிற்கு அனுப்பி வைக்கவும்.**

**தகவல்களை பெற்றுக்கொள்ளும் முகவரி : -**

பணிப்பாளர் (கைத்தொழில் அபிவிருத்தி)
கைத்தொழில் அமைச்சு, இல 73/1, காலி வீதி,
கொழும்பு 03.
மின்னஞ்சல் – idmic110@gmail.com

**மேலதிக தகவலகளை பெற்றுக்கொள்வதற்கு :-**

பிரதிப் பணிப்பாளர் (கைத்தொழில் அபிவிருத்தி) 0112322782
உதவிப் பணிப்பாளர் (கைத்தொழில் அபிவிருத்தி) 0112343937
இணைய முகவரி - www.industry.gov.lk

விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்காக

**செயலாளர் (கைத்தொழில் அமைச்சு)**

# சிறப்பாக நடைபெற்ற 'வாழ்வின் ஊடாக எமது பார்வை'



இளைஞர்களை மாற்றத்தின் பால் இட்டுச்செல்லத் தூண்டும் "எமது கண்களின் ஊடாக எமது வாழ்வு" இரத்தினபுரி மாவட்டக் கலைத் தொகுப்பு இயக்கத்தின் பங்களிப்பில் இலங்கையில் சமூக ஒத்திசைவையும் சமாதானத்தையும் வலுப்படுத்துதல் (SCOPE) என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக அண்மையில் இரத்தினபுரியில் முன்னெடுக்கப்பட்ட எமது வாழ்வின் ஊடாக எமது பார்வை நிகழ்வின்போது "ஒரு தேநீர் கோப்பையை தயாரிப்பது எவ்வளவு சிரமமானது" என்ற தொனிப்பொருளில் ஒரு இளம் மாணவன் எழுதிய பாராட்டுக் குறிப்பு அனைவரையும் கவர்ந்தது.

இரத்தினபுரி இளையநிலா, குறிஞ்சிக் கதிர் இசைக்குழு, ரவிபந்து வித்தியாபதி மற்றும் வளர்ந்து வரும் கலைஞர் குழுக்கள் என்பவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டு இம்மாதம் 4, 5, 6ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட பராக்கிரம நீரியெல்ல இசை நிகழ்ச்சியில், தே கஹட்ட/தேயிலைச் சாயம் கண்காட்சி இடம்பெற்றதோடு, தித்த கஹட்ட நாடகமும் மேடையேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 28 தோட்டங்களினதும் 10 அரச அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் 25 பாடசாலைகளின் மாணவர்களும் உள்ளடங்கலாக 6400இற்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

மலையகமக்களின் (மலையகத் தமிழர்கள்) தொழில் முயற்சிகளை பாராட்டுவதற்காகவும் அங்கு வாழும் பல்லின மக்களுக்கு மத்தியில் அவர்களின் உரிமைகளுக்கு ஆதரவளிப்பதற்காகவும், பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காகவும், இலங்கையில் சமூக ஒற்றுமைக்கான முக்கிய தடைகளை களைவதற்கான கூட்டுப் பங்களிப்பை ஊக்குவிப்பதற்காகவும் இந்நிகழ்வு லெல்லோபிட்டியவில் இடம்பெ ற்றது.

ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி நடை பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), ஊவா சக்தி அமைப்பு, சுயசக்தி மன்றம் மற்றும் சுற்றாடல் சமூக அபிவிருத்தி தகவல் நிலையம் ஆகியன அடங்கலாக இந்த நிகழ்ச்சித்திட்டத்துடன் சம்பந்தப்படும் அமைப்புகளின் பிரதிநிதிகளும், மாவட்டத்தின் பாடசாலை அதிபர்களும், மதத் தலைவர்களும், சிரேஷ்ட நீதிபதிகளும், மருத்துவர்களும், சட்டத்தரணிகளும் இதில் கலந்துகொண்டனர்.

# துணை உயர் ஸ்தானிகராலயத்தில் 'இப்தார்'



சென்னையில் உள்ள இலங்கை துணை உயர் ஸ்தானிகராலயம் நேற்று ஏப்ரல் 21 அன்று துணை உயர்ஸ்தானிகராலய வளவில் 'இப்தார்' நிகழ்வை ஏற்பாடு செய்தது. நோன்பு துறப்புடன் ஆரம்பமான இந்நிகழ்வில், திருக்குர்ஆன் ஓதப்பட்டதுடன், சென்னை மந்தைவெளி ஈத்கா மஸ்ஜித் தலைமை இமாம் மௌலானா கே.எம். இல்யாஸ் ரியாஜியின் சொற்பொழிவும் இடம்பெற்றது. 'இப்தார்' நிகழ்வில் கலந்துகொண்ட பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி டி. வெங்கடேஷ்வரன், விருந்தினர்களுக்கு நன்றி தெரிவிக்கையில், அனைத்து மதங்கள் மற்றும் இனங்களின் விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

# கலைஞர் கலைக்கமலுக்கு தங்கப் பதக்கம்



ஜனரஞ்சகப் பாடகர் கலாபூஷணம் கலைஞர் கலைக்கமல் எதிர்வரும் 28ஆம் திகதி மாலை 6 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் தங்கப்பதக்கமும் விருதும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார். கலாபூஷணம், விசாரத ஏ. மகேந்திரனின் நெறியாள்கையில் ஆனந்த சமரகோன் மண்டபத்தில் நடைபெறும் "மதுர கீதம்" மாபெரும் இசை நிகழ்ச்சியில் (தென்றலில் நேரடியாக ஒலிபரப்பாகும்) இந்த கௌரவம் வழங்கப்படவுள்ளது.

கலைஞர் கலைக்கமல் 40 ஆண்டுகளாக இசை, எழுத்து, கவிதைத் துறைகளில் பிரபலமாகி வருகிறார். இலங்கை, இந்தியா உட்பட ஐரோப்பிய நாடுகளில் பல நிகழ்ச்சிகளில் பாடியுள்ளார். இலங்கையின் தேசிய விருது கலாபூஷணம் விருதை 2021ஆம் ஆண்டு பெற்ற இவர், இந்திய தமிழ்நாடு கும்பகோண இலக்கிய, இசை மாநாட்டில் "இசைச்சுடர்" விருதும் பெற்றவராவார்.

வானொலி, தொலைக்காட்சி, மேடைப் பாடகரான கலைஞர் கலைக்கமல் இதுவரை 6000க்கும் மேற்பட்ட இசைநிகழ்ச்சிகளில் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வீசிய கடும் காற்றினால் வீடுகளுக்கு சேதம்



சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட முத்துஐயன்கட்டு கிராம அலுவலர் பிரிவில் ஜீவநகர் மாதிரி கிராமத்தில் வீசிய கடும் காற்றினால் வீடுகள் சில சேதமடைந்துள்ளன. நேற்று மாலை கடும் காற்றும் மழையும் பெய்துள்ள நிலையில் வீசிய கடும் காற்றினால் வீடு ஒன்றின் கூரையில் பொருத்தப்பட்டிருந்த 12 சீற்கள் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன் வீடு சேதமடைந்துள்ளது.

முத்துவிநாயகபுரம் பகுதியில் வசித்து வரும் தனபாலசிங்கம் வசந்தாதேவி என்பவரின் வீடே இவ்வாறு காற்றினால் சேதமடைந்துள்ளது. இதேவேளை கிராமத்தில் உள்ள மேலும் சில வீடுகள் சேதமடைந்துள்ளதாக மக்கள் தெரிவித்தனர். ஓடுகள் தூக்கிவீசப்பட்டுள்ளதுடன் தற்காலிக கொட்டிலில் வசித்து வரும் குடும்பம் ஒன்றின் வீடும் காற்றினால் சேதமடைந்துள்ளது.

கடும் வெப்பம் நிலவிய நிலையில் இரண்டு தினங்களாக குறித்த பகுதியில் கடும் காற்றும் மழையும் பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






**பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் எமக்கேற்ற தீர்வாக அமையாவிடினும் எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் முதலில் அதனை நடைமுறைப்படுத்துவதில் கரிசனை காட்ட வேண்டும் என்கிறார் வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன். தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய பேட்டியில் , 13ஐ நீக்குங்கள் எமக்கு சமஷ்டி கிடைக்கும் என்று கனவு காண்பவர்கள் தொடர்ந்து கனவுலகத்திலேயே சஞ்சரிக்க வேண்டியிருக்கும் என்றும் எச்சரிக்கின்றார். அவர் வழங்கிய முழுமையான பேட்டி வருமாறு.....**



# 'அரசியலில் இவையெல்லாம் சகஜம்'

## என்று நான் சொன்னதாக என்னை அடையாளப்படுத்துங்கள்

வாசுகி சிவகுமார்

**கே: தமிழ் மக்கள் ஒற்றுமையையே வலியுறுத்தி வந்துள்ளார்கள். ஆனால் தற்போது தமிழ் மக்கள் மத்தியில் நிறைய கட்சிகள், அரசியல் கூட்டுகள் உருவாகி இருக்கின்றன. தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியை இது மழுங்கடிக்கச் செய்யும் என்று பரவலாக சொல்லப்படுகிறதே?**

பதில்: முன்னர் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் ஒன்று சேர்ந்து இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சினைகள் பற்றிப் பேசியது உங்களுக்கு நினைவிருக்கலாம். பிரச்சினைகள் அதிகமாகி தமிழ் மக்களின் வருங்காலம் கேள்விக்குரியதாகும் போது முரண்பட்ட கட்சிகள் ஒன்று சேரும். தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் பாராளுமன்றத்தில் ஒன்று சேர்ந்து சில முடிவுகளை எடுத்து அவற்றை நடை முறைப்படுத்தலாம் என்று மனோ கணேசன் கூறியுள்ளார். குறிப்பிட்ட விடயங்களில் முரண்பட்ட கட்சிகள் சேர்ந்து முடிவெடுப்பதிலும் கூட்டு நடவடிக்கைகளில் இறங்குவதிலும் பிழையில்லை.

சுயநலம் எம் கட்சிகள் ஒவ்வொன்றையும் வழிநடத்தும்போது ஒற்றுமை பற்றிப் பேசுவது சிரமமாகத் தான் இருக்கும். ஆனால் முரண்பட்டிருக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒவ்வொன்றின் குறிக்கோள்களையும் எடுத்துப் பார்த்தீர்களானால் அவற்றுள் ஒற்றுமை இருப்பதை நீங்கள் அவதானிப்பீர்கள். அடிப்படையில் ஒவ்வொரு வட, கிழக்கு தமிழ்த் தேசியக் கட்சியினதும் குறிக்கோள் சமஷ்டியே. அதாவது வட, கிழக்கிற்கு சமஷ்டி முறையான அரசாங்கம் ஒன்று நிறுவப்பட வேண்டும் என்பதே. உண்மையில் எமது தமிழ் மக்கள் கூட்டணி மட்டுமே கூட்டு சமஷ்டி முறையை முன் வைத்திருந்தது.

ஆகவே அடிப்படை ஒற்றுமை இருக்கும் போது, நெருக்குதல்கள் எமக்கெல்லாம் எழும் போது நாம் யாவரும் சேர்ந்து செயலாற்றுவது இன்றியமையாததாகிவிடும். அப்பொழுது பேரம் பேசும் சக்தியை நாம் பெற்று விடுவோம்.

**கே: அவ்வாறு புதிய கட்சிகளும் கூட்டுக்களும் உருவாவது தமிழ் மக்களை குழப்பத்திற்கு தள்ளி விடாதா?**

பதில்: மக்கள் பொதுவாக சுயநலத்துடன் தான் சிந்திக்கின்றார்கள். எவ்வளவு தான் நாங்கள் தமிழ்த் தேசியம் பற்றிப் பேசினாலும் அரசு சார்புக் கட்சிகள் “அதைத் தருவோம் இதைத் தருவோம்” என்றதும் எம்முள் பலர் அவர்களுக்கு வாக்களிக்கின்றார்கள். மக்கள் குழப்பமடைந்து இருப்பது உண்மையே. எமது தமிழ்த் தேசியக் கட்சிகள் மக்களின் நாளாந்த நலனையும் மக்கள் தேவைகளையும் கருத்தில் கொண்டே அரசியல் நடத்த வேண்டும். எந்தக் கட்சி மக்களைப் புரிந்து கொண்டு நடந்து கொள்கின்றதோ அதுவே வெற்றிவாகை சூடும். ஆனால் பிழையான, பொய்யான வாக்குறுதிகளைக் கொடுப்பவர்களை மக்கள் அடையாளம் கண்டு விடுவர்.

**சுயநல அரசியல் அப்படித்தான் இருக்கும்**

**கூட்டமைப்பு உடைந்துள்ளது**

**புதிய கூட்டுக்கள் உருவாகியுள்ளன**

**ஒவ்வொரு வட, கிழக்கு தமிழ்த் தேசியக் கட்சியினதும் குறிக்கோள் சமஷ்டியே**

**எமது தமிழ் மக்கள் கூட்டணி மட்டுமே கூட்டு சமஷ்டி முறையை முன்வைத்திருந்தது.**

**மகாநாயக்க தேரர்களுக்கு பகிரங்க கடிதம் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் அனுப்பினேன்.**

**13ஐ நீக்குங்கள் எமக்கு சமஷ்டி கிடைக்கும் என்று கனவு காண்பவர்கள் தொடர்ந்து கனவுலகத்திலேயே சஞ்சரிக்க வேண்டியிருக்கும்.**



**கே: நீங்களும் பாராளுமன்ற உறுப்பினராக ஒரு கட்சியிலும் உள்ளூராட்சி தேர்தலில் இன்னொரு கூட்டிலும் இணைந்து இருக்கின்றீர்கள். உங்களை எவ்வாறு அடையாளப்படுத்திக் கொள்ளலாம்?**

பதில்: “அரசியலில் இவையெல்லாம் சகஜம்” என்று நான் கூறியதாக என்னை அடையாளப்படுத்துங்கள்! கூட்டமைப்பு உடைந்துள்ளது. புதிய கூட்டுக்கள் உருவாகியுள்ளன. சுயநல அரசியலில் இது இவ்வாறு தான் நடக்கும். மாற்ற முடியாது. இருந்து நடக்கப் போவதைப் பார்த்துக் கொண்டிருங்கள். நாங்கள் எப்படி நடந்து கொண்டாலும் மக்கள் தான் தீர்ப்பு தருவார்கள்.

**கே: தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு எவ்வாறானதாக இருக்க வேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்? நீங்கள் கருதும் தீர்வின் சாத்தியத் தன்மை என்ன?**

பதில்: சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு அடிபணியாது சிங்கள மக்களை சகோதரத்துவத்துடன் நோக்கும் ஒரு தீர்வையே நான் எதிர்பார்க்கின்றேன்.

**கே: 13வது சட்ட திருத்தத்தை முழுமையாக அமுல் செய்வது குறித்து தெற்கின் பல தரப்பினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளில் நீங்கள் ஈடுபடுவதாகச் சொல்லி இருக்கின்றீர்கள். அதன் நிலைமை தற்போது எவ்வாறு இருக்கின்றது?**

பதில்: அதன் தொடர்ச்சியாகத் தான் மகாநாயக்க தேரர்களுக்கு பகிரங்க கடிதம் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் அனுப்பினேன். அவர்கள் பதில் போடவில்லை. ஆனால் சிங்கள ஊடகவியலாளர்கள் அதை அறிந்து என்னிடம் விபரங்கள் கேட்டு அவற்றை சிங்கள மக்களிடையே பரப்புகின்றார்கள். அரசாங்கமும் 13வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் விடமாட்டோம் என்ற எண்ணத்தில் இருப்பதாகக் கூறியுள்ளனர்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் எமக்கேற்ற தீர்வாக அமையாவிடினும் எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் முதலில் அதனை நடைமுறைப்படுத்துவதில் கரிசனை காட்ட வேண்டும். இந்தியா 13வது திருத்தச் சட்டம் பற்றி ஐ.நா சபையிலும் எடுத்துரைத்துள்ளது. விரைவில் அமுல் நடவடிக்கைகளில் அரசாங்கம் இறங்கும் என்றே எதிர்பார்க்கின்றேன். அத்துடன் 13ஐ நீக்குங்கள் எமக்கு சமஷ்டி கிடைக்கும் என்று கனவு காண்பவர்கள் தொடர்ந்து கனவுலகத்திலேயே சஞ்சரிக்க வேண்டியிருக்கும்.

**கே: உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் இன்னமும் நடைபெறாத நிலையில் மாகாண சபையின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என நினைக்கின்றீர்கள்?**

பதில்: என் கருத்துப்படி ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மாகாண சபைத் தேர்தல்களும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களும் நடைபெறும்.

**கே: தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார சமூக இருப்புக்கு உங்களிடம் உள்ள வேலைத் திட்டம் என்ன?**

பதில்: பேச்சுவார்த்தைகள்; நெருக்குதல்கள்; புலம்பெயர் உறவுகளின் பங்கீடுகள்; மக்கள் மயப்படுத்தி மக்களின் புரிந்துணர்வை மேம்படுத்தல் என்பன போன்ற பல நடவடிக்கைகள் எமது வேலைத்திட்டத்தினுள் அடங்குகின்றன.

**கே: தங்களுக்கு என்ன வகையான தீர்வு வேண்டும் என்பது குறித்து தமிழ் மக்கள் என்ன நினைக்கின்றார்கள், அவர்களது புரிதல் என்ன?**

பதில்: அடிமைகளாக வாழமாட்டோம். ஆனால் எமது நாட்டை விட்டு ஓடி விடவும் மாட்டோம். எமது பொருளாதார விருத்தியை நாமே மேற்கொள்வோம்.

சமூக ஒற்றுமைக்கு நாம் வழிவகுப்போம்.

எமது இளைஞர்கள் எம்மை வருங்காலத்தில் இலஞ்ச ஊழல் இன்றி நேர்மையாக வழி நடத்திச் செல்வதை நாம் உறுதி செய்வோம் என்று நினைக்கின்றார்கள்.

# தற்போதைய உஷ்ணமான காலநிலை: எம்மை பாதுகாக்க இலகுவான வழிமுறைகள்

**இலங்கை போன்ற வெப்பநிலை நாடுகள் வருடமொன்றுக்கு இரண்டு தடவைகள் வெப்பநிலை மாற்றங்களை எதிர்நோக்க நேரிடுவதுடன், மார்ச் 11ஆம் திகதி முதல் ஏப்ரல், மே மாதங்கள் வரையான காலப்பகுதியிலும் ஓகஸ்ட் 15ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியிலும் கடுமையான வெப்பநிலை மாற்றங்களை எதிர்நோக்க நேரிடுகின்றது. அந்த வகையில், இம்முறை எமது நாட்டில் ஏப்ரல் 25ஆம் திகதிவரை 42 பாகை செல்சியஸ் வரை வெப்பநிலை அதிகரிக்கக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.**

அத்துடன், வெப்பநிலை அதிகரித்த நேரமாக முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை காணப்படுகின்றது. வெப்பம் அதிகமாகக் காணப்படும் இக்காலப் பகுதியில் புற ஊதாக் கதிர்களின் செறிவும் அதிகளவில் காணப்படக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது. இம்முறை வெப்பமான காலநிலை மாற்றமானது, பெப்ரவரியின் நடுப்பகுதியிலிருந்து உருவாகியிருப்பதை அவதானிக்க முடிவதுடன், சூரியக் கதிர்களின் தாக்கம் அதிகரித்து மேகங்கள் மற்றும் காற்று மிகவும் குறைவாகக் காணப்படுவதாலேயே, இலங்கையில் தற்போது அதிகரித்த உஷ்ணமான காலநிலை நிலவுகின்றது.

எமது நாட்டில் வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களிலும் மொனராகலை, குருநாகல் மாவட்டங்களிலும் அதிகரித்த உஷ்ணமான காலநிலை நிலவுவதுடன், இவற்றில் வட மாகாணத்தில் அதிகரித்த உஷ்ணத்தின் தாக்கத்தையும் உணர முடியும். இந்த உஷ்ணமான காலநிலையினால் சுற்றுச்சூழல், மனிதர்கள், நீர்நிலைகள் உள்ளிட்டவை பாதிப்பை எதிர்நோக்க வேண்டிய நிலைமை காணப்படுவதினால், உஷ்ணமான காலநிலையிலிருந்து எம்மையும் சுற்றுச்சூழலையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய கடப்பாடு எமது கைகளில் இருக்கின்றது.



Dr. குணசிங்கம் சுகுணன்

இந்த உஷ்ணமான காலநிலையினால் நாம் எதிர்நோக்கும் பாதிப்புகள் தொடர்பாகவும், அந்தப் பாதிப்புகளிலிருந்து எம்மை பாதுகாத்துக்கொள்வதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் மருத்துவருமான குணசிங்கம் சுகுணன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார கல்வி அதிகாரி ஏ.ஜெயபாலனும் விழிப்புணர்வூட்டியுள்ளனர்.

**அவை தொடர்பாக நோக்குவோம்....**

மனிதர்களை பொறுத்தவரையில் அவர்களின் உடம்பில் வியர்க்குருபருக்கள், சிவப்பு நிறத்திலான கொப்பளங்கள் தோன்றுவதற்கு வாய்ப்புக் காணப்படுவதுடன், இவை கழுத்து, முழங்கை மடிப்பு, மார்புப் பகுதிகளில் தோன்றுவதற்கு வாய்ப்புக் காணப்படுகின்றது. அத்துடன், எமது தோல் தீக்காயம் போன்று நோவுடன் சிவந்தும் காணப்படலாம். தசைப்பிடிப்பு மற்றும் தசைநோ, வாந்தி, குமட்டல், மயக்கம், தலைச்சுற்று, தலைவலி, பலவீனம், களைப்பு, உடல் சோர்வு, உடம்பில் நீரிழப்பு, அதிகளவான வியர்வை வெளியேற்றம் உள்ளிட்டவை ஏற்படலாம். இவை வெப்ப சோர்வு நிலையென்று மருத்துவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், உஷ்ணமான காலத்தில் அம்மை, பொக்குளிப்பான் உள்ளிட்ட தொற்றுநோய்களும் பரவக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுகின்றது.

இதேவேளை, வெப்ப அதிர்ச்சி நிலை காரணமாக மரணங்களும் சம்பவிக்கக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுவதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளதாக, அவர்கள் இருவரும் தெரிவித்தனர். கர்ப்பிணிகள், கைக்குழந்தைகள், வயது முதிர்ந்தவர்கள், உடல் பருமன் கூடியவர்கள், நோயாளர்கள், உடல் பயிற்சியில் ஈடுபடுபவர்கள், கள வேலைகளில் ஈடுபடுபவர்கள் அதிகூடியளவில் பாதிக்கப்படுபவர்களாக காணப்படுகின்றனர்.

ஆகவே, மேற்படி நோய்க் குணங்குறிகள் தொடர்பாக நாம் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டுமென்பதுடன், உடனடியாக மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும், அவர்கள் தெரிவித்தனர்.

விசேடமாக கட்டுமானத் தொழிலாளிகள், கூலித் தொழிலாளிகள் பாதையோர வியாபாரிகள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் தம்மை உஷ்ணமான காலநிலையிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டுமெனவும், அவர்கள் தெரிவித்தனர்.



வியர்வை வெளியேறுதல் மற்றும் சிறுநீர் கழித்தல் மூலம் எமது உடலில் நீரிழப்பு ஏற்படுவதினால், எப்போதும் தேவையான அளவு நீர்த்தன்மையை எமது உடலில் பேண வேண்டும். நீரிழப்பைக் கட்டுப்படுத்துவதற்காக நாளொன்றுக்கு இரண்டரை முதல் மூன்று லீற்றர் வரை நீர் பருகுவதை வழக்கமாகக் கொண்டிருக்க வேண்டுமென்பதுடன், கொதித்தாறிய நீரை பருகுவது உகந்ததாகும். அத்துடன் இளநீர், நுங்கு, இயற்கை பழச்சாறுகளை பருகலாம். காலபோகத்தில் கிடைக்கும் பழங்களை உட்கொள்ளலாம்.



ஏ.ஜெயபாலன்

இதேவேளை, அதிகளவான சீனி சேர்த்த பழச்சாறுகள், மென்பானங்கள், தேநீர், கோப்பி மற்றும் மதுபானத்தை தவிர்த்தல் எமது ஆரோக்கியத்துக்கு உகந்ததாகுமென்பதுடன், இவற்றினால் தொற்றாநோய்கள் ஏற்படலாமென, மருத்துவர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

ஆடைகளைப் பொறுத்தவரையில் பருத்தி ஆடைகளும் வெள்ளை வர்ண ஆடைகளும் இளம் வர்ண ஆடைகளும் சிறந்தவையாகும். இதேவேளை, கறுப்பு வர்ணம் இலகுவில் வெப்பத்தை உறிஞ்சுவதினால், கறுப்பு வர்ண ஆடைகளை தவிர்த்தல் சிறந்ததாகும். பாரம் குறைந்த, இறுக்கமில்லாத ஆடைகளை அணிவதுடன், கைகள் மற்றும் கால்களை மறைக்கும் வகையில் ஆடைகளை அணிந்து வெளியில் செல்வது சிறந்ததாகும். வெளியிடங்களுக்குச் செல்லும் போது வட்டத் தொப்பிகள் மற்றும் குடைகளைப் பயன்படுத்துவதுடன், கண்களுக்கு கூலிங் கிளாஸ் அணிவது சிறந்ததாகுமென, முல்லைத்தீவு மாவட்ட சுகாதார கல்வி அதிகாரி ஏ.ஜெயபாலன் தெரிவித்தார்.

எப்பொழுதும் குளிர்மையானதும் காற்றோட்டமுள்ளதுமான இடங்களில் இருக்க வேண்டுமென்பதுடன், இரவில் உறங்கும் போது படுக்கையறையில் அகண்ட பாத்திரத்தில் தண்ணீர் நிரப்பி வைத்துவிட்டு உறங்குவது சிறந்ததாகும். குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரண்டு தடவைகளாவது குளிக்க வேண்டுமென்பதுடன், குழந்தைகளை அவ்வப்போது ஈரத்துணியால் துடைப்பதனால் உஷ்ணமான காலநிலையிலிருந்து ஓரளவேனும் எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

எமது வெளி வேலைகளை காலையிலோ, மாலையிலோ மேற்கொள்வது சிறந்ததாகும். மேலும், உஷ்ணம் காணப்படும் நேரத்தில் பாடசாலைகளிலிருந்து வீடுகளுக்கும் தனியார் வகுப்புகளுக்கும் மாணவர்கள் செல்வதால், உஷ்ணத்தின் தாக்கத்திலிருந்து அவர்கள் தம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

மைதானங்களில் விளையாடுவதை தவிர்த்தல் வேண்டுமென்பதுடன், இக்காலப்பகுதியில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதை தவிர்க்க வேண்டுமென்பதும் சுகாதாரத்துறையினரின் வேண்டுகோளாக உள்ளதாகவும், அவர் தெரிவித்தார். குளிரூட்டப்பட்ட அலுவலகங்களில் பணியாற்றுபவர்கள் அடிக்கடி நீரைப் பருக வேண்டுமென்பதுடன், தூர இடங்களுக்கு பயணம் செய்யும்போது, நிழலில் இளைப்பாறி பயணத்தை தொடருதல் சிறந்ததாகுமெனவும், அவர் தெரிவித்தார்.

இவ்வாறிருக்க, விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் உஷ்ணமான காலநிலை பிரச்சினையாக காணப்படுவதுடன், அவற்றுக்கு மனிதர்களாகிய நாம் பாதுகாப்பளிக்க வேண்டும்.



ஆர்.சுகந்தினி



# அரசியல் அரங்கம்

அர்ஜுன்

# சுற்றாடல் மாசடைவதை தடுக்க மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம்!

## அமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட் பேட்டி

**சுற்றாடல் மாசடைவதைத் தடுப்பதற்கு நாட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமானது என சுற்றாடல் அமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட் தெரிவித்தார். சுற்றுச்சூழல் மாசு குறித்தும் அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் எமது நிறுவனத்துடன் அவர் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**



**கே: சுற்றாடல் அமைச்சர் என்ற ரீதியில், சுற்றுச்சூழலைப் பொறுத்தவரை இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் சிரமங்கள் எவை எனக் கருதுகிறீர்கள்?**

பதில்: நாம் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் சிரமங்களால் இலங்கை பாதிக்கப்படக் கூடிய அபாயம் உள்ளது என்பதை முதலில் கூற வேண்டும். ஒவ்வொரு கோணத்திலும் சவால்களை எதிர்கொள்கிறோம். இவ்வாறு ஏற்படும் மாசுக்களால் உடல்நலப் பிரச்சினைகள் அதிகரிக்கும் என்பதை நாம் நன்கு அறிவோம். கடல்வாழ் உயிரினங்களுக்கு பேரழிவு தரும் பிளாஸ்டிக் கழிவுகள் நாம் எதிர்கொள்ளும் பாரியதொரு பிரச்சினையாகும். இதற்கு மேலதிகமாக, காடழிப்பு என்பது இலங்கையில் மாத்திரமன்றி உலகெங்கிலும் காணப்படும் அச்சுறுத்தலான விடயம். இவற்றுக்கும் அப்பால் மணல் அகழ்வு மற்றும் வேட்டையாடுதல் என சூழல் மாசுறுவதற்கான பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. இருந்தபோதும், ஒரு நாடு என்ற ரீதியில் சுற்றுச்சூழல் உணர்வுள்ளவர்கள் நம்மில் உள்ளனர் என்பதையும் நான் சொல்ல வேண்டும். எனவே இது ஒரு நேர்மறையான அம்சமாகும். ஆனால் சவால்கள் மிகப்பெரியவை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

சுற்றுச்சூழல் குறித்து பெரும்பாலானவர்களிடம் விழிப்புணர்வு இல்லை. இப்போது நாம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களில் இதுவும் ஒன்று. இதை ஒவ்வொரு வீட்டுக்கும் எடுத்துச் செல்வது குறித்து நாம் கவனம் செலுத்தியுள்ளோம். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது பற்றிச் சொன்னால், வீட்டையும் வீதிகளையும் சுத்தம் செய்வது என்று சிலர் நினைக்கிறார்கள். அது பிரச்சினையின் ஒரு பகுதி. கடற்கரையை சுத்தம் செய்யும் பல திட்டங்களை நாங்கள் முன்னெடுத்துள்ளோம். ஆனால் பின்னர் அது மீண்டும் மாசுபடுகிறது. நான் முன்பு குறிப்பிட்டதைப் போல சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் இந்த அச்சுறுத்தல்கள் நிச்சயமாக வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

கார்பன் உமிழ்வுகள் நேரடியாக காலநிலை மாற்றத்துடன் இணைக்கப்படலாம் என்பதை நாம் அறிவோம். இலங்கை பாதிக்கப்படுவது போல் வளர்ந்த நாடுகள் பாதிக்கப்படுவதில்லை. 2016 2017 இல் வெள்ளம் ஏற்பட்டது. இலங்கைக்கு ஒரு பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டது. சுமார் 278 உயிர்களை இழந்தோம், 48 பேரைக் காணவில்லை. வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இது ஒரு சிறந்த உதாரணம். எனவே எமது சுற்றுச்சூழலை பாதுகாப்பதும் இந்த சவால்களை வெற்றிகொள்வதும் இலங்கைக்கு மிகவும் இன்றியமையாததாகும். இது ஒவ்வொரு இலங்கையர்களின் கடமையாகும். துரதிர்ஷ்டவசமாக, இந்தச் செய்தி அனைவரையும் சென்றடையவில்லை.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு விடயத்தில் பெரும்பாலான மக்களிடம் விழிப்புணர்வு இல்லை. இப்போது நாம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களில் இதுவும் ஒன்று!**

**கே: இலங்கையில் காடழிப்பு ஒரு பிரச்சினை என்பதை நாம் அறிவோம். நமது சுற்றுச்சூழலுக்கு இந்த அச்சுறுத்தல் மிகவும் தீவிரமானது. இலங்கையில் காடழிப்பைத் தடுக்க என்ன செய்யலாம்?**

பதில்: நாம் யதார்த்தபூர்வமாக செயற்பட வேண்டும். நாம் மக்களை விழிப்புணர்வூட்ட வேண்டும். ஆனால் மனித தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நான் கூறுவேன். மக்களுக்கு மரம் தேவைப்பட்டால் மரங்களை வெட்டுவார்கள். அரசாங்கம் என்ற வகையில் நாம் ஒரு தீர்வை வழங்க வேண்டும். காடழிப்பு முற்றிலும் நிறுத்தப்பட வேண்டும் என்பதை முழுமையாக ஏற்றுக் கொள்கின்றேன். நம் நாட்டில் எத்தனையோ வெற்றுக்காணிகள் காணப்படுகின்றன. காடுகள் அழிக்கப்படும் போது, முடிந்தவரை காடுகளை வளர்க்க வேண்டும். இரண்டு விடயங்களும் சமாந்தரமாக இடம் பெற்ற வேண்டும்.

**கே: நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வளி மாசுபாடு அதிகரித்துள்ளது. இந்தியாவில் ஏற்பட்ட வளி மாசு இலங்கையிலும் பிரச்சினையாக மாறியது. எமது நாட்டின் வளிமாசடைதலைத் தடுக்க என்ன செய்ய முடியும் என நீங்கள் கருதுகின்றீர்கள்?**

பதில்: இந்தியாவில் இருந்து மாத்திரமே என்று நான் கூறமாட்டேன். இந்தியா அண்டை நாடு, காற்று மாசு எங்கிருந்தும் வரலாம். எங்களைப் பாதுகாக்க இதுவரை சர்வதேச சட்டங்கள் இல்லை. ஐக்கிய நாடுகள் மட்டத்திற்கு எடுத்துச் சென்று என்ன செய்ய முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். இது எல்லை தாண்டிய மாசு சட்டமாக இருக்கலாம். ஆனால் அதற்காக நாம் பிரசாரம் செய்ய வேண்டும்.

நாட்டில் இரண்டு இடங்களில் மட்டுமே அதிநவீன காற்று மாசு கருவிகள் உள்ளன. அவை கண்டி மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் உள்ளன. இப்போது ஒவ்வொரு மாகாணத்திலும் ஒன்றை நிறுவ முயற்சிக்கிறோம். இது எங்களுக்கு 100 சதவீத துல்லியத்துடன் உண்மையான தரவை வழங்கும். காற்று மாசுபாட்டை குறைக்க வேண்டும் ஒவ்வொரு கட்டடம் மற்றும் ஒவ்வொரு வீடு, வாகனங்கள் வெளியேற்றும் உமிழ்வுகள், தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் உமிழ்வுகள் முக்கியமாக இலங்கையில் காற்று மாசுபாட்டுக்கு பங்களிக்கின்றன. ஒவ்வொரு அலுவலகத்திலும் காற்றுமாசு கட்டுப்பாட்டு அமைப்பு இருக்க வேண்டும்.

**கே: நன்னீர் மாசுபாடு என்பது ஒவ்வொரு நாடும் எதிர்கொள்ளும் ஒரு பிரச்சினையாகும், இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. முறையான கழிவகற்றும் வசதிகள் இல்லாததால் மனிதக் கழிவுகளும் பிரச்சினையாக உள்ளன. இந்தப் பிரச்சினைக்கு என்ன செய்யலாம்? அமைச்சு எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது?**

பதில்: இயற்கைப் பேரழிவுகள் நீரின் தரத்தை மாற்றலாம். விவசாயத்தில் பூச்சிகொல்லிகள், களைகொல்லிகள் மற்றும் இரசாயன உரங்களை அதிகளவில் பயன்படுத்தும் போது நீர்நிலைகளில் அது மாசுபாட்டை ஏற்படுத்தலாம். வீடுகளில் இருந்து கழிவுநீர் வெளியேற்றம் மனித ஆரோக்கியத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும். சுத்திகரிக்கப்படாத தொழிற்சாலைக் கழிவுநீர் மற்றும் கழிவுகளை அகற்றுவதும் புதிய நீர்நிலைகளில் மாசுபாட்டை ஏற்படுத்துகிறது. இதை ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் கட்டுப்படுத்த வேண்டும். ஒரு உள்ளூராட்சி அமைப்பு வெற்றி பெற்றால் மற்றவை ஏன் வெற்றி பெறக்கூடாது? சில உள்ளூராட்சி அமைப்புகள் தங்கள் கடமைகளைச் செய்கின்றன. நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் மிகவும் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும். இந்தப் பிரச்சினைகளை எப்படிச் சமாளிப்பது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

**கே: ஒலி மாசுபாடும் மக்களை எரிச்சலூட்டுகிறது. இது மக்களை பெரிய அளவில் பாதிக்கிறது. ஒலி மாசுபாட்டைத் தடுக்க என்ன செய்யலாம்?**

பதில்: ஆம், சில சமயங்களில் இது தேவையற்ற முறையில் செய்யப்படுகிறது. மிகக் கடுமையான சட்டங்கள் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இருப்பினும், இதை முற்றிலுமாக ஒழிக்கச் சட்டங்களை அறிமுகப்படுத்துவது சவாலாகவே உள்ளது. இதைக் கட்டுப்படுத்த வேண்டும். ஒவ்வொரு துறையிலும் இதைச் சிறப்பாக செயல்படுத்துவது குறித்து ஆய்வு நடத்தி வருகிறோம். மக்கள் தங்கள் அண்டை வீட்டாரை தொந்தரவு செய்யக்கூடாது என்ற சட்டம் இருக்கிறது. ஆனால் அது களத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. சில நேரங்களில் மக்கள் நடவடிக்கை எடுப்பதில்லை. இவ்வாறான குற்றம் நிறுத்தப்பட வேண்டும். மக்கள் மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

**மக்கள் தங்கள் அண்டை வீட்டாரை தொந்தரவு செய்யக் கூடாது. மக்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்!**

**கே: கடலோர மாசுக்களின் நீண்டகால பாதிப்புகள் எவை? இதனால் நாம் எவ்வாறு பாதிக்கப்படுகின்றோம்?**

பதில்: கடலோரப் பகுதியைப் பாதுகாப்பது ஒவ்வொருவரின் கடமையாகும். கடலோர மாசு என்பது மனித நடவடிக்கைகளால் கடற்கரையோரங்களில் ஏற்படும் பாதிப்பைக் குறிக்கும். இந்த நடவடிக்கைகளில் கடலோர பிரதேச கட்டுமான நடவடிக்கைகள், பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் கழிவுப் பொருட்களின் வெளியேற்றம், கழிவுநீர் மற்றும் கழிவுப்பொருட்களை அகற்றுதல் ஆகியவை அடங்கும். இதை முழுமையாகக் கட்டுப்படுத்தும் திட்டத்தை உருவாக்க வேண்டும்.

நாங்கள் பங்குதாரர்களுடன் கைகோர்த்து ஒரு திட்டத்தை உருவாக்க முடியும் என்று நம்புகிறோம். கடலோர சீரழிவு மக்களுக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. கடற்கரைப் பகுதியைப் பாதுகாப்பது அனைவரின் கடமையாகும். பொதுமக்கள் இப்பணிகளில் ஈடுபட வேண்டும். ஒரு அமைச்சு என்ற வகையில் நாம் கொள்கைகளை மட்டுமே உருவாக்க முடியும். பொதுமக்களை மேலும் அறிவுள்ளவர்களாக மாற்ற வேண்டும்.




# இந்திய மக்களுக்கு மனவலிமையூட்டும் இரண்டு பிரதான வீரமிகு இதிகாசங்கள்!

மகாபாரதம் பண்டைய இந்தியாவின் இரண்டு மாபெரும் இதிகாசங்களில் ஒன்றாகும். மற்றைய இதிகாசம் இராமாயணமாகும். இவை புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட வீரத்தின் காவியங்கள் எனக் கருதப்படுகின்றன.

மகாபாரதம் மற்றும் இராமாயண இதிகாசங்களின் சம்பவங்கள், அடையாளங்கள், இடங்கள் தொடர்பாக மிகப்பெரிய நம்பிக்கை இந்தியர்களிடையே உள்ளது. இரண்டு சகோதர உறவுகளான கௌரவர்கள் மற்றும் பாண்டவர்களுக்கு இடையே நிகழ்ந்த குருசேஷத்திர யுத்தம் மகாபாரதத்தின் அருமையை எடுத்தியம்புகிறது. கௌரவர்கள் இந்தியப் புராணக் கதைகளில் வில்லனாகக் கருதப்பட்ட குரு அரச வம்சத்தில் வந்தவர்கள் எனவும், பாண்டவர்கள் கடவுளால் உருவாக்கப்பட்ட குழந்தைகள் எனவும் குறிப்பிடப்படுகின்றார்கள்.

கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே போர் மூண்டத்துடன் அந்த யுத்தம் குருசேஷ்திர யுத்தம் என மகாபாரதத்தில் குறிப்பிடப்படுகின்றது. கிருஷ்ணரின் உதவியுடன் கௌரவர்களை அழிக்கும் பாண்டவர்கள், அந்த யுத்தத்தில் வெற்றி பெற்றார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிருஷ்ண பிரியர் அல்லது வியாசர் என அழைக்கப்பட்ட புகழ்பெற்ற ரிஷியால் மகாபாரதம் எழுதப்பட்டது. மகாபாரதம் இந்து கலாசார பாரம்பரியத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய மிகவும் மதிக்கப்படும் இந்து வீரஇதிகாசம் எனவும், உண்மையான வரலாற்றுப் பதிவு எனவும் பலராலும் நம்பப்படுகின்றது.

மகாபாரதம் உண்மையான வரலாற்றுப் பதிவா அல்லது புனைகதையா என்பது வரலாறு முழுவதும் நடந்து கொண்டிருக்கும் விவாதமாகும். மகாபாரதம் உண்மையான சம்பவம் என்பதோடு இந்தியாவில் 35 இற்கும் மேற்பட்ட இடங்கள் இக்கதையின் உருவாக்கம் பற்றிய விபரங்கள் அறியப்பட்ட இடங்களாக உள்ளதாகவும் சிலர் உறுதியுடன் கூறுகிறார்கள்.

இந்த வரலாற்றுரீதியான இடங்கள் தொடர்பாக போதுமான ஆதாரங்கள் காணப்படுவதாக தொல்பொருளியலாளர்கள் கூறுகிறார்கள். செப்பு மற்றும் இரும்புப் பாத்திரங்கள், சித்திரங்களுடன் கூடிய முத்திரைகள், தங்க வெள்ளி ஆபரணங்கள் மற்றும் சித்திரம் தீட்டப்பட்ட கிண்ணங்கள் இவ்விடங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. மகாபாரதத்தில் விபரிக்கப்படும் குருஷேத்திர யுத்தம் நடைபெற்ற இடம் இன்றும் குஜராத் பிராந்தியத்தில் அதேபெயரில் அழைக்கப்படுகின்றது.

குருஷேத்திரம் இந்து பக்தர்களின் புனிதத்தலம் மற்றும் வழிபாட்டுத் தலமாகும். சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கமாக இது உருவாகி வருகின்றது. பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையே யுத்தம் இடம்பெற்ற இடம் பாரிய கட்டடங்களால் முழுமை பெற்றுள்ளது. பிரம்மசரோவர், கிருஷ்ணா அருங்காட்சியகம் மற்றும் மகாதேவி கோயில் உள்ளிட்ட பல இடங்களை சுற்றுலாப் பயணிகளால் பார்வையிட முடியும். அவ்விடத்திலிருந்து சிறிது தூரத்தில் கிருஷ்ணர் பகவத் கீதையை உபதேசித்த இடமுள்ளது. 5000 வருடங்களுக்கு முன்னர் பகவத் கீதையை அர்ஜுனனுக்கு உபதேசித்த இடத்தில் இன்றும் ஆலமரமொன்று உள்ளது.

பகவத் கீதை மனித வாழ்க்கையின் நோக்கம் எனப்படும் நான்கு விடயங்களைக் கற்பிக்கின்றது. சன்மார்க்கம், ஒழுக்கம், செழுமை அதாவது பொருளாதார பெறுமதி, மகிழ்ச்சி மற்றும் அன்பு என்பவற்றுடன் நான்காவதாக முக்தி அதாவது ஆன்மீக விழுமியத்தை மகாபாரதம் நான்காவது புருஷார்த்தமாக குறிப்பிடப்படுகின்றது. மக்களிடையே சமாதானம் மற்றும் நல்லெண்ணம், மனித நற்குணங்களை ஏற்படுத்த வீரஇதிகாசமாக மகாபாரதம் எழுதப்பட்டுள்ளதை நிகழ்காலத்துடன் ஒப்பிடும் போது காணக்கூடியதாகவுள்ளது.

மகாபாரதத்தில் உள்ளடங்கியுள்ள பிரதான கதை அம்சத்துக்கு இடையே பகவத் கீதை, தமயந்தியின் கதை, சாவித்திரி மற்றும் சத்தியவான் கதை காச்ச மற்றும் தேவயானி கதை மற்றும் ராமாயணத்தின் சாராம்சமும் உள்ளன.

மகாபாரதம் உலகின் மிக நீளமான இதிகாசக் கவிதையாக கருதப்படுகிறது. மகாபாரதம், இலியட் மற்றும் ஒடிசியை விட 10 மடங்கு பெரியது. விமர்சகர்கள் அதன் ஒப்பற்ற தன்மையை இன்றும் பரிபூரணமான ஆக்கம் எனக் குறிப்பிடுகின்றார்கள்.

இந்து கலாசாரத்தின் பாதிப்பு இராமாயணம், பகவத் கீதை, மகாபாரதம் உள்ளிட்ட மாபெரும் இலக்கியங்களில் காணப்படுகின்றது. அவை இலங்கை கலாசாரத்திலும் நுழைந்துள்ளன. இந்த ஆக்கங்களில் காணப்படும் கதாபாத்திரங்கள் மற்றும் அவற்றின் தெய்வீகத் தன்மை ஒன்றும் எமக்குப் புதிதல்ல. இந்தியர்கள் குறிப்பாக இந்துக்கள் இராமாயணத்தை பற்றிப் பேசும் போது அவர்கள் இலங்கை மற்றும் இராவணனையும் குறிப்பிடுகிறார்கள். இலங்கையில் இராமாயணத்துடன் தொடர்புடைய இடங்கள் குறித்தும் பெரும் அக்கறை காட்டுகின்றார்கள். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகளை கருத்தில் கொள்ளும் போது 7000 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட இந்த இலக்கியத்தின் மூலம் ஏற்படுத்தப்படும் அந்நியோன்யம் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இலங்கையின் தனித்தன்மை, பைழமையான கலாசார அம்சங்கள் போன்றவை இந்திய மக்களின் அடையாளங்கள் மற்றும் வீரத்தை அடிப்படையாகக் கொண்டே உருவாகின என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். இராவணன், விஜயன், தேவ நம் பியதிஸ்ஸ மற்றும் துட்டுகெமுனு போன்றோரின் வரிசையில் நமக்கும் பெருமை உண்டு.

புதிய தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானத்தைக் கற்கும் பரம்பரையினர் கடந்த கால வரலாறு குறித்து நம்பிக்கை கொள்வதில்லை. சந்தேச (தூது) இலக்கியங்கள் மூலம் கையாளப்படும் பொது உணர்வுகள் குறித்து கவனம் செலுத்துவதில் அக்கறையில்லை. ஆனால் இந்தப் படைப்புகளில் வலிமையும் சக்தியும் உள்ளன. அவற்றை பரிசீலிக்கும் போது இலங்கை உருவாகுவதற்கு அடிப்படையாக அமைந்த சம்பவங்களை அறிந்து கொள்ள முடியும். மிகவும் முன்னேற்றமடைந்த சமூகப் பின்னணியை கொண்ட இந்தியர்கள் கூட மிகவும் பக்தியுடன் இராமாயணம், மகாபாரதம் பற்றி நம்பிக்கை கொண்டுள்ளதோடு அவற்றில் கூறப்படும் வீரத்தால் தைரியம் அடைகின்றார்கள்.

இலங்கையின் அடையாளத்திற்கும் வீர இலக்கியங்கள் உள்ளன. அந்த வீரம் நெருக்கத்தை விட தூரமாகி விட்டது என்பதை சமூக இருப்பு உணர்த்துகின்றது. அன்றாட வாழ்வுக்காக பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ள மக்கள் வரலாறு மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய சக்தியை நம்புவதில்லை. இலங்கை வரலாற்றுக்கு ஒரு தனித்துவமான கலாசார ஒட்டம் உண்டு.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

### அக்குரணையில் தாக்குதல் நடக்கும்

# பொய்யான தகவல் வழங்கியவர் கைது

அக்குரணையில் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக அவசர இலக்கத்துக்கு அழைப்பு விடுத்து பொய்யான தகவலை தெரிவித்த சந்தேக நபரை ஹரிஸ்பத்துவவில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் எதற்காக இவ்வாறு தவறான தகவல்களை வழங்கினார் என்பதற்கான காரணம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லையெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அக்குரணை குண்டுத் தாக்குதல் தொடர்பில் பொய்யான தகவலை வழங்கிய 21 வயதுடைய மௌலவி ஒருவரையே ஹரிஸ்பத்துவ பிரதேசத்தில் வைத்து பொலிஸ் கணனி குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைகள் மற்றும் அழைப்பு பதிவுகளை பகுப்பாய்வு செய்ததன் பின்னர், சந்தேகநபரின் இருப்பிடத்தை பொலிஸாரால் கண்டுபிடித்து சந்தேக நபரை ஹாரிஸ்பத்துவவில் கைது செய்தனர்.

சந்தேகநபர் தற்போது பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் அவசர அழைப்பு சேவைப் பிரிவுக்கு வழங்கப்பட்ட பொய்யான தகவல்களின் பின்னணியிலுள்ள காரணத்தை கண்டறிய விசாரணைகள் தொடர்கின்றன.

அவசர எண்களுக்கு தவறான அல்லது குறும்பு அழைப்புகளை செய்வதைத் தவிர்க்குமாறு பொது மக்களை பொலிஸ் திணைக்களம் வலியுறுத்துகிறது, ஏனெனில் இது தேவையற்ற பீதியை ஏற்படுத்தும் மற்றும் உண்மையான அவசர நிலைகளில் கவனம் செலுத்துவதிலிருந்து அதிகாரிகளை திசைதிருப்பக் கூடுமென்றும் பொலிஸ் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது,

இது போன்ற செயல்கள் சட்டப்படி தண்டிக்கப்படக் கூடியவை என்றும் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுமென்றும் பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

### A/L தமிழ்மொழி விடைத்தாள் ...

பாடங்களுக்கான பணிகளே தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் குருணாகல் ஆகிய நகரங்களை அண்மித்து காணப்படும் விடைத்தால் திருத்தும் நிலையங்களில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோல், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிமூல பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளுக்கான விண்ணப்பங்கள் போதியளவில் கிடைத்துள்ளதுடன், அந்த பணிகளை ஆரம்பிப்பது தொடர்பாக உரிய தரப்புக்களுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றதெனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

### நாட்டிலுள்ள சகல அரச நிறுவனங்களிலும்

# தமிழ், சிங்கள மொழிகளிலும் சேவைகளைப் பெற வசதி

நாட்டிலுள்ள அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளைப் போன்று தமிழ் மொழிகளிலும் தனக்கு தேவையான சேவைகளை பெற்றுகொள்ளலாமென பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் அனுராதா விஜேகோன் தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய 02 மொழிகளும் அரசியலமைப்பில் அரச கரும மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே நாட்டிலுள்ள எந்தவொரு குடிமகனும் தமிழ் அல்லது சிங்கள மொழிகளில் அரசாங்க நிறுவனங்களிலிருந்து சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும். அந்த உரிமை அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

### TID யில் ஆஜராகுமாறு...

சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் முன்னாள் சட்ட மாஅதிபருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவில் ஆஜராகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவர் வருகை தரவில்லை.

தற்போதைய சட்ட மாஅதிபருடனும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் நடத்தும் சந்திப்பு காரணமாக தன்னால் ஆஜராக முடியாதென முன்னாள் சட்ட மாஅதிபர் தப்புல டி லிவேரா கடிதம் மூலம் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் சட்ட மாஅதிபர் தப்புல டி லிவேரா, வாக்குமூலம் பெறுவதற்காக கடந்த 20 ஆம் திகதி பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்த போதிலும் அவர் ஆஜராகியிருக்கவில்லை. அவர் சார்பில் சட்டத்தரணி ஒருவர் அங்கு ஆஜரானார்.

இதன்போது உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் வழங்குமாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவு விடுத்த அழைப்பு தொடர்பில் அவர் அந்த சட்டத்தரணியூடாக 07 பக்க எழுத்துமூல எதிர்ப்பை முன்வைத்திருந்தார்.

2021ஆம் ஆண்டு சட்ட மாஅதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் கருத்து வெளியிட்டிருந்த தப்புல டி லிவேரா, ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னணியில் பாரிய சதித்திட்டம் இடம்பெற்றிருந்ததாகவும் அது தொடர்பில் அனைவரும் சாட்சிகள் ஊடாக கண்டறிய வேண்டுமென்றும் கூறியிருந்தார்.

இக்கருத்து தொடர்பில் முன்னாள் சட்ட மாஅதிபர் தப்புல டி லிவேராவிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ள வேண்டுமென கருதினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி இருந்தார். இவ்வாறான பின்னணியிலேயே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக முன்னாள் சட்ட மாஅதிபர் தப்புல டி லிவேரா நேற்றும் பயங்கரவாத விசாரணை பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

# அரசில் இணையும் செய்திக்கு மறுப்பு

### பொய் என்கிறார் மனோ எம்.பி



அரசாங்கத்தில் தான் இணைந்துக் கொள்ளவுள்ளதாக வெளியாகும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவையென பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இது குறித்து கருத்து வெளியிட்ட அவர்,

அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அரசாங்கத்தில் இணைந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும் நாம் இருக்கும் இடத்திலேயே இருப்போம். அத்துடன் அரசு முன்னெடுக்கும் திட்டங்கள் குறித்து அவதானத்துடன் செயற்படுவோம் என்றும் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

### டிஜிட்டல் மயமாகும்...

அது தொடர்பில் சம்பந்தப்பட்ட போக்குவரத்துத் துறை அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகளை பிறப்பித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேற்படி டிஜிட்டல் மயப்படுத்தும் செயற்பாடுகள் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச யோசனைகளை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் கடந்த ஐந்து, ஆறு வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும் எந்த விதத்திலும் அது இதுவரை நடைமுறைக்கு வரவில்லையென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான நடைமுறை மேற்கொள்ளப்படாததன் காரணத்தினால் போக்குவரத்துத் துறையில் ஊழல் மோசடிகள் அதிகரித்து காணப்படுவதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று தற்போது நடைமுறையிலுள்ள முறைமையின் கீழ் ஊழல் மற்றும் மோசடிகள் இடம்பெறுவதற்கு அதிக வாய்ப்புகள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ள அமைச்சர், அதனால் அதன் மூலம் பயனடையும் தரப்பினர் இந்த டிஜிட்டல் மயப்படுத்தும் முறைமையை சீர்குலைப்பதற்கு பல்வேறு மட்டங்களில் செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலை தொடருமானால் 'சிஸ்டம் சேஞ்ச்' எந்த வகையிலும் இடம்பெறாதென்பதைக் கவனத்திற்கொண்டு தற்போதுள்ள நடைமுறையை பயனுள்ள விதத்தில் மாற்றம் செய்யும் நோக்கில் அதனை மூன்று மாதங்களுக்குள் டிஜிட்டல் மயப்படுத்துவதற்காக காலதாமதமின்றி உரிய செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் செயற்பாடுகள் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர், அதனூடாக 1,500 பஸ் வண்டிகளின் செயற்பாடுகளை ஒரே இடத்திலிருந்து அதன் மூலம் கண்காணிப்பு செய்யக்கூடியதாக உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் சேவையில் ஈடுபடும் அனைத்து பஸ் வண்டிகளினதும் செயற்பாடுகளை கொழும்பிலிருந்தே கண்காணிக்கும் வகையில் முறையான நடவடிக்கைகள் இதன் மூலம் மேற்கொள்ளப்படுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எங்கள் கருத்து

# ஊடகப் பெருவெளியில் குரங்குகளால் சர்ச்சை

இலங்கையில் இருந்து குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதென்ற உத்தேச திட்டம் தொடர்பாக சமீப தினங்களாக ஊடகப்பெருவெளியில் எதிரும்புதிருமான கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. நாட்டில் குரங்குகளின் எண்ணிக்கையானது பல்கிப்பெருகி விட்டதனால், குரங்குகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுதான் ஒரேவழியென்று ஒருதரப்பினர் கருத்து வெளியிடுகின்றனர். இவ்வாறு கருத்து முன்வைப்போர் குரங்குகளின் தொல்லையினால் பாதிக்கப்படுகின்றவர்களாவர்.

ஆனால் மறுதரப்பினரோ, இலங்கையிலிருந்து குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதென்பது தவறான காரியமென்று வாதிடுகின்றனர். இவ்வாறு கருத்துக் கூறுவோரில் விலங்குகள் ஆர்வலர்கள் மாத்திரமன்றி, அரசுக்கு எதிரான அரசியல்தரப்பினரும் உள்ளனர்.

இவ்வாறான இருதரப்பு மாறுபட்ட அபிப்பிராயங்களால் இலங்கையின் ஊடகப்பெருவெளியில் குரங்குகள் விவகாரமானது கடந்த ஒருவார காலத்துக்கு மேலாக சர்ச்சைக்குரியதாகிப் போயுள்ளது. எதுவித ஊடகவரம்புநெறிகளுமே இல்லாத சமூகஊடகங்களில் பலரும் பலவிதமாக தான்தோன்றித்தனமாக கருத்துகளைப் பதிவிட்டு வருவதைக் காணமுடிகின்றது.

ஆனால் அரசாங்கமோ, இந்த விடயத்தில் இன்னுமே இறுதியான தீர்மானமொன்றுக்கு வரவில்லையென்றே தெரிகின்றது. நிபுணர்கள் குழுவொன்றின் கருத்துகளைப் பரிசீலித்த பின்னரே குரங்குகளின் ஏற்றுமதி தொடர்பாக அரசாங்கம் இறுதித் தீர்மானத்துக்கு வரவிருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் குரங்குகள் விவகாரத்தைப் பொறுத்தவரை இவ்விடத்தில் மாறுபட்ட இருவேறு கருத்துகளைக் குறிப்பிட வேண்டியிருக்கின்றது. நாட்டில் தற்போது குரங்குகளின் எண்ணிக்கை மில்லியன்கணக்கில் பெருகி விட்டது. அவற்றினால் மனிதவாழ்வுக்கு பாதிப்புகளும் அதிகரித்து விட்டன. குரங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க முடியாததால் உபஉணவுப் பயிர்ச்செய்கையை கைவிட்டோர் ஏராளமாக உள்ளனர்.

கிராமங்களுக்கு நாளாந்தம் நூற்றுக்கணக்கில் படையெடுத்து வருகின்ற குரங்குகள், ஓரிரு நிமிடங்களில் அனைத்துப் பயிர்களையும் அழித்துவிட்டுச் செல்கின்றன. அவை பயிர்களைத் தின்று அழிப்பதைப் பார்க்கிலும், நாசப்படுத்திச் செல்வதே அதிகம். குரங்குகளைக் கட்டுப்படுத்துவதென்பது இயலாததால் பயிர்ச்செய்கையை பலர் கைவிட்டுள்ளனர்.

விலங்குகளின் உணவுச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள துண்டிப்பே குரங்குகளின் அளவுமீறிய பெருக்கத்துக்கு பிரதான காரணம். அவற்றை வேட்டையாடுவதற்கான இரைகௌவிகள் நாட்டில் கிடையாது. இலங்கையில் சில பகுதிகளில் மாத்திரம் சொற்ப எண்ணிக்கை சிறுத்தைகள் உள்ளதால் குரங்குகளுக்கு எதிரிகள் கிடையாது. நாட்டின் சட்டத்தின்படி மனிதனாலும் குரங்குகளைக் கொல்ல முடியாது. எனவே அவை கட்டுப்பாடின்றிப் பெருகுகின்றன.

அதேசமயம் மனிதர்கள் காடுகளை அழிப்பதனால் குரங்குகளுக்கு வாழ்விடங்கள் குறைந்து விட்டன. அவை உணவுக்காக மனிதகுடியிருப்புகளுக்குப் படையெடுத்து வருகின்றன. அதுமாத்திரமன்றி, நாம் சுவைமிக்க நவீன உணவுகளுக்குப் பழக்கப்பட்டுப் போனதைப் போன்று குரங்குகளும் சுவைமிக்க உணவுகளைத் தேடிவரத் தொடங்கியுள்ளன. இந்நிலையில் மக்களுக்கு குரங்குகள் சவாலாக மாறியுள்ளன.

இதற்கான ஒரே தீர்வு குரங்குகளைப் பிடித்து ஏற்றுமதி செய்வதுதான் என்று பயிர்ச்செய்கையாளர்கள் கூறுவது ஒருபுறமிருக்க, விலங்குகள் ஆர்வலர்களோ குரங்குகளுக்காக குரலெழுப்பத் தொடங்கியுள்ளனர். 'அனைத்து உயிரினங்களுக்கும் வாழும் உரிமை உள்ளது. அவை அப்பாவிப் பிராணிகள் என்பதற்காக அவற்றைப் பிடித்து மற்றொரு நாட்டுக்கு ஏற்றுமதி செய்வது கருணையான செயலல்ல' என்று விலங்குகள் ஆர்வலர்கள் கருத்துப் பதிவிடுகின்றனர்.

குரங்குகள் தொடர்பாக இவ்வாறான இருவேறு கருத்துகளிலும் நியாயங்கள் இல்லாமலில்லை. விலங்குகள் மீது கருணை காண்பிக்கப்பட வேண்டுமென்பது உண்மைதான். ஆனாலும் குரங்குகளிடமிருந்து விவசாயத்தைப் பாதுகாப்பதற்கான மாற்றுவழி என்னவென்பதையும் நாம் காணத்தான் வேண்டியுள்ளது.

### அரசின் நலன்புரி திட்டத்தின்...

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய 04 சமூகக் குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ள சுமார் 16,000 இலட்சம் குடும்பங்களுக்கு இந்த நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

அதற்கமைய பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட 04 இலட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா வீதம் 2024ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழுள்ள அடையாளப்படுத்தப்பட்டுள்ள 08 இலட்சம் குடும்பங்களுக்கு 8,500 ரூபா வீதம் 2023 ஜூலை 31 முதல் 03 வருடங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

மிகவும் வறுமைக் கோட்டின் கீழுள்ளவர்களாக அடையாளப்படுத் தப்பட்டுள்ள 04 இலட்சம் குடும்பங்களுக்கு 15,000 ரூபா வீதம் 2023 ஜூலை 31 முதல் 03 வருடங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதேவேளை மாற்றுத்திறனாளிகள், கண்டறியப்படாத சிறுநீரக நோயாளர்கள் மற்றும் முதியோர் உதவி பெறும் நபர்களுக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன.

தற்போதும் உதவி பெறும் 72,000 மாற்றுத்திறனாளிகளுக்கும், 39,150 சிறுநீரக நோயளர்களுக்கும் தலா 5,000 ரூபாவும் ,4,16,667 முதியோருக்கு 2,000 ரூபாவும் ஒரு மாதத்துக்கு வழங்கப்படவுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### SLPP யின் புதிய...

நடைபெற்றது. 2023 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம் பத்தரமுல்ல நெலும் மாவத்தையிலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று முற்பகல் ஆரம்பமாகியது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்சபை கூட்டம் கட்சியின் ஸ்தாபகர் பஷில் ராஜபக்ஷ தலைமையில் நேற்று சனிக்கிழமை (22) காலை நெலும் மாவத்தையில் உள்ள தலைமை காரியாலயத்தில் நடைபெற்றது.

### முழுமையான விசாரணை...

நடத்தப்பட்டு 04 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளமையை நினைவு கூரும் வகையில் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக நேற்று முன்தினம் காலை 8.45க்கு நாடு முழுவதும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அனைத்து மக்களிடமும் விடுத்த கோரிக்கைக்கமைய இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் பிரதான நிகழ்வு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்றது.

சகல மதங்களின் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட இராஜதந்திரிகளும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

நிகழ்வில் கருத்து வெளியிட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை,

இராணுவ புலனாய்வு பிரிவு மற்றும் பயங்கரவாதி சஹ்ரான் ஹசிமுக்கு இடையில் நீண்ட காலமாக இருந்த கொடுக்கல் வாங்கல்கள் என்ன? என்பது தொடர்பில் கேள்வி எழுவதாக தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அப்போதைய புலனாய்வு பிரிவு, 07ஆம் குண்டுத் தாக்குதல் தாரியான ஜமீல் என்பவர் தாஜ் சமுத்ராவுக்கு தாக்குதலை மேற்கொள்ள சென்று பின்னர் ஏதோ காரணங்களுக்காக அவ்வாறு செய்யாமல் அங்கிருந்து வெளியேறினார்.

பின்னர் அங்கிருந்து சென்று தெஹிவளை பகுதியில் உணவகம் ஒன்றுக்குள் அந்த குண்டை வெடிக்க செய்த அவர் தொடர்பில் அறிந்திருந்ததாகவும் அவரது வீட்டுக்கு சென்று அவரது மனைவியிடம் விசாரணை மேற்கொண்டிருந்ததாகவும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறானால், புலனாய்வு பிரிவு இந்த நபர் தொடர்பில் நன்கு அறிந்திருந்தமை தெளிவாகின்றது.

இராணுவ புலனாய்வு பிரிவு இத் தாக்குதல்தாரி தொடர்பில் நன்கு அறிருந்திருந்த போதிலும் அவரை கைது செய்யாமல் 07ஆவது குண்டு தாக்குதலை நடத்துவதற்கு எதற்காக இடமளித்ததென்ற கேள்வியும் தமக்கு எழுவதாக, பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அந்த நபர் தொடர்பிலும் அவர் குண்டு தாக்குதலை மேற்கொள்ள செல்கிறார் எனவும் தெரிந்திருந்த போதிலும் எதற்காக அவர் கைது செய்யப்படவில்லை? அவர் பல மணித்தியாலங்களாக தெஹிவளை பகுதியில் நடமாடியமை சாட்சியங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

அத்துடன், அவர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டாரா? அல்லது மற்றுமொரு தரப்பினரால் குண்டு வெடிக்க செய்யப்பட்டதா? என்ற கேள்வியும் எழுகிறது.

இச் சந்தேக நபர் தமது உயிரை மாய்த்துக் கொண்டமையின் ஊடாக, அவருக்கும் இராணுவ புலனாய்வு பிரிவுக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கலை, நிரந்தரமாக மறைப்பதற்கு இடமளிக்கப்பட்டதா? என்ற சந்தேகமும் எழுகிறது.

அந்த நபர் தொடர்பில் நன்கு அறிந்திருந்ததுடன் அவரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியிருந்தால் தாக்குதலை மேற்கொண்ட குழுவினர் தொடர்பில் அறிந்திருக்க முடியுமென பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டுள்ளார்.

### பொருளாதார முன்னேற்றத்தில்...

மேற்படி பொருளாதார முகாமைத்துவக் கொள்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டின் மிகச்சிறந்த 40 வர்த்தகர்களுக்கு 'பிஸ்னஸ் டுடே' விருது வழங்கல் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் (20) நடைபெற்ற போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் வர்த்தகத் துறையில் விஷேட செயல்திறனை வெளிப்படுத்தும் நிறுவனங்களை பாராட்டும் நோக்கில் மேற்படி விருது வழங்கும் விழா 'பிஸ்னஸ் டுடே' சஞ்சிகையினால் வருடாந்தம் நடத்தப்படுகிறது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

நாம் இரு வருடங்களுக்கு முன்னதாக இறுதியாக சந்தித்திருந்த சந்தர்ப்பத்தில் கடுமையான நெருக்கடிகளுடன் கூடிய இரு வருடங்களின் பின்னரான சந்திப்பு எவ்வாறு அமைந்திருக்குமென கணிக்க முடியாமல் இருந்திருந்தாலும் தற்போது நாம் நெருக்கடியிலிருந்து மீள்வதற்குரிய பாதைக்குள் பிரவேசித்துள்ளோம்.

இருப்பினும் ஸ்திரமானதும் அபிவிருத்தியை நோக்கி நகர்வதுமான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்க நாம் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கும்.

அதேநேரம் சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டிய கட்டாயத்தில் நாம் இருப்பதால் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகும்.

அது தொடர்பில் ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் நிதி அமைச்சர்களுடனும் பாரிஸ் கிளப் பிரதானியுடனும் சூம் தொழில்நுட்பம் ஊடாக கலந்துரையாடியிருந்தோம்.

நாம் முன்னேறிச் செல்வதற்கான ஊக்குவிப்பை அவர்கள் வழங்கியிருந்தனர். அதேபோல் சீனாவுடனான பேச்சுவார்த்தைகளும் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.

நாம் நெருக்கடிகளிலிருந்து துரித கதியில் மீண்டு வந்துள்ளமை வியப்புக்குரியதாக இருந்தாலும், உங்களால் தாங்கிக்கொள்ள கூடிய கடினமாக தீர்மானங்கள் பலவற்றை மேற்கொள்ள உள்ளமை எனது வாழ்விலும் கடினமான காலமாகும் என்றே கூறுவேன்.

நீண்ட கால தீர்வுகள் மற்றும் இடைப்பட்ட காலங்களில் பெற்றுக்கொள்ளக் கூடிய தீர்வுகள் பற்றி தேடியறிவதால் நல்ல பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எல்லாவற்றுக்கும் பணம் அவசியம் என்பதால் வருமானம் ஈட்டிக்கொள்ளும் பிரச்சினையே நம்முன் பெரிதாக நிற்கிறது. அதனால் வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் வழிமுறைகளையும் தேடி அறிய வேண்டும்.

சில காலங்களுக்கு முன்பு உங்களிடத்திலும் உங்களது நிறுவனங்களிடத்திலும் வரி சேகரிப்பது மாத்திரமே அதற்குரிய வழியாக காணப்பட்ட போதிலும், தற்போது சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளே அதற்குரிய சரியான வழிமுறையாக தெரிகிறது. எதிர்காலத்தில் மாற்றங்கள் ஏற்படலாம்.

### யாழ். நெடுந்தீவில்...

ஏற்படுத்தியுள்ளது.

100 வயதான கனகம் பூரணம் எனும் மூதாட்டி பலத்த வெட்டு காயங்களுடன் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொர்பில் உடனடியாக வட மாகாண பிரதிப் பொலிஸ் மாஅதிபருடன் தொடர்பு கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

நெடுந்தீவு பகுதியில் சந்தேகத்துக்கிடமான நடமாட்டங்கள் தொடர்பாகவும், நேற்று நெடுந்தீவை விட்டு வெளியேறியவர்கள் தொடர்பாகவும் அவதானம் செலுத்துமாறு ஆலோசனை வழங்கியதுடன், இக்கொலைகள் தொடர்பான உண்மைகள் கண்டறியப்பட்டு, மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான அச்சத்தை விரைவில் களைய வேண்டிய அவசியத்தையும் அமைச்சர் டகளஸ் வலியுறுத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்.நெடுந்தீவு, மாவளி இறங்குதுறைக்கு அருகிலுள்ள வீட்டில் வசிக்கும் மூதாட்டியொருவர் நெடுந்தீவுக்கு செல்வோருக்கு தங்குமிட வசதிகளை வழங்குதல்,உணவு வழங்குதல் போன்றவற்றை தொழிலாக செய்து வந்துள்ளார்.

இவரது கணவர் 1986ஆம் ஆண்டு குமுதினி படுகொலையின் போது படுகொலை செய்யப்பட்ட பின்னர் மூதாட்டி தனது வாழ்வாதாரத்தை தானே கொண்டு நடத்தி வந்துள்ளார்.

நெடுந்தீவிலுள்ள ஆலயமொன்றில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்துக்கு யாழ்ப்பாணம் , முல்லைத்தீவு மற்றும் புலம்பெயர் நாடொன்றிலிருந்து வந்திருந்த ஐவர் வெள்ளிக்கிழமை நெடுந்தீவு சென்று இறங்குதுறைக்கு அருகிலுள்ள மூதாட்டியின் வீட்டில் தங்கியுள்ளனர்.

நேற்றுக் காலை சனிக்கிழமை காலை வீட்டிலிருந்து எவரும் வெளியே வராததால் சந்தேகமடைந்த அயலவர்கள் வீட்டுக்குச் சென்று பார்த்த போது வெட்டு காயங்களுடன் சடலங்களாக இவர்கள் காணப்பட்டுள்ளனர்.

ஒருவர் வீட்டின் வெளியேயும் ஏனையவர்கள் வீட்டின் உள்ளே படுக்கை மற்றும் ஏனைய இடங்களிலும் கொடூரமான வெட்டுக் காயங்களுடன் சடலங்களாக காணப்பட்டுள்ளனர்.

அதில் ஒருவர் படுகாயங்களுடன் காணப்பட்டதுடன் அவரை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவம் தொடர்பில் நெடுந்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் மேலதிக விசாரணை நடவடிக்கைகளுக்காக ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து பொலிஸ் குழு நெடுந்தீவு சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நால்வர் அடங்கிய கும்பலே படுகொலை செய்தது ?

நால்வர் கொண்டே கும்பலே படுகொலையை செய்துள்ளதாகவும் , வீட்டின் சற்று தூரத்தில் முன் பகுதியில் கடற்படை முகாம் அமைந்துள்ளமையால் , வீட்டின் பின் பகுதி ஊடாகவே கும்பல் வீட்டினுள் புகுந்திருக்கலாம் எனவும் , வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்கள் போன்ற பயங்கர ஆயுதங்களால் தாக்கியே படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிசாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அதேவேளை வீட்டிலிருந்த ஐவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும், ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளதாலும் , வீட்டில் இருந்த பொருட்கள் எவையேனும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளனவா ? என்பதனை அறிய முடியவில்லையெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

படகு சேவைகள் இடைநிறுத்தம்.

நெடுதீவிலிருந்து குற்றவாளிகள் தப்பி செல்லாதவாறு நெடுந்தீவு குறிகாட்டுவான் இடையிலான படகு சேவைகள் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

நீதவான் சம்பவ இடத்தில் விசாரணை.

ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி கஜநிதிபாலன் நெடுந்தீவுக்கு நேரில் சென்று சம்பவ இடத்தை பார்த்து விசாரணைகளை முன்னெடுத்தார்.

அதேவேளை யாழ்ப்பாண தடயவியல் பொலிஸ் குழுவும் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மாணவரை பணயம் வைக்கும் ஆசிரிய தொழிற்சங்கங்கள்!

## நியாயமற்ற போராட்டம் என்கிறார் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

**பொருளாதார ரீதியில் நாடு சவால்களுக்கு முகங்கொடுத்திருக்கும் இன்றைய சூழ்நிலையில், நெருக்கடியான சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்தி பல்வேறு தரப்பினர் தேவையற்ற அழுத்தங்களை அரசுக்கு ஏற்படுத்தி வருகின்றனர்.**

நாட்டை பாதிப்பிலிருந்து மீட்டெடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டிய இன்றைய நெருக்கடியான தருணத்தில் தொழிற்சங்கப் போராட்டம் என்ற போர்வையில் நாட்டை மென்மேலும் பின்னோக்கித் தள்ளும் முயற்சிகளில் ஒரு சில தொழிற்சங்கங்கள் முனைப்புக்காட்டி வருவதைக் காண முடிகின்றது. இவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கைகளால் மேலும் கஷ்டங்களுக்குள் தள்ளப்படுவது அப்பாவிப் பொதுமக்களேயாவர்.

### அரசியல் பின்புலத்தில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களால் ஒட்டுமொத்த மாணவ சமூகத்தின் எதிர்காலமும் பாதிப்பு!

தொழிற்சங்கப் போராட்டங்கள் காரணமாக மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். கல்வித்துறை சார்ந்த தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த தொழிற்சங்கப் போராட்டத்தினால் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள் திருத்தும் பணிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.



க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணியில் இழுபறி தொடர்ந்து வரும் நிலையில், தமிழ்மொழி மூல விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நேற்றுமுன்தினம் செய்தி வெளியாகியிருந்தது.

ஏனைய விடைத்தாள்களைத் திருத்தும் பணி தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் மற்றும் ஆசிரியர் சங்கம் என்பன பல்வேறு கோரிக்கைகளை



முன்வைத்து ஆரம்பித்த தொழிற்சங்கப் போராட்டத்தினால் 2022 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள் திருத்தும் பணிகள் தாமதம் அடைந்துள்ளன. விடைத்தாள்கள் திருத்தும் பணிகளிலிருந்து அவர்கள் விலகியிருந்தனர்.

உயர்தரப் பரீட்சை முடிவடைந்து ஒரு சில மாதங்கள் கடந்துள்ளபோதும், தொழிற்சங்கப் போராட்டம் காரணமாக விடைத்தாள் திருத்தும் பணிகள் இன்னுமே இழுபறியில் தான் செல்கின்றன. இதனால் கல்விச் செயற்பாடுகள் சங்கிலித் தொடர் போன்று குழப்பமடைந்துள்ளன.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தப்படாமையால் சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. 2022 தொகுதியில் 500,000 சாதாரண தர மாணவர்களின் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. அதேவேளை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 270,000 இற்கும் அதிகமான பரீட்சார்த்திகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் புறக்கணிப்புக் காரணமாக ஒட்டுமொத்தமாக சுமார் 1.2 மில்லியன் மாணவர்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பாடசாலைகளின் தவணைகளைச் சரியாகத் தீர்மானிக்க முடியாத நிலையும் காணப்படுகிறது.

விடைத்தாள் திருத்தும் பணியைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் தனிப்பட்ட ரீதியிலேயே இணைந்து கொள்கின்றனர். இதில் அவர்கள் எந்தவொரு அமைப்பையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. இவ்வாறான நிலையில் அமைப்பின் ரீதியாக பணியைப் புறக்கணிப்பதாக அவர்கள் கூறுவது நியாயமற்றது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிடுகிறார்.

ஆசிரியர்கள் முன்வைத்த கோரிக்கைகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் முன்வைக்கும் வரி அதிகரிப்புக் குறித்த கோரிக்கையானது அவர்களுக்கு மாத்திரம் ஒன்றானது அல்ல. அனைவருக்கும் ஏற்புடையது என்பதால் அது பற்றிய தீர்மானம் எடுக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், பாடசாலை மாணவர்களை பணயக்கைதிகளாக பயன்படுத்த எந்தவொரு குழுவினருக்கும் இடமளிக்கப் போவதில்லையென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பரீட்சைப் பணிகளை அத்தியாவசிய செயற்பாடுகளாக முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான சட்ட ஏற்பாடுகளை ஏற்படுத்த எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, கடந்த வருடம் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளில் ஈடுபட்ட குழுவினரைக் கொண்டு இம்முறை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளை முன்னெடுக்குமாறும் பணிப்புரை விடுத்தார்.



உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளுக்கான மாற்று யோசனைகள் மற்றும் உரிய வேலைத்திட்டங்களை இவ்வார இறுதிக்குள் அறிவிக்குமாறு அறிவுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பரீட்சைகள் தொடர்பிலான பணிகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தத் தேவையான பணிகளை முன்னெடுக்குமாறும் கல்வித் துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இப்பணிகளில் ஈடுபட மறுப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இது தொடர்பில் சட்ட மாஅதிபருடன் கலந்தாலோசிக்க உள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் இது தொடர்பில் அறிவித்துள்ள விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி அதற்குரிய அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கல்வித் துறைசார் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி வலியுறுத்தினார். இந்த விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பை நடத்த எதிர்பார்ப்பதாகவும், அவ்வாறு வாக்கெடுப்பு நடத்தப்படுமாயின் அதனை எதிர்ப்பவர்கள் யார் என்பதை நன்கு அறிய முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தார்.

**உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணியில் ஏற்பட்டுள்ள தாமதத்தினால் இளவயதினருக்கு உண்டாகின்ற விரக்தியைப் பயன்படுத்தியவாறு அரசுக்கு எதிரான சக்திகள் தமது குறுகிய அரசியல் நோக்கங்களை அடைந்து கொள்ள முயற்சி!**

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தம் செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதத்தினால் இளைஞர்களின் விரக்தியைப் பயன்படுத்திக் கொண்டு அரசியல் கட்சிகள் தமது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற முயற்சிப்பதாக கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

பரீட்சைகள் தொடர்பிலான பணிகள் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்படுமானால், விடைத்தாள் திருத்தும் பணிகளில் இருந்து விலகியிருப்பவர்களின் தனிப்பட்ட சொத்துக்கள் சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்யப்படலாம். இவ்வாறான நிலைமை சிக்கல்களை மேலும் அதிகரிக்கச் செய்யலாம். எதுஎவ்வாறாக இருந்தபோதும் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் மாணவர்களின் வாழ்க்கையை பணயம் வைக்காமல் ஆசிரியர்கள் செயற்பட வேண்டும் என்பது தான் மக்களின் எண்ணமாக உள்ளது.

கொவிட் 19 தொற்றுநோய் சூழல் மற்றும் அதன் பின்னரான பொருளாதார நெருக்கடி போன்ற காரணிகளால் பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஆசிரியர்களின் இவ்வாறான போராட்டங்கள் மென்மேலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இலவசக் கல்வியின் ஊடாக உயர்ந்த நிலைக்கு வந்துள்ள கல்வித்துறையைச் சார்ந்தவர்கள், மாணவர்களின் வாழ்க்கையை தமது சொந்தத் தேவைகளுக்காகப் பணயம் வைப்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயமல்ல என்று சாதாரண மக்களே கூறுவதைக் கேட்க முடிகின்றது. ஒரு நாட்டின் எதிர்கால முதுகெலும்பு மாணவர் சமூகம் ஆகும். மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களே நாட்டின் முதுகெலும்பைப் பாதிக்கச் செய்யும் வகையில் நடந்துகொள்வது துரதிர்ஷ்டவசமானதாகும்.

**பி. ஹர்ஷன்**

---

# பிரதமர் மோடியின் 'மேக் இன் இந்தியா' திட்டத்தில் விண்வெளித்துறையில் சாதனை படைக்கும் இந்தியா

**சிங்கப்பூர் நாட்டுக்குச் சொந்தமான டெலியோஸ்–2 எனும் பூமி கண்காணிப்பு செயற்கைக்கோளை சுமந்து கொண்டு இந்தியாவின் பி.எஸ்.எல்.வி. சி55 ரொக்கெட் நேற்று வெற்றிகரமாக விண்ணில் சீறிப் பாய்ந்தது. ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள முதல் ஏவுதளத்தில் இருந்து நேற்றுப் பிற்பகல் 2.19 மணிக்கு பி.எஸ்.எல்.வி. சி–55 ரொக்கெட் விண்ணுக்கு ஏவப்பட்டது.**



இந்திய விண்வெளித்துறையில் இந்தியா ஈட்டிவருகின்ற வெற்றிகளுக்கு இதுவும் ஒரு ஆதாரமாகும். இந்திய விண்வெளித்துறையை உச்ச நிலைக்குக் கொண்டுவருவதில் பிரதமர் நரேந்திர மோடி விசேட கவனம் செலுத்தி வருகின்றார். இந்நிலையில் விண்வெளித்துறையில் இந்தியா தொடர்ச்சியாக சாதனைகளைப் படைத்து வருகின்றது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் பி.எஸ்.எல்.வி, ஜி.எஸ்.எல்.வி, எஸ்.எஸ்.எல்.வி ஆகிய ரகங்களைச் சேர்ந்த ரொக்கெட்டுகளைத் தயாரித்து அவற்றில் இந்திய நாட்டுக்குத் தேவையான காலநிலை மாற்றம், பேரிடர் தொடர்பான தகவல்கள், தகவல் தொடர்பான செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவி வருகிறது. இவற்றுடன் வணிக ரீதியில் வெளிநாட்டு செயற்கைக்கோள்களும் விண்ணில் ஏவப்படுகின்றன.

அந்த வகையில் சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த செயற்கைக் கோளை விண்ணில் ஏவுவதற்காக, இஸ்ரோவின் என்.எஸ்.ஐ.எல். நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்திருந்தது. அதன்படி சிங்கப்பூர் செயற்கைக்கோளை விண்ணில் ஏவுவதற்காக இஸ்ரோ நிறுவனம் பி.எஸ்.எல்.வி. சி55 ரொக்கெட்டை வடிவமைத்திருந்தது. இந்த ரொக்கெட்டில் சிங்கப்பூர் நாட்டுக்குச் சொந்தமான டெலியோஸ்2 எனும் பூமி கண்காணிப்பு செயற்கைக்கோள் நேற்றுப் பிற்பகல் விண்ணில் ஏவப்பட்டது.

இந்நிலையில், டெலியோஸ்2 செயற்கைக்கோள் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள 1 ஆவது ஏவுதளத்தில் இருந்து நேற்றுப் பிற்பகல் 2.19 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது.

டெலியோஸ்2 செயற்கைக்கோளானது பூமி ஆய்வு, இயற்கை அனர்த்தம் தொடர்பான தகவல்களை பூமிக்கு அனுப்பும். முன்னைய ஏவுதல் போல் இல்லாமல், ரொக்கெட்டின் பல்வேறு நிலைகளை ஒருங்கிணைத்து புதுமையான முறையில் நேற்றைய ஏவுதல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.



இந்த செய்மதி 741 கிலோ எடை கொண்டதாகும். இதனுடன் 16 கிலோ எடை கொண்ட லுமிலைட்4 என்ற இரண்டு செயற்கைக்கோள்கள் கிழக்கு நோக்கி குறைந்த சாய்வு சுற்றுப் பாதையில் ஏவப்பட்டன.

பி.எஸ்.எல்.வி. சி55 ரொக்கெட் பி.எஸ்.எல்.வி. புதிய ஒருங்கிணைப்பு வசதியில் ஒருங்கிணைக்கப்பட்ட முதல் ரொக்கெட் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. இதன் மூலம் இஸ்ரோ ஒரு புதிய அணுகுமுறையைப் பின்பற்றுகிறது. புதிய அணுகுமுறையின் படி விண்வெளி நிறுவனம் குறைந்த நேரத்தில் அதிக பயணங்களை தொடங்க முடியும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பி.எஸ்.எல்.வி ரொக்கெட் விண்ணில் சீறிப்பாய்ந்த காட்சியை பொதுமக்கள் நேற்று நேரில் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான (இஸ்ரோ) வணிகரீதியாக வெளிநாட்டு செயற்கைக்கோள்களையும் விண்ணில் நிலைநிறுத்தி வருகிறது. செயற்கைக்கோள்களை புவி வட்டப் பாதையில் நிலைநிறுத்திய பிறகு இந்த ஆய்வு சாதனங்கள் இயங்கத் தொடங்குமென்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர்.

இஸ்ரோவின் இந்த ஆண்டின் மூன்றாவது ஏவுதல் இதுவாகும். இவை மூன்றுமே வெவ்வேறு ஏவுகணை வாகனங்களைப் பயன்படுத்துகின்றன. புதிய சிறிய செயற்கைக்கோள் ஏவுகணை வாகனம் (SSLV) மூன்று செயற்கைக்கோள்களை வெற்றிகரமாக நிலைநிறுத்தி, விண்வெளி நிறுவனத்தால் செயல்படுவதாக அறிவிக்கப்பட்டபோது முதல் ஏவுதல் பெப்ரவரியில் நடந்தது. இந்தியாவின் கனமான LVM3 ஆனது 36 OneWeb செயற்கைக்கோள்களை முற்றிலும் வணிக நோக்கில் செலுத்திய போது இரண்டாவது ஏவுதல் மார்ச் மாதம் நடைபெற்றது.

**சிங்கப்பூர் செய்மதியைத் தாங்கியவாறு நேற்று விண்ணில் சீறிப் பாய்ந்தது இந்திய ரொக்கட்!**



இது மூன்றாவது ஏவுதல் ஆகும்.

விண்வெளித் துறையில் ஆதிக்கம் செலுத்தி வரும் அமெரிக்கா, ரஷ்யா, சீனாவுக்கு இணையாக இந்தியாவும் வளர்ச்சி அடைந்து வருகிறது.

அதிவிரைவான இணையதள சேவையை வழங்குவதற்காக, செயற்கைக்கோள்களை விண்வெளியில் செலுத்தி சுற்று வட்டப்பாதையில் நிறுத்தும் வர்த்தகம் செழிப்படைந்து வருகிறது.

செயற்கைக்கோள்களை ஏவுவதில் முக்கிய பங்காற்றி வந்த நாடுகளாக ரஷ்யா மற்றும் சீனா இருந்து வந்தன. தற்போது இந்தியா இதில் பெரும் சாதனை படைத்து வருகின்றது. அமெரிக்கா மற்றும் பிற சக்தி படைத்த நாடுகளான அவுஸ்திரேலியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுடன் இந்தியா நெருங்கி செயலாற்றி வருகிறது. போட்டி நாடுகளை விட இந்தியாவில் செலவும் குறைவு ஆகும்.

பிரதமர் மோடியின் 'மேக் இன் இந்தியா' பிரசாரத்தில் விண்வெளித் துறை ஒரு முக்கிய பங்காற்றி வருகிறது. தொழில்நுட்ப கண்டுபிடிப்பில், முன்னணியில் இருப்பதுடன், உலகின் 5 ஆவது பெரிய பொருளாதாரம் என்ற நிலையை இலக்காக இந்தியா கொண்டு உள்ளது.

**எஸ். சாரங்கன்**

**சித்திரைப் புத்தாண்டின் பலநாள் விடுமுறையுடன் பெரும்பாலான அரசியல் முக்கியஸ்தர்களும் விடுமுறையில் இருந்ததால், அரசியல் களத்தில் பரபரப்பு சற்றுக் குறைவாக இருந்தது. இருந்தபோதும் அரசியல் அரங்கத்தில் திரைமறைவில் பரபரப்பான விவாதங்களுக்குக் குறைவு இருக்கவில்லையென்றே கூற வேண்டும்.**



# ஜனாதிபதியின் தலைமைத்துவம் மீதான நம்பிக்கை குறுகிய காலத்தில் அதிகரிப்பு!






விசேடமாக புத்தாண்டுக்குப் பின்னர் அமைச்சரவையில் மாற்றமொன்று ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பில் அதிகம் பேசப்பட்டது. இதனுடன் இணைந்ததாக தேசிய அரசாங்கமொன்றுக்கான அழைப்பை ஜனாதிபதி விடுக்கவிருப்பதாகவும் ஊடகங்கள் பல அறிக்கையிட்டிருந்தன. விடுமுறைகள் முடிவுக்கு வந்துள்ள நிலையில், தற்போது அரசியலில் பரபரப்பும் தொற்றிக் கொண்டுள்ளது.

தேசிய அரசாங்கம் அமைக்கும் விடயம் கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக அரசியலில் அதிகம் பேசப்படும் ஒன்றாகவுள்ளது. பொருளாதார ரீதியில் பின்னடைவைச் சந்தித்துள்ள நாட்டை மீட்கும் முயற்சியின் ஓர் அங்கமாக அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. இதற்காகப் பல தடவை ஆளும் கட்சி அழைப்பை விடுத்திருந்தது.

குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்பதற்கு முன்னர் இருந்தே இந்த அழைப்புக்கள் விடுக்கப்பட்டிருப்பதுடன், அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னரும் இது தொடர்பாக எதிர்க்கட்சிகளுக்குப் பகிரங்க அழைப்பை விடுத்திருந்தார்.

நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான மூலோபாயத்தைக் கையாண்டுள்ள ஜனாதிபதி மீண்டும் அனைவரையும் ஒன்றிணைத்துச் செல்ல விரும்புகிறார் என்று அரசியல் வட்டாரங்களில் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

தேசிய அரசாங்கத்தை அமைப்பது குறித்து முன்னர் விடுக்கப்பட்ட அழைப்புக்களைப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்திருந்த நிலையில், தற்பொழுது இவ்விடயத்தில் அக்கட்சிக்குள் சாதகமானதும் பாதகமானதுமான இருவேறு நிலைப்பாடுகள் காரணமாக பிளவு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரையில் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதால் மீண்டும் அதனுடன் இணைந்து செயற்படவே விரும்புவதாக அரசியல் களத்தில் பேச்சுகள் உலவுகின்றன. இருந்தபோதும் ஐ.ம.ச தலைமைத்துவம் இதனுடன் இணக்கமின்மையை வெளிப்படுத்தவில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க ஆரம்பத்தில் பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஆட்சிக்கு வரவேண்டிய நிலைமை காணப்பட்டபோதும், தற்பொழுது நிலைமை மாற்றமடைந்திருப்பதால் பொதுஜன பெரமுனவுக்கே ஜனாதிபதியின் தேவை ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

இவ்வாறான பின்னணியில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதன் ஊடாக பலமான நிலையொன்றுக்கு வர முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் தமது கட்சியின் தலைமைத்துவத்துக்கு எடுத்துக் கூறியுள்ளனர் என்று அக்கட்சியிலிருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

குறிப்பாக தமது ஆதரவை ஜனாதிபதிக்கு வழங்கினால் ஆட்சியமைப்பதற்காகப் பொதுஜன பெரமுனவில் அரசாங்கம் தங்கியிருக்க வேண்டிய தேவையை மாற்றியமைக்க முடியும் என பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள் மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் போன்றவர்கள் ஈடுபட்டிருந்தனரென்று ஊடகங்கள் சிலவற்றில் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் விடயத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் உடன்பாட்டை வெளிப்படுத்தவில்லையென மனோ கணேசன் எம்.பி கூறியிருப்பதாக ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன.

இருந்தபோதும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் குறிப்பாக டொக்டர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட சிலர் அரசாங்கத்தில் இணைந்துகொண்டு அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்க விருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியதன் தேவையை எடுத்துக் கூறியுள்ள ராஜித சேனாரத்ன, அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்பதைப் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.



> இருவேறு நிலைப்பாடுகளால் எதிர்க்கட்சிக்குள் பிளவு; தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) மீது மக்கள் அலை உருவாகியிருப்பதாக ஏற்படுத்தப்பட்ட விம்பம் கலைந்தது!

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட தலைவர்களுக்கும் இதுபற்றி அவர் கூறியுள்ள போதும், அவர்கள் இதனை ஏற்கவில்லையென்றும் தெரியவருகிறது. எதுவாக இருந்தாலும் ராஜித சேனாரத்ன அரசாங்கத்துடன் இணைந்து தான் முன்னர் வகித்த சுகாதார அமைச்சர் பதவியை ஏற்கவிருப்பதாகத் தொடர்ந்தும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

கட்சியின் கொள்கைகளுக்கு மாறாக நடந்து கொள்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை ஐ.ம.ச எடுத்திருந்த போதும், இதற்கு முன்னர் அக்கட்சியிலிருந்து விலகி அரசாங்கத்துடன் இணைந்துள்ள அமைச்சர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படாமை குறித்தும் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. இதனால் இது விடயத்திலும் கட்சிக்குள் குழப்பநிலையொன்று ஏற்பட்டுள்ளது.

இதனைக் கடந்தகால அரசியல் நகர்வுகளுடன் ஒப்பிடுவதாயின், 2010 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்ட போது இடம்பெற்ற சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

அந்த அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாததால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெற வேண்டியிருந்தது. அப்போதைய அரசாங்கத்தின் அரசியல் மூலோபாயவாதியாகச் செயற்பட்ட பசில் ராஜபக்ஷ, முஸ்லிம் காங்கிரஸின் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களை தனித்தனியாக கவர்ந்து வெற்றி பெற்றார்.

இருந்தபோதும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கொள்கையளவில் இத்திருத்தத்தை எதிர்த்திருந்த போதும், தனது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை இழக்கும் நிலைமையை எதிர்கொண்டார். இறுதியில், கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை இழக்கக் கூடாது என்ற முடிவை எடுத்து 18 ஆவது திருத்தத்துக்கு தனது உறுப்பினர்களுடன் இணைந்து ஆதரவு வழங்க வேண்டிய கட்டாயம் ஹக்கீமுக்கு ஏற்பட்டிருந்தது. இதனால் கட்சி காப்பாற்றப்பட்டது. இதேபோன்றதொரு நிலையையே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் தற்பொழுது எதிர்கொண்டுள்ளது.

> ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிப்பதன் மூலமே ஆட்சியதிகாரத்தில் அமர முடியுமென பொதுஜன பெரமுனவுக்குள் பலரும் கருத்து!

இதுஇவ்விதமிருக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப எடுத்துவரும் நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெறத் தொடங்கியுள்ளன.



குறிப்பாக கடந்த வருடம் சித்திரைப் புத்தாண்டு காலத்தில் மக்கள் எரிபொருளுக்கும், சமையல் எரிவாயுவுக்கும் நீண்ட நாட்களாக வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது. இருந்தபோதும், சுமார் இரண்டு மூன்று வருடங்களின் பின்னர் ஓரளவுக்கேனும் அமைதியான முறையில் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடுவதற்கான வாய்ப்புக் கிடைத்திருப்பதையிட்டு மக்கள் திருப்தியடைந்திருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

நாட்டை இத்தனை விரைவில் சுமுகமான நிலைக்குக் கொண்டு வந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ற விடயம் தற்பொழுது மக்கள் மத்தியில் பதிவாகியுள்ளது.

இது மாத்திரமன்றி எதிர்காலத்தில் நாடு எதிர்கொண்டுள்ள சவால்களிலிருந்து மீள்வதற்கு அவருடைய தலைமைத்துவம் அவசியமானது என்பதும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த சிந்தனை மாற்றமானது எதிர்க்கட்சியினருக்கு அரசியல் ரீதியான சவாலைக் கொடுத்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி பிளவுபடும் நிலைக்கு வந்திருக்கும் அதேநேரம், தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) மீது பாரியதொரு மக்கள் அலை ஏற்பட்டிருப்பதாக ஏற்படுத்தப்பட்ட விம்பம் தற்பொழுது சரிவைச் சந்தித்து வருகிறது.

குறிப்பாக உடனடியாக ஏதாவது ஒரு தேர்தலொன்றுக்குச் சென்று தமக்கு மக்கள் ஆதரவு உள்ளது என்பதைக் காண்பிப்பதற்கான அரசியல் காய்நகர்த்தலொன்றையே அவர்கள் முன்னெடுத்திருந்தனர். இருந்தபோதும் தேர்தலுக்கான காலம் இது அல்ல, நாட்டைப் பொருளாதார ரீதியில் சரியான நிலைக்குக் கொண்டுவருவதே காலத்தின் தேவை என்பது பல சந்தர்ப்பங்களில் உணர்த்தப்பட்டுள்ளது. இதனால் அரசியலின் மாற்று சக்தியாக எதிர்பார்க்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி வழமைபோல இறங்குமுகத்தைச் சந்திக்கத் தொடங்கியுள்ளது.

மறுபக்கத்தில், தற்பொழுது அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிவரும் தரப்பாகவிருக்கும் பொதுஜன பெரமுன முற்று முழுதாக ஜனாதிபதியில் தங்கியிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. விசேடமாகப் பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலொன்றுக்குச் செல்லக் கூடிய அதிகாரம் ஜனாதிபதியிடம் இருப்பதால் அதிகம் அழுத்தம் கொடுத்து சாதிக்கும் நிலையில் அவர்கள் இல்லையென்றே கூற வேண்டும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவையே மீண்டும் ஜனாதிபதியாக்க வேண்டும் என அக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் கூறத் தொடங்கியுள்ளனர். குறிப்பாக அமைச்சர்களான கஞ்சன விஜேசேகர மற்றும் திலும் அமுனுகம ஆகியோர் இதனைப் பகிரங்கமாகக் கூறியுள்ளனர். இவர்களின் இந்தக் கருத்து கட்சியின் கருத்தாக இல்லாவிட்டாலும், கட்சிக்குள் மாற்றுக் கருத்து ஏற்பட்டுள்ளது என்பதை இது வெளிப்படுத்துகிறது.

அத்துடன், நடைபெறவிருக்கும் அமைச்சரவை மாற்றத்தில் தமது உறுப்பினர்களுக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை அழுத்தங்களாக அன்றி கோரிக்கைகளாக முன்வைக்கப்படுகின்றமையும் இங்கு அவதானிக்கப்பட வேண்டும்.

இதுபோன்ற அரசியல் நகர்வுகள் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்ல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ள முயற்சிகளுக்கு அரசியல் தரப்பிலிருந்தும், மக்கள் மத்தியிலிருந்தும் படிப்படியான ஆதரவுகள் பெருகி வருகின்றமையை எடுத்துக் காட்டுவதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

> தேசிய அரசாங்கத்தை அமைத்து நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்பதில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் பலரும் விருப்பம்!

# இது பொறுப்பின்மைகளின் காலமா?

இது பொறுப்பின்மைகளின் காலமா? என்று சிந்திக்க வேண்டியுள்ளது. அரசியல்வாதிகள், அரச நிர்வாகத்தினர், கல்வி மற்றும் மருத்துவத்துறை தொடக்கம் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் வரையில் எல்லாத் தரப்பினரிடத்திலும் பொறுப்பின்மை மேலோங்கி வருகிறது.

இந்தப் போக்கு நீடிப்பது நாட்டுக்கும் நல்லதல்ல. மக்களுக்கும் நல்லதல்ல. அவரவர் தத்தமது பாத்திரத்துக்கும் பதவிக்கும் உரிய கடமைகளையும் பொறுப்புகளையும் செய்ய வேண்டும். இது மிகமிக அவசியமானது. ஆனால், அப்படி நடப்பதாகத் தெரியவில்லை.

ஒவ்வொருவரும் பிற தரப்புகளின் மீது பழியைப் போட்டு விட்டுத் தாம் தப்பி விடுகின்றனர். அல்லது தமக்குள் அப்படியொரு சமாதானத்தைச் செய்து விடுகின்றனர்.

உதாரணமாக, பிரதேச சபை ஒன்றில் நடக்கின்ற ஊழலைப் பற்றிச் சொன்னால், நாட்டின் தலைவர்களே பெரிய அளவில் ஊழல் செய்கிறார்கள். அதைத் தடுக்க முடியவில்லை. அப்படியிருக்கும்போது இந்தச் சிறிய ஊழல்களைப் பற்றி நாம் பொருட்படுத்த வேண்டுமா? உலக்கை போற இடத்தைப் பற்றிப் பேச மாட்டீர்கள். ஊசி தொலைவதைப் பற்றிப் பெரிது படுத்துகிறீர்கள் என்று எதிர்க்கேள்வி வேறு கேட்கிறார்கள்.

### இதன் பொருள் என்ன?

அவர்கள் பிழை செய்வதைப்போல நாமும் தவறுகளைச் செய்யலாம் என்ற நியாயம்தானே! இது சரியானதா?

இந்த அடிப்படையில்தான் வட மாகாண சபைக்குட்பட்ட பல நிர்வாகப் பிரிவுகளில் நடந்த ஏராளம் ஊழல்களும் மோசடிகளும் பாராமுகமாகவே தொடர்கின்றன. இதனால் மேலும் மேலும் இந்தத் தவறுகள் நிகழ்கின்றன. சில மோசடிகள் கணக்காய்ப்புப் பிரிவினால் கண்டு பிடிக்கப்பட்டும் தவறுகளைச் செய்தோர் தண்டிக்கப்படாமலும் கண்டிக்கப்படாலும் உள்ளனர்.

இதைக் கட்டுப்படுத்துவதில் காட்டப்படும் அசிரத்தை, அரசியல் தலையீடு, பொறுப்பின்மை எல்லாம் ஏனையயோரையும் தளர்வடையச் செய்கின்றது.

இதைக்குறித்து ஊடகங்களும் பிற சமூகச் செயற்பாட்டியக்கங்களும் அக்கறை கொள்வது குறைவு. உள்ளிருந்து கொல்லும் நோயாகத் தொடரும் இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணவில்லை என்றால் அது எதிர்காலத்தில் பெரும் நெருக்கடியையே உண்டாக்கும்.

நாட்டில் இப்படியான கீழ்மைப் போக்குக்கு இடமளித்த காரணத்தினால்தான் நாடு இன்று ஒட்டு மொத்தமாகவே நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. இனப்பிரச்சினை என்பது ஏதோ தமிழ் மக்களுக்குரிய பிரச்சினை என்று சிங்கள மக்களும் அதிலும் அரசாங்கத்தின் விவகாரம் மட்டுமே என்று அவர்கள் கருதியதாலும்தான் இன்னும் அது நாட்டின் தேசியப் பிரச்சினையாக உணரப்படாமல் உள்ளது. தேசியப் பிரச்சினையாக உணரப்பட்டிருந்தால் இதுவரையில் அதற்குத் தீர்வு காணப்படாமல் இருக்காது.

இதிலே அரசறியவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர்கள், கல்விப் புலத்தினர் கூட அக்கறை கொள்ளவில்லை. 75 ஆண்டுக்கும் மேலாக தொடரும் இந்தப் பிரச்சினைக்கு இந்த அடிப்படையில் தீர்வுகளை முன்வைக்க முடியும் என 50, 100 பரிந்துரைகளை இவர்கள் சமர்ப்பித்திருக்க முடியும். மட்டுமல்ல, இனப்பிரச்சினையைத் தீர்க்கவில்லை என்றால் அது நாட்டுக்குப் பெருங் கேடாக அமையும். அதனால் அந்நியத் தலையீடு தொடக்கம் பொருளாதார நெருக்கடி வரை ஏற்படும் என்பதையும் இவர்கள் இடித்துரைக்கவில்லை. இதில் பொருளாதாரத் துறையைச் சேர்ந்தோருக்கும் பங்குண்டு.

### இதெல்லாம் பொறுப்பின்மையின் விளைவுகளே!

இப்படித்தான் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமாக இந்தப் பொறுப்பின்மை விளைந்துள்ளது. சமூகம், நாடு என்ற பற்றுக் குறைந்து, தாம் மட்டும் பிழைத்துக் கொண்டால் போதும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடு இது. இதனால்தான் தமது நலனை மட்டுமே இலக்கு வைத்து காரியங்கள் நடத்தப்படுகின்றன. பல தொழிற்சங்கப் போராட்டங்கள் நடப்பது அவரவரின் நலன் சார்ந்ததே. உதாரணமாக ஆசிரியர் சங்கத்தின் போராட்டங்கள் மாணவர்களின் நலன்சார்ந்து அமைவதில்லை.



பின்தங்கிய பிரதேச மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு எந்த ஆசிரியர் சங்கமும் எந்தக் கவனத்தைக் கொண்டதாகவும் வரலாறே இல்லை.

தனியே ஆசிரியர் நலனில் மட்டுமே அதனுடைய முழுக்கவனமும் இருக்கும்.

இப்போது பாருங்கள், க.பொ.த. உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களைத் திருத்தும் வேலைகள் கூட இன்னும் தொடங்கப்படவில்லை. 3 இலட்சத்து 40 ஆயிரத்து 508 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். இவர்களில் 2 இலட்சத்து 55 ஆயிரத்து 62 பேர் சிங்கள மொழி மூலமும், 85 ஆயிரத்து 446 பேர் தமிழ் மொழி மூலமும் பரீட்சையை எழுதியிருக்கிறார்கள்.

இந்த வினாத்தாள்களைத் திருத்தம் செய்வதற்கு பதினாறு ஆயிரம் பேர் தேவைப்படுகிறார்கள். இதில் பத்தாயிரம்பேர் மட்டும்தான் விண்ணப்பித்துள்ளனராம். ஆகவே ஆட்பற்றாக்குறையினால் வினாத்தாள்களைத் திருத்தும் பணிகள் தொடங்கப்பட முடியாமல் இழுபட்டுக் கொண்டிருக்கிறது.

இதில் நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர் இப்பொழுதுதான் தமிழ் மொழி மூல வினாத்தாள்கள் திருத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள மொழி மூலத் தாள்கள் திருத்தப்படவே இல்லை. இதற்குக் காரணம், திருத்தம் செய்வோரில் ஒரு தொகுதியினர் அதற்கு விண்ணப்பிக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதற்குக் காரணம், கொடுப்பனவு அதிகரிக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. குறிப்பாக பிற மாவட்டங்களுக்குச் செல்வோர் உட்பட அனைவருக்குமான செலவீனங்கள் கூடியிருப்பதால் அதை ஈடுசெய்யக் கூடிய அளவில் கொடுப்பனவை வழங்க கல்வி அமைச்சு இணங்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம், அரசாங்கம் கொடுப்பனவை அதிகரிக்காமல் கடுமையாக வேலை வாங்கப்பார்க்கிறது. போதாக்குறைக்கு வரியை வேறு அதிகரித்துள்ளது என்ற தெரிவிக்கப்படுகிறது. இதற்குக் காரணம், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும் அதைச் சீராக்குவதாகக் கூறும் அரசின் கடும்போக்கும் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

இதில் உள்ள நியாயம் எவ்வளவு என்பது ஒரு புறம் இருக்கட்டும்.

இதற்கும் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கும் என்ன சம்பந்தம்? அந்த மாணவர்கள் இளைய கன்றுகள். வாழ்வின் முதற்படியில் ஏறுவதற்காக பரீட்சைக்குத் தோற்றி விட்டுப் பெறுபேற்றுக்காக் காத்திருக்கிறார்கள். அவர்களுடைய எதிர்காலத்தை யாராவது சிந்தித்தார்களா? அவர்களுடைய உள நிலையை யாராவது எண்ணினார்களா? அவர்களுடைய பருவம் இப்படியே இந்தப் போராட்டங்களுக்குள்ளால் இழுபட்டுக் கொண்டே வீணடிக்கப்படுகிறது.

### இந்தப் பொறுப்பின்மையைப் பற்றி என்ன சொல்வது?

இந்த மாணவர்களின் பெற்றோர் கவலைகளோடு இருக்கிறார்கள். அவர்களால் இதற்கு மேல் என்ன செய்ய முடியும்?

இந்த மாணவர்கள் இந்தத் தடைகளைக் கடந்து பல்கலைக்கழகம் சென்றாலும் அங்கே எப்படியாவது அவர்களுடைய கற்கைக் காலத்துக்குள் மூன்று நான்கு போராட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும் சந்திக்க வேண்டியிருக்கும். கல்வி சார் உத்தியோகத்தர்களின் போராட்டம், கல்வி சாரா உத்தியோகத்தர்களின் போராட்டம் என்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் போராட்டங்களை நடத்தி காலத்தை இழுத்தடிப்பதே இவர்களின் நோக்கமாக இருக்கும்.

அங்கே படிக்கின்ற இளைய தலைமுறையின் எதிர்காலத்தைப் பற்றிப் பொருட்படுத்தவே மாட்டார்கள். இதுதான் தொடர்ந்தும் நீடிக்கிறது.

ஆகவே பொறுப்பின்மைகள் எல்லா மட்டங்களிலும் எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலுமாக தொடர்கிறது. இதன் விளைவுகளை இன்னும் இந்த நாடும் நாமும் அனுபவிக்கப்போகிறோம்.

கருணாகரன்...

# சமூக முன்னேற்றத்தில் முன்மாதிரிச் செயற்பாடுகள்!

ரமழானை கண்ணியப்படுத்தி நல்லமல் செய்வதற்கு அருள்பாலித்த எல்லாம் வல்ல இறைவனுக்கு இந்தப் பெருநாள் தினத்தில் நாம் நன்றியுடையோராக இருப்போம். முஸ்லிம்களின் முன்மாதிரி சகல சமூகங்களுக்கும் எடுத்துக்காட்டாக இருப்பதுதான் சிறந்தது. இஸ்லாத்தின் இலட்சியங்களில் இழையோடியிருப்பதும் இவைதான்.

எதைச் செய்தாலும் இறைவனின் திருப்திக்காக என்ற எண்ணந்தான் ஈமானைப் பூரணப் படுத்தும். அள்ளிக் கொடுத்தாலும் கிள்ளிக் கொடுத்தாலும் இறைதிருப்தியே எண்ணமாக இருக்க வேண்டும். இந்தப் புனித எண்ணம் தான் ஆன்மிக வெற்றிக்கு வித்திடும். கடந்துபோன ரமழானில் இப்புனிதம் எத்தனை பேரிடமிருந்தது? "இஷ்ராப்" (வீண்விரயம்) இல்லாத "இப்தாரை" எத்தனை பேர் செய்தார்கள்? பழிவாங்கவும் பாரபட்சத்துக்காகவும் இடாம்பீக இப்தாரை ஏற்பாடு செய்தவர்கள் யார்? "கணக்குக் கேட்பதில் உமது இறைவன் நீதமானவன்" என்கிறது புனித குர்ஆன். இந்தத் தீர்ப்புத் தீர்க்கும் நாளில் கதிகலங்கி நிற்கப்போவது யார்? கையறுநிலையில் கைசேதப்படப் போகும் தனவந்தர்கள் யார்?

அரைவயிறும் குறைவயிறுமாய் கடந்த ரமழானைக் கடத்தியவர்களுக்கு இந்த ஈகைத் திருநாளிலாவது இதயம் திறப்போம். கஷ்டங்கள், துயரங்களின்போது பொறுமையைக் கடைப்பிடித்து, நோன்புநோற்ற எம்மவர்களின் வயிறையும் வாழ்வையும் நிரப்ப நேசக்கரம் நீட்டுவதில்லையா? இடாம்பீக இப்தார்களைச் செய்தோரின் இதயங்கள் இன்றாவது இலங்கட்டும் அல்லது இரங்கட்டும். எடுத்தெறிந்த போக்குகள், ஏளனப்பார்வைகளுக்கு எல்லாம் இஸ்லாத்தில் இடமில்லை. அண்டைவீட்டாரின் பசி, உறவினர்களின் உணர்வு, நண்பர்களின் நாட்டங்கள் மற்றும் சமூகத்தின் அபிலாஷைளில் கவனம் செலுத்தாத செல்வம், ஒட்டகக் கூட்டங்கள் சுமந்த சாவிக்கொத்துக்களுக்கு சமமாகவே கருதப்படும்.

சந்தர்ப்பவாதப் போக்குகளும் சுயநல எண்ணங்களும் எவரையும் ஈடேற்றாது. எல்லை மீறுவது, வரம்புகடப்பதெல்லாம் ஈமானுள்ள முஸ்லிமின் செயலுமில்லை. எனவே, எந்தச் சந்தர்ப்பங்களிலும் எதற்கும் பலிக்கடாக்களாக மாறாமலிருக்க முஸ்லிம்கள் பழகிக் கொள்ள வேண்டும். பலிக்கடாக்களாக்க முயல்வோரும் இதிலிருந்து ஒதுங்குவதே சிறந்தது.

ஒருவனின் இயலாமையில் அல்லது ஆசையில் அளவு கடந்த செல்வச் செருக்குடன் நடக்கும் சீமான்கள் தீர்ப்பு நாளை பயந்துகொள்ளட்டும். எதிர்கொள்ள நேர்ந்துள்ள சவால்களில் வெற்றியடையும் தருணம் எம்மை எதிர்நோக்கியுள்ளது. எனவே, இஸ்லாம் பயிற்றுவித்துள்ள பொறுமைதான் எமக்குள்ள வழி. இதற்கான நற்கூலிகளை இறைவனே பொறுப்பேற்றுள்ளான். இந்த நம்பிக்கையில் நமது எதிர்காலம் நகரட்டும். நப்பாசைகள் இருக்கும் வரைதான் நாம் நம்புவோர் நம்மைப் பயன்படுத்தப்பார்ப்பர். இந்த நிராசைகள் இந்நன்னாளிலிருந்து நீங்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை.

கோடி கோடியாகக் கொட்டி விரயமாக்கும் பணம், செல்வங்கள் எல்லாம் நம்மவர்களின் குடிசைக் கூரைகளைக் கிழித்து வீட்டுக்குள் விழட்டும். இந்த தயாள மனம் இச்செல்வந்தர்களிடம் வளர இந்த ஈகைத் திருநாளில் இருகரமேந்துவது சமூகத்துக்கான பொறுப்பாகும். பசியும் பட்டினியுமாயிருந்து இறைவனை நெருங்குவதாக நினைப்போரால் தங்களது மனச்சாட்சிகளைக் கூட நெருங்க முடியாது. கருணையில்லாத "கல்புகளால்" சமூகக் காட்சிகளைப் பார்க்கவே முடியாது. சமூகம் பசித்தாலும் பதறினாலும் இவர்களின் போக்குகள், போக்கிரித்தனமாகவே இருக்கும். இவ்வாறானவர்களின் இதயங்கள் கழுதைகள் சுமந்த ஏடுகளாகவே உள்ளன. எத்தனை ஏடுகளைச் சுமந்தாலும் கழுதைகளால் கற்க முடியாதல்லவா?

எனவே, கடந்தகாலங்களை கற்றுக்

சுஐப் எம். காசிம்...

VEHICLE VALUATION REPORTS
ACCEPTED BY LEASING AND FINANCE COMPANIES, BANKS, GOVERNMENT & NON- GOVERNMENTAL INSTITUTIONS
AA CEYLON Estd. 1904
CALL:-
Automobile Association of Ceylon
40, Sir M.M.M. Mawatha, Colombo 03
Tele. No: 011 7 555 557 (Ext. 214)






# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## PIANO CLASSES and WESTERN MUSIC THEORY

HOME VISITS AND ONLINE
CONDUCTED BY - L WEERAKOON
Registered teacher for London Trinity college and former government teacher
071 866 10 68

## வீடு விற்பனைக்கு நுவரஎலிய

குதிரைப்பந்தய திடலுக்கு அருகாமையில்
7 படுக்கையறைகள் 5 குளியலறைகள் - 60 பேர்ச்சில் அமைந்துள்ள பிரித்தானிய கால பங்களாவுடன் பரந்தளவிலான தோட்டம்
மலை காட்சியுடனான இயற்கை காட்சியமைந்த இடம். தெளிவான உறுதி
விலை : 250 மில்லியன்
தொடர்பு இலக்கம் - 0740 493 549

## KADUWELA AT VIHARA MAWATHA

34.8 perch land very close to Katunayake Express way with water, Electricity, Telephone facilities for IMMEDIATE SALE
VERY CLOSE TO SLIIT AND CINEC UNIVERSITIES
Call : 0777 300 688

## APARTMENTS FOR SALE

SPATHODEA -- Havelock Rd, COLOMBO 5
2BR, 1076 Sq.ft., Fully Furnished, Rs. 48 Mn
ICONIC GALAXY -- RAJAGIRIYA
2BR, 1150 Sq.ft., Rs. 55 Mn
ALTAIR Residencies -- COLOMBO
Sloping Tower, 3BR, 1820 Sq.ft., Rs. 220 Mn
KINGDOM -- ETHUL KOTTE
3BR, 1450 Sq.ft., Rs. 45 Mn
0777 258 280

வாரமஞ்சரி போட்டோ குறும் விளம்பரம்
Amal - 077 7 270 443
Asela - 077 313 0 150

வாரமஞ்சரி BUDGET adz It suits your budget

## Advertise Here

வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

## අමානෝ සෙවිලි සහ වැහිපීලි

දිවයිනේ අඩුම මිල ගණන් යටතේ විවිධ වර්ණයෙන් විවිධ හැඩයෙන් යුක්තව ඔබට අවශ්‍ය ක්ෂණිකමින් දකුණු කොරියාවෙන් ආනයනය කරන ලද සෙවිලි සහ වැහිපීලි
(Zinc Aluminium Sheet) රු 185 සිට
0777 394 679, 0752 234 444




inquiry@excello.lk
4 படுக்கை அறைகள் | 4 குளியலறைகள் 077 022 2000
* பணியாளர்களுக்கான தங்கும் இடவசதியுண்டு

## Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

## ARIYARATHNE CONSTRUCTIONS

අමානෝ වහල
කාප්ප වහල
වීදුරු වහල
විනිවිද වහල
සහ කැනපි
සියලුම ඇලුමිනියම් වැඩ
Warehouse Construction
අත්තිවාරමේ සිට සියලුම නිවාස ඉදිකිරීම
Polycarbonate
අමානෝ පීලි 0.47 (mm)
නවීන විලාසිතාවේ ග්‍රිල්, ගේට්ටු, අත්වැල්
විශ්වාසයෙන්, වගකීමෙන් හා උසස් නිමාවෙන්...
0777 24 23 19 / 0711 24 23 19
ariyarathneconstruction@yahoo.com
www.ariyarathneconstruction.com
www.facebook.com/ariyarathneconstruction

# வாரமஞ்சரி BUDGET adz போட்டோ குறும் விளம்பரம்



Toyota Carina TI, Diesel, year of manufacture 1997, registered in the year 2000, mileage 157,000 Km, maintenance and emission test reports are available. Fifth registered owner, power steering, DVD, Reverse Camera, Automatic Transmission of oil and engine oil, filters replaced recently, full option, new tyres, shock absorber, alloy wheels, revenue licence upto year 2024 and leasing facilities can be arranged. Price 42 lakhs, price negotiable only after inspection, Bellanwila- 0779 109 614 022258-rpt



Honda CR-V,183000 km done, Recently New battry Replaced, Engine oil Differential oil Brake oil Steering oil renewed Coolant system flushed and new coolant added Engine mount differential mount replaced Brake pads renewed, Plug replaced and injectors cleaned & tune-up done. All parts and oil bought from Stafford Motors All Invoice available Brand new tyres fixed 071 715 7150 024142



Land Rover Range Sport HSE 2018 used SUV/ 4x4, Engine Capacity 2000cc , country of origin UK, Grey - Wrapped with white colour - leather Electric memory seats - triptronic Diesel Mileage 93000 km Price Rs. 57, 500, 000/- Negotiable Contact 0753 944 872 024134-2



Toyota Dolphin, Year 1991, 57-7xxx, Long Model, Power Steering, Good Condition, Gampaha. 077 456 62 37 / 071 463 0263 024304



Toyota KDH TRH 200v 2017 Engine capacity 1990 cc petrol Efi Alto Triptonic transmission Silver colour 12 air bages, Mileage 47790 km Price - Rs. 17,000,000/- Negotiable Contact No. 0753 944 872 024134 -1



Vitz 2016, Orage, , Sale or Exchange, No. 36 B, Hospital Junction, Kalubowila. 0772 298 899 / 0777 880 800 rpt-020622



Mitsubishi Eclipse Cross 2019, Registered Owner, CBG- xxxx, Company Records, 39000 Kms, Sun Roof, Vehicle exchange too considered. 074 235 89 50 / 011 413 93 00 024312



2008, Scorpio Mahendra single cab, Diesel, manual, asking price Rs. 18.50/-, seen @ Dehiwala, Call 077 191 8938 022050-rpt



BMW 520D year 2012 used triptronic Diesel, Engine Capacity,1995 cc, mileage 251000 km, AC, PS, Cruise control, Beige Leather interior Price - Rs 13,000,000/- Negotiable. Contact 0753 944 872 024134-03



Nissan presea 1999 300-xxxx Full option, Original Paint, Air Bag, Alloy, New Tyres 0775 022 451, 0714 446 907 014639-rpt

வாரமஞ்சரி போட்டோ குறும் விளம்பரம்
Amal - 077 7 270 443
Asela - 077 313 0 150

BUDGET வாரமஞ்சரி adz It suits your budget

# வாரமஞ்சரி BUDGET ADZ

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067


FREE INSPECTION

## වේයන් මර්ධනයට විසඳුම

**Solution to Get rid of Termites**
Pre & Post Construction treatments For Termites
RODENT CONTROL To Minimize the Pest Attack & Usage of Pesticide Keep Your environment Clean
COCKROACHES, FLIES MOSQUITOES, ANTS BED BUGS, WOOD BORES
Hotline: 074 031 5517
Licence No - RP/PCR/WP/100, Approved by Registrar of Pesticides
**Leemaka Industries (Pvt)Ltd.**
No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
Tel - 0112 785344, Email - Leemakaindustries@gmail.com

## 4 Acres with House For Sale in Peradeniya

On Galaha road 4 km from Peradeniya University and Hospital. 20 min to Kandy. Peaceful environment. Scenic view. Includes 1960's bungalow, 6 levelled sites, 3- Phase electricity, and pipe borne water. Stable ground. Rear boundary on Mowbray Road. Clear deeds, Rs. 300,000/- per perch. Cash buyers only. No brokers
Contact Owner on Property9280@gmail.com
0766 271 100

## ක්ෂේත්‍ර නිලධාරී මහතෙකු අවශ්‍ය කර තිබේ.

(Wichy Plantation Company (Pvt) Ltd)
(Desiccated Coconut)

ඔබට

WICHY COCONUT
email: careers@wichy.com
web: www.wichy.com



## FRESH FRUITS, VEGETABLES SUPPLIERS REQUIRED

Fresh Fruits, Vegetables Exporting Company requires Fresh Fruits, Vegetable Suppliers
Those who are ALREADY IN SUPPLY Chain are Specially Considered
**MIHIN HOLDINGS (PVT)LTD**
Contact - +94 717 55 96 98 whatsapp



## 8 ACRES OF COCONUT LAND & PRIVATE FARM HOUSE FOR SALE

CONTAINING A COCONUT LAND & PRIVATE FARM HOUSE WITH COOPS, VEGETABLE, FRUITS, COCONUTS, FOR SALE

Turmeric, Ginger, Cabbage, Beet, Chillie, Brinjals, Carrot, Banana, Pineapple, Durian, Rambutan, Mangoes, Jak, Cashew, Olives, Teak, Mahogany

BANK APPROVED LOAN FACILITIES
CLEAR DEED, SURROUNDED BY ROADS
15 MINUTES FROM KATUNAYAKE
Contact : 0777 775 022

## காணி விற்பனைக்கு - கண்டி

கண்டி அமாயா ஹில்ஸ் ஹோட்டலில் இருந்து சில மீட்டர்கள், ஹீரஸ்ஸகல. கண்டியின் அழகிய காட்சியுடன் 120 பேர்ச் விற்பனைக்கு உள்ளது. தொடர்புக்கு - யாப்பா 0777317400
நிலத்தில் இருந்து

BEST OFFER
குடியிருப்பு, விடுமுறை இல்லம் அல்லது சுற்றுலா விடுதிக்கு உகந்தது














## HOUSE FOR SALE IN MATALE TOWN



TWO STOREY HOUSE WITH
6 Bedrooms,
4 Bathrooms, 53 perch,
Near Vijayapala College,
Harasgama Road.
FOR SALE
50 MILLION
CONTACT (SUJITH)
0777 402 879

## LAND FOR SALE AT TALKOTE, SIGIRIYA

2 Acre & 60P land for sale at Talkote Sigiriya facing Sigiriya Lion Rock and Pidurangala ancient Rock.



It's an exclusive tourist area facing a lake bund
CLEAR DEEDS WITH ALL THE APPROVALS
0773 104 168

# அபாயகரமானதாக மாறும் சூடான் அரசியல்



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்



அரசியல் என்பது அதிகாரத்தை மையப்படுத்திய அலகாகவே காணப்படுகிறது. இவ்அதிகாரப் போட்டிக்குள் வரலாறு தோறும் ஜனநாயகத்துக்கு முரணான அதிகார கைப்பற்றுகைகளும் பதிவாகியே வருகின்றது. இவ்வரலாற்று பதிவில் சூடான் தொடர்ச்சியாகவே கொதிநிலையான அரசியல் வரலாற்றை பதிவு செய்யும் அரசாக நிலைபெறுகின்றது. 2021இன் பின்னரைப்பகுதியில் சதிப்புரட்சியூடாக இராணுவம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. இன்று, இராணுவ ஆட்சியாளர்களிடையே அதிகாரத்தை பொதுமக்களிடம் கையளிப்பது தொடர்பான கருத்து வேறுபாடுகள் காரணமாகவே மோதல்கள் மூண்டுள்ளன.

உள்நாட்டு மோதலாக பரிணமித்துள்ள சூடான் மோதலுக்கு பின்னால் சர்வதேச அரசுகளின் நலன்களும் பிணைந்துள்ளன. சூடான் மோதல் என்பது சர்வதேச அதிகாரப்போட்டியின் ஒரு பகுதியாகவும், அதன் வேர்கள் அந்த நாட்டின் குழப்பம் மிகுந்த அரசியலுடன் தொடர்புபட்டவையாகவும் அமைகின்றன. இக்கட்டுரை சூடான் மோதலின் அரசியல் தாற்பரியத்தை தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

வளங்கள் நிறைந்த ஆனால் வறிய நாடான சூடானின் அதிகாரத்திற்காக திடீரென இராணுவத்திற்குள் மோதல் வெடித்துள்ளது, கிட்டத்தட்ட 200க்கும் மேற்பட்ட (400 எனவும் செய்திகள் உண்டு) குடிமக்களைக் கொன்றது மற்றும் ஜனநாயகத்தின் மீதான அதன் நம்பிக்கையைத் தகர்த்து, சுற்றியுள்ள நாடுகளின் ஸ்திரத்தன்மையை அச்சுறுத்தும் ஒரு கடுமையான உள்நாட்டுப் போராக மாற்றமுறும் அச்சத்தை எழுப்புகிறது. நாட்டின் இராணுவ தலைமைக்குள் காணப்படும் அதிகாரப்போட்டி காரணமாகவே சூடான் மோதல் வெடித்துள்ளது. தலைநகர் கார்ட்டூம் மற்றும் பிற பகுதிகளில் வான்வழித் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிச் சண்டைகளால் மில்லியன் கணக்கானவர்கள் மோதலுக்குள் சிக்கினர். 2021 இல் இடம்பெற்ற சதிப்புரட்சிக்கு பின்னர் சூடானை இரு தரப்பு இராணுவ அதிகாரிகள் குழுவொன்று நிர்வாகம் செய்கின்றது. இதில் இடம்பெற்றுள்ள இரண்டு இராணுவ அதிகாரிகளே தற்போதைய வன்முறைகளுக்கு காரணமாக உள்ளனர். இராணுவ தலைவரான ஜெனரல் அப்தெல் பத்தா அல் புர்கான் நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகிக்கின்றார். சூடானின் துணை ஜனாதிபதியாக முகமட் ஹம்தான் டக்லோ பதவிவகிக்கின்றார் இவர் ஆர்.எஸ்.எப் துணை இராணுவக்குழுவின் தலைவராகவும் காணப்படுகின்றார்.

நாடு சென்றுகொண்டிருக்கும் திசை மற்றும் பொதுமக்களிடம் ஆட்சியை வழங்குவது போன்ற விடயங்கள் குறித்து இருவர் மத்தியிலும் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. மேலும் 100,000 வலிமையான ஆர்.எஸ்.எப்ஐ(Rapid Support Forces) இராணுவத்தில் சேர்க்கும் திட்டங்கள் மற்றும் புதிய படையை யார் வழிநடத்துவார்கள் என்பதும் இரு இராணுவ அதிகாரிகளின் மோதலிலும் பிரதான காரணியாக காணப்படுகின்றது. ஆர்.எஸ்.எப் துணை இராணுவக்குழு 2013இல் உருவாக்கப்பட்டது மற்றும் அதன் தோற்றம் ஜான்ஜவீட் போராளிகளால் டார்பூரில் கொடூரமாக கிளர்ச்சியாளர்களை எதிர்த்துப் போராடியது. அங்கு அவர்கள் இனச் சுத்திகரிப்புக்கு குற்றம் சாட்டப்பட்டனர். அப்போதிருந்து, யேமன் மற்றும் லிபியாவில் மோதல்களில் தலையிட்ட ஒரு சக்திவாய்ந்த துணை இராணுவக் குழுவை ஜெனரல் டக்லோ உருவாக்கியுள்ளார். சூடானின் சில தங்கச் சுரங்கங்களைக் கட்டுப்படுத்துவது உள்ளிட்ட பொருளாதார நலன்களையும் அவர் வளர்த்துள்ளார். 2019 ஜூனில் 120க்கும் மேற்பட்ட எதிர்ப்பாளர்களை படுகொலை செய்தது உட்பட மனித உரிமை மீறல்களில் ஆர்.எஸ்.எப் துணை இராணுவக்குழு மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இராணுவத்திற்கு வெளியில் இத்தகைய பலம் வாய்ந்த படையொன்று நாட்டில் என்றும் ஸ்திரமற்ற தன்மையை தோற்றுவிக்கும் காரணியாகவே காணப்பட்டுள்ளது. அதன் சான்றாகவே தற்போதைய மோதலும் காணப்படுகின்றது.

சூடான் மோதலை எளிமையாக உள்ளக மோதலாகவும், ஜெனரல் அப்தெல் பத்தா அல் புர்கான் மற்றும் முகமட் ஹம்தான் டக்லோ ஆகியோரின் அதிகார நலனுக்கான போட்டியாகவும் கருதிவிட இயலாது. சூடானின் மோதலுக்கு பின்னால் சூடானின் தொன்மையான இராணுவ அரசியல் கலாசாரமும் வரலாறும் உண்டு. அதுவே இன்னோர் பரிமாணமான சர்வதேச அரசுகளின் நலன்களுடன் இணைந்து ஆழமான செல்வாக்கு செலுத்துகின்றது. இதனை நுணுக்கமாக அவதானித்தல் அவசியமாகின்றது.

முதலாவது, சூடானின் நீண்ட கால அரசியல் வரலாறு இராணுவ ஆட்சியினுள்ளேயே காணப்பட்டு வந்துள்ளது. முன்னாள் இராணுவ அதிகாரியான ஓமர் அல் பஷீர் 1989இல் இராணுவத்தின் ஆட்சிக்கவிழ்ப்பில் அதிகாரத்தை பிடித்தார். இவரது ஆட்சி 30 ஆண்டுகளுக்கு பிறகு 2019ஆம் ஆண்டு மக்கள் புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து 2019ஆம் ஆண்டு அரசியலமைப்பு ஆவணத்தில் ஒப்புக்கொண்டு சிவிலியன் இராணுவ கூட்டமைப்பு ஒன்று இடைக்கால அரசாங்கமாக பதவியேற்றது. சூடானின் இறையாண்மை சபை சிவிலி

யன் இராணுவ கூட்டுறவில் கட்டமைக்கப்பட்டது. இக்கூட்டுறவு இடைக்கால அரசாங்கத்தில் அப்தல்லா ஹம்டோக் பிரதராகவும், ஜெனரல் அப்தெல் பத்தா அல் புர்ஹான் இராணுவ முகவராகவும் செயற்பட்டனர். இரண்டு வருட காலப்பகுதியில் பொதுத்தேர்தல் ஒன்றினூடாக முழுமையாக ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துவதாக உறுதி பூண்ட போதிலும், 2021 ஒக்டோபர் 25 அன்று ஜெனரல் அப்தெல் பத்தா அல்புர்ஹான் தலைமையிலான இராணுவக்குழு முழுமையாக ஆட்சியை கைப்பற்றியது.

முழுமையான இராணுவ ஆட்சி ஏற்பட்டதை தொடர்ந்தே அதிலிருந்து ஜெனரல் அப்தெல் பத்தா அல்புர்ஹான் மற்றும் ஜெனரல் டக்லோவுக்கும் இடையிலான போட்டி தீவிரமடைந்துள்ளது. இப்பின்னணியில் 2019இல் ஓமர் அல்பஷீர் பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்றத்தின் சமீபத்திய அத்தியாயமாகவே இன்றைய இராணுவக்குழுக்களிடையேயான மோதல் அவதானிக்கப்படுகின்றது. இது இராணுவ ஆட்சி பாரம்பரியத்தின் வெளிப்பாடே ஆகும். இரண்டாவது, கடந்தகால மனித உரிமை குற்றச்சாட்டு வரலாறுகள் பொதுமக்களிடம் அதிகாரத்தை பகிர்வதில் இராணுவக்குழுக்களிற்கு தடையாக அமையும். முன்னாள் ஜனாதிபதி பஷீரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கு 2019/2021 இடைக்கால சிவிலியன் இராணுவ கூட்டமைப்பு அரசாங்கம் கொள்கையளவில் உறுதிபூண்டுள்ளது.

டர்பூர் போரின்போது நடந்ததாகக் கூறப்படும் அட்டூழியங்களில் பஷீர் தங்களைக் குற்றவாளிகளாகக் குறிப்பிடுவார் என்ற அச்சம் பஷீர் நிர்வாகத்தின் கீழ் லெப்டினன்ட்களாக செயற்பட்ட ஜெனரல் புர்ஹான் மற்றும் துணை இராணுவ விரைவு ஆதரவுப் படையின் தலைவர் ஜெனரல் முகமட் ஹம்டான் டக்லோ ஆகியோருக்கு உள்ளது. அத்துடன் சுதந்திரம் மற்றும் மாற்றத்திற்கான படை புர்ஹான் மற்றும் டக்லோ ஆகிய இருவரையும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தாவிடினும் சூடான் நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்க்கை காணப்படுகின்றது.

(17ஆம் பக்கம் பார்க்க)

# தன்னிறைவு பொருளாதாரத்தை நோக்கிய இலங்கையின் பயணம்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி &
முகாமைத்துவ ஆலோசகர்

“தன்னிறைவு பொருளாதாரம்” என்றால் நாடு தனது மக்களின் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஒட்டுமொத்தத் தேவையினையும் முழுமையாகவோ அல்லது இயலுமானவரையோ அந்நிய நாட்டின் இறக்குமதியைச் சாராது, உள்நாட்டு சுய உற்பத்தி மற்றும் சேவைகளின் வாயிலாக நிறைவுசெய்யும் செயற்பாடாகும். மற்றும் பிற நாடுகளின் இறக்குமதியை நம்பாமல், தன் நுகர்வுக்குத் தேவையான அனைத்தையும் உற்பத்தி செய்வதாகும்”. இலங்கையின் சீரழிந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் “தன்னிறைவு பொருளாதாரம்” மிகவும் அவசியமாகின்றது.

பல தசாப்தங்களுக்கு முன்பு இலங்கை தன்னிறைவடைந்த நாடாக காணப்பட்டது. சிறந்த வளமுள்ள நாடாகவும் மக்களின் தேவைகள் யாவும் உள்ளூரிலேயே நிறைவு செய்யப்பட்டதையும் வரலாறுகள் பறைசாற்றுகின்றன. ஆனால் தற்போதைய நிலைமையோ தலைகீழாக மாற்றமடைந்துள்ளது. மக்களுடைய தேவைகளில் பெரும்பாலானவை இறக்குமதியின் வாயிலாக நிறைவேற்றப்படுவதோடு உள்ளூர் உற்பத்திகள் பாரியளவில் கைவிடப்பட்ட துர்பாக்கிய நிலைமை காணப்படுகின்றது.

இலங்கை உள்ளூர் உற்பத்திகளை உதாசீனம் செய்ததன் விளைவே தற்பொழுது நாடு எதிர்கொள்கின்ற பாரிய பொருளாதார சிக்கல்கள் ஆகும். இதன் காரணமாக இலங்கை அரசாங்கம் வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டெழும்பும் முகமாக சர்வதேச நாணய நிதியத்திடம் 18 ஆவது தடவையாக உதவி நாடப்பட்டது. பல நிபந்தனைகளுடனும் மற்றும் கடுமையான கட்டுப்பாடுகளுடனும் முதற்கட்ட கடன் தொகையான 330 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் முழுமையான உதவித்தொகை நான்கு ஆண்டுகளில் தவணைகளாக வழங்கப்படும். இலங்கை அமுல்படுத்த வேண்டிய சர்வதேச நாணய நிதியத்தினால் விதிக்கப்பட்ட முக்கிய நிபந்தனைகள் பின்வருமாறு.

ஏப்ரல் 2023 இறுதிக்குள் கடன் மறுசீரமைப்பு திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் நியமங்களுக்கு அமைவாக ஊழலுக்கு எதிரான சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.

அரச வருவாயை மிக விரைவில் அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

அதிக வருமானம் ஈட்டுபவர்களிடமிருந்து அதிக பங்களிப்புடன் செல்வ வரி (Wealth Tax) விதித்தல் வேண்டும்.

2025க்குள் சொத்து மற்றும் சொத்து பரிமாற்ற வரி அறிமுகம் செய்தல் வேண்டும்.

2023ஆம் ஆண்டு இறுதிக்குள் பணவீக்கத்தை 12%முதல் 18% ஆகக் குறைக்க வேண்டும்.

ஜூன் மாத இறுதிக்குள் தற்போதைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும்.

நாணய மாற்று விகித நெகிழ்வுத்தன்மையை பராமரித்தல் வேண்டும்.

மத்திய வங்கியை மேலும் சுதந்திரமாக்குதல் வேண்டும்.

வலுவான சமூக பாதுகாப்பு வலையமைப்பை அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

இந்த உதவி கிடைத்தவுடன் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் தனது உரையில் “2026ல் உற்பத்தி பொருளாதாரத்தின் ஊடான வருமானத்தை 15 சதவீதமாக உயர்த்துவதே எமது இலக்கு” என கூறியுள்ளார். மேலும் இதற்காக “நாட்டின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதும், புத்தாக்கத்தை அதிகரிப்பதும் முக்கியமாகும்”, என்றும் கூறியுள்ளார். எனவே இனிவரும் காலங்களில் இலங்கை மக்களும் அரசாங்கமும் இதனை நன்குணர்ந்து உள்ளூர் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை மீண்டும் கட்டி எழுப்புவது மிகவும் அவசியமாக அமையப்போகின்றது.

இலங்கை இயற்கையாகவே பல வளங்களை கொண்ட நாடாக விளங்குகிறது. ஆகவே பின்வரும் துறைகளில் தன்னிறைவு பெற்றுக்கொள்ள கூடிய வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

**விவசாயம்:** குறிப்பாக அரிசி உற்பத்தி, அரிசி இலங்கையர்களின் பிரதான உணவாகும், மேலும் நாட்டில் நெல் சாகுபடியின் நீண்ட வரலாறு உள்ளது. தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பில் முறையான திட்டமிடல் மற்றும் முதலீட்டுடன், இலங்கை தனது அரிசி உற்பத்தியை மேம்படுத்தி உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்வதற்கும் உபரியை ஏற்றுமதி செய்யவும் முடியும்.

**மீன்பிடித்துறை:** இலங்கை இந்தியப் பெருங்கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும், இது மீன்பிடிக்க ஏராளமான வாய்ப்புகளை வழங்குகிறது. எம் நாடு பல்வேறு வகையான கடல் வளங்களைக் கொண்டுள்ளது, மேலும் நிலையான மேலாண்மை நடைமுறைகளுடன், மீன் மற்றும் கடல் உணவு உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு அடைய முடியும்.

**கால்நடை வளர்ப்பு**

வாசனைப் பொருட்கள்: இலவங்கப்பட்டை (கறுவா), மிளகு, ஏலக்காய் போன்ற உயர்தர வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்வதில் இலங்கை புகழ் பெற்றுள்ளது. இந்த வாசனைப் பொருட்களுக்கு உலகளாவிய ரீதியில் அதிக கேள்வி உள்ளது. மேலும் இலங்கை தனது உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வருவாயை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது.

**சுற்றுலாத்துறை:** இலங்கையில் வளமான கலாசார மற்றும் இயற்கை பாரம்பரியம் உள்ளது. இது ஒவ்வொரு ஆண்டும் ஏராளமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. சரியான உட்கட்டமைப்பு மற்றும் ஊக்குவிப்பு மூலம் நாடு அதன் சுற்றுலா வருவாயை அதிகரிக்கலாம், மற்றும் இறக்குமதியை சார்ந்திருப்பதை குறைக்கலாம்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல்: சூரிய, காற்று மற்றும் நீர்மின்சக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் வளங்களை இலங்கை கொண்டுள்ளது. இந்த வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் புதைபடிவ எரிபொருட்களைச் சார்ந்திருப்பதை இலங்கை குறைத்து ஆற்றல் உற்பத்தியில் தன்னிறைவு அடைய முடியும்.

இரத்தினக்கல் தொழிற்துறை.

நம்மிடம் இருக்கின்ற வளத்தை நாம் புறந்தள்ளி இறக்குமதியில் பாரியளவில் தங்கியிருந்தமையினால் இலங்கைக்கு உடனடியாக எதிர்பார்க்கின்ற உற்பத்தித் திறனை பெற்றுக் கொள்வது கடினமாகத்தான் இருக்கப்போகிறது. ஆகவே உள்ளூர் உற்பத்தியை கட்டி எழுப்புவதற்கு எவ்வாறான குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதனை முதற்கட்டமாக இனங்காண்பது அவசியமாகின்றது. அந்த வகையில், பின்வருவனவற்றினை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. வரையறுக்கப்பட்ட விளை நிலம்: இலங்கையில் மட்டுப்படுத்தப்பட்ட விளை நிலம் உள்ளது. நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 20% மட்டுமே சாகுபடிக்கு ஏற்றது. இது அதன் மக்கள்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமான உணவை உற்பத்தி செய்யும் திறனைக் கட்டுப்படுத்துகிறது.

**போதிய உட்கட்டமைப்பு:** நாட்டின் போக்குவரத்து, நீர்ப்பாசனம் மற்றும் சேமிப்பு வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு போதுமானதாக இல்லை. இது நாட்டின் பொருட்களைத் திறமையாக உற்பத்தி செய்வதற்கும் கொண்டு செல்வதற்கும் உள்ள திறனைக் கட்டுப்படுத்துகிறது. இது உலக சந்தையில் போட்டியிடுவதை கடினமாக்குகிறது.

**மூலதனத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல்:** இலங்கையில் பல சிறிய அளவிலான விவசாயிகள் மற்றும் வணிகங்களுக்கு மூலதனத்திற்கான அணுகல் இல்லை, இதனால் உற்பத்தியை அதிகரிக்கும் நவீன உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்வது கடினம்.

திறமையான தொழிலாளர் பற்றாக்குறை: மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் நவீன விவசாய முறைகளில் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் பற்றாக்குறை உள்ளது. இது உலக சந்தையில் போட்டியிடும் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் நாட்டின் திறனைக் கட்டுப்படுத்துகிறது.

இறக்குமதியைச் சார்ந்திருத்தல்: உணவு, எரிபொருள் மற்றும் மூலப்பொருட்கள் உட்பட பல பொருட்களுக்கான இறக்குமதியை இலங்கை பெரிதும் நம்பியுள்ளது. இது உலக சந்தையின் ஏற்ற இறக்கங்கள் மற்றும் விலை உயர்வுகளால் நாட்டை பாதிக்கக்கூடியதாக ஆக்குகிறது. மேலும் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் திறனைக் கட்டுப்படுத்துகிறது.

இந்த இடையூறுகளை நிவர்த்தி செய்வதற்கு, உட்கட்டமைப்பு, கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களில் முதலீடுகள் மற்றும் தொழில்முனைவு மற்றும் மூலதனத்திற்கான அணுகலை ஊக்குவிக்கும் கொள்கைகள் உட்பட, அரசு மற்றும் தனியார் துறையின் ஒருங்கிணைந்த முயற்சி, இலகுக் கடன் வசதிகள், பாவனையில் இல்லாத நிலங்களை உள்வாங்குதல் போன்றன தேவைப்படும்.

இவ்வாறாக செயற்படுத்தப்படும் பொழுது தன்னிறைவு பொருளாதாரத்தின் வாயிலாக பல நன்மைகளை இலங்கை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அவற்றின் முக்கியமாக பின்வருவனவற்றினை அவதானிக்க கூடியதாக இருக்கும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு.

இறக்குமதி பாரியளவு குறையும் அல்லது முழுமையாக இல்லாமல் போகும்.

வெளிநாடுகளைச் சார்ந்திருப்பதைக் குறைக்கலாம்.

பாரியளவு அந்நிய செலாவணி வெளிப்பாய்ச்சலினை கட்டுப்படுத்தலாம்.

நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பு அதிகரிக்கும்.

ஏற்றுமதி அதிகரித்து அந்நிய செலாவணி வருமானம் அதிகரிக்கும்.

மறைமுக ஏற்றுமதி வருமான அதிகரிப்பு ஏற்படும்.

இலங்கை ரூபா நாணயத்தின் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்படும்.

பணவீக்கத்தினை பாரியளவு குறைக்கக் கூடியதாக இருக்கும்.

தனிநபர் வருமானம் அதிகரிக்கும்.

அரசின் நேரடி மற்றும் மறைமுக வரி வருமானம் அதிகரிக்கும். மேம்படுத்தப்பட்ட தேசிய பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல்.

அபிவிருத்தி அடைந்த நாடாக இலங்கையினை மாற்றி அமைக்க முடியும்.

ஆகவே, இலங்கை மக்கள் அனைவரும் இதனை நன்கு உணர்ந்து, எமது நாட்டுக்காக நாம் செய்யக்கூடிய ஒரு கடமையாக கருதி, இனிவருங்காலத்தில் நமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் முகமாக உள்ளூர் உற்பத்தி பொருட்கள் மற்றும் சேவைகளினை கொள்வனவு செய்வதுடன் இயலுமானவரை இறக்குமதியினை தவிர்ப்பதன் வாயிலாக ஒரு “தன்னிறைவு பொருளாதாரம்” அடைந்த நாடாக மாற்றுவோம் என உறுதிமொழி எடுப்போம்.



# தீர்க்கப்பட வேண்டிய மனித- குரங்கு மோதல்



'எங்கள் ஏரியாவில் குரங்குத் தொல்லை மிக அதிகம். பெரிய பெரிய குரங்குகள் தங்கள் குடும்பத்தோடு அடிக்கடி கூட்டமாக வந்து அடுப்படிக்குள் நுழைந்து ஊறப்போட்ட அரிசி, உளுந்து என்று எல்லாவற்றையும் ஒரு விளாசு விளாசிவிடும். பப்பாசி, வாழை, கொய்யா என ஆசையாக வளர்க்கும் மரங்களின் பிஞ்சுகளைக் கூட விடாமல் பிடுங்கி எறிந்துவிடும். யன்னல்கள் மற்றும் கதவுகளைத் திறந்து வைக்க பயமாகவிருக்கும். உள்ளே வந்துவிட்டால், விரட்டினால் நம்மை எதிர்க்கும்' என்கின்றார் கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர்.

'கடைகளில் விற்க வைத்திருக்கும் வாழைப்பழங்களை கண்ணிமைக்கும் நேரத்தில் பறித்து சாப்பிட்டுவிடும். இதனால் வியாபாரத்தில் பெரும் நஷ்டமடைகின்றோம் என்கிறார் புசல்லாவ பகுதியைச் சேர்ந்த நண்பரொருவர்.

'எனது மகள் ஒருநாள் பாடசாலை விட்டு வீட்டுக்கு வரும் வழியில் குரங்கு கடித்துவிட்டது. குரங்குகளால் எங்கள் பகுதியில் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்கிறார் நாவலப்பிட்டியைச் சேர்ந்த கலைவாணி.

'ஆசையாக வளர்த்த மாங்காய், மரவள்ளி மட்டுமல்ல சில நேரங்களில் பசிக்காக வைத்திருந்த சோற்றுப் பானையைக் கூட களவிச் செல்லும் சந்தர்ப்பங்களும் உண்டு' என்கிறார் ஹற்றனைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர்.

இவ்வாறு இலங்கையில் மனித, குரங்கு மோதல் (HMC) கடந்த 50 வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாத மிகவும் அழுத்தமான பிரச்சினையாக இருந்து வருகின்றது. கிராமப்பகுதிகள் மட்டுமின்றி நகர் பகுதிகளிலும் குரங்குகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளன. அதுவும் விவசாய பயிர்களை குறிவைக்கும் குரங்குகளால் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இன்றைய சூழ்நிலையில் விவசாய பயிர்களின் அழிவு மேலும் உணவு நெருக்கடியை தீவிரப்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். வண்ணாத்திவில்லு, ஆனமடுவ, அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் குரங்குகளால் மக்கள் அதிகளவில் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர். கேகாலை மாவட்டத்தில் குரங்குகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்திற்கும் அதிகமாகவுள்ளதாக கமநல மற்றும் விவசாய நலன்புரி அமைப்பு தெரிவிக்கின்றது.

விவசாய அமைச்சின் தரவுகளின் படி நாட்டில் 30 இலட்சத்திற்கும் அதிகமான குரங்குகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனாலேயே விவசாயத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செங்குரங்கு, மயில், மரஅணில் (ராட்சத அணில்), முள்ளம்பன்றி மற்றும் காட்டுப்பன்றி உள்ளிட்ட ஆறு வகை உயிரினங்கள் பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினங்களின் பட்டியலிருந்து நீக்கப்பட்டிருந்தது. எனவே இத்தகையதொரு பின்னணியில் தான் சீனாவிற்கு ஒரு இலட்சம் குரங்குகள் அனுப்புகின்றமை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அண்மையில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவித்திருந்தார்.

இதனையடுத்து இவ்விடயம் தொடர்பில் தற்போது பல்வேறு மட்டங்களிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இறைச்சிக்காகவும் பரிசோதனைகளுக்காகவுமே இலங்கையிலிருந்து குரங்குகள் சீனாவுக்குக் கொண்டு செல்லப்படவுள்ளதாகவும் சில சமூக ஊடகங்கள் கண்மூடித்தனமாக கருத்து வெளியிட்டுள்ளன.

அதேநேரம் மனித,குரங்கு மோதலைத் தீர்க்க ஒரு இலட்சம் குரங்குகளை சீனா நிறுவனமொன்றுக்கு வழங்குவது என்பது நிரந்தர தீர்வாக அமையாது என சூழலியலாளர்கள் கருத்து முன்வைத்துள்ளனர்.

பொதுவாக இலங்கையில் மூன்று வகையான குரங்கினங்கள் காணப்படுகின்ற போதிலும் செங்குரங்கு (*Macaca sinica/Taque macaca*) எனப்படும் குரங்குகள் அனைத்து காலநிலைப்பகுதிகளிலும் வாழக்கூடியவை. இது இலங்கைக்கே உரித்தான தனிச்சிறப்பான ஒரு சிறு குரங்கினமாகும். சிங்களத்தில் இது ரிளவா என அழைக்கப்படுகிறது. இவை அதிகளவில் பௌத்த விகாரைகளை அண்டிய பகுதிகளில் வாழ்வதால், விகாரைக் குரங்கு என்றும் அழைக்கப்படுவதுண்டு. எனினும் உலகில் *Macaca sinica/Taque macaca)* என்ற செங்குரங்குகள் அழிந்து வரும் ஒரு உயிரினமாக சர்வதேச இயற்கை பாதுகாப்பு சங்கத்தின் (IUCN) சிவப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

பொதுவாக வனச் சூழலைச் சமநிலையில் வைத்திருப்பதில் குரங்குகள் பெரும் பங்கு வகிக்கின்றன. அவை உணவை உண்ணும் போது, மரங்களிலிருந்து பழங்கள் மற்றும் பூக்களை தரையில் போடுகின்றன, அதிலிருந்து தரையில் வாழும் மான்கள், முயல்கள் மற்றும் பறவைகள் போன்ற தாவரவகை விலங்குகளுக்கும் உணவு கிடைக்கும். அதேநேரம் காடுகளின் உருவாக்கத்துக்கு குரங்குகள் உண்ணும் பழங்களிலுள்ள விதைகள் பெரிதும் உதவுகின்றது. மரங்களின் வளர்ச்சி மழைவீழ்ச்சியிலும் தாக்கம் செலுத்தும். குரங்குகள் உயரமான மரங்களில் இருப்பதால், காடுகளை கண்காணித்து. வரவிருக்கும் ஆபத்தை உணர்ந்து முழுக் காட்டையும் எச்சரிக்கும். குறிப்பாக வேட்டையாடும் விலங்குகள் சுற்றி இருக்கும் போது, ஆபத்தின்போது ஒலி எழுப்புவதன் மூலம் மற்ற விலங்குகளை எச்சரிக்கின்றன.

எனவே கடுமையான வனஅழிப்பு அதனால் ஏற்பட்ட உணவு மற்றும் நில இழப்பு என்பவையே கிராமங்கள், குடியிருப்புகளுக்கு குரங்குகள், யானைகள் மற்றும் புலிகள் வருவதற்கு முக்கிய காரணமாகவுள்ளதாக சுற்றாடல் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. ஆங்கிலேயர்கள் நாட்டை விட்டு வெளியேறும் போது 50 சதவீதமாகவிருந்த காட்டு உயிரினங்களின் எண்ணிக்கை இன்று 17 சதவீதமாக குறைவடைந்துள்ளது. யுத்தத்தின் பின்னரும் பெருமளவான காடுகள் அழிக்கப்பட்டன. 500,000 ஹெக்டயருக்கு மேற்பட்ட காடுகள் விற்கப்பட்டுள்ளன. எனவே இதுபோன்ற காரணங்களினாலேயே குரங்கு, மயில், காட்டெருமை, யானை போன்ற விலங்கினங்கள் கிராமங்களுக்குள் புகுந்து விவசாய நிலங்களை நாசம் செய்வதாக சுற்றாடல் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

மேலும் மனித நடவடிக்கைகள் காரணமாகவும் குரங்குகளின் இயல்பு வாழ்க்கை பல வகைகளில், சீர்குலைக்கப்பட்டுள்ளது.

குரங்குகளுக்கு உணவளிப்பதை இங்கு பிரதானமாக குறிப்பிடமுடியும். தெரிந்தோ, தெரியாமலோ செய்த தவறுகளால் குரங்குகளும் பாதிக்கப்பட்டு இன்று நமக்கே தொல்லையாகவும் மாறியுள்ளது.

உணவளிப்பது என்பது அவற்றின் உடல்நிலையைப் பாதிக்கும் அதேநேரம் கூட்டமாக, அதாவது குடும்பமாக வாழும் குரங்குகளுக்கிடையிலும் குழப்பத்தையும், சண்டையையும் விளைவிக்கின்றது. இதனால் பல குரங்குகள் உயிரிழக்கும் சந்தர்ப்பமும் உண்டு.

இலங்கையிலுள்ள மிகவும் பிரபல்யமான வணக்கஸ்தலங்கள், குரங்குகள் இனப்பெருக்க மையங்களாக மாறியுள்ளதை அவதானிக்கமுடிகின்றது. குரங்குகள் தொல்லையென கோஷமிடும் விவசாயிகள் கூட வணக்கஸ்தலங்களில் வைத்து குரங்குகளுக்கு உணவளிப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். இதன்மூலம் மனித உணவை சுவைப்பதற்கு குரங்குகள் பழகியுள்ளன. அது மட்டுமின்றி அங்கு முறையற்ற விதத்தில் வீசிச் செல்லும் குப்பைகளையும் கிளறி குரங்குகள் உணவாக உட்கொள்கின்றன. அதனால் தான் மனித உணவில் பழக்கப்பட்ட குரங்குகள் அடிக்கடி குடியிருப்புகளுக்கும் கிராமங்களுக்கும் விவசாய நிலங்களுக்கும் வந்து தொல்லை செய்கின்றன. எனவே யாத்திரை செல்பவர்களும், சுற்றுலா செல்பவர்களும் வனவிலங்குகளுக்கு உணவளிப்பவர்களும் இதற்கு பொறுப்புக் கூற வேண்டும்.

இதுதொடர்பில் விலங்கியல் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுவரும் வைத்தியர் செவ்வந்தி கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையிலிருந்து இத்தகைய பெரும் எண்ணிக்கையிலான விலங்குகளை அனுப்புவது என்பது இதுவே முதல் தடவை. இரண்டு அல்லது மூன்று என்ற எண்ணிக்கையிலேயே விலங்குகள் அனுப்பப்பட்டன. இலங்கையிலிருந்து வெளிநாடொன்றுக்கு விலங்குகளை அனுப்புவது என்பது அவ்வளவு இலகுவான விடயமல்ல. இலங்கையில் அதற்கு வலுவான மிகவும் சிறந்த சட்ட ஏற்பாடுகள் உள்ளன. அதுதொடர்பான அரச நிறுவனங்களும் உள்ளன. உதாரணமாக செங்குரங்குகளை ( டோக் மக்காக் ) வெளிநாடொன்றுக்கு அனுப்புவதாயின் அது தொடர்பான பூரண விளக்கமொன்றை வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்துக்கு வழங்கவேண்டும். அதற்கென பரிசோதனை குழுவொன்று வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தில் உள்ளது. என்ன பரிசோதனை, அதன் நோக்கம் என்ன போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் இக்குழுவுக்கு விளக்கமளித்து அறிக்கை சமர்பிக்க வேண்டும். மனித குரங்கு மோதல் என்பது பொதுவாக எல்லா நாடுகளிலும் காணப்படும்



பிரச்சினையாகும். வன விலங்குகளால் பெரும் பிரச்சினைகளை சந்தித்த பல நாடுகள் அந்த விலங்குகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முயற்சித்த சந்தர்ப்பங்களும் உண்டு. எனினும் அவை தோல்வியிலேயே முடிந்துள்ளது. இதற்கு சிறந்த உதாரணமாக மலேசியாவை குறிப்பிடமுடியும்.

2008ஆம் ஆண்டளவில் மலேசியாவில் நகர்புறங்களை அண்டிய பகுதிகளில் *long toque macaque* என்ற குரங்கினத்தின் பெருக்கம் அதிகமாகவிருந்தமையால் அவற்றை நாடு கடத்த தீர்மானித்திருந்தனர். எனினும் நகரை அண்டிய பகுதிகளில் வாழ்ந்த *long toque macaque* என்ற குரங்குகளுக்கு மனிதர்களிடையே பரவும் எயிட்ஸ் போன்ற பல தொற்றுநோய்கள் இருப்பது கண்டறியப்பட்டமையால் அந்த தீர்மானத்தை அவர்கள் கைவிட்டு நிரந்தரமான தீர்வொன்றினை தேடினார்கள். எனவே மனிதன் விலங்கு மோதலுக்கு நிரந்தரமான தீர்வொன்றினை தேடுவது அவசியம். விஞ்ஞான ரீதியான தரவுகள், ஒழுக்கநெறிகள், மக்களின் எண்ணங்கள், கலாசாரம், மனித வளம், வசதி வாய்ப்புகள் போன்ற விடயங்கள் தொடர்பில் நன்கு ஆராய்ந்து வனவிலங்குகள் முகாமைத்துவம் என்பதில் காணப்படும் பிரச்சினைகளை முதலில் இனங்காணவேண்டும். இதிலுள்ள இன்னுமொரு விடயம் என்னவென்றால் நாங்கள் பிரச்சினைக்கு காரணமான விலங்குகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் மட்டுமே ஆராய்கின்றோம். மனித நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதில்லை.

கொவிட் தொற்று ஊரடங்கு காலத்தில் சனநடமாட்டம் அதிகமாகவிருந்த இடங்களிலிருந்த குரங்குகள் கூட்டம் கூட்டமாக காடுகளை நோக்கி சென்றதை காணமுடிந்தது. எனவே மனித நடவடிக்கைகளை முகாமைத்துவப்படுத்துவது தொடர்பிலும் ஆராயவேண்டும். விவசாயத்துக்கு குரங்குகளால் கிடைக்கும் நன்மைகள் தொடர்பில் ஆராயவேண்டும். நகரை அண்டிய பகுதிகளில் வாழும் குரங்குகளை சிறிய தீவுகளில் விட்டால் அங்கு வாழ அவை பழக்கப்படும்.

18ஆம் பக்கம் பார்க்க...



வசந்தா அருள்ரட்ணம்

## CA ஸ்ரீலங்காவின் முதலாவது யாழ்ப்பாணப் பிராந்திய மாநாடு

CA ஸ்ரீலங்காவினால் யாழ்ப்பாணம் 1வது பிராந்திய மாநாடு (*Jaffna 1st Regional Conference*) இம்மாதம் 27ம் திகதி வியாழக்கிழமையன்று *GREEN GRASS HOTEL & RESTAURANT JAFFNA* இல் நடைபெறவுள்ளது.

பின்வரும் தலைப்புகளில் இந்த 1வது பிராந்திய மாநாடு நடைபெற உள்ளது.

*Connect with Opportunities* வாய்ப்புகளுடனான இணைப்பு

*Connect within doors* உள்ளக இணைப்பு/ உள்முக இணைப்பு

*Connect with Support Network* ஆதரவு வலைப்பின்னல்களுடனான இணைப்பு




இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (*CA Sri Lanka*) என்பது இலங்கையில் பட்டயக் கணக்காளர்களை உருவாக்கும் தேசிய, பிரீமியம் அமைப்பாகும். உள்ளூர் மற்றும் சர்வதேச வணிகச் சமூகத்திற்கான திறமையான, அறிவு மற்றும் வேலைவாய்ப்பிற்குரிய பட்டயக் கணக்காளர்களை சிறந்த முறையில் உருவாக்கி வருகின்றது CA ஸ்ரீலங்கா. இந்த நிறுவனம் 1959ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. மற்றும் 63 ஆண்டு கால வளமான வரலாற்றைக் கொண்டுள்ளது. இலங்கையில் கணக்காய்வு மற்றும் கணக்கியல் தரங்களை வெளியிடுவதற்கான ஒரே அதிகார நிறுவனம் இதுவாகும். 63 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த நிறுவனம் 8000க்கும் மேற்பட்டப் பட்டயக் கணக்காளர்களை உருவாக்கியுள்ளது. தற்போது தொழில்முறைப் பட்டயக்கணக்காளர்களாக விரும்பும் சுமார் 30,000 மாணவர்களைக் கொண்டுள்ளது.

## "ஈத் முபாரக்"

நோன்பு தன்னை
முழு மனதுடனே
முற்றும் நோற்று
மறு தினம் ஷவ்வால்
மாதம் தன்னில்
இனிய நாளாம்
ஈதுல் பித்ர்
என்று அழைக்கும்
ஆசைத் திருநாள்
நோன்புப் பெருநாள்
பிறந்திடும் அன்றோ!
அன்றைய நாளது
சிறந்திடும் அன்றோ!

அல்லா தன்னின்
அழகு நாமம்
அல்லாஹு அக்பர்
என்ற குரல் அது
அடிக்கடி முழங்கும்
கேட்போர் மேனி
சிலிர்த்துப் போகும்!

நீரில் குளித்து
நெஞ்சம் நெகிழ்ந்து
புத்துடை புனைந்து
பல் சுவை விருந்து
பகிர்ந்து உண்டு
பரவசம் கொண்டு
இறைவன் இல்லம் விரைந்து சென்று
பிரார்த்தனை புரிந்து
பக்தி நிறைந்து
ஒருவருக் கொருவர்
சலாமது சொல்லி
முஸாபா செய்து
மனமது மகிழ
கொண்டாடும் நாளே
நோன்புப் பெருநாள்!

ஆடவர் மகளிர்
வறியோர் செல்வர்
பெரியோர் சிறியோர்
குழந்தை குட்டி
துன்பம் மறந்து
துக்கம் துறந்து
கல கலப்புடனே
கூடிக் குலவும்
குதூகலப் பெருநாள்
நோன்புத் திருநாள்!

இந்த நன்னாளிலே
இந்தப் பொன்னாளிலே
அனைத்து மாந்தரும்
ஆரோக்கிய பலத்துடன்
அனேக ஆண்டுகள்
அன்புடன் வாழ
அல்லாவின் அருள் மழை
எல்லோர் மீதும்
பொழியட்டும்!

நோன்புத் திருநாளைக்
கொண்டாடிக் கொண்டிருக்கும்
அனைவருக்கும்
பொன்மனச் செம்மலின்
பொன்னான வாழ்த்துக்கள்.



இலங்கை
பொன்மனச் செம்மல்
தாஜ்மஹான்




கொழும்பு கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் கொழும்பு எஸ்.எஸ்.சி. கிளப்பில் நடைபெற்ற போது கழக உறுப்பினர் செ. துரைராஜா, சர்வதேச லயன்ஸ் கழக மாவட்டம் 306 பீ1 ஆளுநருக்கு பரிசு வழங்குவதையும் நிகழ்வுகளையும் காணலாம். இதில் பழைய மாவட்ட ஆளுநர்களும் கழக உறுப்பினர்களும் பங்கேற்றிருந்தனர்.






# பிறையில் பூத்தது பெருநாள்...

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

மறைபிறை வழியில்
மாண்புடன் நோன்பு
மாதம் முழுவதும்
மேன்மையாய் இருந்து

படைத்தவன் அருளைப்
பாந்தமாய் அணுகி
பித்ராவெனும் தர்மம்
பேணுதலலோடு இருந்து

இரவெல்லாம் நின்று
ஏகனைத் தொழுது
இகத்திலே முக்தி
இசைந்தே பெற்று

முப்பது நோன்பு
முடிவிலே நிறைந்து
முத்தான ஷவ்வால்
மலர்ந்திடும் நாளில்

விளக்கு வைக்கும்
வேளையில் சேர்ந்து
விண்ணின் மேகத்துள்
வான்பிறை தேடினோம்

இழையும் மேகங்கள்
இடையே வளைவெள்ளி
இமைக்காமல் தேடிட
இலங்கியது மறைந்திட

பிறைகண்டதும் பெருவெள்ளமாய்ப்
பொங்கிய சந்தோஷம்
பேணுதலாய் நோன்பை
பூரணமாக்கிய சேமம்

துள்ளிக்குதித்துத்
தோழியரை அழைத்து
தோளோடு தோளுரச
தொழுதிடும் திருநாள்

நாளையென்று நாவிலே
நுரைத்திடும் நல்செய்தியோடு
நனைத்திடும் நல்வாழ்த்து
நாடுதேசம் தாண்டியொலிக்க

விடிந்தால் பெருநாள்
வீதியெங்கும் வாகனத்திரள்
விடலையர் ஆசையாய்
வாங்கினர் பண்டம் பட்சணம்

தையற்காரரும் தடதடவென
தம்வேலையில் மும்முரமாய்
தக்பீரின் ஓசையோ
தரணியெங்கும் தீவிரமாய்

கும்பலாய் சிறுவர்
கும்மாளமிட்டே ஆட
குலமங்கையர் மருதாணி
கைகளில் போட

வெடி வெடிக்க
வாணவேடிக்கையும் விரிய
வழிந்திடும் ஆனந்தம்
வைகையாய்ப் பொங்க

மங்கலம் ஏற்றும்
மரகதத் திருநாள்
மாந்தருக்கோர் தெய்வீகம்
மணக்கும் பெருநாள்

வந்ததே நம்
வாசல் நாடி
தந்ததே மனங்களில்
வசந்தங்கள் கோடி

குளித்து முழுகிக்
குதூகலம் பீறிட
குடும்பமே புத்தாடை
புதுமணம் பூசிட

கூட்டுத் தொழுகை
குத்பா பிரசங்கம்
கலந்துசிறந்து முஸாபஹாசெய்து
கட்டித் தழுவி

பேரன்பை வெளிப்படுத்தும்
பெருநாள் வந்ததே
பாரினில் இன்பம்
பன்மடங்காய் விளைந்ததே

உறவுகள் வீடுகள்
உபசரிப்பில் நிறையும்
உத்தம வழியில்
நேசமும் நிறையும்

பண்டிகை பாரம்பரியம்
பெருநாள் பந்தயம்
புன்னகை ஏந்தியே
பரவசத்துடன் அனைவரும்

கொண்டாடியே தீர்ப்போம்
குதூகலமாய் இருப்போம்
ரமழானை வழியனுப்பி வைப்போம்

# வரம் தர வந்த ரமழானே!

ஹுமைத் குதுப்தீன்
அல்ஹக்கானிய்யா அரபுக் கல்லூரி

இறைமறை கூறும் கடமையில் ஒன்றாய்
அமைந்தது அழகிய ரமழானே...
கறைகளை நீக்கி மனதினை மாற்ற
மலர்ந்தது நலன்தரும் ரமழானே...!

ஏழையின் பசியை யாவரும் உணர
அறிவுரை பகிர்ந்திடும் ரமழானே...!
பாலைபோல் வரண்ட மனதினை அமலால்
சோலையாய் மாற்றிடும் ரமழானே...!

ஆயிரம் இரவின் மேன்மையை மிஞ்சும்
அருளினைப் பொழிந்திடும் ரமழானே
தூயதோர் இரவாம் லைலத்துல் கத்ரை
தாங்கியே வந்திடும் ரமழானே...!

தீமையால் எம்மைச் சீர்கெட வைக்கும்
சக்தியாய் சுற்றிடும் சைத்தானை
வான்மறை தந்த வல்லவன் துணையால்
விலங்கிட வைத்திடும் ரமழானே...!

நேசமாய் நாளும் நோற்றிடும் நோன்பால்
மறுமையில் நாமும் 'ரைய்யான்' எனும்
வாசலால் நுழைந்து சுவனமே செல்லும்
வரம் தர வந்தது ரமழானே...!






என் நெற்றி பட்ட சுஜூதுகள்
என் வெற்றிக்கான அடையாளமாகிப்
போன குதூகலிப்பில்
ஈத் கொண்டாடுகின்றேன்...

ஆம் ...
இன்றைய நாள்
நேர்வழி கிடைத்ததற்காய்
நன்றி சொல்லும் திருநாள்..

மரத்து
மரணித்துப்போன
உள்ளங்களுக்கு மறுவாழ்வு
கிடைத்ததற்காய் மன நிறைவு
கொள்ளும் மகோன்னத நாள்......

ரமழானிய பாசறையில்
முழுதுமாய் ஒரு மாதம்
பயிற்சி பெற்றதற்காய்
பரிசு பெறும்
புனித நாள்....

நோன்பும்
அல்குர்ஆனும்
எனக்காய் பரிந்துபேசி
ரய்யானிய வாசலால்
சுவனம் நுழைய
அல்லாஹ்விடம் கெஞ்சும்
அழகிய நாள்.....

ஆம் ....
இது ஒரு அற்புத நாள்...
இது ஒரு அழகிய நாள்...

பசித்திருந்த வயிற்றுக்கும்
கால்கடுக்க தொழுத கால்களுக்கும்
கண்ணீர் சிந்திய கண்களுக்கும்
இதைவிட சிறந்த நாள் எங்கே...

இறை உவப்போடு
இறை வசனங்களில்
இரண்டறக்கலந்து
இதயங்களை சீர்செய்ததற்காய்
இறைவன் தந்ததே இந் நாள்...

# ஈகைத் திருநாள்

உசனார் எம்.பஷீர்,
ஏறாவூர்.

அருளாளன் அல்லாஹ்வின்
பர்ழான கட்டளையை
அகமீதில் நிறைத்தே
ஆனந்தம் அடைந்தோம்

எண்ணிய நாட்களில்
எண்ணிக்கையில் முப்பதாய்
மின்னிய ரமழானின்
மிகையான திருநாள்

இறைவன்பால் நெருக்கத்தை
இதயத்தில் இறுக்கமாக்கி
உபவாசத்தின் பெறுமானமாய்
உவகையாய் உதித்த திருநாள்

பசி தாகம் இணங்கி
பகலிரவாய் வணங்கி
பாவங்களைக் களைந்திட்டதாலே
பாடியே வந்த திருநாள்

ஈகையை இன்பமாக்கி – அதில்
வாகையை விருப்பமாக்கி
ஏகனின் பரிசாகிடவே
இகத்தில் உதித்த திருநாள்

இதயங்களில் இருள் நீக்கி
உதயங்களின் உபசரிப்பிலாழ்ந்து
ஆன்மிகத்தை அடியொற்றியதாலே

அல்லாஹ் தந்த திருநாள்

மனங்களுல் மகிழ்ச்சியை
மனதார சுவாசித்து
இனங்களுல் பற்றுதலை
இரட்டிப்பாக்கிடும் திருநாள்

புன்முறுவலும் கைலாகும்
புதிரின்றியே எழுந்து
பூரிப்பில் திளைத்திடும்
புனித நாள் ஈகைத் திருநாள்

# புனித நோன்புப் பெருநாள்...!

எம்.ரி.எம். அன்ஸார்
ஏறாவூர்

முப்பதுநாள் நோன்பிருந்து
முழுமை பெற்றோம்
தப்பேதும் செய்யாது
நல்லது கற்றோம்
எப்போதும் இறை
சிந்தனையை மீட்டோம்
விழிப்போடு இருந்தே
"லைலத்துல்கத்ரை" ஏற்றோம்

ஏழைகளின் பசியை
எல்லோரும் உணர்ந்தோம்
தோழமை யாக்கியே
இருப்பதைப் பகிர்ந்தோம்

சோலைப் பூக்களாய்
மகிழ்வில் சிறந்தோம்
நாளைய விடியலுக்காய்
இன்றே நிறைந்தோம்

பிறையைக் கண்டே
நோன்பை விட்டோம்
இறையை வணங்கியே
நன்மையை மீட்டோம்
மறையின் போதனையை
மனதில் ஏற்றோம்
கறையைக் களைந்தே
அன்பில் திளைத்தோம்

நோன்புப் பெருநாளில்
அனைவரும் கூடினோம்
மாண்புடன் தொழுதே
வாழ்த்தும் பாடினோம்
கண்ணியத்துடன் ஸலாம்கூறி
உறவை வளர்த்தோம்
இன்றைய நாளில்
இன்பத்தில் துளிர்த்தோம்..!

# புனிதமிகு ரமழானே வருக !

எம்.சி. நஸார்
கிண்ணியா

இஸ்லாமிய மாதம் ஒன்பதில்
இனிதாகப் பூமியில் மலர்ந்திட்ட
ஈஸா மூஸா பலர் நோற்றிட்ட
அருள்மிக்க ரமழானே வருக!

ஆண்டுதோறும் அவனி வந்து
அருள்களை அள்ளிக் குவித்து
அண்டத்தில் அமைதி யினை
அள்ளித்தரும் ரமழானே வருக!

பூவைப்போல் கசங்கிக் கிடந்து
பரிதவிக்கும் இறை அடியானின்
பாவங்களைக் கழுவிப் போக்க
பாரிலுதித்த ரமழானே வருக!

வழிகேட்டில் வாழும் மானிடனின்
வாழ்க்கைக்கு நேர்வழி காட்டிவிட
வழிகாட்டும் இறை மறையினை
வழங்கிவைத்த ரமழானே வருக!

மூர்க்கமிக்க கொடு நரகம்
மூடப்பட்டுத் தாழும் இடப்பட்டு
சொர்க்க மதை அலங்கரித்து
சொக்கவைத்த புகழ் என்ன?

ஆயிரம் மாதங்கள் சிறப்புமிகு
ஓரிரவாம் "லைலத்துல் கத்ரை"
சாய்ந்து போகும் வேளையிலே
சேர்த்திடும் உன்மகிமை என்ன?

இறையச்சம் இதயத்தில் வளர்த்து
இறைசிந்தனையோடு வாழ்ந்து
மறையோதி மாண்பு அறிந்து
மனிதனாய் வாழச் செய்கிறாய்

சமத்துவத்தை சமாந்தர மாக்கி
சகோதரத்துவப் பாசம் முழங்கி
சீமான் தனத்தை வளர்த்துவிடும்
சிறப்பைத்தான் யாது சொல்ல?

உனை எடுத்துக் கொண்டோர்க்கு
உன்னதக்கூலி நான் கொடுப்பேன்
கணக்கற்ற வெகுமதி உண்டென
கடவுளெம் நாயன் சொன்னான்

சாவுக்கு என்றும் நீயில்லை
சடங்குக்கு என்றும் நீயில்லை
காவி உள்ளத்து அழுக்குச்சீவி
கழுவிவிடும் ரமழானே நீவாழி!







# ஹற்றன் பிரதான பஸ் நிலையத்தின் அவலத்துக்கு தீர்வு கிட்டுமா?

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி அங்குள்ள போக்குவரத்து கட்டமைப்பிலேயே தங்கியுள்ளது. ஹற்றன் நகரம் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகள் தினம் வந்து செல்லும் பிரதேசமாகும். அத்தோடு சிவனொளிபாதமலை யாத்திரை காலங்களில் பல்லாயிரக்கணக்கான பத்தர்கள் வருகை தருவர். ஆனால் நெடுங் காலமாக ஹற்றன் நகரத்தில் அமைந்துள்ள பிரதான பஸ் தரிப்பு நிலைய அவலத்துக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

நுவரெலியாவின் பிரதான நகரமும் நுவரெலியாவின் நுழை வாயிலாக காணப்படுவதால் நாளாந்தம் இலட்சக் கணக்கான மக்கள் இந்த தரிப்பு நிலையத்தை பயன்படுத்துகின்றனர்.

இங்கு குப்பைக்கூளங்கள் நிறைந்து துர்நாற்றம் வீசுவதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு தினம் முகம் கொடுக்கின்றனர்.

பஸ் தரிப்பு நிலையத்திற்கு காலையும் மாலையும் ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரி, புனித கப்ரியல் மகளிர் கல்லூரி, புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஸ்ரீ பாத சிங்கள மகா வித்தியாலயம் உள்ளிட்ட பிரதான பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்கள் வருகின்றனர். ஆனால் தரிப்பிடத்தை சுற்றி டெங்கு பரவக் கூடிய சூழல் அதிகம் காணப்படுகிறது. யோகட் கப்பகள், நீர் நிரம்பக் கூடிய பிளாஸ்டிக் பொருட்கள், இதர குப்பைகள் நிறைந்து துர்நாற்றத்தை சகித்து கொள்ள முடியவில்லை என மாணவர்கள் கூறுகின்றனர். இதனால் பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்கான ஆபத்துக்கள் காணப்படுகின்றன.





## குப்பைக் கூளங்கள் நிறைந்து சகித்து கொள்ள முடியாத துர்நாற்றம் வீசுகிறது

பஸ் தரிப்பு நிலையத்திற்கு பின் புறத்தில் அமைந்துள்ள நீர் வழிந்தோடும் கால்வாய்கள் பல மாதங்களாக சுத்தப் படுத்தப்படாததன் காரணமாக குப்பைகளால் நிறைந்துள்ளதனால் பலர் குறித்த கால்வாய்களை சிறுநீர் கழிப்பதற்கு பயன்படுத்துவதால் நிற்க முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் பஸ்ஸினுள் கூட மக்களுக்கு இருக்க முடியாமல் மூக்கை முடிக்கொண்டு பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பஸ் தரிப்பு நிலையத்தில் பாரிய குளம் போன்ற குழிகள் காணப்படுவதனால் மழை காலங்களில் நீர் தடாகம் போல் காட்சியளிப்பதாகவும் உலகில் எந்த ஒரு பஸ்தரிப்பு நிலையத்திலும் நீர் தடாகத்துடன் பஸ் தரிப்பு நிலையம் இல்லை இதனை காண்பதற்கு ஹற்றனுக்கே வரவேண்டும் என இளைஞர்கள் நகைச்சுவையாகவும் வேதனையாகவும் தெரிவிக்கின்றனர்.

உலகின் பிரசித்தி பெற்ற இடங்களான சிவனொளிபாத மலை, சென் கிளையார், டெவோன் நீர்வீழ்ச்சிகள் மற்றும் உலகின் லிட்டில் இங்லேன்ட் என அழைக்கப்படும் நுவரெலியா போன்ற பிரதேசங்களுக்கு செல்வதாயின் பெரும்பாலான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகள் ஹற்றன் வழியோ செல்கின்றனர். ஏன்னென்றால் ஹற்றனில் காணப்படும் சுற்றுலா தளங்களை பார்வையிட்ட பின்னர் அவ்வழியே நுவரெலியா செல்வது சுலபம் என்பதால். அவ்வாறு பயணிப்போர் ஹற்றன் பஸ் நிலையத்துக்கு செல்லும் போது அதன் அசுத்தமான சூழல் அவர்கள் மீண்டும் அங்கு வருதற்கான நினைப்பை இல்லாமல் செய்கிறது. இதனால் எமது அந்நியசெலாவணியே பாதிக்கப்படுகிறது.

இப்பாரிய பிரச்சினை தொடர்பில் ஹற்றன் டிக்கோயா நகர சபை எவ்வித கவலையுமின்றி பாராமுகமாக இருந்து வருவதாக பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

வீடுகளையும் கடைகளையும் வந்து சோதனையிடும் பொது சுகாதார பரிசோதகர்கள் இது குறித்து எவ்வித கரிசனையும் காட்டுவதில்லை.

எது எவ்வாறான போதிலும் நுவரெலியா மாவட்டத்தில் நுழைவாயிலாக காணப்படும் ஹற்றன் நகரத்தின் அபிவிருத்தி குறித்து பல வருட காலமாக அக்கறை செலுத்தாது இருப்பது குறித்து ஹற்றன் மக்கள் கவலை கொள்கின்றனர்.

அண்மையில் இந்தியாவில் கிடைத்த புதிய பஸ்களில் 06 பஸ்கள் ஹற்றன் பிரதேசத்தில் பயணிப்பதற்காக வழங்கப்பட்டது. ஆனால் பஸ் தரிப்பு நிலையத்தின் அவலம் தொடர்பில் கண்டு கொள்ளவில்லை.

கே.சுந்தரலிங்கம்

# பழைய மாணவர்களின் ஒருங்கிணைந்த ஏற்பாட்டில் இன்று கந்தகட்டி தேசிய பாடசாலையின் பொன் விழா



**மத்திய மாகாண கண்டி மாவட்ட வத்–தேகம கல்வி வலயத்தின் பன்விலை கல்விக்கோட்ட தவலந்தன்னை கந்தகட்டி தேசிய பாடசாலை சாதனைகள் பல படைத்து தனது ஐம்பது வருட பொன்விழாவை இன்று ஞாயிறன்று பழைய மாணவர்களின் ஒருங்கி–ணைந்த ஏற்பாட்டில் கொண்டாடுகிறது.**

பேராசிரியர் சி. மௌனகுருவின் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.



கௌரவ அதிதிகளாக வத்தேகம கல்விப் பணிமனையின் கல்விப் பணிப்பாளர் W.M. N.T. குணரட்ண, கல்விப் பணிப்பாளர் I.M ஹாசிம், மத்திய மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் பெ.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். விசேட அதிதிகளாக பெருந்தோட்ட அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் தலைவர் பரத் அருள்சாமி, பன்விலை கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் சரத் வீரசிங்க, பாண்டிச்சேரி கலாநிதி ஞா.கோபி, இங்கிலாந்ததைச் சேர்ந்த திருமதி சுகந்தி ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.





பன்விலை கல்விக் கோட்டத்தில் பல்துறை வளர்ச்சி கண்டு வரும் இப்பாடசாலையின் பொன்







விழா பெருவிழா காண தலைமைப் பொறுப்பிலிருந்து பழைய மாணவர்களான முன்னைநாள் அதிபர்கள், செ.தியாகநாதன், செயலாளராக பொன் இராஜகோபால், பொருளாளராக நக்கல்ஸ் தமிழ் வித்தியாலய அதிபர் மு. சிவகுமார், போசகராக தி.சந்திரகுமார், ஆலோசகராக ம.தேவராஜ் உள்ளிட்ட குழுவினர் பகீரதப் பிரயத்தனத்தோடு முனைந்து செயற்பட்டுள்ளனர். பழைய மாணவர்களையும் நலன் விரும்பிகளையும் பாடசாலை அபிவிருத்தி சார் பல் துறை சார்ந்தவர்களையும் இணைக்கும் பாலமாக இந் நிகழ்வு அமைகிறது.

பாடசாலையின் வரலாற்றுத் தொகுப்பாகவும் பழைய மாணவர்களின் ஆக்கங்களின் தொகுப்பாகவும் அமைந்த நூலொன்றும் முன்னைநாள் அதிபர் பொன் இராஜகோபாலின் தொகுப்பில் வெளியிடப்படுகிறது. அதே நேரம் தினகரன் பத்திரிகையின் பாடசாலை வரலாற்றைத் தாங்கிய சிறப்பு மலரும் வெளியிடப்படும்.

லோரன்ஸ் செல்வநாயகம்,
மருதமுத்து நவநீதன்

# அதிக உள்ளடங்கலுக்கு வழிவகுக்க DeafTawkஐ அறிமுகப்படுத்தியுள்ள டயலொக் ஆசி ஆட்டா

காதுகேளாத மற்றும் செவித்திறன் குறைபாடுள்ளவர்களை அவர்களின் சமூகங்களுக்கு நெருக்கமாகக் கொண்டுவரும் வகையில், டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி, நாட்டிலேயே முதன்முறையாக, சர்வதேச அளவில் புகழ்பெற்ற சைகை மொழி விளக்க செயலியான (app) 'DeafTawk' இன் மும்மொழி பதிப்பை இலங்கையில் அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது.




டயலொக் நிறுவன வளாகத்தில், செவித்திறன் குறைபாடுள்ள நபர்கள் மற்றும் சைகை மொழி மொழிபெயர்ப்பாளர்கள் கலந்து கொண்ட நிகழ்வின் போது இந்த செயலி (app) அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையில் மாற்றுத்திறனாளிகளின் டிஜிட்டல் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதில் டயலொக் மேற்கொண்டுள்ள சமீபத்திய முயற்சி இதுவாகும், இது மாற்றுத்திறனாளிகளை டிஜிட்டல் ரீதியில் ஒன்று சேர்ப்பதான GSMA கொள்கைகளுடன் இணைந்ததாக அமைந்துள்ளது. 'DeafTawk ' பயன்பாடானது பயனரின் விரல் நுனியில் நிகழ்நேர சைகை மொழி தீர்வை (realtime sign language solution) வழங்குகிறது, மேற்படி app 50 சைகைவழி மொழிபெயர்ப்பாளர்களுடன் கூட்டு சேர்ந்துள்ளது.

மேலும், பயனர்களுக்கு பல்வேறு கட்டண பெக்கேஜ்களை இந்த app வழங்குகின்றது,

அதன்படி 10 நிமிடங்களுக்கு ரூ.100+ வரி, 20 நிமிடங்களுக்கு ரூ.200+ வரி, 25 நிமிடங்களுக்கு ரூ.250+ வரி, 50 நிமிடங்களுக்கு ரூ.500+ வரி மற்றும் 100 நிமிடங்களுக்கு ரூ.1000 வரி உள்ளிட்ட பெக்கேஜ் தேர்வை இது வழங்குகிறது. டயலொக் வாடிக்கையாளர்கள் எந்த டேட்டா கட்டணமும் இன்றி இந்த app ஐ பயன்படுத்தலாம். மற்றும் பெக்கேஜ்களுக்கு 'பில்லில் சேர்த்தல்" அம்சத்தைப் பயன்படுத்துவதற்கான தெரிவையும் இது கொண்டுள்ளது.

# MoJo Lanka பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்கும் USAID மற்றும் IREX

Mojo Lanka பயிற்சி நிலையம் — இலங்கையில் கைத்தொலைபேசி மூலமான ஊடகவியலை கற்றுக்கொள்வதற்கான புதிய தளமாகும் கொழும்பு, இலங்கை – சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகம் (USAID) மற்றும் சர்வதேச ஆராய்ச்சி மற்றும் பரிவர்த்தனைகள் சபை (IREX) ஆகியன இலங்கையில் கைத்தொலைபேசி மூலமான ஊடகவியலை முன்னுரிமைப்படுத்தும் வகையில் Mojolanka.lk என்ற இணையத்தளத்தையும், கைத்தொலைபேசி மூலமான ஊடகவியலில் வலுவாக மும்மொழிகளிலும் நிபந்தனைகளை வழங்கும் ஒரு தளமான MoJo Lanka பயிற்சி நிலையத்திற்கான தாயகத்தை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றது. ஜுன் 24, 25, 2023 இல் திட்டமிடப்பட்டுள்ள MoJo Lanka கைத்தொலைபேசி மூலமான ஊடகவியல் விழாவை நோக்கிய முதற்படியாக இந்த அறிமுகம் உள்ளது.

MoJo இலங்கை பயிற்சி நிலையம் என்பது கைத்தொலைபேசி மூலமான கதைசொல்லலின் அடிப்படைகள் பற்றிய தொடர் விளக்க காணொளிகளைக் கொண்டுள்ள ஓர் மெய்நிகர் பயிற்சி மையமாகும். காணொளிகள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் கிடைக்கின்றதுடன், இந்த துறையில் உள்ள நிபுணர்களான டேவிட் ஹேவர்ட், காணொளி ஊடகவியலாளர்களால் வழிநடாத்தப்படும் முதல் BBC செய்தி அறையின் ஆசிரியர் K.C சாரங்க, விருது பெற்ற இலங்கையின் கைத்தொலைபேசி மூலமான ஊடகவியலாளர் மற்றும் நடராஜா மணிவாணன், இலங்கையை தளமாகக் கொண்ட ஊடகப் பயிற்சியாளர் மற்றும் சுயாதீன திரைப்பட தயாரிப்பாளர் ஆகியோரால் தொகுக்கப்பட்டுள்ளன.



MoJo Lanka பயிற்சி நிலையத்தின் அனைத்து தயாரிப்புகளையும் Mojolanka.lk இல் பார்வையிடலாம்.

# PayMaster மொபைல் Appக்கு தங்க விருது!

அண்மையில் நடைபெற்ற LankaPay Technnovation 2023 விருது வழங்கும் நிகழ்வில், PayMaster மொபைல் APP இரண்டு விருதுகளை வென்றது. இவற்றில், இந்த ஆண்டின் சிறந்த நுகர்வோர் கட்டண மொபைல் அப்ளிகேஷன் ஃபின்டெக் துறையில் தங்க விருதை வெல்வது ஒரு தனித்துவமான தருணம்! மேலும்,

PayMaster App இந்த ஆண்டின் பிடித்த டிஜிட்டல் பேமெண்ட் App மெரிட் விருதை வென்றது.

4 வருட குறுகிய காலப்பகுதியில், PayMaster இலங்கையர்களின் தினசரி கட்டணத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பரந்த அளவிலான சேவைகளை வழங்கும் மொபைல் நிதி தொழில்நுட்ப Appஆக இலங்கை நுகர்வோரின் நம்பிக்கையை வென்றுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் முழு மேற்பார்வையின் கீழ் இயங்கும் இலங்கையின் தேசிய மொபைல் கட்டணச் செயலாக்க வலையமைப்பான JustPay மூலம் அதன் சேவைகளை இயக்கும்,

PayMaster App உங்கள் ஆன்லைன் கட்டணத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வசதியான, பாதுகாப்பான இடைமுகத்தை வழங்குகிறது.

இதன் மூலம் உங்களின் அனைத்து உள்ளூர் நாணய மாற்று தேவைகள், ரீலோட்கள், 18 வகையான பில் கொடுப்பனவுகள், Doctor Channeling, Medi Search, வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு பணம் அனுப்புதல்,

இலங்கையில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு பணம் செலுத்துதல், வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு உதவ பணம் வழங்குதல், பயன்பாடு பல சேவைகளை வழங்குகிறது.







# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

0777438169 கண்டியில் ஹோட்டல், தோட்டம், வீடு, வெற்றுக் காணி, வியாபார ஸ்தலம் கொள்வனவு செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும். 0777282147. 022944

### 233 இயந்திராதிகள்/ கை கருவிகள் விற்பனைக்கு

ஜப்பானிலிருந்து தருவிக்கப்பட்ட KVA 45 Yanmar 160 மணிநேரம் இயக்கப்பட்ட Sound Proof புதிய நிலையில் ஜெனரேட்டர். பாணந்துறை 0726267432. 024034




## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

30 வருடங்கள் நுகர்வோர் நம்பிக்கையை வெற்றி கொண்ட Freshco நிறுவனத்திற்கு வியாபார பிரதிநிதிகள் சேர்க்கப்படுகின்றனர். கல்வி உயர்தர சித்தியடைந்த தேர்ச்சி பெற்ற தேர்ச்சியில்லாதவர்களுக்கான சந்தர்ப்பம். ஆகக்கூடிய சம்பளம் 60, 000/ = ரூபாவை பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன், களுத்துறை, ரத்மலான, தெஹிவளை, கொழும்பு, நீர்கொழும்பு, வென்னப்புவ ஆகிய இடங்களிலிருந்து தேவை. தொலைபேசி 077 7 263954, 076 7 639155. முகவரி 29/ 5, 4ஆம் ஒழுங்கை, ரத்மலான. 023052

பத்தரமுல்லை மரக்கறி விற்பனை நிலையத்தில் தங்கி வேலை செய்ய ஊழியர்கள் தேவை. உணவு தங்குமிடத்துடன் ரூ 45000/ = 50000/ = இற்கு இடையில் சம்பளம். 0777411891. 023881

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

எமது நிறுவனத்திற்கு டின்கர், பெயின்டர் தேவை. தங்குமிட வசதியுடன். நுகேகொடை. 0777252876. 023625

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

கொள்ளுப்பிட்டி வீட்டில் பராமரிப்பு வேலைக்கு ஆண் அல்லது பெண் வெக்சின் ஏற்றாதவர் தேவை. திடகாத்திரமான, நேர்மையான 100% சுத்தமான, திறமையானவர் கூட்டிப் பெருக்குதல், சுத்திகரித்தல், தோட்ட வேலைகள், கார்/ துணிகளை சலவை செய்தல் போன்ற வேலைக்கு .100% திறமையுடன் 100% வேலை. எப்போதும் தொழில் தருநரால் கவனிப்படுவார். சம்பளம் 35000/ = இயேசு துணை 0777684292. 022639

சாரதியொருவர் தேவை. எமது நிறுவனத்திற்கு பாரிய வாகன சாரதிகள் சேர்க்கப்படுகின்றனர். சம்பளம் 47, 000/ = அதியுயர்ந்த சம்பளத்தை தேடிக் கொள்ளலாம் என்பதுடன், களுத்துறை, வாத்துவ, பாணந்துறை, மொறட்டுவ, ரத்மலான, கல்கிசை, கொழும்பு, நீர்கொழும்பு, வென்னப்புவ ஆகிய இடங்களிலிருந்து தேவை. நீங்களும் ஒரு பாரிய வாகன சாரதியெனின் உடனேயே 0777263954, 0767639155 ஆகிய இலக்கங்களை அழைக்கவும். முகவரி 29/5, 4ஆம் ஒழுங்கை, ரத்மலான. நெஸ்கோ என்டர்பிரைசஸ். 023053

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

நன்னி தேவை. வயது 25 முதல் 40 இடையில், அனுபவம் குறைந்தபட்சம் 2 வருடங்கள் 6 மாதங்கள் முதல் 2 வருடங்கள் ஓர் குழந்தையை பார்த்துக் கொண்டமை சுறுசுறுப்பும் சுத்தமும் அத்துடன் வெக்ஷின் ஏற்றப்பட்டிருத்தல் வேண்டும். விடுமுறை ஒவ்வொரு 2 மாதத்திற்கும் 4 நாட்கள். முழுநேர வேலை (தங்கியிருத்தல் வேண்டும்) சம்பளம் ரூ. 50,000/ - ரூ. 60,000/ - இற்கு இடையில். தொடர்பு இல 07 1 7 555448/ 0777763440 023567

நுகேகொடையில் அமைந்துள்ள வீட்டிற்கு வீட்டுப் பணிப்பெண் உடன் தேவை. குறைந்த பட்சம் 30, 000/ = மாதாந்தம் சம்பளம். அழையுங்கள் 0 774084824. 023631

பம்பலபிட்டியவிலுள்ள சிறிய குடும்பத்திற்கு வீட்டு வேலை செய்ய தினம் வந்து செல்லக்கூடிய பணிப்பெண் தேவை. Call - 777782890, SMS - 77756396. 023761

சிறிய உணவுகள் தயாரிப்பதற்கு வீடொன்றில் தங்கி யிருந்து சேவை செய்வதற்கு தூரத்திலுள்ள பெண் ஒருவர் தேவை. (தமிழர் விருப்பத்தக்கது) 0776536646. 024192

கம்பஹா நகரில் வீடொன்றில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பெண்ணொருவர் தேவை. சம்பளம் 30, 000 ரூபா. அனைத்து வசதிகளும் வழங்கப்படும். 0721049688. 024229

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

மாலபே மற்றும் அத்துருகிரிய உணவகங்களுக்கு செப், குக், சைனீஸ், அப்பம், ரொட்டி, மாவு வேலை தெரிந்த பாஸ் மற்றும் விற்பனை. ஆண்/ பெண் ஊழியர்கள் தேவை. தங்குமிடம் மற்றும் உணவு பானங்கள் வழங்கப்படும். 0723544011, 0714252153, 0775337000. 023394

கொழும்பில் அமைந்துள்ள கடதாசி பை உற்பத்தி நிலையத்தில் வேலை வாய்ப்புகள் உள்ளன. பிரின்டிங் அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும். மெசின் அனுபவத்திற்கு மேலதிக கொடுப்பனவு உண்டு. மாதம் 35,000/ ற்கும் அதிகமான சம்பளம். தகைமைக்கு ஏற்ப சம்பள உயர்வுகள் வழங்கப்படும், ETF/EPF கொடுப்பனவு உண்டு, உணவு, தங்குமிட வசதிகள் உண்டு, போக்குவரத்து வசதி என்பன வழங்கப்படும், ஆண்களுக்கு மாத்திரம், வயதெல்லை 1845 வரை. எம்முடன் தொடர்பு கொள்ள அழையுங்கள். 01125 20450/ 07737573 07/ 07871495 08. நேரம் 8.00Am - 5.00 Pm. 023825

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

வாத்துவை நாற்றுமேடை வேலைக்கு விவசாய விடயங்களில் அனுபவமுள்ள ஊழியர் தேவை. தம்பதியினரும் கவனத்தில் கொள்ளப்படுவர். தங்குமிட வசதியுண்டு. 0774013242. 023638

### 325 தொழில்துறை பொது

மருத்துவர் மற்றும் அவரது மனைவி மாத்திரமுள்ள வீடொன்றிற்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு பெண் ஒருவர் தேவை. நல்ல சம்பளம். 0716669333. 022983

எமது நிட்டம்புவ மற்றும் குளியாப்பிட்டிய பிரதேசங்களில் அமைந்துள்ள கோழியிறைச்சி, சொசேஜஸ் உற்பத்தி தொழிற்சாலைக்கு மற்றும் முட்டை சேகரிப்பு பண்ணைகளுக்கு ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். உணவு, தங்குமிடத்துடன் ரூ. 45000/ = இற்கு மேற்பட்ட சம்பளம். 0777355722/ 0760278423/ 0711442816/ 0787477229. 023621

0718653781 பாதுகாப்பு வெற்றிடம் கோனபொல, ஹொரண, பண்டாரகம, ஹோமாகம, கட்டுகுருந்த, பாணந்துறை, மொறட்டுவ, இரத்மலானை, பம்பலப்பிட்டி, தெஹிவளை, வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டிய, கட்டுநாயக்க, நீர்கொழும்பு, தொட்டலங்க, ரனால, பத்தரமுல்ல, ராஜகிரிய, ஹொரண 0718379981, பாணந்துறை 0704545051, ரத்மலானை 0706991637, ராஜகிரிய 0712125238, கொழும்பு 0718653780, அலுவலகம் 0718653778, 070 6 655 331, 070 4 040 899, 0768171053. 023815

ஆட்சேர்ப்பு சேவையான பேக்கேஜிங் நிறுவனத்தில் பணிபுரியும் 18 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட தொழிலாளர்களுக்கு தினசரி ஊதியம், உணவு மற்றும் தங்குமிடம் சலுகை விலையில் வழங்கப்படும். Tel - 0779304147, 0705241664. 024227

தேயிலை/ இறப்பர் தோட்ட நிர்வாகத்திற்கு அனுபவமுள்ள தங்கி வேலை செய்வதற்கு சாரதி அனுமதிப் பத்திரம் உள்ள ஒருவர் தேவை. 0716994933. 024253




## சொந்த விடயம்

### 528 தங்குமிட வசதிகள்

களுபோவில வைத்தியசாலையிலிருந்து 300 M தூரத்தில் 3 Rooms வாடகைக்கு உண்டு. ஒரு Room attached குளியலறையுடன் மற்றையது Shamng குளியலறையுடன் மாத வாடகை 20, 000/= and 15,000/= வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு Ahmed - 0766162560. 023661

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, திம்பிரிகஸ்யாய காலி வீதி டுப்ளிகேஷன் வீதியில் காணி, வீடுகள் விற்பனைக்கு உள்ளன. 7 பேர்ச், 18 பேர்ச், 30 பேர்ச். 0777061207 022288

ராஜகிரியவில் இடமொன்று விற்பனைக்கு. 8.4 பேர்ச்சுக்கள். 18 மில்லியன் ரூபா. 0777674231. 022609

தெஹிவளை 9.5 பேர்ச் வீடு விற்பனைக்கு. 7 படுக்கையறைகள், 5 குளியலறைகள், 2 ஓய்வறைகள், 2 பென்றிகள், பிரத்தியேக வழி முதலாம் மாடிக்கு ரூப் டொப், டெராசோ, பென்றி, பார்க்கிங் அதிகூடிய குடியிருப்புப் பிரதேசம். உண்மையான கொள்வனவாளர்கள் மட்டும். தரகர்கள் வேண்டாம். அழையுங்கள்/ வட்ஸஅப் 0 7 1369 4999. 023257

தெஹிவளை 20 அடி பாதைக்கு முகப்பாக காலி வீதிக்கு 150 மீற்றர் அளவான தூரத்தில் சகல வசதிகளுடன் இணைந்த 10.5 பேர்ச் வீதம் சிக்கலற்ற உறுதியுடன் இரு காணித்துண்டுகள் விற்பனைக்கு. தரகர்கள் வேண்டாம். தொலைபேசி 0706292385. 023261

சொய்சாபுர தொடர் மாடி, 2ஆம் மாடி பிரதான வீதிக்கு, வங்கிகளுக்கு, பார்மசிகளுக்கு, சுப்பர் மார்ப்பட்டுக்களுப்பு 2 நிமிட தூரம். கொழும்பிற்கு 20 நிமிடங்கள். உரிமையாளர் வெளிநாடு பயணம். 68 இலட்சம். வீடு காலியாகவுள்ளது. 0777889905. 024216

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கொழும்பு கண்டி பிரதான வீதியை அடையக்கூடிய 261 பாதையில், நீர்கொழும்பு, கொழும்பு பாதையை அடையக்கூடிய வத்தளை, ஹுனுப்பிட்டிய அக்பர் டவுன் அருகில் 261 பாதைக்கு 250 M தூரத்தில் ஜும்ஆ மஸ்ஜிதுக்கு அருகில் பல காணித்துண்டுகள் விற்பனைக்கு. நீர், மின்சாரத்துடன் சகல வசதிகளும். ஒரு பேர்ச் 550/ முதல் தேவைப்படும் அளவை ஒதுக்கிக் கொள்ளலாம். 0772438884, 0716417215, 0779992473, 0753674177. 023941

### 634 வீடு சொத்து மட்டக்களப்பு மாவட்டம் விற்பனைக்கு

அக்கரைப்பற்று பேர்ச்சஸ் 7.9 நெசனல் ட்ரஸ்ட் வங்கியினால் கையகப்படுத்தப்பட்ட வீடு விற்பனைக்கு. 2023.05.07ஆம் திகதிக்கு முன்னர் விலையை விஷேட ஆதன முகாமையாளர், இல. 242, யூனியன் இடம். கொழும்பு2இல் விசாரிக்கவும். ஆகக் குறைந்த விலை 9, 311, 500 ரூபா. 07734 27535. 024061




## மணமகன்

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த மிக கௌரவமான முஸ்லிம் குடும்பத்தினர் தமது ஆங்கிலத்தில் உயர் கல்வி கற்ற அழகான மணமகளுக்கு பொருத்தமான 30 - 35 வயதுக்குட்பட்ட மணமகனை எதிர்பார்க்கின்றோம். இன்ஷா அல்லாஹ்! officeal42@gmail.com G196755



# உண்மை வெளிவரும் நாளில்...

**ரஷ்யன் சிறுகதை**
லியோ டோல்ஸ் டோய
**சிங்கள மொழியில்**
சாலிய குணவர்தன
**தமிழில்**
மலரன்பன்

பொழுதுபோக்காக இசைக்கருவியை விருப்பத்துடன் மீட்டிப் பாடும் வழக்கத்தைக் கொண்ட சுருள் கேசமும் கவர்ச்சியான தோற்றமும் கொண்ட இளைஞன், இவான் திமித்திரிவ் அக்ஸியோநொச்சுக்கு விலாதிமீர் நகரில் இரண்டு கடைகளும் வீடும் இருந்தன. இளம் பருவத்தில் மது அருந்துவதிலும் போதையின் வீண் வம்புகளில் ஈடுபடுவதுமாகவிருந்த அவன், திருமணம் செய்துகொண்ட பின்னர் மிதமிஞ்சி மதுபானம் அருந்துவதை தவிர்த்துக் கொண்டான். எப்போதாவது சிறிதளவு குடிப்பதுண்டு.

கிறிஸ்மஸ் நாளொன்றில் அக்ஸியோநொச் நகரத்து சந்தையில் வியாபாரத்துக்காக செல்லத் தயாராகி, மனைவியிடம் சொன்ன போது மனைவி அதற்கு இணங்கவில்லை.

நீங்கள் போகவேண்டாம். நான் கெட்ட கனவு கண்டேன்"

"பயப்பட வேண்டாம். நான் அங்கே போய் விநோத கேளிக்கையில் ஈடுபடுவேன் என்று நினைத்துத் தானே என்னைத் தடுக்கின்றாய்?"

"நான் ஏன் பயப்படுகிறேன் என்பது உங்களுக்கு புரியவில்லை. நீங்கள் நகரத்துக்குப் போய் திரும்பி வந்து தொப்பியைக் கழற்றியவுடன், உங்கள் தலை முடி வெள்ளை வெளேர் என்று வெளுத்துப் போயிருக்க கனவு கண்டேன். இது ஒரு கெட்ட கனவு.."

அவன் புன்னகைத்தான்.

"இது நல்ல கனவு. சந்தையில் பொருட்களையெல்லாம் விற்று, உனக்கு விதவிதமான பரிசுப் பொருட்களை கொண்டு வருவேன்."

அவன் புறப்பட்டுச் செல்கிறான்.

வழியில் அவனுக்கு அறிமுகமான ஒருவனும் சேர்ந்துகொள்ள இருவரும் இரவை வாடிவீட்டில் கழிப்பதென முடிவு செய்தனர். தேனீர் அருந்திய பின்னர் அடுத்தடுத்த அறைகளில் நித்திரைக்கு சென்றார்கள்.

அதிகாலை கருக்கலில் துயில் எழும்பும் பழக்கம் உள்ள அக்ஸியோநொச் குதிரை வண்டியோட்டியை எழுப்பி பயணத்துக்கு தயாராகும் படி சொன்னான்.

வாடிவீட்டின் உரிமையாளரிடம் பணத்தை கொடுத்து பயணத்தை தொடர்ந்தான்.

இருபத்தைந்து மைல் தூரம் வரை பயணம் செய்த பின்னர், வழியில் வாடி வீடொன்றில் வண்டியை நிறுத்தி, குதிரைகள் களைப்பாறுவதற்காக அவிழ்த்துவிடச் சொல்லி சூடாக ஒரு கோப்பை தேனீர் அருந்திய பின்னர், தனது கிடார் இசைக்கருவியை மீட்டி பாடத் தொடங்கினான்.

டொஸிக்கா வாகனத்தின் மணியை ஒலித்தவாறு ஒரு பொலிஸ் அதிகாரி சிப்பாய் ஒருவனுடன் வருகின்றான்.

பொலிஸ் அதிகாரி அக்ஸியோ நொச்சிடம் விசாரணையை ஆரம்பிக்கின்றான். பெயர், ஊர், வருமிடம், போகுமிடம் எனக் கேள்விக்குமேல் கேள்வி கேட்கிறான் மிகவும் அமைதியாகவும் தெளிவாகவும் பதில் சொன்ன அக்ஸியோநொச்,

"கொஞ்சம் தேனீர் குடிப்போமா?" என சினேக பாவத்துடன் கேட்கிறான்.

மறுப்புத் தெரிவித்த அதிகாரி மீண்டும் தனது கேள்வியைத் தொடர்கின்றான்.

"நேற்றிரவு எங்கே தங்கியிருந்தாய்? தனியாகவா அல்லது வேறு ஒரு வியாபாரியொருவனுடனா? காலையில் அந்த வியாபாரியை சந்தித்தாயா?"

அடுக்கடுக்கான கேள்விகள்... தன்னிடம் ஏன் இப்படி கேள்விக்குமேல் கேள்வி கேட்கிறார்கள். என வியப்படைந்த அக்ஸியோநொச் முழுவிபரத்தையும் கூறி,

"ஏன் என்னிடம் இப்படி கேள்விகள் கேட்கிறீர்கள்? நான் திருடனா? இல்லை கொள்ளைக்காரனா? நான் எனது வழக்கமான வியாபாரத்துக்குப் போகிறேன். இப்படியான கேள்விகள் கேட்க வேண்டியதில்லையே!"

"நான் இந்த மாவட்டத்தின் பொலிஸ் அதிகாரி நேற்று இரவு உம்மோடு தங்கிய வியாபாரி கழுத்து வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார். உமது பொருட்களை நாங்கள் சோதனை செய்ய வேண்டும்"

அதிகாரி சிப்பாய்க்கு சமிக் ஞை செய்கிறான்.

அறையினுள் சென்ற சிப்பாய் அக்ஸியோநொச்சின் பொருட்களை சோதனை செய்கிறான். பொட்டலங்களைக் கிண்டிப் பார்க்கின்றான். இரத்தக்கறை படிந்த கத்தியொன்று அகப்படுகின்றது.

"யாருடையது இந்தக் கத்தி?' இரத்தக் கறை படிந்த கத்தியைக் கண்ட அக்ஸியோநொச் கலவரமடைகின்றான்.

"இந்த கத்தியில் இரத்தக்கறை எப்படி ஏற்பட்டது?"

"எ... ன...க்...குத் தெரியாது, என்னுடையது... என்னுடையது இல்லை...!"

"இன்று அதிகாலையில் வியாபாரி கத்தியால் வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளார். அதை செய்யக்கூடிய ஒரே ஒரு நபர் நீர் தான். வாடி வீட்டின் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. வேறு எவரும் வாடி வீட்டில் தங்கவில்லை. இரத்தக்கறை படிந்த கத்தி இருந்தது உமது பையில், குற்றவாளி நீரே தான் என உமது முகமும் நடவடிக்கைகளும் காட்டிக்கொடுக்கின்றன. அந்த மனிதனை எப்படி வெட்டிக் கொன்றாய்? பணம் எவ்வளவு எடுத்துக் கொண்டாய்?"

தனக்கு ஒன்றுமே தெரியாது என அக்ஸியோநொச் சத்தியம் செய்தான். இரவு இருவரும் ஒன்றாகத் தேனீர் அருந்திய பின்னர் தனது அறையில் நித்திரைக்குச் சென்று விட்டதாகவும், மற்ற வியாபாரியை அதற்குப் பின் தான் சந்திக்கவில்லையென்றும், தனக்குச் சொந்தமான எட்டாயிரம் ரூபில்கள் மட்டுமே தன்னிடம் இருப்பதாகவும் நடுநடுங்கும் விதத்தில் ஒரு குற்றவாளியின் தோற்றத்திலும் கூறினான்.

அக்ஸியோநொச்சின் கால்கள் இரண்டையும் கட்டிவாகனத்தில் ஏற்றும் படி பொலிஸ் அதிகாரி சிப்பாய்க்கு கட்டளையிடுகின்றான். சிப்பாய் கால்கள் இரண்டையும் இறுக்கிக்கட்டி, வாகனத்தில் போடுகின்றான். அக்ஸியோநொச் மார்பில் சிலுவை அடையாளமிட்டவாறு புலம்பத்தொடங்கினான். அவனது பணம் மற்றும் பொருட்கள் யாவற்றையும் எடுத்துக் கொண்ட அவர்கள் அருகிலுள்ள நகரத்து சிறையிலடைத்தார்கள்.

பொலிஸார் விலாதிமீர் நகரத்தில் விசாரணை செய்த போது, பொது மக்களும் ஏனைய வியாபாரிகளும், அவன் முன்பொருகாலத்தில் மதுபோதையில் கலகம் செய்பவனாக இருந்திருந்தாலும் திருமணம் செய்ததன் பின்னர் திருந்தி நல்ல மனிதனாகவே வாழ்ந்தான் என்று கூறினார்கள். ரியாஸான் நகரிலிருந்து வந்த வியாபாரியின் இருபதாயிரம் ரூபிள்களை களவாடியதோடு அவனை கொலையும் செய்துள்ளான் என குற்றம் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டது.

அக்ஸியோநொச்சின் மனைவி ஆற்றமுடியாத துயரத்துக்குள்ளானாள், எதனை நம்புவதென்று அவளுக்கு விளங்கவில்லை. பிள்ளைகள் சிறு பராயத்தினர். இன்னும் தாயிடம் பால்குடிக்கும் இளையபிள்ளை. சிறைச்சாலைக்கு பிள்ளைகளுடன் சென்றாள். அவளது கணவனைப் பார்க்க முதலில் சிறைக்காவலர்கள் அனுமதிக்கவில்லை. நீண்ட நேரம் கெஞ்சிமன்றாடி காத்திருந்த பின்னரே பார்க்க அனுமதித்தார்கள். அக்ஸியோநொச்சை அடைத்து வைத்திருந்த அறைக்கு அவளை அழைத்துச் சென்றார்கள். பயங்கர குற்றவாளிகளோடு கைதி உடையில் அவனைக் கண்டவுடன் அவள் அதிர்ச்சியில் மயக்கமடைந்துவிட்டாள். சிறைக்கதவைத் திறந்து அவனை வெளியில் கொண்டுவந்தார்கள். மனைவி பிள்ளைகள் அருகில் தரையில் உட்கார்ந்துக்கொண்டான். சிறிது நேரத்துக்குப் பின்னர், சுய நினைவுக்கு வந்த அவள் வீட்டு நிலவரங்களை கூறிய பின்னர் என்ன நடந்தது எனக் கேட்கிறாள். நடந்தவைகள் எல்லாம் ஒன்று விடாமல் சொல்கிறான்.

"இப்போது நாங்கள் என்ன செய்வது?"

"அப்பாவியான என்னை அழித்துவிட வேண்டாம் என்று ஸார் மன்னுக்கு விண்ணப்பம் செய்யவேண்டும்"

"நான் அப்படி விண்ணப்பம் செய்தேன். அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை" என்றாள் கவலையுடன் அவள்.

அக்ஸியோநொச் ஒன்றும் பேசாமல் கீழே குனிந்து கொள்கிறான்.

"உங்களது தலைமயிர் வெள்ளையாக வெளுத்துப் போனது போல நான் கனவு கண்டது இதற்காகத்தான். அன்று அந்த பயணம் போக வேண்டாம் என்று நான் தடுத்தேனே ஞாபகமில்லையா... ஐயோ அன்று அந்தப் பயணம் போகாமலிருந்தால்..."

அவள் தனது விரல்களால் அவனது தலைமயிரை வருடுகிறாள்.

"வன்யா! என் தங்கமே சொல்லுங்கள். உண்மையிலேயே என்ன நடந்தது. நான் உங்கள் மனைவி. என்ன நடந்தது என்று உண்மையைச் சொல்லுங்கள். நீங்கள் அதனை செய்யவே இல்லையா?" "நீயும் என்னை சந்தேகிக்கிறாயா?

அக்ஸியோநொச் தூரத்தே பார்வையை செலுத்தி விக்கிவிக்கி அழத் தொடங்கினான். சிறைக் காவலர்கள் அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு பணிக்கின்றனர்.

மனைவி தன்னைப் பற்றி சந்தேகம் கொள்வதை எண்ணி சொல்லமுடியாது வேதனையடைந்தான்.

"உண்மையை இறைவன் மட்டுமே அறிவான். விண்ணப்பம் செய்யவேண்டியது அவனிடம் மட்டுமே. இறைவனிடம் மட்டுமே கருணையை எதிர்பார்க்கமுடியும்'

கசையடியின் பின்னர் அவனுக்கு சுரங்க வேலை செய்ய உத்தரவிடப்பட்டதும் கசையடியால் ஏற்பட்ட புண் ஆறிய பின்னர் சைபீரியாவுக்கு அவன் அனுப்பப்பட்டான்.

அக்ஸியோநொச் தனக்கு நீதி வழங்கும் படி அதன் பின்னர் விண்ணப்பம் எதுவும் செய்யவில்லை. தனக்கு கருணைபுரியும்படி இறைவனிடம் ஸ்தோத்திரம் செய்தான்.

சைபீரியாவில் இருபத்தைந்து ஆண்டுகள் கைதியாக கழிந்தது. தலை மயிர் வெண்பனி போல மாறி இருந்தது. தாடியும் வெளுத்து விட்டது. நடப்பதற்கு மிகவும் சிரமப்பட்டான். சிரிப்பு அவனிடமிருந்து மறைந்து விட்டது. பேச்சை குறைத்துக் கொண்டான்..

சிறையில் சப்பாத்து தைக்க பழகிக் கொண்டதால் சிறிது பணம் கிடைத்தது. சம்பாதித்த பணத்தில் பாதிரியாரின் வாழ்க்கை எனும் புத்தகம் ஒன்றை வாங்கினான்.

சிறையில் வெளிச்சம் கிடைக்கின்ற நேரங்களில் வாசிப்பான். இசைபாடும் குரல் வளம் கொண்டவனாக இருந்த படியால் சிறைச்சாலை தேவாலயத்தில் ஏனைய கைதிகளோடு தோத்திர பாடல்களை தொடர்ச்சியாகப் பாடுவதில் மன அமைதியடைந்தான்.

அவனது அப்பாவியான நடத்தையில் சிறைக்காவலர் அவனிடம் கருணை காட்டினர். ஏனைய சிறைக்கைதிகளும் அவனிடம் மரியாதையாக நடந்து கொண்டதுடன், பாதிரி தாத்தா என பாசத்தோடு அழைத்தனர். சிறை அதிகாரிகளிடம் ஏதாவது எழுத்து மூலமான விண்ணப்பம் செய்ய வேண்டுடிய போது அவர்களுக்கு அவன் உதவினான்.



கைதிகள் மத்தியில் சண்டை சச்சரவுகள் ஏற்படும் நேரத்தில் அவரிடம் சொல்லியே தீர்த்துக் கொண்டனர். அக்ஸியோ நொச்சின் குடும்ப விபரங்களை அறியும் வாய்ப்புகள் இல்லை. மனைவி மக்கள் உயிருடன் இருக்கின்றார்களா என்பது கூட அவனுக்கு தெரியாது.

ஒரு நாள் புதிய கைதிகள் சிலர் சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்டனர். மாலை நேரத்தில் பழைய கைதிகள் புதியவர்களை சூழ்ந்து கொண்டு பல்வேறு விபரங்களை அவர்களிடம் கேட்கத் தொடங்கினார்கள். ஊர், பேர் விபரங்கள், தண்டனை கிடைத்ததற்கான காரணங்கள் பற்றியெல்லாம் தோண்டித் தோண்டிக் கேட்டார்கள். அக்ஸியோ நொச் தரையில் பின்வரிசையில் அமர்ந்து கீழே குனிந்தவாறு அவர்களின் பேச்சை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

தலைமயிரை குட்டையாக வெட்டிய வெண்ணிறத் தாடியுடனிருந்த ஒருவன், பேசத் தொடங்கினான்.

“நண்பர்களே! நான் செய்த குற்றம் இதுதான். வண்டியொன்றின் குதிரையை அவிழ்த்தது மட்டும் தான். களவாடியதற்கான குற்றத்துக்கு எனக்கு தண்டனை வழங்கப்பட்டது. வண்டிக்காரன் எனது நண்பன். அவசரமாக வீட்டுக்குப் போக இருந்தமையினால் அவிழ்த்தேன். நான் நிரபராதி. ஆனால் அவர்களே எனக்குத் தண்டனை வழங்கிவிட்டார்கள். நான் திருடியது எங்கே, எப்படியென்றெல்லாம் அவர்கள் அறிந்து வைத்திருக்கவில்லை. உண்மையிலே நான் இதற்கு முன்னரே இங்கே வந்திருக்க வேண்டும். அப்போது என்னைப் பிடிக்க முடியவில்லை. ஆனால் இம்முறை குற்றம் செய்யாமலேயே சிறைக்கு வர நேர்ந்துவிட்டது. நான் பெயர் சொல்ல விரும்பவில்லை. இதற்கு முன்னர் நான் சைபீரியாவில் இருந்திருக்கிறேன். அதிக நாள் இல்ல. ஒரு கொஞ்சக் காலம்”

“நீ எங்கிருந்து வந்தாய்?”

கைதிகளில் ஒருவன் கேட்டான்.

“விலாதிமீர் என்ற நகரத்திலிருந்து. எனது முழுக் குடும்பமும் அங்கேதான். எனது பெயர் மக்கார். ஆனால் எல்லோரும் என்னை செமியோநிச் என்று தான் அழைப்பார்கள்.”

“செமியோநிச், விலாதிமீரில் அக்ஸியோநொச் என்று ஒரு குடும்பம் இருந்ததே. அவர்கள் இப்போது அங்கே இருக்கிறார்களா? அவர்களில் யாரேனும் உயிருடன் இருக்கிறார்களா?” அக்ஸியோநொச் தலையை உயர்த்தி மிகவும் ஆவலுடன் கேட்டான்.

“என்ன எனக்குத் தெரியுமாவா? நல்லா கேட்டீர்கள்' அக்ஸியோநொச்சின் முழுக் குடும்பத்தைப் பற்றியும் எனக்கு நன்றாகவே தெரியும். அவர்கள் இப்போது பெரும் செல்வந்தர்கள். ஆனால் அவர்களின் தகப்பனாரை சைபீரியா சிறைக்கு அனுப்பிவிட்டார்கள். அந்த மனிதன் ஒரு பாவி. அதுசரி,

றறதாத்தா நீங்கள் ஏன் இந்த சிறைக்கு வந்தீர்கள்? என்ன குற்றம் செய்தீர்கள்?”

தன்னுடைய துரதிர்ஷ்டமான விதியைப் பற்றி அக்ஸியோநொச் ஒன்றும் சொல்லவில்லை. அவனிடமிருந்து நீண்டதொரு பெருமூச்சு.

“எனது பாவத்துக்காக இருபத்தியாறு வருடங்களை வீணடித்தேன்.”

“என்ன பாவத்துக்காக?”

“பரவாயில்லை இது நான் அனுபவிக்க வேண்டியது தான்” என்று அக்ஸியோநொச் சொன்னது தான் தாமதம்,

“யாரோ ஒருவன் வியாபாரி ஒருவனின் கழுத்தை வெட்டி கொலை செய்து, கத்தியை அக்ஸியோநொச்சின் பைக்குள் மறைத்து வைத்ததனால் அப்பாவியான இவர் தண்டனையை அனுபவிக்கிறான் என ஏனைய சிறைக் கைதிகள் முழுவிபரத்தையும் சொல்கிறார்கள். இதைக் கேட்ட செமியோநிச் அக்ஸியோநெச்சை ஊடுருவிப் பார்த்தான்.

“இது ஒரு பெரிய புதுமை! உண்மையிலேயே புதுமைதான். தாத்தா உங்களுக்கு நன்றாக வயசா கிவிட்டது என்று சொன்னவன் ஏன் இவ்வளவு அதிர்ச்சியடைந்ததா என மற்றவர்கள் யோசிக்கத் தலைப்பட்டார்கள். “இதற்கு முன் நீ அக்ஸியோடுநெச்சை கண்டிருக்கின்றாயா? இவரைப் பற்றி எதாவது தெரியுமா?”

மற்ற சிறைக்கைதிகளின் கேள்விகளுக்கு தெளிவான பதில் ஒன்றையும் சொல்லவில்லை.

“மக்களே நமக்கு இதுபோன்றதொரு சந்தர்ப்பத்தில் சந்திக்க நேர்ந்ததென்பது புதுமைதான்”

அவனது வார்த்தைகளிலிருந்து வியாபாரியின் கொலை சம்பந்தமாக மக்காருக்கு ஏதாவது தெரிந்திருக்கலாம் என்று சந்தேகம் ஏற்பட்டது.

“மக்கார் செமியோநிச், அந்தக் கொலையைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?”“எனக்கு எப்படித் தெரியும்? ஊரில் பல வதந்திகள்.

என்னென்னவோ பேசிக் கொண்டார்கள். அதுவும் கூட இப்போது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை” என்றான் மக்கார் சிமியோநிச் சிரித்தவாறு.

“கத்தியை பைக்குள் மறைத்து வைத்திருந்தது கத்திக்கு சொந்தக் காரனாகத்தான் இருக்க முடியும். பிடிபடும் வரை எவருமே கள்வன் அல்ல. உங்களுடைய பைக்குள் வேறு எவரும் கத்தியை ஒளித்து வைக்க முடியுமா? அதுவும் பை உங்களுடைய தலையணைக்கு கிழே இருந்திருக்கிறது. பையை வேறு எவரும் எடுத்திருந்தால் நீங்கள் நித்திரையிலிருந்து விழித்துக் கொண்டிருப்பீர்கள் தானே.”

(19ஆம் பக்கம் பார்க்க)

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 66



**திரு/திருமதி.செல்வி** ..............................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
**முகவரி** ..............................
..............................
..............................

.................... ....................
**திகதி** **கையொப்பம்**

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
**போட்டி இல. 66**
**த.பெ.இல.834. கொழும்பு**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 66

**இடமிருந்து வலம்**

1. குன்றிய நிலையில் இருந்து மீண்டும் வளர்ச்சி பெறல்
3. யானையைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பவன்
5. மனதிற்குக் கிடைக்கும் சாந்தி (குழம்பியுள்ளது)
7. கால்நடைகளின் உணவு(திரும்பியுள்ளது)
9. இதுவும் ஒரு சிற்றுண்டி
10. பூனையைக் கண்டால் இதற்குப் பயம் (திரும்பியுள்ளது)
12. திருப்பிக் கொடுக்கும் வகையில் பெறப்படுவது
14. பணிவு
15. கேலிப்பேச்சு
17. தோற்றம்
20. அன்னை
22. மரக்கறி உணவுக்கு சுவையூட்டுவது (குழம்பியுள்ளது)
24. உடம்பு
25. பலசரக்கு பொருட்களை இப்படியும் சொல்வர் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. அழகு
2. பருவ வயதுக்கு கீழ்ப்பட்ட ஆண்பிள்ளை
3. பசுவிலிருந்தும் கிடைக்கும்
4. ஒரு வாழை இனம்
6. உடலில் அணிவதற்குரியது
8. பலராலும் பெருமையாகப் பேசப்படும் நிலை
11. நல்லெண்ணெய்யின் மூலப் பொருள்
13. சொத்துரிமை (குழம்பியுள்ளது)
14. பெற்றோரின் தகப்பன்
15. அச்சம்
16. ஆட்டு ரோமத்தால் செய்யப்பட்ட போர்வை
18. சுவடு
19. கருமேக மூட்டம்
21. கனிவதற்கு முந்திய நிலை (தலைகீழ்)
23. விரோதம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 65

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. பக்குவம்
5. மதி
7. கைகேயி
8. கரு
9. மையல்
11. வருமதி
13. திலகம்
14. கம்மல்
16. தேள்
18. துகள்
19. சாது
21. கதிரை
23. விண்ணன்
24. ஆம்

**மேலிருந்து கீழ்**

01. பசுமை
2. குயில்
3. வகை
4. கேவலம்
5. மருமகள்
6. திகதி
10. நயம்
12. திரு
13. கல்யாணம்
14. கஞ்சா
15. மது
17. தேக்கம்
20. துவி
22. ஆதி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 65

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 500.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **ஆர். ஜயந்திமாலா** | **ஆர்.இஷால் ஹன்னா** | **ஐ.எல். லத்தீபா** |
| இல 09, மின்னேரிகம | இல, 117, அண்ணல் வீதி | 80/6 வாங்காமம் கலீல் ஹாஜி வீதி |
| மவுண்ட் லவினியா | கிண்ணியா _03 | இறக்காமம் 02 |

### பாராட்டு பெறுவோர்

**1. சின்னையா செல்வராஜா**
கொழும்பு 11
**2. சி. அருந்ததி**
பதுளை
**3. சபீஹா சப்ராஸ்**
பண்டாரகமை
**4. எம். எம் பாரூக்**
கண்டி
**5. எம்.ஐ.எம் பாஹிம்**
அட்டாளைச் சேனை
**6. ஏ. மஹீஷா**
மானிப்பாய்
**7. எம்.எல். பரீஹா**
திருகோணமலை
**8. மாலதி பிரியா**
பதுளை
**9.மங்களா சுதர்ஷன்**
கோப்பாய்
**10. ரம்ஸி ராஸிக்**
காலி

## அபாயகரமானதாக...

(12ஆம் பக்க தொடர்)

இவ்அச்சப்பின்னணியே கடந்த டிசம்பரில் பொதுமக்களின் கைகளுக்கு அதிகாரத்தை வழங்குவதற்கான ஒரு கட்டமைப்பு ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்ட போதிலும், விவரங்களை இறுதி செய்வதற்கான பேச்சு வார்த்தை தோல்வியடைந்தன. இராணுவ வீரர்களும், அவர்களது ஆதரவாளர்களும், தங்கள் அதிகாரப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டால், தங்களின் செல்வம் மற்றும் செல்வாக்கு என்னவாகும் என்ற கவலையில் இராணுவத்தலைவர்கள் உள்ளனர்.

மூன்றாவது, சூடானின் புவிசார் அரசியல் மூலோபாயம் சர்வதேச மற்றும் பிராந்திய அரசுகளின் நலனுக்கான களமாக காணப்படுகின்றது. சூடான் ஒரு முக்கியமான பிராந்திய அரசியல் சக்தியாகும். மேலும் மூலோபாய துறைமுகங்கள் மற்றும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விரும்பப்படும் தங்கம் மற்றும் எண்ணெய் போன்ற பரந்த இயற்கை வளங்களையும் கொண்டுள்ளது.

அமெரிக்கா பாரம்பரியமாக சூடானில் மட்டுப்படுத்தப்பட்ட செல்வாக்கைக் கொண்டிருந்தது. இருப்பினும் அல்பஷீர் வெளியேற்றப்பட்ட பின்னர் இது மாறத் தொடங்கியது. சீனா பாரிய உட்கட்டமைப்பு திட்டங்கள் பொருளாதார முதலீட்டுக் கடன்கள் தற்போதைய ஆட்சியாளர்களிற்கான ஆதரவு போன்றவற்றின் மூலம் கிழக்கு ஆபிரிக்காவில் நண்பர்களை உருவாக்க முயல்கின்றது. அத்துடன் கண்டம் முழுவதும் மத்தியஸ்தராக தன்னை நிலைநிறுத்துவதற்கான இலட்சியங்களை சீனா கொண்டுள்ளது. சூடான் மோதலிலும் அத்தகைய வெளிப்பாடுகளையே சீனா வெளிப்படுத்தி வருகின்றது.

சூடான் மோதல் தொடர்பில் கருத்துரைத்துள்ள பீஜிங் வெளிநாட்டு ஆய்வுகள் பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் மற்றும் இராஜதந்திரப் பள்ளியின் பேராசிரியர் சாங் வெய், 'சூடானின் சமூக ஒப்பந்தம் பழங்குடியின உறவுகள் மற்றும் இன உறவை அடிப்படையாகக் கொண்டது. அதனால் இராணுவ குழுக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான மோதல்களை சமரசம் செய்வது மிகவும் கடினம்.

ஆபிரிக்க நாடுகளில் சமூக மோதல்கள் மேற்குவடிவமைக்கப்பட்ட மாதிரிக்கு தவறான சரிசெய்தல் மற்றும் கண்டத்தில் மேற்கு நாடுகளின் ஆர்வங்களின் மோதல்களால் மேலும் தூண்டப்பட்டன' எனத் தெரிவித்தார். சமீப ஆண்டுகளில், மேற்கத்திய நாடுகள், குறிப்பாக அமெரிக்கா, ஆபிரிக்க நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட முன்வருவதையும், பணக்கார நாடுகள் ஆபிரிக்க நாடுகளுக்காக வடிவமைத்த மாதிரியை அவர்கள் மீது திணிப்பதையும் சாங் குறிப்பிட்டார். சூடானின் மூலோபாய முக்கியத்துவத்தினால் சர்வதேச அரசுகள் தமது நலனுக்குள்ளேயே சூடான் மோதலை அவதானிக்கும் நிலைப்பாடு காணப்படுகின்றது. எனவே, சூடான் உள்நாட்டு மோதுகையானது சூடான் இராணுவ பாரம்பரியத்தின் தொடர்ச்சியானதாக அமைகின்ற போதிலும், அதன் புவிசார் அரசியல் மூலோபாய முக்கியத்துவம் காரணமாக பிராந்திய மற்றும் சர்வதேச நாடுகளுக்கும் கொந்தளிப்பான சூழலையே உருவாக்கியுள்ளன. குறிப்பாக சண்டையானது நாட்டை மேலும் துண்டாடலாம், அரசியல் கொந்தளிப்பை மோசமாக்கலாம் மற்றும் அண்டை அரசுகளால் இழுக்கப்படலாம் என்ற அச்சம் உள்ளது. 2019 ஆட்சிக் கவிழ்ப்பிற்குப் பிறகு சூடான் நிலையானதாக இல்லை, இப்போது நாடு மாறுதல் செயல்பாட்டில் இருக்கும்போது மற்றொரு சதி முயற்சி ஏற்பட்டுள்ளது.

சீனா உட்பட பல பெரிய நாடுகளின் பெரிய முதலீடுகளைக் கொண்ட ஆபிரிக்காவின் கொம்பு பகுதியில் இந்த நிலைமை பரவலான தாக்கத்தை ஏற்படுத்தும் சூழலே காணப்படுகின்றது. தற்போதைய மோதலில் ஆழமாக ஈடுபடுவதைத் தவிர்க்கவும், அமைதியான தீர்வுக்கு அழுத்தம் கொடுக்கவுமே உலகம் அதிகம் முனைய வேண்டும். மாறாக ஒவ்வொரு தரப்புக்காகவும் சர்வதேச சக்திகள் பிளவுறின் ரஷ்யா, உக்ரைன் போரினால் உலகம் எதிர்கொள்ளும் அபத்தங்களால் சூடான் மோதலும் வேறு ஒரு முனையில் அபாயமாக மாற்றமடைய வாய்ப்புள்ளது.


LANKA SATHOSA லங்கா சதொச

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

## லங்கா சதொச லிமிடட்டுக்கு பட்டய கட்டிடக் கலைஞர்களை பதிவு செய்தல் - 2023

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சின் கீழ் செயற்படும் லங்கா சதொச லிமிடட்டின் கட்டிடங்களை வடிவமைத்தல், மாற்றுதல், புணரமைத்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பில் நிர்மாண வடிவமைப்பு, நிர்மாணித்தல் மற்றும் மேற்பார்வையிடல் உட்பட அனைத்து கட்டிட நிர்மாண கட்டங்களையும் பூர்த்தி செய்வதற்கு **பட்டய கட்டிடக்கலைஞர்களை** பதிவு செய்வதற்கு **லங்கா சதொச லிமிடட் தலைவரினால்** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுதியுடைய கட்டிடக்கலைஞர்கள், பதிவு செய்துகொள்வது தொடர்பில் விண்ணப்பங்கள் மற்றும் நிபந்தனைகள் **www.lankasathosa.org** என்ற லங்கா சதொசவின் உத்தியோகபூர்வ இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் தரவிறக்கம் செய்தல் வேண்டும். இல்லையேல் கீழுள்ள முகவரிக்கு வருகை தந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

**லங்கா சதொச லிமிடட்,**
**பெறுகைப் பிரிவு. 3ஆவது மாடி,**
**இல. 27, சதொச பொதுச் செயலாளர் கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி. கொழும்பு 02.**

தகுதி மற்றும் அனுபவத்தை நிருபிக்க கோரப்பட்ட ஆவணங்களுடன் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை குறித்த, ஆவணங்களுடன் **2023 ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி தொடக்கம் 2023 மே மாதம் 02ஆம்** திகதி வரையான காலத்தில் பதிவுக் கட்டணமாக **5,000.00** ரூபா (மீளளிக்கப்படாதது) தொகை செலுத்தி மேல் குறிப்பிட்ட முகவரிக்கு கைகளால் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரங்களில் அழைக்கவும்.
தொலைபேசி இலக்கம் 0701560428 (திலினி)

2023 ஆம் ஆண்டுக்காக (12 மாதங்கள்) **லங்கா சதொச லிமிடட் கட்டிடக்கலைஞர்களை பதிவு செய்தல்** தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் **லங்கா சதொச லிமிடட் வசமானது.**

தலைவர்,
லங்கா சதொச லிமிடட், சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
இல.27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.



# பெறுகை அறிவித்தல்

## விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவ

சீதுவ, விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவினால் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு இலங்கை நிர்மாண பயிற்சி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இவ் வைத்திய சபையின் பராமரிப்பு விடயங்களுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | உருப்படி | தகைமை | மீளளிக்கப் படாத கேள்வித் கட்டணம் | கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 01 | 2023/ 2024 ஆண்டிற்கு வைத்தியசாலைக்கு பராமரிப்பு ஒப்பந்தக் காரர்களைப் பதிவு செய்தல் (ரூ. 300,000.00 இற்கு மேற்படாத ஒப்பந்தங்கள்) | சீ - 09 (திருத்தப்பட்ட பதிவு செய்தல் முறைமையின் பிரகாரம் EM 5 மற்றும் அதற்கு மேல்) | ரூ. 2,000.00 | 2023.05.17 மு.ப. 10.00 |

01. மீளளிக்கப்படாத ரூ. 2,000.00 கட்டணத்தைச் செலுத்தி விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூல விண்ணப்பத்தின் மூலம் இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணத் தொகுதியை 2023.04.24 முதல் 2023.05.15 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை (அரச பகிரங்க விடுமுறை மற்றும் வார இறுதி விடுமுறை தினங்கள் தவிர்த்து) பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் கேள்விகள் திறக்கப்படுவதுடன், அதற்காக கேள்விதாரர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**பிரதம மருத்துவ அதிகாரி,**
**விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை -**
**சீதுவ,**
**தொலைபேசி இல : 011-2258862-64**
**பெக்ஸ் இல. : 011-2258865**



புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

## தொல்லியல் திணைக்களம்
## விலைமனுக்களுக்கான அழைப்பு
### கண்டியிலுள்ள ''வரலாற்று சிறப்புடைய ரஜ வாசலின்'' மறுசீரமைப்பு

1. கீழே விபரிக்கப்பட்டதும் **50.0 மில்லியன் ரூபாவில்** மதிப்பீடு செய்யப்பட்டதுமான கண்டியிலுள்ள ''வரலாற்று சிறப்புடைய ரஜ வாசலவின்'' மறுசீரமைப்பிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து **தொல்லியல் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர்** முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார். இப்பணியானது இலங்கையிலுள்ள அமெரிக்க ஐக்கிய தேசத்தின் தூதுவராலயத்தினால் நிதியிடப்பட்டுள்ளது.
   நிர்மாணக் காலமானது **180** நாட்களாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் சி-6, சி-5 அல்லது சி-4 தரத்தில் கட்டிட நிர்மாணத்துறையில் பதிவு பெற்றவராகவும் விலைமனுக்களை மூடும் திகதியன்று செல்லுபடியாகும் தன்மையிலிருத்தலும் வேண்டும். மேலும், பதிவு செய்தலானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
   **விலைமனுதாரர்கள் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவு செய்தலின் சான்றிதழின் (பிசிஏ-3) மூலப்பிரதியானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிசிஏ-3 சான்றிதழை சமர்ப்பிக்காத எந்தவொரு விலைமனுதாரருக்கும் பெறுகையானது வழங்கப்பட மாட்டாது.**
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை **கொழும்பு-07, சேர் மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை, தொல்லியல் திணைக்கள கணக்காளரிடமிருந்து** பெற்று 05 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் **மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும்** விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
   தொடர்பு இலக்கங்கள் பின்வருமாறு: தொலைபேசி: 011-2694728, 081-2222336.
5. **2023.04.25ஆம் திகதியிலிருந்து 2023.05.15ஆம் திகதி வரையும்** மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக **பன்னிரண்டாயிரம் ரூபாவை (12,000 ரூபா)** சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், கீழே குறிப்பிட்டுள்ள அலுவலர்களுக்கு எழுத்து மூலமான கடிதங்களை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
   I. கணக்காளர்
   தொல்லியல் திணைக்களம்
   (தலைமை அலுவலகம்)
   சேர் மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை,
   கொழும்பு-07.
   தொலைபேசி: 011-2694728
   II. உதவிப் பணிப்பாளர்
   தொல்லியல் பிராந்திய அலுவலகம்
   இல. 17, ஆநகாரிக்க தர்மபால
   மாவத்தை, கண்டி.
   தொலைபேசி: 081-2222336
6. **2023.05.15 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படலாம்** அல்லது பதிவுத் தபாலில் **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கணக்கிடல் கிளை, 1 ஆம் மாடி, தொல்லியல் திணைக்களம், சேர் மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை, கொழும்பு-7** என்ற முகவரியை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், கொழும்பு-07, சேர் மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை, தொல்லியல் திணைக்களம், 1 ஆம் மாடி, கணக்கிடல் கிளையில் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் அவைகளை பெற்றுக் கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட இறுதித் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் பின்வரும் பாங்கிலமைந்த விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் 09 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - தொல்லியல் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல்.
   - 730,000 ரூபா தொகைக்கானதாகவிருத்தல்.
   - 2023.08.14 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்.
   - விலைமனுக்கோரல் தரவின் **ITB 16.2 உபவாசகத்தில்** குறிந்துரைக்கப்பட்டுள்ளவாறு முகவராண்மைகள் ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.
9. கண்டி, ரஜவாசலவில் 2023.05.02ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

**தொல்லியல் பணிப்பாளர் நாயகம்,**
**தொல்லியல் திணைக்களம்,**
**சேர் மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை,**
**கொழும்பு-07.**



## தே சக்தி நிதிய பங்குடைமையாளர்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்

2000ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தே சக்தி நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தே சக்தி நிதியத்தினால் வழங்கப்பட்ட பங்குகளை அரசாங்கம் மீள் கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரம் பங்குகளை ஒப்படைக்கும் இணக்கப்பாட்டைக் காட்டும் பங்குரிமையாளர்கள் பின்வரும் ஆவணங்கள் சகிதம் இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தே சக்தி நிதிய பங்குப் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளல்'' எனக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அறிவிக்கப்படுகின்றது. (தே சக்தி நிதியத்தின் பங்குகளை மீள் கொள்வனவு செய்யும்போது பங்குரிமை அங்கத்தவர்களில் 70 வயதிற்கு மேற்பட்ட பங்குரிமையாளர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்)

**செயலாளர், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு,**
**தே சக்தி நிதியம்,**
**10வது மாடி, செத்சிறிபாய இரண்டாம் கட்டம்.**
**பத்தரமுல்ல,**

**சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**
1. பங்குச் சான்றிதழின் மூலப் பிரதி
   அந்தச் சான்றிதழின் பின்புறம் **''தே சக்தி நிதியத்தினால் என்னால் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளை மீண்டும் பெற்றுக்கொண்டு குறித்த ...................... தொகையை .................. வங்கியின் ...................... கிளையின் ........................... எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்யுமாறு வேண்டுகின்றேன்''** என பங்குரிமையாளரினால் பிரதேச கிராம சேவையாளர் அல்லது சமாதான நீதவான் ஒருவரின் முன் கையொப்பமிட்டு சான்றுபடுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.
2. குறித்த தொகை வைப்புச் செய்யப்பட வேண்டிய வங்கி புத்தகத்தின் கணக்கிலக்கத்தைக் காட்டும் பக்கத்தின் அந்த வங்கியினால் சான்றுபடுத்திய புகைப்படப் பிரதியொன்று.
3. வசிக்கும் பிரதேசத்தின் கிராம சேவையாளர் அல்லது சமாதான நீதவான் ஒருவரினால் சான்றுபடுத்திய தேசிய அடையாள அட்டையின் பிரதி

இது தொடர்பில் ஏதாவது விபரங்கள் தேவையானால் 011-2186207 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி - தேயிலை) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**பெருந்தோட்டக் கைத்தொழில்**
**அமைச்சு.**

**விண்ணப்பப் படிவம்**

**அலுவலகப் பாவனைக்கு**

### தே சக்தி நிதியத்தின் பங்குகளை மீள ஒப்படைப்பதற்கான விண்ணப்பப் படிவம்

பங்குரிமையாளரின் முழுப் பெயர் : ..............................................
முகவரி : ..............................................
தொலைபேசி இலக்கம் நிலையானது / கைப்பேசி : ..............................................
வயது : ..............................................
அடையாள அட்டை இலக்கம் : ..............................................
தே சக்தி அங்கத்துவ இலக்கம் : ..............................................
சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கத்தின் பெயர் :.........................................

சான்றிழ் இலக்கம் ...................... பங்குகளின் எண்ணிக்கை .......................................... பங்குத் தொகை ............................

பணம் வைப்புச் செய்யப்படவேண்டிய வங்கி மற்றும்
வங்கிக் கிளையின் பெயர்:..............................................................................
வங்கிக் கணக்கிலக்கம் :..............................................................................
இத்துடன் உரிய குறிப்பை இட்டு கையொப்பமிடப்பட்ட பங்குச் சான்றிதழ் பத்திரத்தின் மூலப் பிரதி, இயைபுடைய வங்கியினால் சான்றுபடுத்திய எனது வங்கிப் புத்தகத்தின் இலக்கம் சகிதமான பக்கத்தின் புகைப்படப் பிரதி மற்றும் சான்றுபடுத்திய தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதி இணைக்கப்பட்டுள்ளது. என்னால் கொள்வனவு செய்யப்பட்ட மேற்கூறப்பட்ட விபரங்களில் காட்டப்பட்டுள்ள தே சக்தி நிதியத்தின் பங்குகளை மீளப் பெற்றுக்கொண்டு உரிய தொகையை தரப்பட்டுள்ள வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

.............................................. ..............................
**பங்குரிமையாளரின் கையொப்பம்** **திகதி**



## களனிப் பல்கலைக்கழகம்

### சிங்கள மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாத இலங்கைப் பிரஜைகளுக்கான

## சிங்கள மொழி டிப்ளோமாக் கற்கைநெறி – 2023 ஜூலை

களனிப் பல்கலைக்கழக சிங்கள மொழித்துறையினால் நடாத்தப்படும் சிங்கள மொழி டிப்ளோமாக் கற்கைநெறிக்கான (ஒரு வருடம்) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இலங்கையில் உள்ள தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட எவ்வினத்தைச் சார்ந்தவர்களுக்குமான இக்கற்கைநெறியானது 2023 ஜூலை மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளது. இது தொடர்பான மேலதிகத் தகவல்களை http://hu.kln.ac.lk/depts/sinhala என்னும் இணையத்தளத்தினைப் பார்வையிடுவதன் மூலமாகவோ அல்லது 0719035251 / 0112914493 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மற்றும் dsst2023uok@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகத் தொடர்புகொள்வதன் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம். இக்கற்கைநெறிக்கான விண்ணப்பபடிவங்கள் 2023.04.17 ஆம் திகதி முதல் 2023.05.17 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**பதிவாளர்**
**களனிப் பல்கலைக்கழகம்**
**களனி**



தேசிய லொத்தர் சபை National Lotteries Board
வியாழக்கிழமை 2023.04.20
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5092 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10.900.062.00
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 0 7 7 4 6 4

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1547 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,373,856.00
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 9 4 3 4 0 3

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 401 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,531,758.20
வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 25 27 30 52 — விசேட இலக்கினம் மீனம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1440 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 315,607,362.00
ஆங்கில எழுத்து A — சுப்பர் இலக்கம் 14 — வெற்றி இலக்கங்கள் 06 27 52 55
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1122 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 86,842,862.00
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 07 11 28 29

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3334 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,291,242.24
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 46 68 72 76

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
கமத்தொழில் அமைச்சு

SAPP

# பெறுகை அறிவித்தல்

## சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் மனித போசணைக்காக தனிநபர் உசாத்துணையாளரொருவரை தெரிவு செய்தல்

சிறு உரிமையாளர் விவசாய-வர்த்தக பங்குடமை திட்டமானது (SAPP) கமத்தொழில் அமைச்சின் கீழ் அமுல்நடாத்தப்படுவதுடன் இலங்கை அரசாங்கத்தினாலும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் ஆகியன இணைந்து நிதியிடப்பட்டதொன்றாகும். இந்த சிவிகூதி ஆனது இலங்கையின் சிறுஉரிமையாளர்களின் ஏழ்மைக் குறைப்பிற்காகவும் போட்டித்திறனுக்கான பங்களிப்பை வழங்குவதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் இலக்கானது வர்த்தகரீதியிலான உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமைகளில் ஈடுபட்டுள்ள 57,500 சிறுஉரிமையாளர் குடும்பங்களின் உணவின் வருமானம் மற்றும் தரத்தை நிலைபேறானவகையில் அதிகரிப்பதாகும். SAPP ஆனது அரசாங்க, தனியார் மற்றும் உற்பத்தியாளர் பங்குடமையூடாக (4Ps) கிராமிய அபிவிருத்தியின் தேசிய கொள்கை சட்டகமைப்பின் கீழ் இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகளை அடைவதற்கான கருவியாகும்.

பின்வரும் பதவிகளுக்கான பொருத்தமான விண்ணப்பதாரிகள் உயர்ந்த இலட்சியத்தையுடையவராகவும், பெறுபேறு நோக்கமும் நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவம் மற்றும் பேச்சுவார்த்தை திறமைகளையுடையவராகவும் பிரத்தியேகமான அணி முகாமைத்துவ ஆற்றல்களையும் சிறப்பான சமுகரீதியிலான திறமைகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**1. உசாத்துணையாளர் -சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றம் - 01 பதவி**

**முழு நேரம்/ பகுதி நேரம்**

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

சூழல் விஞ்ஞானம், நிலைபேறான தன்மையுள்ள விவசாயம், நிலைபேறான அபிவிருத்தி, காலநிலை மாற்றம் அல்லது தொடர்புடைய துறைகளில் பட்டப்பின்பட்டம் அத்துடன் முதுமானிப் பட்டம் அல்லது உயர் பட்டப் படிப்பின் பின்னர் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம்.

குறிப்பு: கமத்தொழிலில் அல்லது விவசாய வியாபாரம் மற்றும் தொழில்நுட்பவியல் முதலாம் பட்டப் படிப்பு அதிகமாக விரும்பத்தக்கது. கடன் வழங்குநர் நிதியிடப்பட்ட செயற்றிட்டத்தில் நிகரான பதவியில் பணியாற்றிய அனுபவம் விரும்பத்தக்கது.

**2. உசாத்துணையாளர் - மனித போசணை - 01 பதவி**

**முழு நேரம்/ பகுதி நேரம்**

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

மனித போசணை, சமூக சுகாதாரம் அல்லது தொடர்புடைய துறைகளில் பட்டப்பின் பட்டம் அல்லது பட்டப்பின் பட்ட டிப்ளோமா அத்துடன் 3 வருட அனுபவம். விவசாய உணவு விஞ்ஞானம், மனித போசணைசார் விஞ்ஞானம், போசணைசார் விஞ்ஞானம் அல்லது தொடர்புடைய துறை.

குறிப்பு:
1. கடன் வழங்குநர் நிதியிடப்பட்ட செயற்றிட்டமொன்றில் நிகரான பதவியில் பணியாற்றிய அனுபவம் விரும்பத்தக்கது.
2. திட்ட வடிவமைத்தல், அமுல்நடாத்தல், போசணை தொடர்பாக M&E அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் வரவுசெலவு திட்ட அறிவு, நிதிசார் முகாமைத்துவம், பணியாளர் குழாமின் மேற்பார்வை தொடர்பான திறன்கள், ஆற்றல் கட்டியெழுப்புதல் மற்றும் பணியை இலகுவாக்கும் திறன்கள்.

**பணக்கொடுப்பனவு : பேசித்தீர்க்கப்படும்.**

ஆர்வமுள்ளவர்கள் **www.sapp.lk** என்ற எமது இணையதளத்தினூடாக நியதிக் குறிப்புக்களை பதிவிறக்கம் செய்யலாம். (உரித்தான நியதிக் குறிப்புக்களை பதிவிறக்கம் செய்வதற்காக, "DOWNLOAD" heading and "PROCUREMENT" subheading ஆகியவற்றை தயவு செய்து பார்க்கவும்). உங்கள் முன்மொழிவை (நியதிக் குறிப்புக்களின் பிரகாரம் உரித்தான விபரங்களுடனான முழுமையான விபரக் குறிப்பை தயவு செய்து அனுப்பவும்) 2023.05.04 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரியை வந்தடையும் வகையில் தபாலில்/நேரடியாக அனுப்பலாம் அல்லது **procurement@sapp.lk** என்ற மின்னஞ்சல் வழியாக உங்கள் சுயதரவை நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை மின்னஞ்சலின் விடயத் தலைப்பாக பாவித்து அனுப்பவும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தயவு செய்து குறிந்துரைக்கவும். தலைவர், உசாத்துணையாளர்கள் பெறுகைக் குழு, - செயற்றிட்டங்கள், சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம், இல.: 214/ஏ, நாவல வீதி, இராஜகிரிய.

மேலதிக விபரங்களுக்கு, வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 011-2448031 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது **gamini@sapp.lk** என்ற மின்னஞ்சலூடாக பெறுகை விஷேடத்துநரை தொடர்பு கொள்ளவும்.

**நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர்,**
**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்,**
**இல.: 214/ஏ, நாவல வீதி,**
**இராஜகிரிய.**

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே தொடர்பு கொள்ளப்படுவர்.

## தீர்க்கப்பட வேண்டிய மனித குரங்கு மோதல் ... *13ஆம் பக்கத் தொடர்*

நகரை அண்டிய பகுதிகளில் வாழும் பெண் குரங்குகளுக்கு கருத்தடை அறுவைச்சிகிச்சை செய்வதன் மூலம் எண்ணிக்கையைக் கட்டுக்குள் வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ள முடியும் எனவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

குரங்குகளை சீனாவுக்கு அனுப்புவது குறித்த வாதப்பிரதி வாதங்கள் எழுப்பப்படுகின்ற நிலையில் தாம் குரங்குகளை இலங்கையிடமிருந்து கோரவில்லை என சீன தூதரகம் வெளியிட்ட அறிக்கை தொடர்பில், விவசாய அமைச்சின் செயலாளர் குணதாஸ சமரசிங்க பதிலளித்தார்.

சீன அரசாங்கத்திடமிருந்து தமக்கு இந்த கோரிக்கை விடுக்கப்படவில்லை எனவும், சீனாவில் மிருகக்காட்சிசாலைகளை நடத்தும் தனியார் நிறுவனமொன்றிடமிருந்தே கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் விவசாய அமைச்சின் செயலாளர் குணதாஸ சமரசிங்க தெரிவிக்கின்றார்.

மிருகங்களினால் நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து விவசாய அமைச்சு என்ற விதத்தில் தாம் இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தியதாக அவர் கூறுகின்றார்.

சீனாவிலுள்ள தனியார் நிறுவனம் தம்மிடம் கோரிக்கை விடுத்தமைக்கான எழுத்துமூல ஆவணங்கள் தம்வசம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

சீன அரசாங்கத்தின் நேரடி தொடர்புகள் எதுவும் இந்த விடயத்தில் காணப்படவில்லை என கூறிய அவர், குறித்த தனியார் நிறுவனத்துடனேயே தொடர்புகள் காணப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் அடுத்து, இந்த நிறுவனத்தின் கோரிக்கை குறித்து ஆராய வேண்டிய கட்டாயம் தமக்கு ஏற்பட்டதாகவும் அவர் கூறுகின்றார்.

சீனாவிலுள்ள இந்த நிறுவனம், தமது அமைச்சின் அதிகாரிகளுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

ஒரு லட்சம் குரங்குகளை ஒரே தடவையில் அவர்கள் கோரவில்லை என குறிப்பிட்ட அவர், கட்டம் கட்டமாகவே குரங்குகளை அவர்கள் கோரியதாகவும் தெரிவிக்கின்றார்.

குரங்குகளினால் நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை அடுத்து, இந்த விடயம் தொடர்பில் தமது அமைச்சு கவனம் செலுத்தியதாகவும் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

வனப் பகுதியிலுள்ள குரங்குகளை பிடித்து, சீனாவிற்கு அனுப்பும் எண்ணம் தமக்கு கிடையாது எனவும், விளை நிலங்களுக்கு சேதம் விளைவிக்கும் பகுதிகளிலுள்ள குரங்குகளை மாத்திரமே அனுப்புவதற்கான எண்ணம் உள்ளதாகவும் விவசாய அமைச்சின் செயலாளர் குணதாஸ சமரசிங்க தெரிவிக்கின்றார்.

Agriculture Modernization Project
THE WORLD BANK
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

**கமத்தொழில் அமைச்சு**
**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு**

**IDA Credit No.: 5873 LK**

# பெறுகை அறிவித்தல்

## Supply and Delivery of Hardened Tissue Cultured Pineapple Plants (Variety MD2) for Central & Uva Provinces

**2023.04.02** ஆம் திகதியன்று சிலுமின மற்றும் சண்டே ஒப்சேவர் புதினப் பத்திரிகைகளில் கீழே குறிப்பிட்டுள்ள அதிகாரம் பெற்றவரினால் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தல் தொடர்பானது.

தொழில்நுட்ப மாற்றங்களை கருத்தில் கொண்டு பெறுகை அறிவித்தலானது பின்வருமாறு மீளாக்கம் செய்யப்பட்டுள்ளது.

1. கேள்வி ஆவணங்களை வழங்கும் கால எல்லையானது 2023 மே 08 ஆம் திகதிவரையும் நீடிக்கப்பட்டுள்ளதுடன் விலைமனுக்களை திறத்தலானது 2023 மே 08 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு விலைமனுக்களை மூடிய பின்னர் விரைவாகவே நடைபெறும
2. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட பெறுகை திணைக்களத்திலிருந்து 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக் கொள்ளலாம்.
3. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:
**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல.: 123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி : 0112696086 அல்லது 0777419521**
**திகதி : 23.04.2023.**

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
## பல்கலைக்கழக அனுமதி – கல்வியாண்டு 2021/2022

## விளையாட்டுக்களில் தனிச் சிறப்பு வாய்ந்த திறமைகளை / திறன்களைக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கான விஷேட உள்ளெடுப்பின் கீழான பல்கலைக்கழக அனுமதி

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், மற்றும் களனிய பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் மற்றும் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் உடற்றொழில் கல்வி ஆகிய பட்ட பாடநெறிகளைத் தொடர்வதற்காக விளையாட்டுத் துறையில் தமது திறமையினை வெளிப்படுத்திய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வரவேற்கிறது.

**விஷேட அனுமதிக்காக பூரணப்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடுகள்:**

- ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றிருத்தல் அல்லது பங்கு பற்றி இருத்தல்.
- பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அல்லது "சார்க்" விளையாட்டுப் போட்டிகளில் குறைந்தது தங்கம், வெள்ளி அல்லது வெண்கலப் பதக்கங்களைப் வென்றிருத்தல்.
- பொதுநலவாய விளையாட்டுக்கள், ஆசிய விளையாட்டுக்கள், சார்க் விளையாட்டுக்கள் ஆகியவற்றிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட உலகக் கிண்ணத்திற்கான கிரிக்கெட், காற்பந்தாட்டம், றகர், கூடைப்பந்து மற்றும் கரப்பந்தாட்டம் அல்லது வேறு ஏதாவது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முடிவு செய்யப்பட்ட விளையாட்டில் இலங்கையைப் பிரதிநிதிப்படுத்தும் தேசிய அணிகளில் அங்கத்தவராக இருத்தல்.

இவ் விஷேட அனுமதியின் கீழ் குறித்த கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள், உரிய கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு முன்பு, கட்டாயமாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் பொருத்தமான அடிப்படைக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

மேற்கூறிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளிடமிருந்து 2023 மே மாதம் 23ம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பின்வரும் மாதிரியில் உள்ளவாறு நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தை சம்பந்தப்பட்ட சான்றுப் பத்திரங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் இணைத்து 2023 மே மாதம் 23ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்பாக பிரதிச் செயலாளர்/ பல்கலைக்கழக அனுமதி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20, வோட் பிளேஸ், கொழும்பு 07 என்ற விலாசத்திற்கு முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி 2023 மே மாதம் 23ம் திகதி ஆகும்.

முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பப்படிவங்களும், உரியவாறு பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

**இல. 20, வோட் பிளேஸ்,**
**கொழும்பு 07.**
**23-ஏப்ரல்-2023**

**தலைவர்**
**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
### விளையாட்டுக்களில் தனிச்சிறப்பு வாய்ந்த திறமைகளுடனான / திறன்களுடனான விண்ணப்பதாரிகளுக்கு
### பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவம் – கல்வியாண்டு 2021/2022

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ..........
முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் : ..........
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : ..........
..........
2. நிரந்தர முகவரி : ..........
..........
3. பிறந்த திகதி : .......... வயது: ..........
4. தேசியம் : .......... பால் ..........
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]
6. தொலைபேசி இலக்கம் : (நிலையான) [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]
(கையடக்க) [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

7. **கல்விசார் தகைமைகள்** : ..........

க.பொ.த. (சா/த.) சுட்டெண்: .......... ஆண்டு: ..........

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க.பொ.த. (உ/த.) சுட்டெண்: .......... ஆண்டு: ..........

8. விளையாட்டுத் துறையில் தகுதிகள்: (சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவும்)

| ஆண்டு | பங்குபற்றிய விளையாட்டு/ நிகழ்ச்சி | நடைபெற்ற நாடு | பங்குபற்றிய நாடுகளது எண்ணிக்கை | இளைய/ முதிய | பெற்ற இடம் / பதக்கம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

9. நீங்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டால் தொடர விரும்பும் கற்கை நெறிகளின் ஒழுங்கு முறையைக் குறிப்பிடவும். (விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் மற்றும் உடற்றொழில் கல்வி ஆகிய கற்கை நெறிகள் மட்டும்)

| கற்கைநெறி | பல்கலைக்கழகம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் செம்மையானவை என்றும் இத்தால் உறுதியளிக்கின்றேன். மேலும், இவ்விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை அல்லது தவறானவை எனக் கண்டறியப்பட்டால் எனது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் அல்லது குறித்த கற்கைநெறிக்கு தகுதியற்றவராக கருதப்பட்டு சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவகத்திலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவகத்தின் எழுத்துமூல அரசியலமைப்பினாலும், சட்டங்களினாலும், விதிகளினாலும் மற்றும் ஒழுங்கு விதிகளினாலும் நான் கட்டுப்படுவேன் என்றும், சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவகத்தின் விரிவுரையாளர்களையும், மற்றும் உத்தியோகத்தர்களையும் நோக்கி ஒழுக்கத்துடன் நடப்பேன் என்றும், சம்பந்தப்பட்ட உயர் கல்வி நிறுவகத்தின் பெயரைக் களங்கப்படுத்தும் விதமாக நடக்கமாட்டேன் என்றும் இத்தால் நான் உறுதி மொழியளிக்கின்றேன்.

**திகதி:** ..........

..........
**விண்ணப்பதாரியின் கையொப்பம்**

## உண்மை வெளிவரும் நாளில்... (16ஆம் பக்க தொடர்)

இதனைக் கேட்டவுடன், வியாபாரியை இவனே கொலை செய்திருக்கலாம் என்ற எண்ணம் உண்டாயிற்று. அவன் அவ்வி டத்திலிருந்து அகன்றான். அன்று இரவு பூராவும் தூக்கம் வரவில்லை. நடந்தவை அனைத்தும் மனத்திரையில் ஒரு படம் போல ஓடத் தொடங்கின.

நிஸ்னி சந்தைக்குப் போக மனைவியிடம் விடைபெறும் போது, அவள் அவனது பய ணத்தை தடுத்து நிறுத்த செய்த முயற்சிகள் மனதில் நிழலாடின. அவள் இவன் அருகில் இருப்பது போலவும் பரிதாபமான அவளது முகமும் கெஞ்சும் பாவனையில் கண்க ளும் சித்திரம் போல தெரிகின்றது. பேசும் வார்த்தைகளும் அப்பாவியான புன்சிரிப்பும் தோன்றி மறைகின்றது. மூத்தபிள்ளை சிறி யதொரு கவுன் அணிந்திருக்க, இளைய பிள்ளை தாயின் மடியில் சுருண்டு மார்பில் பால் குடித்துக் கொண்டிருந்ததும் ஞாபகத் துக்கு வருகின்றது. மிகவும் மகிழ்ச்சியா கவும், கவலைகள் எதுவுமின்றித் தான் இளமையில் கழித்த நாட்கள் ஞாபகத்துக்கு வந்தன.

தான் கிட்டாரை மீட்டி பாடிக் கொண்டி ருந்த வேளையில் விடுதியின் வெளிவி றாந்தையில் மனம் சுதந்திரமாக சிறகடித்து பறப்பது போல் இருந்தது.

பின்னர் மக்கள் பலர் பார்த்துக் கொண் டிருக்க, கசையடி கொடுக்கப்பட்டதையும் இருபத்தியாறு வருடங்களில் வீணே கிழவ னாகிப் போனதையும் எண்ணியதில் விரக்தி ஏற்பட்டு தற்கொலை செய்துக் கொள்ள லாமா என்று கூட அவன் மனம் தடுமாறத் தொடங்கியது.

“இதெல்லாமே ஒரு அயோக்கியனால் எனக்கு நேர்ந்த வினை.”

தன்னுடைய அழிவுக்கு காரணமான மக்கார் செமியோநிச்சை பழிவாங்க வேண்டும் என ஆத்திரம் மேலிட, முழு இரவும் ஜெபம் செய்துக் கொண்டிருந்தும் கூட கோபத்தை அடக்க முடியவில்லை. பகல் நேரத்தில் மக்கார் சிமியோநிச்சை பார்ப்பதை தவிர்த்துக் கொண்டான்.

இதே மனநிலையில் இரண்டு வாரங் களாக ஒரே நரகவேதனை. தூக்கம் வர வேயில்லை. செய்வதென்னவென்றறி யாது கலங்கிய மனநிலையில் துவண்டு போனான். ஓர் இரவில் சிறைக் கூடத்தின் சுவர் அடியில் மண் குவியல் தெரிகின் றது. அருகே சென்று உற்றுப்பார்த்தான். திடீரென சுவரின் அடியில் தோண்டப்பட் டுள்ள சுரங்கத்திலிருந்து மக்கார் செமி யோநிச் வெளியே வந்து அக்ஸியோ நொச்சை பயப் பீதியுடன் பார்த்தான். அக் ஸியோநொச் அவ்விடத்திலிருந்து அகன்று செல்ல முற்படவே, மக்கார் செமியோநிச், அக்ஸியோ நொச்சின் கையை இறுகப் பிடித்துக் கொண்டான். தான் சுவரில் சுரங் கம் ஒன்று தோண்டுவதாகவும் மண்ணை பூட் சப்பாத்தில் நிரப்பி காலையில் வேலைக் குப் போகும் போது வெளியே கொண்டு போய் ரோட்டில் கொட்டிவிடுவதாகவும் சொன்னான்.

“வயசாளியே சத்தம் போட வேண்டாம். சரியா. உனக்கும் தப்பி ஓட முடியும். நீ இதையெல்லாம் சிறை அதிகாரிகளிடம் சொன்னால், அவர்கள் என்னை சவுக்கால் அடித்துக் கொன்றுவிடுவார்கள்.

அதற்கு முன்னர் நான் உன்னைக் கொன்று விடுவேன்”

தன்னுடைய எதிரியைக் கண்டு வெறுப்பு டன் நடுங்கத் தொடங்கினான் அக்ஸியோ நொச். “எனக்கு ஒளிந்து விட வேண்டிய தேவை இப்போது இல்லை. புதிதாக நீ என்னை கொல்ல வேண்டியது இல்லை. நீ எப்போதோ என்னைக் கொன்று விட்டாய். நான் உனது இந்த வேலையை காவலரிடம் சொல்வதும் சொல்லாமல் விடுவதும் கடவு ளின் சித்தத்தின் படி நடக்கும்.”

தனது கையை அவனிடமிருந்து விடுவித் துக் கொள்கிறான்.

மறுநாள் காலை தங்களது அன்றாட வேலைக்குள் செல்கின்ற கைதிகளின் ஒருவன் பூட்சப்பாத்துகளில் நிரப்பிய மண் பாதையில் கொட்டப்பட்டுள்ளதாக சிறைக் காவலாளிகளிடம் சொல்கிறான். சிறைக் கூடத்தை சோதித்துப் பார்க்கும் போது சுரங் கம் தோண்டப்பட்டுள்ளதை சிறை அதிகா ரிகள் கண்டு பிடித்தனர். சிறை ஜெயிலர் கைதிகள் எல்லோரிடமும் விசாரணைகளை ஆரம்பிக்கிறார்.

தமக்கு எதுவுமே தெரியாது என கைதிகள் சொல்கிறார்கள். சாகும்வரை சவுக் கடி கொடுக்கப்படும் என்பதை தெரிந்து வைத்திருந்தமையினால் மக்கார் செமி யோநொச்சைக் காட்டிக் கொடுப்பதில்லை எனத் தீர்மானித்துக் கொள்கிறான் அக்ஸி யோநொச் கடைசியாக அவனைக் கூப்பிட்டு விசாரிக்கின்றனர். “நீ உண்மை பேசுகின்ற மனிதன். கடவுளின் பெயரால் சொல். யார் இந்த சுரங்கத்தை தோண்டியது?”

மக்கார் செமியோநிச் தனக்கு எதுவுமே தெரியாது என்ற பாவனையில் அக்ஸியோ நொச்சின் பக்கம் பார்வையை செலுத்தா மல் சிறை அதிகாரியையே கண் கொட்டா மல் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனது உதடுகள் துடிக்கின்றன. நீண்ட நேரம் அவனால் வாயைத் திறந்து ஒரு வார்த்தை யேனும் பேச முடியவில்லை.

என்னுடைய வாழ்க்கையை நாசமாக்கி சீரழித்தவனை நான் ஏன் காப்பாற்ற வேண்டும்? நான் அனுபவித்த துன்பங் களை எல்லாம் இவனும் அனுபவிக்க வேண்டும். நான் இவனைக் காட்டிக் கொடுத் தால் சாகும்வரை கசையடி கொடுப்பார் கள். ஆனால் இவர்கள் என்னை தவறாக நினைத்துக் கொண்டாலும் பரவாயில்லை. இவனைக் காட்டிக் கொடுப்பதால் எனக்கு என்ன நன்மை?

“சரி வயசாளியே யார் இந்த சுரங்கத்தை தோண்டியது?” மக்கார் செமியோநிச்சின் முகத்தைப் பார்த்தபடி சொல்கிறான் அக்ஸி யோநொச். “என்னால் சொல்ல முடியாது. அது ஆண்டவனின் விருப்பம் அல்ல.

நான் உங்களின் அதிகாரத்துக்கும் கட்டுப் பாட்டுக்கும் கீழுள்ள கைதி. நீங்கள் என்ன வேண்டுமானால் செய்யுங்கள்”

எவ்வளவோ முயற்சித்தும் அக்ஸி யோநொச் பதில் சொல்லாததால் விசார ணையை நிறுத்திக் கொண்டார்கள். அன் றிரவு அக்ஸியோநொச் அரைத் தூக்கத்தில் தனது படுக்கையிலிருக்கும் போது ஒருவன் சப்தமில்லாமல் வந்து படுக்கையில் அவன ருகே அமர்கின்றான். அந்த இருளில் தன் னருகே உட்கார்ந்திருப்பவன் செமியோநிச் தான் என்பதை அறிந்து கொள்கிறான்.

“ஏன் இங்கே வந்தாய்? இன்னும் என்ன செய்ய நினைத்திருக்கின்றாய்?”, “இவான் திமித்திரிவ் என்னை மன்னித்துவிடு”

“ஏன்?”, “வியாபாரியை கொலை செய்தது நானே. கத்தியை உனது பைக்குள் ஒளித்து வைத்ததும் நானே. உன்னை யும் கொல்லத்தான் நினைத்திருந்தேன். ஆனால் அந்த நேரம் வெளியில் ஏதோ சத்தம் கேட்டது. கத்தியை உனது பைக்குள் மறைத்துவிட்டு ஜன்னல் வழியே பாய்ந்து ஓடிவிட்டேன்.”

மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த அக்ஸியோநொச்சுக்கு என்ன சொல்வ தென்றே தெரியவில்லை. மக்கார் செமி யோநிச் முழங்காலில் மண்டியிட்டவாறு,

“திமித்திர்வ் என்னை மன்னித்துக்கொள். வியாபாரியை கொலை செய்தது நான் தான் என நாளைக்கு சிறையதிகாரிகளிடம் குற்றத்தை ஒப்புக் கொள்வேன். வீட்டுக்குப் போவதற்கு உனக்கு விடுதலை கிடைக்கும்”

“உனக்கு இப்படி சொல்வது இலேசாக இருக்கு. ஆனால் உனக்காக இருபத்தியாறு வருடங்கள் படாதபாடுபட்டு அனுபவித்த துன்பங்கள் எவ்வளவோ! இப்பொழுது நான் எங்கே போவேன்.

எனது மனைவி உயிரோடு இருக்கிறாளா? செத்துவிட்டாளா? என்பது தெரியாது. எனது பிள்ளைகளுக்கு என்னை அடையாளம் தெரியாது. போவதற்கு எனக்கு ஒரு இடமும் இல்லை.”

மக்கார் செமியோநிச் குனிந்து தனது தலையை தரையில் மோதுகின்றான்.

“இவான் திமித்திர்வ் என்னை மன்னித் துவிடு. அவர்களின் கசையடியை விட நீ என்னைப் பார்க்கும் பார்வையின் வலியை என்னால் பொறுக்க முடியவில்லை. இந்த வேதனையை என்னால் தாங்க முடியாது. என்னை நீ சிறை அதிகாரிகளிடம் காட்டிக் கொடுக்கவில்லை. இயேசு கிறிஸ்துவின் பெயரால் என்னை மன்னித்துவிடு. நான ஒரு பெரும் பாவி”

சிறிது நேரத்தின் பின்னர் அவன் குலுங்கி குலுங்கி அழத் தொடங்கவே அக் ஸியோநொச்சும் குமுறி அழ ஆரம்பித் தான்.ஆண்டவர் உன்னை மன்னிப்பார். நானும் தவறுகள் செய்திருக்கக் கூடும்.

அவனது வார்த்தைகள் வெளிவந்த போது மனம் கனமற்று இலேசாகியதைப் போல உணர்கின்றான். விடுதலையாகி வீட் டுக்குப் போகும் எண்ணம் மறைந்து விடு கின்றது. சிறையிலிருந்து வெளியேறும் நோக்கமே இல்லை.

அக்ஸியோநொச் சொன்னதை மறுத்து செமியோநிச் சிறை அதிகாரியிடம வியா பாரியை கொலை செய்தது அவனே தான் என்று வாக்குமூலம் கொடுத்து குற்றத்தை ஒத்துக் கொண்டான்.

அக்ஸியோநொச்சை விடுதலை செய்யும் படி மேலிடத்திலிருந்து கட்டளை வரும் போது உயிர் பிரிந்த அவனது உடலையே காண்கிறார்கள்.

# இலங்கை கடற்படை

## கொள்வனவு அறிவித்தல்

**இலங்கை கடற்படைக்கு 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 திகதி வரைக்குமான களஞ்சியப் பொருட்களை விநியோகித்தல் தொடர்பாக உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், வழங்குனர்கள், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் கேள்வி கோருதல்**

1. இலங்கை கடற்படைத் திணைக்களத்தின் கொள்வனவு குழுத் தலைவரினால் இலங்கை கடற்படைக்கு **2023 ஆகஸ்ட் 01** ஆம் திகதி முதல் **2023 டிசம்பர் 31** திகதி வரைக்குமான காலப்பகுதிக்கு கீழே குறிப்பிடப்படும் வேறு வேறு களஞ்சியப் பொருட்கள் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களையோ ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் விநியோகிப்பதை உறுதி செய்யக்கூடிய இலங்கையின் வர்த்தக நிறுவனங்கள், இறக்குமதியாளர்கள் உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் போன்ற வழங்குனர்களிடமிருந்து விலைகள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் சமர்ப்பிக்கும் விலைகளின் செல்லுபடியாகும் காலம் **2023 ஆகஸ்ட் 01** ஆம் திகதி முதல் **2023 டிசம்பர் 31** திகதி வரையிலாகும்.

(அ) தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களினால் குறித்த களஞ்யப் பொருட்கள் றாகம, வெலிசரையிலுள்ள இலங்கை கடற்படை கப்பல் மஹசென் நிருவனத்தில் இடைநிலை களஞ்சியச் சாலைக்கு ஒப்படைக்கவும்.

(ஆ) இது தொடர்பாக கரிசனை காட்டுபவர்கள் ஒவ்வொரு வகையறாவுக்குமான மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமான **ரூபா.5000.00** ஐ காசாக நிதிப் பணிப்பாளர். இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு 01. என்பவரிடம் செலுத்தவும். விண்ணப்பபடிவங்கள் **2023 ஏப்ரல் 24** ஆம் திகதி முதல் **2023 மே 16** ஆம் திகதி வரை வாராந்த வேலை நாட்களில் **காலை 10.00 மணி தொடக்கம் 14.00 மணிக்கும்** இடைப்பட்ட காலத்தில் பெற்றுக் கொள்ள முடியும். உறிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பொது களஞ்சிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்க வேண்டும்.

2. 2023 ஆம் ஆண்டுக்கு ஒவ்வொரு நிறுவனத்துக்குமான தேவைகளின் அளவுகள் மற்றும் விபரங்கள் ஒவ்வொரு வகையறாவின் கீழும் தேவைப்படும் அளவுகள் விண்ணப்படிவத்துடன் வழங்கப்படும். கேள்விப்பத்திர இலக்கங்களும் ஒவ்வொரு வகையறாவும்

| விடயங்களின் வகைப் படுத்தல் இலக்கம் | விடயங்களின் வகைப்படுத்தல் விடய விபரம் | முடிவுத் திகதி, பத்திரங்களை திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|
| SLN LOG/01/RC/2023 | Batteries | 2023 மே 17, 1000 மணி |
| SLN/LOG/02/RC/2023 | Winding Wires | 2023 மே 17, 1000 மணி |
| SLN/LOG/03/RC/2023 | Cable House Wiring | 2023 மே 17, 1000 மணி |
| SLN/LOG/04/RC/2023 | Switches/MCB'S / MCCB'S RCCB'S | 2023 மே 17, 1000 மணி |
| SLN/LOG/05/RC/2023 | Sanitary Fittings | 2023 மே 17, 1000 மணி |
| SLN/LOG/08/RC/2023 | Conduits and Accessories | 2023 மே 17, 1000 மணி |
| SLN/LOG/10/RC/2023 | Industrial Gases | 2023 மே 17, 1000 மணி |
| SLN/LOG/11/RC/2023 (File No. 01) | Hardware (Civil Engineering)- Mild Steel and GI Items | 2023 மே 17, 1000 மணி |
| SLN/LOG/11/RC/2023 (File No. 02) | Hardware (Civil Engineering) – Door Window Item and Accessories. | 2023 மே 17, 1000 மணி |
| SLN/LOG/11/RC/2023 (File No. 03) | Hardware (Civil Engineering) – General Items | 2023 மே 18, 1000 மணி |
| SLN/LOG/12/RC/2023 | Cleaning Material | 2023 மே 18, 1000 மணி |
| SLN/LOG/13/RC/2023 | Telephone Cables, Indoor Drop Wires and Telephone Instruments | 2023 மே 18, 1000 மணி |
| SLN/LOG/14/RC/2023 | Office Stationary | 2023 மே 18, 1000 மணி |
| SLN/LOG/15/RC/2023 | Papers and Books | 2023 மே 18, 1000 மணி |

| விடயங்களின் வகைப் படுத்தல் இலக்கம் | விடயங்களின் வகைப்படுத்தல் விடய விபரம் | முடிவுத் திகதி, பத்திரங்களை திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|
| SLN/LOG/16/RC/2023 | Local Timber | 2023 மே 18, 1000 மணி |
| SLN/LOG/17/RC/2023 (File No. 01) | Hardware (General Engineering) Items | 2023 மே 18, 1000 மணி |
| SLN/LOG/17/RC/2023 (File No. 02) | Hardware (General Engineering) Items | 2023 மே 18, 1000 மணி |
| SLN/LOG/17/RC/2023 (File No. 03) | Hardware (General Engineering) Items | 2023 மே 18, 1000 மணி |
| SLN/LOG/18/RC/2023 | Welding Electrodes | 2023 மே 19, 1000 மணி |
| SLN/LOG/19/RC/2023 | PVC Items | 2023 மே 19, 1000 மணி |
| SLN/LOG/20/RC/2023 | Plywood Sheets | 2023 மே 19, 1000 மணி |
| SLN/LOG/21/RC/2023 | General Paints | 2023 மே 19, 1000 மணி |
| SLN/LOG/24/RC/2023 | Bulbs | 2023 மே 19, 1000 மணி |
| SLN/LOG/26/RC/2023 | Auto Paints | 2023 மே 19, 1000 மணி |
| SLN/LOG/27/RC/2023 | Printing Items | 2023 மே 19, 1000 மணி |
| SLN/LOG/29/RC/2023 | Glass-Reinforced Plastic (GRP) Material | 2023 மே 19, 1000 மணி |
| SLN/LOG/33/RC/2023 | Reverse Osmosis Plant (Ro Plant) Items/Accessories | 2023 மே 19, 1000 மணி |

3. ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் தகமைகளை பூர்த்தி செய்ய வேண்டும். (விலைகளை விமர்சிக்கும் போது இவ்விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.)
   - i. அரச நிறுவனங்களுக்கு களஞ்சியப் பொருட்களை சிறப்பான முறையில் விநியோகித்தமை தொடர்பான 2 வருட அனுபவம்
   - ii. நிலையான மூலதன வசதிகள்.
   - iii. ஒழுங்காக வரி செலுத்தியமைக்கான அறிக்கை
   - iv. போதுமான தொடர்பாடல் வசதிகள் (தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, தொலைநகல், மின் அஞ்சல்)
   - v. போதுமான களஞ்சிய சாலை வசதிகள்
   - vi. போதுமான தொழிலாளர் மற்றும் அலுவலக வசதிகள்
   - vii. போதுமான வகையில் போக்குவரத்து வாகன வசதிகள்
   - viii. வர்த்தக நிறுவனமாக பதிவு செய்து கொண்டுள்ள சான்றிதழ் அல்லது நிறுவன ரீதியாக ஒன்றிணைந்து செயற்பட்டமை தொடர்பான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 03 வருடத்துக்கு மேற்பட்ட காலப்பகுதியில் தொடர்ந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

4 விண்ணப்பதாரிகள் விலைகளை சமர்ப்பிக்கப்படும் போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) செலுத்துபவராக பதிவு செய்த இலக்கத்தை சமர்ப்பித்தல் கட்டாயமாகும். இவ்வாறு பதிவு செய்து கொள்ளாத விண்ணப்பதாரிகள் வரி விலக்களிக்கப்பட்டமை தொடர்பாக இறை வரித் திணைக்கள ஆணையாளரின் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் மேற்குறித்த தேவைகளை பூர்த்தி செய்யாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5 விண்ணப்பதாரிகள் விலைகளை சமர்ப்பிக்கப்படும் போது கடித அட்டையின் இடது பக்கம் மேல் மூலையில் **“இலங்கை கடற்படைக்கு 2023 ஆம் ஆண்டுக்கான களஞ்சியப் பொருட்களை விநியோகிப்பதற்கான ஒப்பந்த விலைகளை சமர்ப்பித்தல்” (விடய விபரம்………) எஸ்எல்என்/ எல்ஓஜி /….. /ஆர்சீ / 2023 கேள்விப் பத்திரப் பெட்டியில் (டென்டர்) விண்ணப்பங்கள் திரக்கும் திகதி / நேரம்** குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழ் காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். அல்லது குறித்த கேள்விப் பத்திரப் பெட்டியில் (டென்டர்) இட வேண்டும்.

தலைவர்,
திணைக்களக் கொள்வனவுக் குழு,
இலங்கை கடற்படை, இலங்கை கடற்படை தலைமையகம்,
த.பெ. எண் 593, கொழும்பு 01.

6 குறித்த நேரம் முடிவடைந்த உடனேயே கேள்விப்பத்திரம் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பிக் கொடுக்கப்படும். விண்ணப்பதாரிக்கோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கோ கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் இந்த சந்தர்ப்பத்திற்கு சமூகமளிக்க முடியும்.

7 உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விலைகோரல் ஆவணங்கள், உரிய எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை ஏற்றல் அல்லது நிராகரித்தல் கேள்விச் சபைச் தலைவரின் அதிகாரத்துக்குட்பட்டது.

8 தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல் தொடர்பாக பதிவுத் தபாலில் அறிவிக்கப்படும்.

9 கேள்விப் பத்திர விண்ணப்பங்களை எதுவித கொடுப்பனவுகளும் இன்றி பணிப்பாளர் நாயகம் வழங்கல் மற்றும் சேவைகள் இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு 01. என்னும் இடத்தில் பரிசீலிக்க முடியும்.

10. மேலதிக விபரங்களுக்குப் பணிப்பாளர் நாயகம் வழங்கல் மற்றும் சேவைகள் இலங்கை கடற்படைத் தலைமையகம், த.பெ. எண் 593, கொழும்பு 01. பணிப்பாளர் வழங்கல் மற்றும் சேவைகள், **தொலைபேசி 011-7712326** மூலம் தொடர்பு கொள்ளவும்.

11. இக்குறிப்பிட்ட ஒவ்வொரு வகையறாவுக்குமான விலைக்கோரல் தொடர்பான விபரங்களை கடற்படையின் இணையத்தளமான www.navy.lk யிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
**திணைக்களக் கொள்வனவுக் குழு,**
இலங்கை கடற் படை
கொழும்பு 01.

Repeat Your ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## மக்கள் வங்கி

**கொழும்பு 02, இல. 30/101, கிவ் வீதியிலுள்ள மக்கள் வங்கி அச்சிடல் திணைக்களத்திற்கு ஒற்றை மாடி உருக்குக் கட்டிடத்தை நிர்மாணித்தல்**

**ஒப்பந்த இல. 016/2023**

கொழும்பு-02, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, மக்கள் வங்கி தலைமை அலுவலகம், பொறியியல் சேவைகள் திணைக்களம், கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள கொழும்பு 02, இல. 30/101, கிவ் வீதியிலுள்ள உத்தேச மக்கள் வங்கி அச்சிடல் திணைக்களத்திற்கு ஒற்றை மாடி உருக்குக் கட்டிடத்தை நிர்மாணித்தல் எனும் பணிக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். இதற்கான மதிப்பீட்டுத் தொகை சுமார் 21.9 மில்லியன் ரூபாவாகும். (பெறுமதி சேர் வரியின்றி)

உத்தேசக் கட்டிடம் ஒற்றை மாடிக் கட்டிடம் என்பதுடன் 3700 சதுர அடி தரைப் பரப்பு கொண்டதாகும். உருக்குக் கட்டமைப்பு சட்டக வேலைகள், கொங்கிறீட் அடித்தள வேலைகள், மேசன் வேலைகள், வெளிப்புற உறைப்பூச்சு வேலைகள், அலுமினியக் கதவுகள், யன்னல்கள், ZnAL கூரை, சீலிங்குகள் மற்றும் ஏனைய முடிவுறுத்தல்கள் மற்றும் சேவைகள் என்பவற்றைக் கொண்டது.

நிர்மாணக் காலம் 90 நாட்காட்டி நாட்களாகும்.

02. தேசிய போட்டி ரீதியான விலைமனு முறையின் கீழ் விலைக்கோரல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, தகைமை வாய்ந்த விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவும், பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) C5 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் கட்டிட நிர்மாணத் துறைக்காக பதிவைக் கொண்டவராகவிருத்தல் வேண்டும்.
04. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குபவைகள்:
   - கடந்த ஐந்து (5) வருடங்களில் ஆகக்குறைந்தது முப்பத்தைந்து மில்லியன் ரூபா (ரூபா 35,000,000.00) இலங்கை ரூபா பெறுமதியான சராசரி வருடாந்த புரள்வைக் கொண்ட நிர்மாண வேலை செய்திருத்தல்
   - கடந்த 5 வருட காலத்தினுள் ஆகக் குறைந்தது இருபத்தைந்து மில்லியன் ரூபா பெறுமதியுடையதும் மற்றும் 03 மாத காலத்திற்குள் இதனையொத்த சிக்கல் தன்மையுடைய கட்டிட நிர்மாணத் திட்டமொன்றை வெற்றிகரமாக நிறைவு செய்த அனுபவம் அல்லது அதிக பெறுமதியுடைய திட்டமொன்றை நிர்ணயிக்கப்பட்ட காலம் மற்றும் நேரத்தில் நிறைவு செய்துள்ளமை.
   - திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகளின் ஆகக் குறைந்த தொகை (ஏனைய ஒப்பந்தப் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்) மற்றும் ஏதேனும் முற்பணக் கொடுப்பனவாக இச்செயற்றிட்டத்திற்கென பிரத்தியேகமான தொகை 8.0 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
05. இது தொடர்பாக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, இல. 75, தலைமையகக் கட்டிடம், மக்கள் வங்கி, 6ஆம் மாடியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112481373, தொலைநகல் 0112341591) மற்றும் 2023-04-26ஆம் திகதி முதல் 2023-05-16ஆம் திகதி வரையில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான சாதாரண வேலை நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீசித்துப் பார்க்கலாம்.
06. மீளளிக்கப்படாத எட்டாயிரம் ரூபா (ரூ. 8,000.00) கட்டணத்தை செலுத்திய பின் 2023-04-26ஆம் திகதி முதல் 2023-05-16ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணி இடையே மேற்கூறப்பட்ட முகவரியிலுள்ள கட்டிட பொறியியல் சேவைகள் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விமைனுதாரர்கள் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றினை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்களை உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கொழும்பு 02, இல. 30/101, கிவ் வீதியிலுள்ள உத்தேச மக்கள் வங்கி அச்சிடல் திணைக்களத்திற்கு ஒற்றை மாடி உருக்குக் கட்டிடத்தை நிர்மாணித்தல்'' எனக் குறிப்பிட்டு 2023-05-17ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, இல. 75, மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடம், 6ஆம் மாடியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிந்தவுடன், அத்தருணத்தில் சமுகம் தர தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
08. விலைமனுக்கள் 2023-08-16ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.
09. அனைத்து விமைனுக்களுடனும் மக்கள் வங்கியைத் தவிர்ந்த இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற இலங்கையில் இயங்கும் உரிமம் பெற்ற வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட இரண்டு இலட்சத்து இருபதாயிரம் இல. ரூபா (இல. ரூ. 220,000.00) பெறுமதியான விலைமனுப் பிணையொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். விலைமனுப் பிணை 2023-09-13ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. முன்னோடி விலைமனுக் கூட்டமொன்று 2023-05-08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, தலைமையகம், மக்கள் வங்கி, 6ஆம் மாடி, பொறியியல் சேவைகள் திணைக்களத்தில் இடம்பெறும்.

**கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர்,**
**பொறியியல் சேவைகள் திணைக்களம்,**
**6ஆம் மாடி, மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடம்,**
**இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு-02.**

PEOPLE'S BANK

---

பாதுகாப்பு அமைச்சு
ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

# விலைமனுக்கோரல்

**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் அரங்க கட்டிடத்திற்காக முன்மொழியப்பட்ட ஒலிபியல் கூரை அமைப்பினை வழங்குதல், கட்டமைத்தல் மற்றும் நிறுவுதல்**

ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
ஒப்பந்த இலக்கம் : **KDU/PRO/RP&SERVICE(AUD)/2713/2021**

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக அரங்க கட்டிடத்திற்காக முன்மொழியப்பட்ட ஒலியியல் கூரை அமைப்பினை வழங்குதல், கட்டமைத்தல் மற்றும் நிறுவுதற்காக தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் 2023.04.24 ஆம் திகதியிலிருந்து 2023.05.15 ஆம் திகதி வரை மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.15.00 மணி வரையான (இலங்கை வங்கி கணக்கு இலக்கம் - 9405831) காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத ரூ.12,500/- கட்டணத்துடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பொருளாளரிடம் செலுத்தி பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
3. மனு ஆவணங்களை மேற்குறிப்பட்டுள்ள முகவரியில் 2023.04.24 முதல் 2023.05.15 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப.09.00 மணி முதல் பி.ப.15.00 மணி வரை சரிபார்க்கலாம் (தொலைபேசி 0710219449 தொலைநகல் 011-2632430)
4. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
5. 2023.05.16 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் பணிப்பாளர் (ஏற்பாடியல்), இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி - **0710219449 / 011-2632430** தொலைநகல் **011-2632430, directorlogistics@kdu.ac.lk / ocrepair@kdu.ac.lk** மற்றும் **www.kdu.ac.lk/ocls/tender-notices** பார்வையிடலாம் விலைமனுக்கோரல்)

**தவிசாளர்**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு,**
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,**
**இரத்மலான, இலங்கை.**

---

விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK

கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் – கமத்தொழில் அமைச்சு**

**IDA Credit No.: 5873 LK**

# பெறுகை அறிவித்தல்

**வவுனியா, பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Sprinkler Irrigation Systems) மற்றும் மின்சார நீர் பம்பிகளை (Electric Water Pumps) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்**

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை வவுனியா, பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Sprinkler Irrigation Systems) மற்றும் மின்சார நீர் பம்பிகளை (Electric Water Pumps) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் எனும் ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.
2. வவுனியா, பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Sprinkler Irrigation Systems) மற்றும் மின்சார நீர் பம்பிகளை (Electric Water Pumps) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| அம்பாறை மாவட்டத்திலுள்ள புளிவாழைச் செய்கைக்கு 100 எண்ணிக்கையான தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் | LK-MOA- PMU-273638-GO-RFB | 840,000.00 | 15,000.00 |
| வவுனியா, பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு 750 எண்ணிக்கையான மின்சார நீர்ப் பம்பிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் | LK-MOA- PMU-314655-GO-RFB | 1,080,000.00 | 22,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2023-04-25ஆம் திகதியிலிருந்து 2023-05-15ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீசித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. 2023-05-15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2023-05-15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ''வவுனியா, பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் (Sprinkler Irrigation Systems) மற்றும் மின்சார நீர் பம்பிகளை (Electric Water Pumps) வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**
**திகதி: 2023-04-23**

---

பெருந்தோட்ட அமைச்சு
## இலங்கைத் தேயிலைச் சபை

# விலைமனுக்கோரல் (IFB)

**கொழும்பு 03 இல் அமைந்துள்ள இலங்கை தேயிலை சபையின் தேயிலை சுவை பரிசோதனை கட்டிடத்தில் முன்மொழியப்பட்ட கட்டமைப்பு திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு (பகுதி 01)**

**ஒப்பந்த இலக்கம் : (PROC/CAP/TTU/CONSTRUCTION)**

1. கொழும்பு 03, காலி வீதி இல-574 இல் அமைந்துள்ள இலங்கை தேயிலை சபை பெறுகைக் குழுவின் தலைவரினால், இலங்கை தேயிலை சபையின் தேயிலை சுவை பரிசோதனை கட்டிடத்தின் உத்தேச கட்டமைப்பு திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கை பணிக்காக (பகுதி-01) தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.
ஒப்பந்த இலக்கம் : **PROC/CAP/TTU/CONSTRUCTION** கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மற்றும் ரூ.44.3 **மில்லியன்** (தோராயமாக) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
இந்தப்பணியில் விட்டங்கள், நெடுவரிசைகள், அடுக்குகள் மற்றும் கொன்கிரீட் கூரை வடிகுழாய்கள் போன்ற கட்டமைப்பு கூறுகளின் கட்டமைப்பு பழுதுபார்க்கும் வேலைகளைக் கொண்டிருக்கும். கட்டுமானக் காலம் 245 நாட்கள்.
இலங்கை தேயிலை சபை, இல.574, காலி வீதி, கொழும்பு-03 இல் வேலைத்தளம் அமைந்துள்ளது.
2. மனுகோரல்கள் **தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.**
3. ஒப்பந்த விருதுக்கு தகுதி பெற, வெற்றிகரமான மனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலி சேர்க்கப்பட மாட்டார் மேலும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.
   - மனுதாரர் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வணிக அமைப்பாக இருத்தல் வேண்டும் மற்றும் கட்டமைப்பு பழுதுபார்க்கும் பணிகளுக்கான சிறப்பு ஒப்பந்ததாரராக குறைந்தது ஐந்து (5) ஆண்டுகளாக வெற்றிகரமாகச் செயல்பட்டிருத்தல் வேண்டும்.
   - மனுதாரர் கடந்த ஐந்து (5) ஆண்டுகளில் குறைந்தது பத்து (10) எண்ணிக்கையிலான கட்டமைப்பு பழுதுபார்க்கும் பணிகளை வெற்றிகரமாக முடித்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

   இந்தத் திட்டம் 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் எண் (03) க்கு உட்பட்டது. எனவே அனைத்து மனுதாரர்களும் இந்தச் சட்டத்தின் விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
4. ஒப்பந்த விருதுக்கு தகுதி பெறுவதற்கான தகுதித் தேவைகள் பின்வருமாறு:
   - கடந்த 5 ஆண்டுகளில் முன்மொழியப்பட்ட பணிக்கு சமமான, ஒரே மாதிரியான மற்றும் சிக்கலான இரண்டு ஒப்பந்தங்களின் கட்டமைப்பு பழுதுபார்க்கும் பணிகளில் அனுபவம்.
   - கடந்த ஐந்து ஆண்டுகளில் செய்யப்பட்ட பணியின் சராசரி ஆண்டு வருவாய் மதிப்பு குறைந்தது **ரூ.99.7 மில்லியன்.**
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் செய்யப்படும் எந்தவொரு முற்பணமும் இல்லாமல் திரவ சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்ச தொகை **ரூ. 6.6 மில்லியன்.**
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள், இல.574, காலி வீதி, கொழும்பு-03 அமைந்துள்ள இலங்கை தேயிலை சபையின் கொள்முதல் பிரிவு, **தொலைநகல் : 0112582121 தொலைநகல்: 0112589132, மின்னஞ்சல்: or@pureceylontea.com** இலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன், அதே முகவரியில் 2023 ஏப்ரல் 26 ஆம் **திகதி** முதல் 2023 மே 22 ஆம் **திகதி வரை** சாதாரன வார நாட்களில் வேலைத் தளத்தைப் பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள மனுதாரர்கள், 2023 மே 22 ஆம் **திகதி 0900 மணி முதல் 1500 மணி வரை** பெறுகைக் குழு, தலைவர், இலங்கை தேயிலை சபையில் எழுத்துமூலமான கோரிக்கையினை முன்வைத்து மற்றும் மீள்செலுத்தப்படாத கட்டணமாக ரூ.12,000.00. இணை பணமாக செலுத்தி ஆங்கில மொழியில் முழுமையான மனு ஆவணத்தினை பெற்றுக்கொள்ளலாம்.
7. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை இரண்டு பிரதிகளுடன் **(அசல் மற்றும் நகல்)** 2023 மே 25 ஆம் திகதி 1300 மணிக்கு முன், தலைவர், கொள்முதல் குழு, இலங்கை தேயிலை சபை, 574, காலி வீதி, கொழும்பு-03 என்ற முகவரிக்கு பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அல்லது டெண்டர் பெட்டியில் இடவேண்டும். தாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும். ஏலத்தில் பங்கேற்க விரும்பும் மனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் ஏலம் முடிந்தவுடன் உடனடியான திறக்கப்படும்.
மனுக்கள் 2023 **ஆகஸ்ட்** 28 வரை செல்லுபடியாகும். (ஏலம் முடிவடைந்த நாளிலிருந்து **91 நாட்கள்**)
8. அனைத்து மனுக்களும் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவுசெய்யப்பட்ட இலங்கையில் இயங்கும் வணிக வங்கியினால் வழங்கப்பட்ட **ரூ.665,000/-** மனுப் பாதுகாப்புடன் அல்லது இலங்கை தேயிலை சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு ஆதரவாக பெறப்பட்ட நிர்மாண உத்தரவாத நிதியுடன் வழங்கப்பட வேண்டும். மேலும் **2023 செப்டம்பர்** 18 வரை செல்லுபடியாகும். (ஏலங்கள் முடிவடைந்த நாளிலிருந்து **119 நாட்கள்**)
முன்மனுக் கூட்டம் 2023 மே 16 **ஆம் திகதி 10.00** மணிக்கு இலங்கை தேயிலை சபை, இல.574, காலி வீதி, கொழும்பு-03 இல் நடைபெறும்.

**தலைவர்,**
**கொள்முதல் குழு**
**இலங்கைத் தேயிலைச் சபை**
**இல.574, காலி வீதி,**
**கொழும்பு 3.**

# வாரபலன்



**23-04-2023 - 29-04-2023**

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

உங்கள் ராசிக்கு அதிபதியான சுக்கிரன் பங்குனி 24 ஆம் திகதி (07/04/2023) தனஸ்தானமான ரிஷபத்தில் சஞ்சரித்துள்ளார். இதனால் பற்றாக்குறை பட்ஜெட் மாறும். மித மிஞ்சிய பொருளாதாரம் வந்து சேரும். தொழில் வெற்றி நடை போடும். உத்தியோகத்தில் உங்கள் கை மேலோங்கும். தொழில் புரிபவர்கள் விரிவாக்கம் செய்ய எடுத்த முயற்சி பலன் தரும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தர்களுக்கு நீண்ட நாட்களாக எதிர்பார்த்து காத்திருந்த பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதில் இருந்த தடை அகலும். மாணவ மாணவிகள் படிப்பில் ஆர்வம் காட்டினால் நல்ல மதிப்பெண்களை பெறலாம். கணவன் மனைவிக்குள் பிணக்குகள் அகன்று இணக்கம் ஏற்படும்.

## ரிஷபம்

பங்குனி 24ஆம் திகதி(07/04/2023) உங்கள் ராசி நாதன் சுக்கிரன் உங்கள் ராசியில் சஞ்சரிப்பதால் உடல்நலம் சீராகும். உற்சாகம் குடிகொள்ளும். கடன் சுமை குறைந்து கவலைகள் பறந்தோடும். அந்தஸ்து உயரும். அடுத்தவர்கள் மதிக்கும் அளவுக்கு வாழ்க்கை அமையும். செய்யும் தொழில் மேன்மை பெற்று சிறப்புகள் தேடி வரும். கை தவறி போனவைகள் கச்சிதமாய் திரும்பி வரும். நற்செய்தியை சுமந்து கொண்டு நாளும் நண்பர்கள் வருவர். வியாபாரம் மற்றும் தொழில் நடத்துபவர்கள் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பார். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மாதக் கடைசியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் கிடைக்கும். கலைஞர்களுக்கு எதிர்பார்த்த வாய்ப்பு இல்லம் தேடி வரும். மாணவ மாணவிகளுக்கு விரும்பிய துறையில் மேற்படிப்பு அமையும். பிள்ளைச் செல்வங்களால் பெருமை உண்டு. கணவன் மனைவிக்குள் கனிவும் பாசமும் கூடும்.

## மிதுனம்

பங்குனி 24ஆம் திகதி(07/04/2023) வியாதி விரயாதிபதி சுக்கிரன் விரயஸ்தானத்தில் சஞ்சரித்துள்ளார். அடுக்கடுக்காக விரயங்கள் வந்தாலும் அனைத்தும் நன்மைக்குத் தான். வீடு வாங்க விரயம், விவாகம் நடைபெற விரயம், வாகனம் வாங்க விரயம், புதிய தொழில் தொடங்க விரயம் என்று பட்டியல் போடும் நேரம் இது. பஞ்சமாதிபதியாகவும் சுக்கிரன் விளங்குவதால் நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறும். பணிபுரியும் இடத்தில் அதிகாரிகளின் உள்ளத்தில் இடம்பெறுவீர்கள். கலைஞருக்கு புகழ் ஏணியின் உச்சிக்குச் செல்லும் வாய்ப்பு உருவாகும். பிள்ளைகள் அக்கறையோடு படித்தால் அதிக மதிப்பெண் பெறலாம். பெண்களுக்கு குதூகலம் அதிகரிக்கும். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். ஆடை ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டு. எதிர்பார்த்த சுப நிகழ்ச்சிகள் இல்லத்தில் இனிதே நடைபெறும்.

## கடகம்

பங்குனி 24ஆம் திகதி(07/04/2023) சுக லாபாதிபதி சுக்கிரன் லாப ஸ்தானத்தில் சஞ்சரித்துள்ளார். இல்லத்தில் எதிர்பார்த்த நற்பலன்கள் நடைபெறலாம். குறிப்பாக வருமானமும் வாழ்க்கைத் தரமும் உயர விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும். குடும்பத்தினருடன் புதிய யாத்திரைகளை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வுடன் கூடிய புதிய வாய்ப்பு நல்ல நிறுவனங்களில் இருந்து வரலாம். சுப காரிய பேச்சுக்கள் முடிவுக்கு வரலாம். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வாசல் தேடி வந்தாலும் அதனை உபயோகப்படுத்திக் கொள்ள இயலுமா என்பது சந்தேகம்தான். பிள்ளைகளுக்கு மறதி அதிகரிக்கலாம். கருத்து வேறுபாடுகள் அகல கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

## சிம்மம்

பங்குனி 24ஆம் திகதி(07/04/2023) உங்கள் ராசிக்கு 3,10 ஆம் இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் 10ம் இடமான தொழில் ஸ்தானத்திற்கு செல்கிறார். எனவே தொழில் முன்னேற்றம் உண்டு. வாடகை கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்த கட்டடத்திற்கு மாற்றும் யோகம் உண்டு. சகோதர வர்க்கத்தினர் உங்களுக்கு உதவிக்கரமாக செயற்படுவர். வழக்குகள் சாதகமாக முடியும். புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. இளைஞர்களுக்கு சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். பிள்ளைகள் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவதன் மூலம் முன்னேற்றம் ஏற்படும். பெண்களுக்கு சுப விரயங்கள் அதிகரிக்கும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்படுவது நல்லது. பணிபுரியும் இடத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லுங்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினை நல்ல முடிவுக்கு வரும்.

## கன்னி

பங்குனி 24ஆம் திகதி(07/04/2023) ரிஷப ராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் ராசிக்கு பாக்கியஸ்தானதிபதியான சுக்கிரன் பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் பொன்னான நேரமாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுவீர்கள். பதவிகளை தேடி போக உங்களுக்கு உதவிகள் கிடைக்கலாம். ஆடை ஆபரணங்கள் அத்தியாவசிய பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும். வியாபாரம் நடத்துபவர்களுக்கு கூட்டாளிகள் கூடுதல் லாபம் தரவழி வகுத்து கொடுப்பர். இளைஞர்களுக்கு வருமானம் உயர வழி பிறக்கும். மாணவ மாணவிகள் படிக்கும் நேரத்தை அதிகப்படுத்தி கூடுதல் மதிப்பெண் பெற முயற்சிக்கலாம். பெண்களுக்கு தெய்வ வழிபாட்டில் ஆர்வம் கூடும். உடல் நலத்திற்காக செலவிடும் தொகை குறையும். கணவன் மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும். பணி புரியும் பெண்களுக்கு வீடு வாகனம் வாங்க சலுகைகள் கிடைக்கும்.

## துலாம்

பங்குனி 24ஆம் திகதி (07/04/2023)ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு அதிபதியாகவும் அட்டமாதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன் 8ல் சஞ்சரிக்கும் பொழுது இடையூறுகள் அகலும் எப்படி முடியுமோ என்று நினைத்த காரியம் எளிதில் முடியும். ஆரோக்கியத்தில் மட்டும் அடிக்கடி சிறு சிறுதொல்லைகள் வரலாம். இடமாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை இனிமையாகவே அமையும். கலைஞர்களுக்கு திறமைக்கேற்ற அங்கீகாரம் கிடைக்கும். மாணவ மாணவிகளுக்கு போட்டி பந்தயங்களில் பங்கேற்று பரிசு பெறும் வாய்ப்பு உண்டு. பெண்களுக்கு உறவினர்களின் உதவி கிடைத்து உள்ளம் மகிழும் வாய்ப்பு கிடைக்கும். கணவன் மனைவிக்குள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயல்படுவதன் மூலம் புதிய பாதை அமையும். பணிபுரியும் பெண்களுக்கு இடம் மாற்றம் உறுதியாகும். நூதன பொருள் சேர்க்கை உண்டு.

## விருச்சிகம்

பங்குனி 24ஆம் திகதி (07/04/2023)உங்கள் ராசிக்கு 7, 12க்கு அதிபதியாக சுக்கிரன் சப்தம ஸ்தானத்திற்கு செல்கிறார். எனவே திருமண வாய்ப்புகளில் இருந்த தேக்க நிலை மாறும். அருமையான வாழ்க்கைத் துணை அமையும். ஆடை ஆபரணங்கள் வாங்குவது முதல் அதிநவீன எந்திரங்கள் வாங்குவது வரை செயல்படும் நேரம் இது. மனதில் தோன்றியதை மறுகணமே செய்து முடிக்க பண வரவு உண்டு. பக்கபலமாக நண்பர்கள் உண்டு. வியாபார தொழில் நடத்துபவர்கள் போட்டிகளை சமாளித்து வெற்றி காண்பார். கலைஞர்களுக்கு ஒளிமயமான வாழ்வு அமைய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பெண்களுக்கு பாசத்திற்குரிய தம்பதிகளாக மாறும் வாய்ப்பு உண்டு. சுபச் செய்திகள் இல்லம் தேடிவரும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு.

## தனுசு

பங்குனி 24 ஆம் திகதி (07/04/2023)ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 6/11 இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன் ஆவார். சுக்கிர பலன் நன்றாக இருந்தால் அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் கிடைக்கும் என்பார்கள். அந்த அடிப்படையில் எடுத்த காரியங்கள் கச்சிதமாக முடியும். விரும்பிய வேலை கிடைக்கும். தொழில் புரிய நினைப்பவர்களுக்கு பங்குதாரர்கள் வந்திணைந்து பக்குவமாக செயல்படுவார்கள். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புகழ்கொடி பறக்கும் நேரம் இது. கலைஞர்களுக்கு உழைப்புக்கேற்ற பலன் உண்டு. மாணவ மாணவிகளுக்கு கல்வி மேம்பாடு அதிகரிக்கும். கச்சிதமாக படித்து பிறர் மெச்சும் அளவிற்கு உயர்வர். பெண்களுக்கு மணமாலை சூடும் வாய்ப்பு உருவாகும். மழலை இல்லாத தம்பதிகளுக்கு அதற்காக எடுத்த மருத்துவம் கைகொடுக்கும். உறவினர் பகை மாறும்.

## மகரம்

பங்குனி 24ஆம் திகதி (07/04/2023)ரிஷப ராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் ராசிக்கு 5 ,10 ஆம் இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு செல்வதால் அனைத்து வழிகளிலும் நன்மை கிடைக்கும். மதிநுட்பத்தால் மகத்தான காரியங்களை செய்து முடிப்பீர்கள். பொன் பொருள் சேர்க்கை ஏற்படும். அதிக செலவில்லாமலேயே சில காரியங்கள் முடிவடைதல், ஆதாயம் தரும் தகவல்களை அன்றாடம் கேட்டல் போன்றவை நடைபெறும் நேரம் இது. பூர்வீக சொத்து பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். வியாபார தொழிலில் உள்ளவர்கள் நவீன யுக்திகளை பயன்படுத்தி முன்னேற்றத்தை வரவழைத்துக் கொள்வார்கள். மாணவ மாணவிகள் தங்களின் பெற்றோர் ஆசிரியர் சொற்கேட்டு நடப்பதன் மூலம் கற்ற கல்வியால் பெருமை சேரும். பெண்கள் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டிய நேரம் இது. இல்லறம் நல்லறமாக விட்டுக்கொடுத்து செல்வது நல்லது.

## கும்பம்

பங்குனி 24 ஆம் திகதி (07/04/2023)ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 4,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். முயற்சிகளில் இருந்த முட்டுக்கட்டைகள் தகரும். காரிய வெற்றிக்கு ஓய்வு இன்றி பணிபுரிவீர்கள். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும். வியாபார தொழிலில் உள்ளவர்களுக்கு போட்டிக்கு வந்தோர் விலகுவர். கலைஞர்களுக்கு மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும். வருமானம் திருப்தி தரும். மாணவ மாணவிகளுக்கு ஆசிரியர்களின் ஆதரவும் வழிகாட்டுதலும் சிறப்பாக அமையும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலம் பெண்கள் தங்கள் ஆரோக்கியத்தை சீராக்கிக் கொள்ளலாம். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து வருமானம் வரலாம் இல்லற வாழ்வில் இருந்த இடையூறு அகலும்.

## மீனம்

பங்குனி 24 ஆம் திகதி (07/04/2023)ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். சகாயஸ்தான அதிபதி சகாயஸ்தானத்திற்கு செல்லும் இந்த நேரம் நன்மைகள் ஓரளவு கிடைக்கும் என்றாலும் உங்கள் ராசிநாதன் குருவுக்கு பகைக் கிரகமான சுக்கிரன் பலம் பெறுவதால் இன்பமும் துன்பமும் கலந்து இக்காலத்தில் வரும். உடன் பிறந்த சகோதரர்களுக்குள் ஒற்றுமை குறையலாம். உத்தியோகத்தில் இடமாற்றம் உறுதியாகலாம். வியாபாரத் தொழிலில் உள்ளவர்கள் இயந்திர பழுதுகளையும் எதிர்பாராத செலவுகளையும் சந்திக்க நேரிடும். கலைஞர்களுக்கு போட்டிக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். மாணவ மாணவிகள் தேவையற்ற நட்புகளை தவிர்த்து தேர்வுகளில் கவனம் செலுத்துவது நல்லது. பெண்களுக்கு எதிர்பாராத செலவு இதயத்தை வாட வைக்கும். வீண்வாக்குவாதங்களை தவிர்ப்பதன் மூலம் இல்லறம் நல்லறமாக அமையும்.

# தமிழ்ப் பத்திரிகைத் துறையில் சாதனை படைத்த சிவநாயகம்

இலங்கை தமிழ் பத்திரிகைத் துறையில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமற்றவராக இருந்து, 50 ஆண்டுகள் தொடர்ந்தும் பணியாற்றிய இதழியல் கலாமேதை எஸ். டி.சிவநாயகம் அமரத்துவம் எய்தி தற்போது 23 ஆண்டுகள் நிறைவுறுகின்றன. அன்னாரின் சிரார்த்த தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

1921.07.02இல் திருகோணமலையில் பிறந்தவர் சிவநாயகம். அவரது துணைவியாரான மங்களாவதி மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டவர். எனினும் கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் (தற்போது விவேகானந்தா கல்லூரி) சுமார் 35 ஆண்டுகள் போதனாசிரியராகப் பணியாற்றி, பலரை கல்விமான்கள் ஆக்கியவர்.

சிவநாயகம் 1946ஆம் ஆண்டில் கூட்டுறவு சமாசம் வெளியிட்ட 'ஐக்கிய தீபம்' எனும் சிற்றிதழின் (சஞ்சிகை) கிழக்கு மாகாண இதழாசிரியராக, தனது 25 ஆவது வயதில் எழுத்துலகில் கால்பதித்தார். 1947ஆம் ஆண்டில் இவர் 'உதயம்' எனும் சிற்றிதழை ஆரம்பித்து, அதன் நிர்வாக இதழாசிரியராகத் திகழ்ந்தார். 1948ஆம் ஆண்டில் 'தினகரன்' நாளிதழில் உதவி இதழாசிரியராக இணைந்து, தேசிய ரீதியில் தனது இதழியல் பணியைத் தொடரும் வாய்ப்பைப் பெற்றார்.

அதன்பின்னர், தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவரும் சட்டத்துறை கலாநிதியுமான எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் அழைப்புக்கிணங்க, 1950ஆம் ஆண்டின் முற்பகுதியில் 'சுதந்திரம்' வார இதழின் நிர்வாக இதழாசிரியர் பொறுப்பை ஏற்று, அதனை திறம்பட நடத்திப் புகழ்பெற்றார். அதன்பலனாக, 1960ஆம் ஆண்டில் 'வீரகேசரி' நாளிதழின் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது.

பிற்காலத்தில் 'தினபதி' எனும் நாளிதழையும், 'சிந்தாமணி' எனும் வார இதழையும் புதிதாக உருவாக்கி, அவற்றின் பிரதம இதழாசிரியராக இறுதிவரை அதாவது, அந்தப் பத்திரிகை ஸ்தாபனம் மூடப்பட்ட காலம் (1966 – 1990) வரை பணியாற்றியிருந்தார். பிரஸ்தாப பத்திரிகைகளை வெற்றிகரமாக நடத்தி சாதனை படைத்தமைக்காக, பிரதம இதழாசிரியராக விளங்கிய சிவநாயகத்தை அந்தப் பத்திரிகை நிறுவனம் (சுயாதீன பத்திரிகை சமாஜம்) தனது பணிப்பாளர்களில் ஒருவராக நியமித்து பெருமைப்படுத்தியது.



அவ்வாறே சிவநாயக ஜனன தின நூற்றாண்டை (1921 – 2021) முன்னிட்டு, இலங்கை அரசு நினைவு முத்திரை வெளியிட்டு அன்னாரை தேசிய ரீதியில் கௌரவப்படுத்தியது. இலங்கை வரலாற்றில் தமிழ் பத்திரிகை ஆசிரியர் ஒருவருக்கு, தேசிய ரீதியில் கிடைக்கப்பெற்ற மிக உயர்ந்த கௌரவம் இது எனலாம்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் வழிகாட்டலில், அப்போதைய ஊடகத்துறை அமைச்சராக விளங்கிய தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவின் பணிப்புரையின் பேரில், இந்த நினைவு முத்திரை வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். சிரேஷ்ட பத்திரிகையாளர் எச்.எச்.விக்கிரமசிங்கவின் எண்ணக் கருவில் உருவாகிய இந்த செயல்திட்டத்துக்கு, கொழும்பு ஈஸ்வரன் பிரதர்ஸ் பணிப்பாளர் தெ.முருகேசு அனுசரணை வழங்கியமையும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும். இதழாசிரியர் சிவநாயகம் ஆற்றொழுக்கான வசன நடையில் கட்டுரைகளை எழுதியவர். எவருக்கும் புரிகின்ற மாதிரி எளிமையாகவும், நகைச்சுவை மிக்கதாகவும் கட்டுரைகளை எழுதிப் புகழ்பெற்றவர். அதேவேளையில், எடுத்துக் கொண்ட விடயத்தை தனது கட்டுரைகளில் ஆணித்தரமாகச் சொல்லுகின்ற திறன் படைத்தவர்.

பத்திரிகைத் துறையில் ஜாம்பவானாகத் திகழ்ந்த எஸ்.டி. சிவநாயகம், சத்யசாயி பாபாவின் ஆன்மிக ஸ்தாபனத்தின் ஊடாக சமய, சமூகப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வந்தவராவார். கொழும்பு, புதுச்செட்டித் தெரு சாயிபாபா மத்திய நிலையம் உருவாக்கப்பட்டபோது, அதன் ஸ்தாபகத் தலைவராக ஏகமனதாக தெரிவாகிய சிவநாயகம், தொடர்ந்து 25 ஆண்டுகள் அதே சாயி ஸ்தாபனத்தின் தலைவராக ஏகமனதாகத் தெரிவாகிவந்தார்.

1979ஆம் ஆண்டில் அப்போதைய நீதி அமைச்சராகவும், மட்டக்களப்பு மாவட்டம், கல்குடா தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் விளங்கிய கே.டப்ளியூ. தேவநாயகத்தின் உதவியுடன், நாடாளுமன்ற சட்ட முறைமைகளுக்கமைவாக, சத்ய சாயி பாபா (இலங்கை) அறக்கட்டளையகம் எனும் சாயி அமைப்பையும் சிவநாயகம் உருவாக்கினார். இதுவே, இலங்கையில் முதலாவதாக ஸ்தாபிக்கப்பட்ட 'சாயி அறக்கட்டளையகம்' என்பது குறிப்பிடத்தக்கது.

**சிவா இராஜஜோதி**

## துரைச்சாமி மாஸ்டர்;

# அறியாமை இருளகற்றிய அறிவுச் சூரியன்!

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி வரலாற்றுடனான நமது இளம்பராய இணைப்பை பிணைப்பை ஆசிரியர்கள் தவிர யாரால் பலப்படுத்த முடியும்? அத்தகைய ஆசிரியர்களுள் எல்லோர் மனதிலும் ஆழமாகப் பதிந்துள்ளவரே ஆசான் துரைச்சாமி மாஸ்டர்.



யாழ்ப்பாணத்தின் புகழை உலகெங்கும் பரவிடச் செய்த சென் ஜோன்ஸ் கல்லூரியில் நீண்டகாலம் கனிஷ்ட பிரிவின் தலைமை ஆசிரியராக (Lower School Head Master) பணியாற்றிய வைத்திய லிங்கம் துரைச்சாமி (30/06/1925 18/04/2023) மெல்பேர்ணில் இறைபதமடைந்தார்.

ஆசிரியர் ஒருவர் தன் பணியை ஆழமாக நேசித்து மாணவர்கள் மேல் நிபந்தனையில்லாத நம்பிக்கையும் கொண்டிருந்தால் அவர் காலகாலமும் நினைக்கப்படுவார் என்பதற்கு நிகரற்ற உதாரணம் எங்கள் தலைமை ஆசிரியர் துரைச்சாமி மாஸ்டராவார்.

அறிவின் துளிகளை அள்ளிவந்து வகுப்பறையெங்கும் புதுமை செய்கிற அற்புத வித்தகராக விளங்கிய ஆசான் பல மாணவர்களின் வாழ்வில் பல திருப்புமுனைகளுக்குக் காரணமாக போகிறார் என்பது எமக்கு அப்போது தெரியாது.

அவர் கை பிடித்து சொல்லித் தந்த எண் கணிதமும், நற்தமிழ் அறிவுமே எமை இன்றைய வாழ்வுக்கு கைதூக்கி விட்டுள்ளது என்பதனை இப்போது நாம் நன்றியுடன் அறிகிறோம்.

அறிவுத் தூண்டுகோல்களுக்கு மறைந்த வைத்தியலிங்கம் துரைச்சாமி ஒரு சிறந்த நல் ஆசிரியர். பொறுப்போடும் விருப்போடும் கற்பிப்பவர். அவர் ஆரோக்கியமான தமிழ் மாணவ சமுதாயத்தை உருவாக்க எப்போதும் விழிப்போடிருந்தவர். தலைமை ஆசிரியராக

**ஆசிரியர் ஒருவர் தன் பணியை ஆழமாக நேசித்து மாணவர்கள் மேல் நிபந்தனையில்லாத நம்பிக்கையும் கொண்டிருந்தால் அவர் காலகாலமும் நினைக்கப்படுவார் என்பதற்கு நிகரற்ற உதாரணம் எங்கள் தலைமை ஆசிரியர் துரைச்சாமி மாஸ்டராவார்.**

**அறிவின் துளிகளை அள்ளி வந்து வகுப்பறையெங்கும் புதுமை செய்கிற அற்புத வித்தகராக விளங்கிய ஆசான் பல மாணவர்களின் வாழ்வில் பல திருப்புமுனைகளுக்குக் காரணமாக போகிறார் என்பது எமக்கு அப்போது தெரியாது.**

இருந்தனால் கற்பிக்கும் சக ஆசிரியர்களின் திறனிலும் நம்பிக்கை வைத்திருந்தவர்.

சென்ஜோன்ஸ் கல்லூரியில் நீண்டகாலம் கனிஷ்ட பிரிவின் தலைமை ஆசிரியராக பணியாற்றிய அவரது அயராத உழைப்பானது ஒவ்வொரு மாணவர் மீதும் வைத்திருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது. அவர் தனது மாணவரின் மீது அசையாத நம்பிக்கையை வைத்திருந்தார். இளம் மாணவர்களிடையே ஓர் இணைப்புப் பாலமாக சமூகத்திற்கு சிறந்த ஒரு வழி காட்டியாக மிளிர்ந்தவர்.

இளம்பராயத்தில் எமக்கு படி படி என பாடஞ்சொல்லும் ஆசான் தெய்வத்தினும் ஒரு படி மேல் தான். அவர் அறியாமை இருளகற்றும் அறிவுச்சூரியனாக விளங்கியவர். கட்டுப்பாட்டை கண்டிப்பாக கடைப்பிடித்த பொழுதிலும், ஆசான் துரைச்சாமி மாஸ்டர் கருணை மிகுந்த உளம் படைத்தவர். கல்லூரியிலும் சமுதாயத்திலும் தேவையிலிருக்கும் எவருக்கும் அயராது உதவி செய்தவர்.

உங்களின் கரும்பலகை பாடம் தான் பலரின் வாழ்வை உயர்த்தியது. எண்ணமெலாம் மாணவர் நலனிலேயே நிமிடங்களை நகர்த்துகிற நல்லாசானாகிய உங்களை, இப்பெருவுலகில் ஏதோ ஒரு பரியோவான் மாணவனின் மனதில் நிச்சயம் எழுதப்பட்டிருக்கும் உங்களுக்கான நல்லாசிரியர் என்ற உயர் விருது.

மாணவர்களின் மனங்களைச் செம்மைப்படுத்துவதிலும், நமது சமூகத்தைக் கட்டமைப்பதிலும் தலைமை ஆசிரியரான உங்களின் பங்களிப்புக்கும், கடின உழைப்புக்கும் நாம் என்றும் நன்றிக் கடன் பட்டவர்கள்.

அவரின் உயர்ந்த இலட்சியங்களை நிறைவேற்றுவது அவரது மாணவர்களாகிய நாம் அவருக்கு செய்யும் அஞ்சலியாகும்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# படித்ததும் பகர்வதும் 139





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### சாரதிகளே கொஞ்சம் கவனியுங்கள்!

இவ்வருட ஏப்ரல் மாத முதல் வாரத்தின் ஐந்து நாட்களில் 265 வாகன விபத்துக்கள் பதிவாகியுள்ளதாகவும், இவ்வி பத்துக்களினால் 25 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. அது மட்டுமன்றி இந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 534 வீதி விபத்துக்கள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் இவ்வாறான வீதி விபத்துக்களினால் 1345 பேர் படுகாயம் அடைந்ததாகவும் 2446 பேர் சிறு காயங்களுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவிக்கிறது.



இந்த விபரங்கள் வீதி விபத்துக்களின் பாரதூரமான பாதிப்புகளை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. மோட்டார் சைக்கிள்களில் கவனமின்றி தான்தோன்றித்தனமாக, தாறு மாறாக, வேகமாக செல்லுதல், முச்சக்கர வண்டிச் சாரதி கள் அடுத்தடுத்த வாடிக்கையாளர்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற முனைப்பில் வீதி ஒழுங்குகளை மதிக்காது வேகமாக செல்லுதல், பஸ் வண்டிச் சாரதிகள் பாதைகளை தாங்களே குத்தகைக்கு எடுத்தது போல் வேகமாகவும், போட்டா போட்டியுடனும் மற்றவர்களை முந்திச்செல்ல முனைதல் போன்றவை இத்தகைய வீதி விபத்துக்கள் அதிக ரிக்க காரணங்களாகின்றன.

போதையுடனும், தூக்கக் கலக்கத்துடனும் வண்டிகளை செலுத்துதல், வண்டியில் பயணிப்போருடன் வேடிக்கையாக கதைத்துக்கொண்டு, பாதையில் போதிய கவனம் செலுத்தா திருத்தல், விட்டுக்கொடுக்காது மற்றவர்களோடு போட்டி போட் டுக்கொண்டு வாகனங்களை செலுத்துதல் என்பனவும் இத்த கைய விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு துணை புரிகின்றன.

இத்தகைய காரணங்கள் பொதுவாக இருப்பினும் பண்டிகை விடுமுறை காலங்களில் விபத்துக்களின் எண் ணிக்கை பலமடங்கு அதிகரித்து காணப்படுவதை எல்லோ ரும் அறிவர். இக்காலத்தில் பலரும் தனிப்பட்ட முறையில் தங்களது வாகனங்களில் பல்வேறு பயணங்களை மேற் கொள்கின்றனர். இதனால் சாதாரண நாட்களை விட இந்த நாட்களில் வாகனங்களை செலுத்துவதில் அதிக கவனம் தேவைப்படுகின்றது. இதில் அஜாக்கிரதையாக இருக்கும் போது அவை விபத்துகளுக்கு காரணங்களாகின்றன. அத னாலேயே பொலிஸாரும் இவ்விடயத்தில் அதிக எச்சரிக்கை செய்துள்ளனர்.

வாகனத்தை செலுத்தும் ஒவ்வொருவரும் தமது சொந்த நலன்களையும், தம்மோடு பயணம் செய்வோரின் நலன்க ளையும், பாதையில் செல்வோரின் நலன்களையும் கருத் தில் கொண்டு, பொறுப்புணர்ந்து, அதிக கவனம் செலுத்தி வாகனங்களை செலுத்த முன்வர வேண்டும். இதன் மூலமே விபத்துக்கள் ஏற்படுவதை தடுக்க அல்லது தவிர்க்க முடியும்.

## நெஞ்சுக்கு நீதி

சிந்தனை செய்வீர் வண்டிகளை செலுத்துவோரே
விதிமுறைகளை மீறாது செய்வீரும் கடமைகளை
நிந்தனை செய்வதற்கு சிறிதேனும் இடமளியாது
நித்தமும் நற்சாரதியாய் நல்லோருனம் வெல்வீரே

## நெஞ்சோடு நெஞ்சம்

### சகவாழ்வுப் பண்டிகைகள்

பல்லின, பல்மத மக்கள் வாழும் இலங்கைத் திரு நாட்டில் சகலரதும் பண்டிகைகள் அடுத்தடுத்து அமைந்த மாதமாக இவ்வருடத்தின் ஏப்ரல் மாதம் அமைந்தது. சிங்கள, தமிழ் புத் தாண்டு, பெரிய வெள்ளிக்கிழமை, உயித்தெழுந்த ஞாயிறு, என்பவற்றோடு ஈதுல் பித்ர் எனும் நோன்புப் பெருநாளும் மூன்று வாரங்களுக்குள் அடுத்தடுத்து இடம்பெற்றிருந்தமை விசேட அம்சமாகும்.




சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் எனும் இனத் தவர்களுக்கும், பௌத்தம் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் எனும் மதத்தவர்களுக்கும் அவர்கள் கொண்டாடிய இத்த கைய பண்டிகை தினங்களுக்கான நல்வாழ்த்துக்களை ஒன்றாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு பல மதங்களைப் பின்பற்றும், பல்லின மக்கள் வாழ்கின்ற இலங்கையில் மக்களின் சகவாழ்வின் சிறப்பு களை வெளிப்படுத்தும் மிகச் சிறந்த நாட்களாக இம்மாதத் தின் அந்த அடுத்தடுத்த மூன்று வாரங்கள் சிறப்பு பெற்றன. ஒவ்வொருவரும் தமது சக இன மத அன்பர்களையும் அயல வர்களையும் நண்பர்களையும் வாழ்த்துக்கள் தெரிவித்தும், பண்டிகைக் கால உணவு வகைகளை பரிமாறியும், பரிசுப் பொருட்களை வழங்கியும் குதூகலித்துக் கொண்டாடியதை பல்வேறு பிரதேசங்களிலும் பரவலாகக் காணக்கூடியதாக இருந்தது.

ஒரு சில சுயநலமிக்க அரசியல்வாதிகளாலும், தீவிர எண்ணங்களை கொண்ட சிறு குழுவினர்களாலும் ஏற்படுத் தப்பட்ட பிரிவினைகளும், துவேசங்களும், வெறுப்புகளும் பெருமளவில் குறைந்து ஒருவித புரிதல் ஏற்பட்டு இருப்ப தையும் காண முடிந்தது. இந்நிலை தொடர வேண்டும். எந்த வித தீய சக்திகளின் சூழ்ச்சிகளுக்கும் பலிக்கடாக்கள் ஆகி விடாமல் தெளிவு, புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல் விளக் கமளித்தல் அனுசரித்துப் போதல், ஆதரவளித்தல் போன்ற பண்புகள் மூலம் எதிர்காலத்தில் இனங்களிடையே எந்தவித குரோத, விரோத, துவேச, பிரிவினைவாத மனப்பான்மைக ளும் ஏற்படாமல் தடுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வருடம் போன்றே அடுத்த ஆண்டில், ஏப்ரல் மாதத்தின் முதல் இரு வாரங்களிலும் பௌத்த, இந்து, முஸ்லிம், கிறிஸ




தவ சிறப்புத் தினங்கள் ஒரு சில தின இடைவெளிகளில் அடுத்தடுத்து வர இருப்பதால், அவற்றில் இந்த வருடத்தை விடவும் பன் மடங்கு அதிகரித்த முறையில் சகவாழ்வும், சுபீட் சமும், மகிழ்ச்சியும், இணக்கமும் நெருக்கமும் உருவாகும் வகையில் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை இப்போதிருந்தே செய்திட முன்வர வேண்டும்.

அவ்வாறான நல்ல எதிர்பார்ப்புகளோடு இம்மாதத்தில் தத் தமது பண்டிகைகளை கொண்டாடிய சகல இன மத இலங் கையர்களுக்கும் இதய பூர்வமாக இனிய நல் வாழ்த்துக் களை மீளவும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## பிரிந்தார் பெருமை

### கல்விமான் எம். வை. எம். முஸ்லிம்



பிரபல கல்விமானும் இலக்கிய சொற்பொழி வாளருமான எம். வை. எம். முஸ்லிம் கடந்த ஏப்ரல் 6ஆம் திகதி (2023.04.06) கண் டியில் காலமானார். 1935.09.01ல் மரு தமுனையில் பிறந்த இவர், கண்டி கடுகஸ் தொட்டையைதனதுவசிப் பிடமாகக் கொண்டிருந் தார்.

வெலிகம அரபா மகா வித்தியாலயம், மல்வானை அல் முபாரக் மகா வித்தியாலயம், கெக்குனு கொள்ள மகா வித்தியாலயம், உடுதெனிய முஸ்லிம் மகா வித்தியாலயம் உட்பட நாட்டின் பல பிரதான பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றி அந்தப் பாடசாலைகளில் புதுவித மறுமலர்ச்சியையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற்கு காரணமாக இருந்தவர். தனது கம்பீரத் தோற்றத்தாலும், கணீர் குரலாலும், தனித்துவ ஆளுமையாலும் மாணவர்க ளையும், ஆசிரியர்களையும் ஒன்றுபோல் கவர்ந்தவர்.

இறுதியாக, மத்திய மாகணத்தில் கல்விப் பணிப்பாள ராக கடமையாற்றினார். மகரகம தேசிய கல்வி நிறுவனம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் என்பவற்றின் விரிவுரை யாளராகவும் செயலாற்றியுள்ளார்.

உடுதெனிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில், ஆரம்ப வகுப்புகளில் நான் கல்வி கற்றுக்கொண்டிருந்த வேளையில் அதன் அதிபராக பதவியேற்ற இவரது ஆளுமையைப் பார்த்து அப்போதே நான் அதிசயித்துப் போயிருந்தேன். இப்பாடசாலைக்கென பாடசாலைக் கீதம் ஒன்றை அறி முகப்படுத்தியவரும் இவரே. இதனால் கவரப்பட்ட நான், 1990களில் பாடசாலை கீதமொன்று இல்லாதிருந்த க/ மாரஸ்ஸன்ன தமிழ் வித்தியாலயத்தின் பாடசாலை கீதத்தை இயற்றி அறிமுகப்படுத்தினேன். இவ்விரு பாடசாலைகளிலும் நாம் இயற்றிய பாடசாலை கீதங்களே இப்போதும் ஒலித்துக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிறந்த இலக்கிய பேச்சாளராக நாட்டின் பல்வேறு பிரதே சங்களிலும் இலக்கிய சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். இஸ்லாமிய வரலாற்றில் இடம்பெற்ற இரண்டாவது முக்கிய யுத்தமான உஹத் யுத்தத்தில் வீர மரணமடைந்த முஸ்அப் இப்னு உமைர் என்ற நபிகளாரின் தோழரது தியாகங்களைப் பற்றி "இரவாச் செல்வன்" என்ற நூலையும் எழுதி வெளி யிட்டுள்ளார். கல்விப் பணிகளிலேயே அதிக காலத்தை செல விட்டதால் இலக்கியத் துறையில் இவரது பங்களிப்புகளுக்கு நேரம் கிடைக்காமை துரதிஷ்டமாகும்.

எனது சகோதரர் ரஷீத் எம் ரியாழை சந்திக்கும் போதெல் லாம் என்னைப்பற்றி நலன் விசாரிப்பதும், எனது ஆக் கங்கள் பற்றிக் கருத்துக் கூறுவதுமான அவரது உயரிய பண்பினை என்னால் என்றும் மறக்க முடியாது.

இவரிடம் கற்ற, இவர் அதிபராக இருந்த பாடசாலைகளில் பயின்ற, இவரது விரிவுரைகளில் கலந்து கொண்ட மாண வர்கள், இவரது சொற்பொழிவுகளை இரசித்த வாசகர்கள் அனைவரது உள்ளங்களிலும் இவர் என்றும் வாழ்வார். இவரது இழப்பு கல்வித்துறைக்கு குறிப்பாக மத்திய மாகாண முஸ்லிம்களின் கல்வித்துறைக்கு பாரிய இழப்பு என்றால் மிகையல்ல.

## நீத்தார் நினைவு

### உடுதெனிய, ஹாஜியானி உம்மு சல்மா ரஷீத்



எனது அன்புத் தாயார் கண்டி, உடுதெனிய, ஹாஜியானி உம்மு சல்மா ரஷீத் காலமாகி கடந்த 2023.04.19ஆம் திகதிக்கு எட்டு வருடங்கள் நிறைவு பெற்றது. அதனை முன் னிட்டு, அவரைப் பற்றி கலாபூஷணம் எம்.எஸ்.எம். ஜின்னா எழுதிய ஒரு கட்டு ரையிலிருந்து ஒரு சில பகு திகளை அவரது நினைவாக இங்கே தருகிறேன்.

'பெற்றோர் பிள்ளைகளுக்கு ஆற்றுகின்ற சேவை அவர் களை சமுதாயத்தில் முன்னிருக்கச் செய்வதாகும்' என்பதற் கேற்ப, தன் பிள்ளைகளை தலை நிமிர்ந்து வாழ வைத்த தில் மர்ஹூமா உம்மு சல்மா வெற்றி கண்டுள்ளார். கணவர் மர்ஹூம் ரஷீத் அவர்களோடிணைந்து தம் பிள்ளைகளை சன்மார்க்க நெறி பிறழாது, சமுதாயத்தில் சிறந்த நற் பண் பாளர்களாக, சமுதாயப் பங்காளிகளாக உருவாக்கியுள்ளார். இவரது எல்லாப் பிள்ளைகளுமே சமுதாயத்தில் ஒவ்வொரு துறைக்கூடாக தனித்துவமாக இனம் காணப்பட்டிருக்கிறார் கள். இவரது மூத்த மகள் நூருல் ஐன் நஜ்முல் ஹுசைன், இலங்கையின் பிரபல பெண் ஊடகவியலாளர், எழுத்தாளர், கவிஞர். தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் ஆசிரியர் பீடத்தில் பணியாற்றியவர், அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் ஊடக அதிகாரி, 'பண் பாடும் பெண்', 'மின்னும் தாரகைகள்', 'திதுளன தாரக்கா', 'பூச்செண்டு' நூல்களின் ஆசிரியர். இவரது மகன் சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் பிரபல ஊடகவியலாளர், எழுத்தாளர், கவிஞர், சமூக சேவையாளர். தேசிய சூரா சபை, அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு என்பவற்றின் தற்போதைய செய லாளரான இவர், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளன பொதுச் செயலாளர், தலைவர், முஸ்லிம் மீடியா போரத்தின் பொருளாளர் உட்பட பல அமைப்புகளில் பதவிகள் வகித்து சமுதாயப் பணிகளில் ஈடு பட்டு வருகிறார். இவரது மகன் மர்ஹூம் ரஷீத் எம். ராசிக் (பஹ்ஜி), பிரபல இஸ்லாமிய மார்க்க அறிஞராக இருந்து, கஹட்டபிட்டிய, கேகாலை, தெஹிவளை, கல்கிஸ்ஸ, சீனன் கோட்டை உட்பட பல பிரசித்த ஜும்மா பள்ளிவாசல்களில் கடமையாற்றியுள்ளார். கட்டாரின் இலங்கைத் தூதுவரால யத்தில் பணிபுரியும் ஊடகவியலாளர், ரஷீத் எம். பியாஸ் (நளீமி), முன்னாள் மத்திய மாகாண முதலமைச்சின் முஸ்லிம் விவகார இணைப்பாளரும் ஊடகவியலாளருமான ரஷீத் எம். றியாழ், கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியர் ரஷீத் எம். ஹாயீஸ், கொழும்பு சென். செபஸ்தியன் வித் தியாலய ஆசிரியை நூருஸ் ஷிபா ஸாஹிர் ஆகிய இவரது பிள்ளைகளும் இவருக்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக் கிறார்கள். இவரது மற்றைய பிள்ளைகளான ரஷீத் எம்.ரபீக், ரஷீத் எம்.ரிபாத் ஆகியோர் வர்த்தகர்களாக இருக்கிறார்கள்.

# தமிழ்ப் பிராந்திய செய்தியாளர்களை சர்வதேச ஊடகங்கள் தேடி வரவைத்த முன்னோடி மாணிக்கவாசகம்

வீரகத்தி தனபாலசிங்கம்

கடந்த வாரம் வவுனியாவில் பொன்னையா மாணிக்கவாசகத் தின் மறைவு பலதிற ஆற்றலும் ஆளுமையும் தொழில்சார் அர்ப்பணிப்பும் கொண்ட மூத்த ஒரு பத்திரிகையாளரை எம்மிடம் இருந்து அபகரித்துச் சென்றுவிட் டது.

உண்மையில் அவரது மறைவை ஈடு செய்யமுடியாதது என்பதை விடவும் ஈடுசெய்யப்பட வேண்டியது என்றே கூறவேண்டும். ஊடகத்துறைக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து பல தசாப் தங்களாக பயனுறுதியுடைய மாபெரும் பணியைச் செய்த அவரைப் போன்றவர் கள் எம்மத்தியில் அவசியம்.

நான் மாணிக்கவாசகத்தை முழுப்பெயர் சொல்லி அழைப்பதில்லை. ' மாணிக்கம் ' என்றே அழைப்பேன். அவருடனான எனது ஊடாட்டம் 1980 களின் நடுப்ப குதியில் இருந்து தொடங்கியது. 1983 கறுப்பு ஜூலைக்கு பிறகு தமிழ் தீவிரவாத இயக்கங்களின் ஆயுதப்போராட்டம் உள்நாட்டுப் போராக மாறத் தொடங்கிய காலப்பகுதியில் தான் அவர் வீரகேசரியின் வவுனியா செய்தியாளராக பணியாற்றத் தொடங்கினார். அதற்கு முதல் அவர் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ஈழநாடு தினசரியின் செய்தியாளராக குறுகிய காலம் பணிபரிந்தார் என்று அறி கிறேன்.

அண்மைய வருடங்களாக மாணிக் கம் சுகவீனமுற்றிருந்த போதிலும் தனது வாழ்நாளுடன் வரித்துக்கொண்ட ஊடக சேவையை அவர் கைவிடவில்லை. கைவிடவும் அவரால் முடிந்திருக்காது. சில வாரங்களுக்கு முன்னர் வரை எழுதிக் கொண்டிருந்தார்.

கடுமையாக சுகவீனமுற்றிருந்த கடைசி நாட்களில் கூட மடிக்கணனியைக் கொண்டவருமாறு கேட்டு ஏதோ ஒரு வேலையை செய்ய அவர் முயன்றதாக மரணமடைவதற்கு ஒரு சில தினங்கள் முன்னதாக அவரைச் சந்தித்த ஊடக நண்பர்களிடம் மனைவி கூறியதாக அறிந்தேன்.

மாணிக்கத்தை வெறுமனே ஒரு செய்தியாளராக மாத்திரம் நோக்கமுடியாது. ஊடகத்துறை யின் பலவேறு அம்சங்களிலும் திறமையை வெளிக்காட்டிய அவர் நவீன தகவல் தொழில் நுட்பத்தின் அபார வளர்ச்சி ஊடகத்துறையில் ஏற்படுத்திய சில தசாப்தங்களுக்கு முன்னர் கற்பனை கூட செய்து பார்த்தி ருக்கமுடியாத மாற்றங்களுக்கு தன்னை மிகவும் எளிதாகவே இசைவாக்கிக்கொண்டு செய்த பணிக்கு தமிழ் ஊடகத்துறை யில் தனித்துவமான ஒரு இடம் இருக்கிறது.



உள்நாட்டுப் போர் தவிர்க்க முடியாமல் வவுனியா பிரதேசத் துக்கு ஒரு முக்கியத்துவத்தைக் கொடுத்தது. வடக்கின் போர்க்க ளத்துக்கும் தென்னிலங்கைக்கும் இடையிலான ஒரு ' இடைத் தடுப்பு வலயமாக விளங்கிய வவுனியா பல வருடகாலமாக உள்நாட்டு செய்தியாளர்களுக்கு மாத்திர மல்ல சர்வதேச செய்தியாளர்களுக்கும் ஒரு கேந்திரமாக மாறியது.

அந்த கேந்திரத்தில் தமிழ் பத்திரிகையின் செய்தியாளராக இருந்த மாணிக்கம் ஒரு பிராந்திய செய்தியாளர் என்ற நிலையில் இருந்து காலம் வேண்டி நின்றதன் பிரகா ரம் தன்னை தேசிய பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் மாத்திர மல்ல, சர்வதேச ஊடகங்களுக்கும் மிகவும் தேவையானவராக மாற்றிக்கொள்வதில் காட்டிய திறமையும் துணிச்சலுடனான உழைப்பும் முன்னுதாரணமானவையா கும். அதை தமிழ் ஊடக சமூகம் என்றென் றைக்கும் பெருமையுடன் நினைவுகூரும்.

நம்பகமான போர்ச் செய்திகளுக்கு பெருமளவு ஊடகங்கள் வவுனியாவையும் மாணிக்கத்தையும் நம்பியிருந்த கால கட்டம் ஒன்று இருந்தது. பல சர்வதேச ஊடகங்கள் தேடிவந்து அவரை பணிக்கு அமர்த்தியதை நாம் கண்டோம். குறிப்பாக பி.பி.சி., வெரித்தாஸ் போன்ற சேவைக ளில் போர் நிலைவரங்கள் பற்றி மாணிக் கம் என்ன சொல்கிறார் என்பதை கேட்பதற் காக இரவில் வானொலி சாதனங்களுக்கு அருகில் காத்திருந்தவர்கள் ஏராளம்.

மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினர் பற்றிய விபரங்களை மாத்திரமல்ல, குடி மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப் புக்களையும் தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் வெளியிட்டு தன்னை ஒரு நம்பகமான செய்தியாளராக மாணிக்கம் அன்று நிலைநி றுத்திக்கொண்டார். அந்த காலகட்டத்தில் வீரகேசரி ஆசிரியபீடத்தில் பணியாற்றிய வன் என்பதால் அவரின் செய்திப்பணியின் பெறுமதியை முழுமையாக நான் அறிவேன். உள்நாட்டுப் போர் வடக்கு, கிழக்கில் கொழும்பு ஊடகங்களின் பிராந்திய செய் தியாளர்கள் பலரை தேசிய மட்டத்திலும் வெளிநாடுகளி லும் தெரியவைத்தது. அதற்கு முன்னோடியாக அமைந்தவர் மாணிக்கம் எனபதை எவரும் மறுக்கமுடியாது.

வவுனியாவின் அன்றைய கேந்திர முக்கியத்துவமே அதற்கு பிரதான காரணமாக இருந்தது என்றாலும் நிலைவ ரம் வேண்டிநிற்கும் ஆற்றலை யும் செயற் துணிச்சலையும் வெளிப்படுத்த முடியாத ஒரு வரினால் அதற்கு ஈடுகொடுத்தி ருக்க முடியாது. மாணிக்கத்தி டம் அவை இருந்தன.

போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் வடக்கில் குறிப் பாக வன்னிப் பிரதேசத்தில் மக்கள் எதிர்நோக்கும் வாழ் வாதார மற்றும் மனிதாபிமான பிரச்சினைகளை வெளியுலகிற்கு கொண்டுவருவதற்கு மாணிக்கம் பெருவாரியான கட்டுரைகளை எழுதிக் குவித்தார். அவற்றில் தெரிந்தெடுத்த பல கட்டுரைகளை தொகுத்து நூல்களாகவும் அவர் வெளியிட்டார்.

சில வருடங்களுக்கு முன்னர் அத்த கைய நூல் ஒன்றின் வெளியீட்டு விழாவில் மாணிக்கத்தின் அழைப்பின்பேரில் வவு னியாவுக்கு சென்று கலந்துகொண்டேன். அதற்கு பிறகு அவரை ஓரிரு தடவைகள் தான் நேரில் காணும் வாய்ப்பு கிடைத் தது. ஆனால் தொலைபேசியில் அடிக்கடி தொடர்புகொண்டு நாட்டு நிலைவரங்கள், ஊடகத்துறை செயற்பாடுகள் மற்றும் எனது நலன்கள் குறித்து பேசுவதற்கு அவர் தவறியதில்லை. எனது எழுத்துக் கள் குறித்து காய்தல் உவத்தல் இன்றி மாணிக்கம் கருத்துக்களை கூறுவார். அதை நினைக்கும்போது கண்கள் பனிக்கின்றன.

சில மாதங்களுக்கு முன்னர் வரை மாணிக்கம் தனது ஊடகத்துறை வாழ்வு குறித்து வீரகேசரியில் தொடர்ச்சியாக எழுதிவந்தார். கடுமையாக சுகவீனமடை வதற்கு முன்னதாக அந்த தொடரை அவர் நிறைவுசெய்தாரோ என்று எனக்கு தெரிய வில்லை. அந்த கட்டுரைகள் எல் லாவற்றையும் தொகுத்து அவரது ஊடக வாழ்வை நூல் வடிவில் கொண்டு வர வேண்டியது மிக மிக அவசியமானதாகும். மாணிக்கத்துக்கு செய்யக்கூடிய மிகவும் பொருத்தமான அஞ்சலியாக அமையக் கூடிய அந்த பணியை செய்ய அவர் பணியாற்றிய தமிழ் ஊடக நிறுவனங்கள் அல்லது ஊடகவியலாளர்கள் அமைப்பு கள் முன்வரவேண்டும்.

அவரை சில வருடங்களாக நேரில் சந்தித்து பேசும் வாய்ப்பு எனக்கு கிடைக்க வில்லை என்பது பெரும் கவலை தருகி றது. இனிமேல் அவரிடமிருந்து அழைப்பு வராது என்பது வேதனையை மேலும் அதிகரிக்கிறது.

ஆனால், வாழ்வின் யதார்த்தத்துக்கு நாம் முகங்கொடுத்தேயாக வேண்டும். மாணிக் கத்தின் ஊடகப்பணிகளும் எழுத்துக்களும் என்றென்றைக்கும் எம்முடன் உறவாடிக் கொண்டேயிருக்கும்.

இந்த மண்ணில் பிறந்த சகலரையும் மரணம் ஒரு நாள் தழுவத்தான் செய்யும். ஆனால் வாழும் காலத்தில் எமது செயற் பாடுகள் மூலமாக எத்தகைய மரபை நாம் விட்டுச்செல்கிறோம் என்பதே முக்கியமானது. வாழ்வுக்கு அர்த்தத்தைக் கொடுக்கும் அந்த அம்சத்தைப் பொறுத்த வரை மாணிக்கம் வளமான ஒரு மரபை விட்டுச் செல்கிறார். அது குறித்து அவரின் குடும்பத்தவர்களும் ஊடகத்துறை நண்பர் களும் என்றென்றைக்கும் பெருமையடைய முடியும். அன்பு நண்பரே சென்றுவாருங் கள்!

மாணிக்கத்தின் மறைவால் துயருற் றிருக்கும் அவரின் குடும்பத்தவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.



கூடா நட்பு: சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை நேரா நிரந்தவர் நட்பு

**தெளிவுரை :**

அகத்தே பொருந்தாமல் புறத்தே பொருந்தி நடப்பவரின் நட்பு, தக்க இடம் கண்டபோது எறிவதற்கு உரிய பட்டடையாகும்.

# இவ்வார மழலை




மொஹமட் சபீக் / ஜஸ்ரா
அக்கரைப்பற்று

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 59

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | | 07 | | 08 |
| 09 | 10 | 11 | | 12 | 13 |
| | 14 | 15 | 16 | | |
| 17 | | 18 | | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | |

பெயர் ........................................
வகுப்பு ........................................
தொலைபேசி இல ........................................
பாடசாலை பெயர் ........................................
வதிவிட முகவரி ........................................
........................................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) கசப்புச் சுவை கொண்ட காய்கறி. கொடியில் காய்ப்பது.
(9) உலகில் பறவையினங்களில் ஏராளமானவை இருந்தாலும், பார்த்து இரசிக்கக் கூடிய சிலவகை பறவைகளுக்கு மாத்திரமே இச்சொல் பொருந்தும்.
(12) முக்கனியில் மூன்றாவதாகக் குறிப்பிடப்படுவது இது. (தலைகீழான சொல்)
(14) மரங்கள் மற்றும் பாறை இடுக்குகளில் கூடு கட்டி சமுதாயமாக வாழும், பறக்கும் பூச்சியினம் இது. கூடு கலைந்தால் கூட்டமாகப் பறந்து வந்து எம்மைக் கொட்டி விடும். கொடுக்குகளில் விஷம் கொண்ட ஆபத்தான உயிரினம்.
(19) இன்றைய தினத்தின் மறுநாள்.
(21) பிரித்தானிய நீட்டலளவையின் அலகொன்றைக் குறிக்கும் சொல். 2.5 சென்ரிமீற்றருக்குச் சமமான அலகு.

**மேலிருந்து கீழ்**

(1) கமுகு மரத்தில் காய்ப்பது.
(4) ஒலியை உணருகின்ற புலனங்கம்.
(8) மிருகங்கள் பலவற்றில் காணக்கூடிய நீளமான உடல் அவயவம். (தலைகீழான சொல்)
(10) அறிவைப் புகட்டுபவர். (தலைகீழான சொல்)
(11) இருளை நீக்கி ஒளி தருவது. எண்ணெயில் ஒளிர்ந்த காலம் கடந்து, இன்று மின்சாரத்தில் ஒளிருகின்றது.
(17) பன்னிரண்டு அங்குலங்கள் சேர்ந்தால் வருவது. (தலைகீழான சொல்)
(19) தன்மை, பன்மை பெயர்ச்சொல்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 58

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அரசி 04. ஆரை 08. கனி 10. சிவப்பு 14. புல் 16. கவி 18. பலா 20. முல்லை 23. குதிரை

**மேலிருந்து கீழ்**

01. அரிசி 03. சிரிப்பு 04. ஆனி 05. கரை 11. வல்லாரை 16. வில் 17. கமுகு 20. குலை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 57

### பாராட்டு பெறுவோர்

**1. என். நுஸ்பா செரீன்**
தரம் 10, தி/தி/ புல்மோட்டை மத்திய கல்லூரி,
பிரதான வீதி, புல்மோட்டை

**2. எம்.ஏ. ஆக்கிபா ஸைனப்**
தரம் 07, அலிப் சர்வதேச பாடசாலை, தர்கா நகர்.
இல. 41B, 'ஸைனப் விலா' முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை

**3. எம்.எம்.எம். அப்ராஸ்**
தரம் 06, மா/ சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை,
இல. 37 கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

**4. ரமீஸ் இமாரா இஸ்ரா**
தரம் 10, அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயம்,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

**5. பஹ்மா**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி, கம்பளை,
இளவதுறை,

**6. பரீட் பாத்திமா அஸ்ஹா**
தரம் 11, மன்பாஉல் கைராத் கல்லூரி,
அக்கரைப்பற்று 5.

**8. தமீம் சாபில் அப்துல்லா**
தரம் 11, அக்/ அல்முனவ்வறா கனிஷ்ட கல்லூரி,
இல. 132/1, அரபிக் கல்லூரி வீதி, அக்கரைப்பற்று 5

**9. அப்லல் அஹமத்**
தரம் 04, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரி

**10. எம்.எம். சாதிர் சலீம்**
தரம் 11D, ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரி,
இல. 328/5, செட்டித் தெரு, கொழும்பு 11.

**11. பி. வாஞ்சுதா**
தரம் 08, சென் மேரிஸ் தேசிய பாடசாலை,
இல. 04, ஸ்ரீபுர பொகவந்தலாவ.

**12. பா. ரோகினி**
தரம் 07D, கொ/இ/இ/மத்திய கல்லூரி,
இல. 3B, 46ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 59
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

# ஆணவம் அழிந்து போகும்!

அது ஒரு அழகிய கிராமம். அந்த கிராமம் வயலும் வயல் சார்ந்த மருத நிலமாகும். இங்குள்ள மக்களின் பிரதான தொழில் விவசாயமும், கால்நடை வளர்ப்புமாக காணப்படுகிறது.

அக் கிராமத்தில் ஒரு தோட்டக்காரன் இருந்தான். அவனுக்கு ஆடுகள் அதிகமாக இருந்தன. அதில் ஒரு ஆடு மட்டும் முரட்டுத் தனமாக அலைந்து திரிந்தன. வேறு நபர்களுடன் ஆடுகளைக் கண்டால் முட்டி மோதிக் கொண்டேயிருந்தது. அதைப் பார்த்து ஏனையோரின் ஆடுகளும் பயந்த வண்ணம் ஓடி ஒதுங்கி, அந்த ஆடு நிற்கும் பக்கமே மேய்ச்சலுக்கு செல்வதில்லை.

அந்த முரட்டு ஆடு 'தம்பி' என்னும் விவசாயியின் ஒரு வெள்ளாட்டை கண்டால் போதும், தினமும் வீண் வம்புக்கு இழுத்துக் கொண்டேயிருந்தது.

வெள்ளையாடோ சண்டை சச்சரவை விரும்பாத சமாதான விரும்பி, அதைக் கண்டதும் மெதுவாக ஒதுங்கிக் கொள்ளும்.

வெள்ளையாடு எவ்வளவு பொறுமையாக வலம் வந்தாலும் முரட்டு ஆடு அதை விடுவதாக இல்லை. வேறு ஆடுகளிடம் வெள்ளை ஆட்டைப் பற்றி தப்புத் தப்பாக கதைகளை சொல்லி வெள்ளையாட்டோடு பகையை உருவாக்கியது. அதனால் சில ஆடுகள் வெள்ளையாட்டோடு பேசுவதை நிறுத்திக் கொண்டன.



முரட்டு ஆட்டின் தொல்லை தாங்க முடியாமல் தன் எஜமானாகிய விவசாயியிடம் 'நான் இனிமேல் மேய்ச்சலுக்கு போகாமல் இங்கேயே இருக்கப் போகிறேன். பக்கத்து தோட்டக்காரனின் முரட்டாடு என்னோடு பிரச்சினைக்கே வருகிறது. எப்போதும் பயந்து பயந்து மேய்ச்சலுக்கு போக வேண்டியுள்ளது.

மன உளைச்சல் ஏற்பட்டு நிம்மதியே இல்லாமல் போச்சு. அந்த முரட்டாடு என் வழிக்கு வராமல் ஏதாவது வழி செய்யப் பாருங்கள்' என வெள்ளையாடு தனது ஏக்கத்தை சொல்லி முடித்தது.

துஷ்டனைக் கண்டால் தூரமாகிக் கொள்வது தான் எல்லா விதத்திலும் நமக்கு நல்லது. இந்த உலகத்தில் நிலையாக யாரும் வாழ வரவில்லை. இந்த பூமி தற்காலிக தங்குமிடம். அதுக்குள்ளே தான் நான் பெரியவன், நீ சிறியவன் என்று தம்பட்டம் சிலர் அடிக்கிறார்கள். 'துள்ளின மாடு பொதி சுமக்கும்' இருந்து பார்ப்போமே' என தனது ஆட்டிடம் கூறி முடித்தார்.

ஒரு நாள் ஆற்றின் கரையோரமாக மேய்ந்து கொண்டிருந்த வெள்ளையாட்டை தாக்குவதற்காக முரட்டு ஆடு ஆவேசமாக துரத்திக் கொண்டு வந்தது. இதை சற்றும் எதிர்பாராத வெள்ளையாடு தட்டுத் தடுமாறி ஓட ஆரம்பித்தது.

முரட்டு ஆடு தனது கூர்மையான கொம்புகளால் தாக்குவதற்கு முயற்சித்தது. வெள்ளையாடு திரும்பிக் கூட பார்க்காமல் வேகத்தை கூட்டியது. பிரதான வீதியைக் கண்டதும் இரு பக்கத்தையும் அவதானித்த உடன் வீதியைக் கடந்தது. துரத்திக் கொண்டு வந்த முரட்டாடு நிதானம் தவறி எதிரே வந்த லொறியுடன் மோதி அவ்விடத்திலே துடி துடித்து சில வினாடிகளில் உயிரை ஏன் உலகை விட்டே பிரிந்தது.

'பொறுத்தார் பூமியாள்வார்'

ஏ.எம்.ஏ. றசூல்...
தி/கிண்/அஸ்ஸம்ஸ் விதியாலயம்,
முள்ளிப்பொத்தானை

## கடல் நீரின் உப்பு சுவைக்கான காரணம்

மழை நீரில், வளிமண்டலத்தில் உள்ள கார்பனீரொக்சைட் கலந்து கார்பனிக் அமிலமாகிறது. இந்த அமிலத்தன்மை உடைய மழைநீர் கடந்து வரும் போது பாறைகளை அரிக்கிறது. இதில் ஏற்படும் வேதி மாற்றத்தால் மின்னூட்டம் பெற்ற அயனிகள் உருவாகுகின்றன. இந்த அயன்கள் 90% சோடியம் மற்றும் குளோரைடை உள்ளடக்கியது. இந்த அயன்கள் மழை வெள்ளத்தில் ஆற்றில் அடித்து செல்லப்பட்டு கடலில் கலக்கின்றன. இப்படி பல கோடி ஆண்டுகளாக அடித்து வரப்படும் அயன்கள் கடலில் தங்கி விடுவதால் கடல் நீர் உப்பாக இருக்கிறது. கடல்நீர் ஆவியாகும்போதும் உப்பு வெளியேறாமல் உள்ளது.

பெருநாள் வந்ததம்மா
இன்பப் பெருநாள் வந்ததம்மா
ஈகைத் திருநாள் வந்ததம்மா
அன்புப் பெருநாள் வந்ததம்மா
அழகுத் திருநாள் வந்ததம்மா!

சீரும் சிறப்பும் பொங்கிடவே
சிந்தையெங்கும் தங்கிடவே
ஊரும் உலகும் செழித்திடவே
உறங்கும் உள்ளம் விழித்திடவே!

வறியோர் நெஞ்சம் மகிழ்ந்திடவே
வாழ்த்துரை கூறிப் புகழ்ந்திடவே
அறிந்தே அள்ளி ஈந்திடவே
இன்பப் பெருநாள் வந்ததம்மா!

ஸாதிக் பாரிஸ்
மள்வானை

## கடலுக்குள் ஒரு கோவில்!

குஜராத் மாநிலத்தில் துவாரகை கிருஷ்ணன் கோவில், கடலிலுள்ள ஒரு தீவில் இருக்கிறது. இவ்வூர் கடலுக்குள் அமைய காரணம் உண்டு.

கம்சனுக்கு பெண் கொடுத்த மாமனார் ஜராசந்தன், தன் மருமகனை கிருஷ்ணர் கொன்றுவிட்டார் என தெரிந்ததும், தன் படைகளை கிருஷ்ணர் தங்கியிருந்த மதுராபுரிக்கு அனுப்பினான். அவர்களால் கிருஷ்ணரை பிடிக்க முடியவில்லை. விடாக்கண்டனான ஜராசந்தன் பதினெட்டு முறை போர் தொடுத்தான். மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.



அவர்களை பாதுகாக்கும் பொருட்டு, மேற்குக்கடலில் இருந்த ஒரு தீவுக்கு கிருஷ்ணர் அவர்களுடன் சென்றார்.

அந்த தீவில் ஒரு நகரத்தை உருவாக்கினார். அதுவே துவாரகை என பெயர் பெற்றது...



ஆப்பிள் பழங்களில் 25% காற்று உள்ளதால் அவை நீரில் மூழ்குவதில்லை



திமிங்கிலத்தின் ஆயுட்காலம் 500 வருடங்கள்



நீருக்கடியில் கட்டப்பட்ட முதல் டென்னிஸ் ஸ்டேடியம் துபாயில் உள்ளது.



தொடர்ந்து 10 நாட்கள் தூங்காமல் இருப்பது மரணத்தை கூட ஏற்படுத்தும்



ஒட்டகம் 300 கிலோ எடையை சுமக்கும்

# வாரம் ஒரு பெரியார்



## கலைஞர் மு.கருணாநிதி

முத்துவேல் கருணாநிதி தமிழக முதல்வராக ஐந்துமுறை பதவிவகித்தவர். இவர் 1924 ஜூன் மாதம் 3ஆம் திகதி பிறந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும் 1969 முதல் 2018 வரை பதவி வகித்துள்ளார். 1969,1971,1989,1996,2006 என ஐந்து முறை தமிழக முதலமைச்சராகப் பணியாற்றினார். கருணாநிதி, தமிழ்த் திரையுலகில் கதை, உரையாடல் பணிகளில் ஈடுபாடு கொண்டவர். 'தூக்குமேடை' நாடகத்தின் போது எம்.ஆர். ராதா, இவருக்கு, 'கலைஞர்' என்ற பட்டம் அளித்தார். இவர் முத்தமிழஞர் என்றும் அழைக்கப்படுகின்றார். இவர் 2018 ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதி 1994ஆம் அகவையில் சென்னையில் காலமானார்.

**இளமைப்பருவம்**

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருக்குவளை என்னும் கிராமத்தில் 1924 ஜூன் மாதம் 3ஆம் திகதி ஏழை இசை வேளாளர் குடும்பத்தில் முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார் கருணாநிதி. பள்ளியிறுதித் தேர்வில் இவர் தேர்ச்சியடையவில்லை.

**இளைஞர் அமைப்பு**

தமது வளரிளம் பருவத்தில், வட்டார மாணவர்கள் சிலரின் உதவியுடன் திருவாரூர் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் என்னும் இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பை உருவாக்கினார். இளைஞர்கள் தங்கள் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் வளர்த்துக்கொள்ள அவ்வமைப்பு உதவியது. அதன் வழியாக மாணவநேசன் என்னும் கையெழுத்துப் பத்திரிக்கையை வெளியிட்டு இளைஞர்களைத் திரட்டினார். சில காலத்துக்குப் பின், அவ்வமைப்பு மாநில அளவிலான "அனைத்து மாணவர்களின் கழகம்" என்ற அமைப்பாக உருப்பெற்றது.

முரசொலி என்னும் துண்டு வெளியீட்டை 1942ஆம் ஆண்டில் வெளியிட்டார். 1960ஆம் ஆண்டில் அதனை நாளிதழாக மாற்றினார்.

**அரசியல்**

நீதிக்கட்சியின் தூணாகக் கருதப்பட்ட பேச்சாளர் அழகிரிசாமியின் பேச்சால் ஈர்க்கப்பட்ட கருணாநிதி, தனது 14 ஆவது அகவையில், அரசியல், சமூக இயக்கங்களில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். கருணாநிதி, தமிழ் அரசியலில் களமிறங்குவதற்கு உதவிய முதல் பிரதான எதிர்ப்பு, கல்லக்குடி ஆர்ப்பாட்டத்தில் (1953) ஈடுபட்டது ஆகும்.

**இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்**

1957இல் நடைபெற்ற தி.மு.க இந்தி எதிர்ப்பு மாநாட்டில் தமிழ் நாட்டில் நடுவண் அரசால் இந்தி, திணிக்கப்படுவதை வன்மையாக எதிர்ப்பதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இப்போராட்டத்துக்குகருணாநிதி தலைமை தாங்கினார்.

ஒக்டோபர், 1963, இந்தி எதிர்ப்பு மாநாடு சென்னையில் (மதராஸ்) கூட்டப்பட்டது.

**தி.மு.க.வில் வகித்த பதவிகள்**

பொருளாளர்

1960ஆம் ஆண்டில் தி.மு.க.வின் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1969ஆம் ஆண்டு வரை அப்பதவியை வகித்தார்.

தலைவர்

1969ஆம் ஆண்டில் தி.மு.க.வின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தனது மறைவு வரை 50 ஆண்டுகள் அப்பதவியை வகித்தார்.

சட்டமன்ற உறுப்பினர்

போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் இவர் வெற்றிபெற்றார். 1957 ஆம் ஆண்டு சுயேச்சையாகவும் மற்ற அனைத்துத் தேர்தல்களிலும் தி.மு.க. வேட்பாளராகவும் போட்டியிட்டார்.

இலங்கைத் தமிழருக்காகக் கருணாநிதியும் அன்பழகனும் தமது சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார். அடுத்துவந்த சட்டமேலவைத் தேர்தலில் கருணாநிதி சட்டமேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர்

1962ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின்னர் அமைந்த மூன்றாவது சட்டப் பேரவையில், இரா. நெடுஞ்செழியன் எதிர்க்கட்சித் தலைவராகவும், மு. கருணாநிதி எதிர்க்கட்சித் துணைத்தலைவராகவும் இருந்தார்.

அமைச்சர்

1967ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியைப் பிடித்த பின்னர் கா.ந. அண்ணாதுரை தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சராகப் பதவி வகித்தார்.

முதலமைச்சர்

1969–1971 கா.ந. அண்ணாதுரை மறைவுக்குப் பின் முதல் முறை ஆட்சி என ஐந்துமுறை முதலமைச்சராக இருந்தார். இவர் திரைப்படத் துறை, நாடகங்கள், வரலாற்றுப் புனைவுகள், புதினங்கள், சிறுகதைத் தொகுதிகள், கவிதைத் தொகுதிகள், உரைநூல்கள், இலக்கிய மறுபடைப்புகள், பேட்டிகள், சொற்பொழிவுகள், கட்டுரைகளோடு இவரின் படைப்புகள் 178 நூல்களாக வெளிவந்திருக்கின்றன.

# மஞ்சரி விளையாட்டு





# காலம் கற்றுத்தந்த பாடம்

அவர் தனது முதல் எட்டு டெஸ்ட் இன்னிங்ஸ்களையும் ஆடியது இற்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 2017 ஆம் ஆண்டில். அப்போது அவரது சிறந்த இன்னிங்ஸ்களே முப்பதுக்கு மேல் ஓட்டங்களை பெற்றது தான். பாகிஸ்தானுக்கு எதிராக டுபாயில் நடந்த டெஸ்ட் தொடரில் சதீர சமரவிக்ரம 38 மற்றும் 35 ஓட்டங்களை பெற்றபோதும் எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது. குறிப்பாக அந்த டெஸ்ட் தொடரில் இலங்கை வென்றது எதிர்பார்ப்பை அதிகரிக்கச் செய்தது.

அதற்குப் பின்னர் 22 வயதாக இருந்த சமரவிக்ரமவின் பயணம் இந்தியாவாக இருந்தது. பொதுவாகவே சற்று சவாலான இடம், சவாலான அணி. அவர் அந்தத் தொடரில் பெற்ற ஓட்டங்கள் 23, 0, 13, 0, 23 மற்றும் 5. அணியில் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள தகுதியான ஓட்டங்கள் அல்ல அவை. அணியில் இருந்து நீக்கப்பட்டது எதிர்பார்க்கப்பட்டதே.

ஆனால் அது தொடக்கம் அவருக்கு மீண்டும் அணிக்குள் நுழைவது பெரும் சிரமமாக இருந்தது. அரைத் தசாப்தம் காக்க வேண்டி ஏற்பட்டது.

இப்போது அவர் அயர்லாந்து டெஸ்ட் தொடரில் இலங்கையின் விக்கெட் காப்பாளராக அணிக்கு திரும்பி இருக்கிறார். காலியில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் ஆட்டமிழக்காது சதம் பெற்றார். ஒப்பீட்டளவில் இது இந்தியாவில் இந்தியாவை எதிர்கொள்வது, ஐக்கிய அரபு இராச்சியத்தில் பாகிஸ்தனை எதிர்கொள்வை விட சவால் குறைந்தது தான்.

முதல் டெஸ்டில் அவர் வெறும் 114 பந்துகளில் ஆட்டமிழக்காது 104 ஓட்டங்களை பெற்றது இலங்கை அணி மிகப்பெரிய ஓட்டங்களை பெறுவதற்கு உதவியது. ஆனால் எதனையும் பொருட்படுத்தாமலேயே அவர் அந்த ஓட்டங்களை பெற்றார். கடந்த கால டெஸ்ட் அனுபவம் அவருக்கு கடுமையான பாடங்களை கற்றுக்கொடுத்திருந்தது.

“அணியில் இருந்து நீக்கப்பட்ட நிலையில் நான் அதிகம் கற்றிருக்கிறேன்” என்று தனது சதத்திற்குப் பின்னர் குறிப்பிட்டார் சமரவிக்ரம. “இந்தியாவுக்கு எதிரான மூன்று டெஸ்ட் போட்டிகளில் ஆடும்போது எனக்கு வயது 22 ஆக இருந்தது. அப்போது இந்தியா உலகின் சிறந்த அணியாக இருந்தது.

அந்தப் போட்டிகளில் என்னால் பெரிதாக எதுவும் செய்ய முடியவில்லை என்றாலும் அவர்களிடம் இருந்து நான் அதிகம் கற்றுக் கொண்டேன்.

நான் அங்கு கற்றுக்கொண்டதை இங்கு கொண்டு வந்தேன். உயர் மட்ட கிரிக்கெட்டில் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி நான் அதிகம் கற்றுக்கொண்டேன். உள்ளூர் போட்டிகளில் அந்த விடயங்களை செயற்படுத்தி நான் களைப்படைந்துவிட்டேன்.

எனது துடுப்பாட்டத்தை சீர்படுத்துவதற்கு அதிகம் உழைத்தேன். ஏ அணி, மாகாண கிரிக்கெட் என உள்ளூர் கிரிக்கெட்டில் பல்வேறு விளையாட்டுகளிலும் நான் அதிகம் துடுப்பெடுத்தாடினேன். உளத்திலேயே அதிகம் மாற்றம் ஏற்பட்டதாக நான் நினைக்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும், என்ன நினைக்க வேண்டும், பல்வேறு நிலைமைகளை எவ்வாறு கையாள வேண்டும் என்பது பற்றி அதிகம் கவனம் செலுத்தினேன்.”

சமரவிக்ரமவை பொறுத்தவரை 8ஆவது வரிசையில் துடுப்பெடுத்தாட வருவதென்பது வழக்கத்திற்கு மாறானது. அவர் விக்கெட் காப்பாளராக இருந்தபோதும் பொதுவாக முதல் வரிசையிலேயே துடுப்பெடுத்தாட வருவார். ஆனால் அயர்லாந்துக்கு எதிராக 7ஆவது இடத்திலேயே வந்தார்.

“நான் 7ஆவது இடத்தில் துடுப்பெடுத்தாடியது இது முதல் முறை. நான் பல இடங்களில் துடுப்பெடுத்தாடியபோதும் இந்த இடத்தில் களமிறங்கியது இது தான் முதல்முறை. ஏனென்றால் நாம் நைட் வொட்ச்மன் ஒருவரை அனுப்பிய நிலையில் மேலும் ஒரு இடம் பின் தள்ளப்பட்டு எட்டாவது இடத்தில் வர வேண்டியதாயிற்று. அப்போது சற்று பதற்றமாக இருந்தது. நான் ஆடுகளதில் சாதகமான மனநிலையுடன் இருந்ததால் அந்த பதற்றம் உடன் விலகியது. ஏனென்றால் நான் எனது இன்னிங்ஸை எப்படிக் கட்டியெழுப்புவது என்பதை திட்டமிட்டேன். அது எனக்கு இலகுவாக அமைந்தது.”

சமரவிக்ரம தினேஷ் சந்திமாலுடன் சேர்ந்து பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 217 பந்துகளில் 183 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டார். இரு துடுப்பாட்ட வீரர்களும் மூன்று இலக்க ஓட்டங்களை அடைந்த விரைவில் இலங்கை தனது முதல் இன்னிங்ஸை இடைநிறுத்திக் கொண்டது. அதுவே மிகப்பெரிய ஓட்டங்களாக இருந்தது. அயர்லாந்தால் இரண்டு இன்னிங்ஸ்களிலும் கூட அந்த ஓட்டங்களை நெருங்க முடியாமல்போனது.

“பல்வேறுபட்ட அணிகளில் நான் சந்திமாலுடன் இணைந்து துடுப்பெடுத்தாடி இருக்கிறேன்” என்கிறார் சமரவிக்ரம. “ஆடுகளம் துடுப்பெடுத்தாட சற்று கடினமாக இருந்தது. நான் சாதகமாக துடுப்பெடுத்தாடியதோடு பலவீனமான பந்துகளுக்கு அடித்தாடினேன்.

ஏனென்றால் இன்னிங்ஸை விரைவில் முடித்துக்கொள்ளப்போவது எனக்குத் தெரியும். அணி மற்றும் எனது தனிப்பட்ட சாதனைகள் குறித்து நான் கருத்தில் கொண்டேன். அந்த ஓட்டங்களை விரைவாகப் பெற்று அணியை ஸ்திரமான இடத்திற்கு கொண்டுவர நான் முயற்சித்தேன்.

அயர்லாந்து களத்தடுப்பில் அதிக நேரம் இருந்ததோடு அதனாலேயே பலவீனமான பந்துகளை எதிர்பார்த்திருக்கவும் அதனை சிறந்த முறையில் பயன்படுத்தவும் நாம் பேசிக்கொண்டோம். ஏனென்றால் நாம் சாதகமான நிலையில் இருந்ததோடு பலவீனமான பந்துகளுக்கு அடித்தாட எம்மால் முடியுமாக இருந்தது. அந்த வழியில் நாம் அதிக ஓட்டங்களை பெற்றுக்கொண்டோம்”

டெஸ்ட் கிரிக்கெட்டை பொறுத்தவரை அயர்லாந்து என்பது கத்துக்குட்டி அணி. 2017 ஆம் ஆண்டு டெஸ்ட் வரம் பெற்ற அந்த அணி இலங்கை வரும் முன்னர் ஆடிய நான்கு டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியையே சந்தித்திருக்கிறது.

இந்த நிலையில் முதல் முறை இலங்கை ஆடுகளத்தில் இலங்கையை எதிர்கொள்வது என்பது இலகுவானதாக இருக்காது. எனவே இந்த வெற்றி இலங்கைக்கு பெரும் சாகசமாக இருக்காதபோதும் நியூசிலாந்து சென்று தோல்வி மேல் தோல்விகளை சந்தித்து வந்து இலங்கைக்கு இப்படி ஒரு வெற்றி முன்னோக்கிச் செல்வதற்கு அவசியமானதாக இருந்தது.

அயர்லாந்து பலவீனமான அணியாக இருந்தபோதும் சமரவிக்ரம பெற்ற சதத்தை குறைத்து மதிப்பிட முடியாது. ஏனென்றால் அவர் மிகக் கடினமான பாதை ஒன்றில் பயணித்தே இந்த மைல்கல்லை பெற்றிருக்கிறார்.

சமரவிக்ரமவின் சதம் என்பது இலங்கை அணிக்கு முக்கியமானதாக இருந்தது. ஏனென்றால் இலங்கை விக்கெட் காப்பாளர் ஒருவர் டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் கடந்த ஏழு ஆண்டுகளில் பெறும் முதல் சதமாகவும் இது இருந்தது. கடைசியாக 2016 ஆம் ஆண்டே குசல் பெரேரா விக்கெட் காப்பாளராக சதம் பெற்றிருந்தார்.

பின்னர் இலங்கையின் நிரந்தர விக்கெட் காப்பாளராக செயற்பட்டு வந்த நிரோஷன் திக்வெல்ல சோபிக்கத் தவறிவரும் நிலையில் சமரவிக்ரமவின் ஆட்டம் என்பது எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்பை அதிகரித்திருக்கிறது.

# தலைகள் மாறிய உலகக் கிண்ணம்




ஆடவர் ஒருநாள் உலகக் கிண்ணம் இந்த ஆண்டு கடைசியில் இந்தியாவில் நடைபெறவிருக்கிறது. ஆனால் கிரிக்கெட் என்பது வேகமாக மாறிக்கொண்டிருப்பதற்கு இந்த உலகக் கிண்ண நல்ல உதாரணம். அதற்கு ஒவ்வொரு அணிகளினதும் தலைவர்களை பார்த்தாலே போதுமானது.

அதாவது நான்கு ஆண்டுகளுக்கு முன் 2019இல் இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ணத்தில் பங்கேற்ற எந்த ஓர் அணித்தலைவரும் இம்முறை தொடரில் அணித் தலைவராக இல்லை. எல்லா அணிகளும் புத்தம்புது தலைவர்களுடன் களமிறங்கவிருக்கின்றன. உலகக் கிண்ண வரலாற்றில் இப்படி நிகழ்வது முதல் முறை.

இந்த இடைப்பட்ட காலத்தில் ஓய்வு, தலைமை மாற்றம் அப்படி இல்லை என்றால் காயத்தால் அணித்தலைவர்கள் வெளியேறி விட்டார்கள். நியூசிலாந்தில் கேன் வில்லியம்சன் காயத்தால் எதிர்வரும் உலகக் கிண்ணத்தில் ஆட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

அவர் நடைபெற்று வரும் ஐ.பி.எல் தொடரின் முதல் போட்டியிலேயே காயமடைந்தது இன்றும் ஐந்து மாதங்களின் பின் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ணத்திலேயே தாக்கம் செலுத்தும் ஒன்றாக மாறிவிட்டது.

அதாவது முந்தைய உலகக் கிண்ணத்தில் ஆடிய அதே அணித் தலைவருடன் இம்முறையும் களமிறங்கும் ஒரே அணியாகவே நியூசிலாந்து இருந்தது. ஆனால் அதுவும் இப்போது முடியாத காரியமாகி விட்டது.

கடந்த முறை நியூசிலாந்து இறுதிப் போட்டிவரை முன்னேறியதோடு வில்லியம்சன் ஒன்பது இன்னிங்ஸ்களில் 578 ஓட்டங்களை பெற்று தொடர் நாயகன் விருதையும் வென்றிருந்தார்.

வில்லியம்சனுக்கு மாற்று வீரரை நியூசிலாந்து இன்னும் அறிவிக்கவில்லை. வில்லியம்சன் இல்லாத நேரங்களில் தலைமை பதவியை டொம் லதம் வகித்துவரும் நிலையில் பெரும்பாலும் உலகக் கிண்ணத் தலைவராக இவர் இருக்கக் கூடும்.

எனவே, உலகக் கிண்ணத்திற்கு இன்னும் கால அவகாசம் இருப்பதால் இப்போது அணித் தலைவர்களாக இருப்பவர்கள் கூட அப்போது அந்தப் பதவியில் நீடிப்பதில் நிச்சயமற்ற நிலை இருப்பதை மறுத்து விட முடியாது.

இதுவரை உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெற்றிருக்கும் மற்ற அணிகளை பார்த்தோம் என்றால் இதே நிலை தான் நீடிக்கிறது. ஆப்கான் அணியில் குல்புத்தீன் நயீப் தொடர்ந்து இருந்தாலும் ஹஷ்மதுல்லா ஷஹிதியே இப்போது அணியை வழிநடத்தி வருகிறார்.

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஆரோன் பின்ச் ஓய்வுபெற்ற நிலையில் அவுஸ்திரேலிய அணித் தலைவராக பட் கம்மின்ஸ் செயற்படுகிறார். பங்களாதேஷ் அணியில் மஷ்ரபி மொர்தசாவுக்கு பதில் தமீம் இக்பால் தலைவராக செயற்படுகிறார். மொர்தசா 2020 மார்ச் தொடக்கம் சர்வதேச கிரிக்கெட்டில் ஆடியதில்லை.

கடந்த முறை உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய இங்கிலாந்து அணியின் தலைவர் ஒயின் மோர்கன் ஏழரை ஆண்டுகள் வெள்ளை பந்தின் அணித்தலைவராக செயற்பட்டுவிட்டு ஓய்வுபெற்றுவிட்டார். ஜோஷ் பட்லர் இங்கிலாந்து அணித் தலைவராக உள்ளார்.

ரோஹித் ஷர்மா இந்திய அணியின் அனைத்து வகை கிரிக்கெட்டிலும் தலைவராக செயற்பட்டு வருகிறார். 2021 பிற்பகுதியில் அணித் தலைமை பொறுப்பில் இருந்து விராட் கொஹ்லி நீக்கப்பட்டார். 2020 மே மாதம் தொடக்கம் பாகிஸ்தான் அணித்தலைவராக பாபர் அஸாம் செயற்பட்டு வருகிறார். சர்ப்ராஸ் அஹமட்டுக்கு பதிலே அவர் அணியை வழிநடத்துகிறார்.

கடந்த முறை உலகக் கிண்ணத்தில் ஆடிய இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் இம்முறை உலகக் கிண்ணத்தை உறுதி செய்ய தகுதிகாண் போட்டிகளில் ஆட வேண்டும். ஆனால் அந்த இரு அணிகளிலும் கூட அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

இலங்கை அணியில் கடந்த முறை உலகக் கிண்ணத்தில் தலைவராக செயற்பட்ட திமுத் கருணாரத்ன தற்போது டெஸ்ட் போட்டிகளுக்கு மாத்திரம் சுருங்கிவிட்டார். அவருக்கு பதில் தசுன் ஷானக்க ஒருநாள் அணித்தலைவராக செயற்படுகிறார்.

மேற்கிந்திய தீவுகளின் தலைவராக தற்போது ஷாய் ஹோப் உள்ளார். 2019 உலகக் கிண்ணத்தில் மேற்கிந்திய தீவுகள் தலைவராக செயற்பட்ட ஜேசன் ஹோல்டன் அந்த உலகக் கிண்ணத்தில் சோபிக்கத் தவறியதால பதவியை இழந்தார். அதன் பின்னர் கிரன் பொலார்ட் மற்றும் நிகொலஸ் பூரனும் அணித் தலைவராக செயற்பட்டிருந்தனர்.

தென்னாபிரிக்காவும் இன்னும் உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதியை உறுதி செய்யவில்லை. எதிர்வரும் பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரில் மூன்று போட்டிகளிலும் வென்றால் அயர்லாந்து அணி தென்னாபிரிக்காவை பின்தள்ளி உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதியை உறுதி செய்யும் வாய்ப்பு இன்னும் நீடித்து வருகிறது.

கடந்த உலகக் கிண்ணத்தில் தென்னாபிரிக்க அணித் தலைவராக செயற்பட்ட பாப் டு பிளசிஸ் இப்போது அந்த இடத்தில் இல்லை. அவருக்கு பதில் டெம்பா பவுமா ஒருநாள் அணித் தலைவராக செயற்படுகிறார்.

அணித் தலைமைகள் மாறியிருக்கின்ற அளவுக்கே இம்முறை உலகக் கிண்ணத்தில் பலமான அணி என்று எந்த அணியையும் குறிப்பிட்டுக் கூற முடியாது. டி20 கிரிக்கெட் ஒருநாள் உலகக் கிண்ணத்தின் போக்கையே மாற்றிவிட்டது.

சொந்த மண்ணில் ஆடுவதால் இந்திய அணிக்கு அதிக வாய்ப்பு இருப்பதாக பொத்தாம்பொதுவாக ஓர் எதிர்வுகூறலை குறிப்பிட முடியும். ஆனால், ஆப்கான் அணி கூட எப்படி செயற்படும் என்பது இப்போது கணிக்க முடியாத ஒன்றாக இருக்கிறது.

ஆடவர் ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் 5 தொடக்கம் நவம்பர் 1ஆம் திகதி வரை நடைபெற வாய்ப்பு இருக்கிறது.

இதற்காக ஏழு அணிகளே இதுவரை நேரடி தகுதி பெற்றுள்ளன. தென்னாபிரிக்கா அல்லது அயர்லாந்து இரண்டில் ஒன்று நேரடி தகுதி பெறவுள்ளன. மற்ற இரண்டு அணிகளை தேர்வு செய்வதற்கு சிம்பாப்வேயில் வரும் ஜூன் 18 தொடக்கம் ஜூலை 9 வரை தகுதிகாண் போட்டிகள் நடைபெறும். இதில் இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகளுடன் நெதர்லாந்து, சிம்பாப்வே, நேபாளம், ஓமான், ஸ்கொட்லாந்து, அமெரிக்கா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் அயர்லாந்து அல்லது தென்னாபிரிக்கா பங்கேற்கும். இதில் முதல் இரு இடங்களை பெறும் அணிகளே உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்

2023 ஏப்ரல் 23 ஞாயிற்றுக்கிழமை





ஹாஷிம் உமர் பௌண்டேசனின் இப்தார்

05



பேராசான் மு.நித்தியானந்தனின் பவளவிழா

03



"வரலாறு படைத்த அன்னை வானொலி புகழ் விண்ணைத் தொட்டுத் திகழ்கிறது"

இசையமைப்பாளர் ஏ. மகேந்திரன் மகிழ்ச்சி

11

# கூந்தல் எனும் அழகியல்

இலக்கியம் ஒன்றைப் படைக்கும் புலவனோ அல்லது கவிஞனோ அவ் இலக்கியத்தில் பெண்ணின் அழகியலை மிகுதி பட புனைந்துரைத்துள்ள காட்சிகள் பல.

ஆம். பெண்ணின் விழிகள், முகம், கரங்கள், இடை, பாதங்கள், புருவம், தனம், நெற்றி, தோள், வாய் என அத்தனை உடல் உறுப்புக்களையும் தம் வர்ணனை கொண்டு புகழ்ந்துரைக்கின்றனர். இவற்றில் ஒன்று தான் கூந்தலும். பெண்க



ளுக்கு அழகு சேர்க்கும் கூந்தல் பற்றிய வர்ணிப்புக்கள் நம் இலக்கியங்களில் பல இடங்களில் அழகுற காப்பியம் செய்யப் பட்டுள்ளன. ஆகவே கூந்தல் அழகியலை இங்கு படித்து இன்புறுவோம்.

**~கூந்தல் பெறும் தனித்துவம் ~**

ஒரு பெண் பிறக்கும் போது தானும் பிறந்து, அவள் வளரும் போது தானும் வளர்ந்து, அவளுக்கு அழகு சேர்த்து, அவள் முதுமை அடையும் போது தானும் நரைத்து அவளுடனே சேர்ந்து மறைகின்ற தனிச் சிறப்புடையது கூந்தல் எனலாம். கூந்தல் பெண்களின் மகிழ்ச்சி, அயர்ச்சி, இன்பம், துன்பம், சினம், வேட்கை முதலான மன உணர்வுகளை வெளிப்படுத்தும் ஓர் கருவியாக இடம்பெறுகின்றது என்றால் மிகையில்லை. ஆம். பெண்கள் அலங்காரம் செய்து கொள்வதில் கூந்தலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுகின்றனர் எனலாம். தலையை வாரி, அதை பின்னி அல்லது முடிந்து அழகு நலன் கூட்டுவர். அது மட்டுமன்றி கூந்தலுக்கு வாசணைத் திரவியங்கள் பூசி, மலர்கள் சூட்டி மேலும் மெருகூட்டுவர் மங்கையர். ஆம். மங்கையர் தம் கூந்தலை, விரித்து விடப்படுவதனால் மயிலின் தோகை போன்றது எனவும், கருமை நிறமும், மேகத்தைப் போன்று சுருண்டு காணப்படுதால் கார்மேகக் கூந்தல் எனவும், கருநாகப் பாம்பினைப் போல விளங்குவது எனவும், கமுகின் ஓலை போன்றது எனவும் நம் இலக்கியப் பாடல்களில் உவமை நயம் காட்டியுள்ளனர் புலவர்கள்.

**~கூந்தலைக் குறிக்கும் பெயர் பல~**

கூந்தலை குறிப்பதற்கு நம் இலக்கியங்களில் பல பெயர்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. ஆம். அவை, குழல், சேகம், சிகை, ஓதி, குஞ்சி, கூழை, குந்தளம், விலோதம், தம்மிலம், கோதை எனவாறெல்லாம் கூந்தலுக்கு மறு பெயர்கள் கூறுவர்.

**~கூந்தல் இயற்கையிலேயே வாசணை உடையதா? இல்லையா?~**

கூந்தலுக்கு இயற்கையிலேயே வாசணை உள்ளதா? இல்லாது விடின் வாசணைத் திரவியங்களால் கூந்தல் நறுமணம் வீசுகின்றதா? என்பது பற்றி பல்வேறு கருத்துக்கள் எழுந்துள்ளன. தலைவன் ஒருவன் தலைவியின் கூந்தலில் தேன் அருந்த வரும் வண்டிடம் தன்னுடைய தலைவியின் கூந்தலின் நறுமணத்தை தவிர வேறு ஏதேனும் உள்ளதா? என வினவும் வகையில் குறுந்தொகையில் அழகிய பாடல் ஒன்று அமைந்துள்ளது. பாடலைப் பாடியுங்கள்.

“கொங்கு தேர்
வாழ்க்கை அஞ்சிறைத்
தும்பி காமம் செப்பாது
கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய
நட்பின் மயிலியற்
செறி எயிற்று
அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ
அறியும் பூவே”

பாடலின் பொருள், பூக்களில் உள்ள மகரந்தங்களில் வாழுகின்ற அழகிய சிறகுகளைக் கொண்ட தும்பியே, தேன் அருந்தும் காம உணர்ச்சியால் கூறாமல், நீ கண்டறிந்ததை கூறுவாயாக, என்னுடன் நட்புடன் பழகும், மயில் போல் அழகிய பற்களை உடைய பெண்ணின் கூந்தலை விட மணமுடையது வேறு ஏதேனும் உள்ளதோ? என்பதை கூறுவாயாக, என தலைவன் வேண்டுகின்றான். அதாவது தன் தலைவியாகிய பெண்ணின்ள கூந்தல் இயற்கையிலேயே வாசணை உடையது என்பதும், அதை விட வேறு எதுவும் வாசணை கொண்டவை அல்ல என்பதும் தலைவனது கருத்தாகும்.



**~கூந்தலுக்காக நடந்த வாதப்போர்~**

மேற்குறித்த இந்தப் பாடல் நடிகர் சிவாஜியின் திருவிளையாடல் ஆரம்பம் எனும் திரைப்படத்தின் மூலம் பிரபலமாகியது. அதில் பாண்டிய மன்னனுக்கு ஏற்பட்ட சந்தேகத்தைப் போக்குவதற்காக இறைவனே, தருமி என்பவன் மூலமாக பாடல் ஒன்றை கொடுத்தனுப்பி மன்னவன் சபையில் பாடச் செய்கின்றார். தருமியும் மன்னவன் சபையில் அப்பாடலைப் பாடி மன்னனின் சந்தேகத்தைப் போக்கினான். ஆனாலும் மன்னவன் சபையில் இருந்த நக்கீரர் எனும் புலவர் இப்பாடலில் பிழை உள்ளது எனக் கூறவே, சிவனே நேரில் வந்து நக்கீரரோடு வாதம் செய்கின்றார். ஆம். சிவனது கருத்து, பெண்களின் கூந்தலில் இயற்கையிலையே வாசணை உள்ளது என்பதாகும்.

ஆனால் நக்கீரரின் கருத்தோ, பெண்களின் கூந்தலில் இயற்கையில் வாசணை இல்லை, அது செயற்கையான வாசணைத் திரவியங்களை பூசுவதால் ஏற்படுகின்றது என்பதாகும். இவ்வாறு கூந்தலுக்கான வாதப்போர் இருவருக்கிடையில் தொடர்ந்து சென்றதையும் பின் சிவன் தன் நெற்றிக்கண்ணால் நக்கீரரை எரித்தமையினையும், அதன் பின் இறைவன் திருவருள் கொண்டு நக்கீரரை உயிர்ப்பித்தமையும் நாமறிந்த வரலாறே. ஆனால் மங்கையரின் கூந்தலில் வாசணை இயற்கையானதா? இல்லை செயற்கையானதா? என்பது இன்று வரை எம் மனதில் உள்ள சந்தேகமே.

**~குறுந்தொகையில் தவழும் கூந்தல்~**

குறுந்தொகை எனும் இலக்கியத்தில் கூந்தலை வர்ணித்துப் பாடும் பல பாடல்கள் அமையப்பெற்றுள்ளன. அதில் ஒரு பாடல், யானந்யந் துறைவோன்
தேம்பாய் கூந்தல் வளங்கெழு
சோழர் உறந்தைப் பொருந்துறை
நுண்மணல் அறல்
வார்ந்து அன்ன
நன்னெறி யவ்வே நறுந் தண்ணியவே

ஆம். தான் காதல் கொண்ட தலைவியின் அருகில் நின்று உரையாடும் போது தலைவன் தலைவியின் கூந்தலின் தன்மையைப் பற்றிக் கூறுகின்றான். என்னுடைய தலைவியினுடைய கூந்தல் தேன் பாயும் மலர்க் கூந்தல். வளம் மிக்க சோழநாட்டின் பெரிய நீர்த்துறையில் நுண்மையாக நீண்டு படர்ந்துள்ள கருமணலைப் போல அடர்ந்த நெறிப்பை கொண்டது, அது மட்டுமன்றி நறுமணமும், குளிர்ச்சியும் மிக்கது என்கின்றான் தலைவன். ஆகா, தேன் பாயும் கூந்தல், கருமணல் போன்ற கூந்தல் அருமையல்லவா?

ஆம். இத்தகு உதாரணங்கள், கூந்தலின் அழகியலை அழகுற வெளிப்படுத்தியுள்ளன. ஆக நாமும் கூந்தலின் தனித்துவத்தை படித்து இன்புறுவோம்.

கலாவிபூஷணம்
இரா. நிஷாந்தன்





பேராசான் மு.நித்தியானந்தனின் பவளவிழா லண்டனில் அண்மையில் நடைபெற்றது. மாதங்கி ஜெகதீசன் தமிழ்த் தாய் வாழ்த்து பாட ஆய்வறிஞர் ந.சரவணன், தமிழறிஞரும் வழக்கறிஞருமான செ.சிறீக்கந்தராசா, நிதிமுகாமைத் துவ விரிவுரையாளர் க.சிவானந்தன், இலக்கிய விமர்சகர் மாதவி, பதிப்பாளர் எம்.பௌசர், ஆவணப்பட இயக்குனர் எஸ்.சிறீதரன், பிரபல ஊடகவியலாளர் என். சரவணன் ஆகியோர் இங்கு உரையாற்றினார்கள். *பிரணவி* சிறீதரன், ராணி நகுலேந்திரன் ஆகியோரின் மாணவிகள், ஸ்ரீமதி துஷ்யந்தி கதிரவேலு மாணவிகள், றஜித்தா சாம் மாணவிகள் ஆகியோரின் அழகிய நடனங்கள் விழாவிற்கு சிறப்பளித்தன. அருண் சிறீஸ்கந்தராசா குழுவினரின் மெல்லிசைப் பாடல்களும் செவிக்கு விருந்தளித்தன. லண்டன் மெய்வெளி தொலைக்காட்சி நித்தியின் நேர்காணல்களை வாரம் முழுவதும் தொகுத்து வழங்கி இருந்தது. ஒளிப்பதிவாளர் எஸ். சாந்தன் முழு நிகழ்ச்சியினையும் படத் தொகுப்பிற்குள் கொணர்ந்துள்ளார். முழுநிகழ்ச்சிகளையும் றஜித்தா சாம் சிறப்பாகத் தொகுத்தளித்தார். இந்தப் பவள விழாவினை ஒருங்கிணைத்து வழங்கியதில் மீனாள் நித்தியானந்தனின் பேருழைப்பு பாராட்டத்தக்கது. நித்தியானந்தனின் பவளவிழாவில் சிறப்பு விருந்தினராக வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் கலந்துகொண்டார். பேராசான் மு.நித்தியானந்தனின் பவளவிழாவை முன்னிட்டு மலையக இலக்கியத்தின் புதுவரவாக நான்கு நூல்கள் வெளியிடப்பட்டன.



ஏ திரைப்படத்தின் திரைமுன்னோட்ட வெளியீட்டு விழா அண்மையில் சென்னை பிரசாத் ஸ்ருடியோவில் நடந்தது... விழாவில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் இந்திய பாரளுமன்ற உறுப்பினர் தொல்.திருமாவளவன் நடிகையும் இயக்குனருமான லட்சுமி ராமகிருஷ்னண் இயக்குனரும் தயாரிப்பாளருமான தர்மசீலன் செந்தூரன் விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் செயலாளர் வன்னியரசு உடன் அம்பேத்கர் வேடத்தில் படத்தின் தயாரிப்பாளர் நடிகர் ராஜகணபதி ஆகியோர் உள்ளனர்.

# தென்றலில் மிதந்து வரும் 'இசைத்தென்றல்'

தினகரன் THINAKARAN

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சித்திரைப் புத்தாண்டு மற்றும் நோன்புப் பெருநாளை சிறப்பிக்கும் முகமாக சிரேஷ்ட அறிவிப்பாளர் அபுஉபைதா மவ்ஜூட் மாதாந்தம் தயாரித்து வழங்கும் தென்றல் fmல் நேரலை இசைநிகழ்ச்சி "இசைத்தென்றல்" இம் மாதம் 30ஆம் திகதி ஞாயிறன்று மாலை 6 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆனந்த சமரகோன் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பாசில் ரஜினியின் வீனஸ் இசைக்குழுவினர்கள் இசைவழங்கும் இந்நிகழ்வில் இலங்கையின் முன்னணி பாடக பாடகிகளான பாசில், கவிக்கமல், கோபி, நித்தியகலா, அசோகன், அகீல், டாக்டர் ஜமீல், அபிலாஷா, ஆகியோர் பாடவிருக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார், முன்னிலை அதிதியாக தொழிலதிபர் சாஜஹான் (colour house)கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பதிகளாக தினகரன் பத்திரிகை பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், முன்னாள் மேல்மாகாண ஆளுனர் ஜனாப் அசாத்சாலி, தொழிலதிபர்களான அல்ஹாஜ் மௌசும், ரமீஸ் மொஹம்ட் (canso) ,Dr பஹாருதீன் ஹாஜியார், Dr கௌசலாதேவி கோவிந்தபிள்ளை, தெகிவளை நகரசபை உறுப்பினர் ஷரீனா முஸ்தபா, வாஸ்து நிபுணர் பத்மாருதம் பத்மராஜன், மொஹபத் tv நிசாம், Capital requirement செந்தில்குமார், பூவேந்திரன், மற்றும் சரண்யா டெக்ஸ் பத்மநாதன் கலந்து சிறப்பிக்கவிருக்கிறார்கள்.

விஷேட அதிதிகளாக harcourts நிறுவனத்தின் தலைவர் அஹமட் ரியாஸ், மொஹமட் இஸ்மாயில், மொஹமட் ஜப்ரி, எஸ் ஆனந்தகுமார், அமீனாஸ் ஏஜென்ட் அல்ஹாஜ் அமீர், riyah travels எம். யாசீன் , saleem manpower சலீம் ரீஷா, அல் ஹாஜ் பாரூக் (safeway travels), Dr ஹாரூன் சித்தாரா டிஸ்பென்சரி, தொழிலதிபர் lion அழகப்பன் யோகநாதன், மஹீஸ் மொஹமட் Gemlight manpower, Dr. நடராஜா சர்மா, கலாவர்சனி, ஜனாப் மசூர் (synas travels), ஜனாப் சலீம் பைசால்(saleem manpower) ஆகியோர் வருகை தரவிருக்கிறார்கள். ஊடகவியலாளர்கள், கவிஞர்கள், கலைஞர்களும் சிறப்பிக்கவிருக்கும் இந்நிகழ்ச்சிக்கு ஊடக அனுசரணை தினகரன், தினகரன் வாரமஞ்சரி, மற்றும் மொஹபத் TV. வழங்குகின்றன. இந்த இசை நிகழ்ச்சியை நேரலையாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தென்றல் fm 104.7 104.9 கேட்டு மகிழலாம்.



# இலக்கியச் செயற்பாட்டின் மூலம் மலையகத்தில் முத்திரை பதித்த கலாபூசணம் இரா. அ.இராமன்



இலக்கிய செயற்பாட்டாளர், இலக்கிய ஆர்வலர், நூலாசிரியர் என்று பன்முகப்பட்ட ஆளுமைகளைக் கொண்டார் கலாபூசணம் இரா. அ. இராமன் தம் 81 வயதில் காலடி வைத்துள்ளமையை தமிழ் கூறும் நல்லுலகம் மகிழ்ச்சி கொள்ளுகின்றது. அவரது இலக்கியப் பணியால் மேலும் பயன் பெற வேண்டும் என்பதே எமது அவா.

கண்டி மக்கள் இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. அ. இராமன் கண்டியில் தமிழ் இலக்கியப் பணியில் அரிய பங்களிப்பை செய்தவர். நிறைய எழுத்தாளர்களுடைய கவிதை, சிறுகதை , நாவல் முதலிய நூல்களுக்கு வெளியிட்டு விழா செய்து அந்நூலுக்கான அடையாளத்தையும் நுலாசிரியருக்குரிய விலாசத்தையும் உலகறியச் செய்தவர். புதிய இளம் எழுத்தாளர்கள். மூத்த எழுத்தாளர்கள் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் வரை வெளிச்சம் போட்டுக் காட்டி தமிழ் இலக்கிய ஆர்வத்தை வளர்ப்பதில் தனக்கான ஒரு விசாலத்தை பதிவு செய்து இருக்கிறார்.

1942 களில் சாதாரண ஏழைத் தொழிலாளியின் குடும்பத்தில் கண்டி மஹிய்யாவ என்னும் இடத்தில் பிறந்தார். ஏழாம் ஆண்டு வரையிலும் கல்வி கற்றார். 13 வயதில் புத்தகங்களோடு நட்புக் கொண்டு கல்கி, குமுதம் முதல் ஆழமான இலக்கிய புத்தகங்களை இன்று வரையிலும் வாசித்து வருகின்ற ஓர் நூலக வாசகன்.

இராமன் ஒரு கலை இலக்கியச் செயற்பாட்டாளர் என்ற அழகிய சொல்வடிவத்திற்குள் அவர் ஆரம்பத்தில் 1960 களில் சமூகத்தின் சாக்கடைக்குள் தள்ளப்பட்டுள்ள இளம் வாலிபர்களை ஒன்று திரட்டி மறுமலர்ச்சி மன்றமொன்றை உருவாக்கினார். அதன் தலைவராக இருந்து 1969 களில் அம்மா என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். அதில் அவர் எழுதியதோடு அல்லாமல் புதிய எழுத்தாளர்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்தார்.

தம் மஹிய்யாவ பிரதேசத்தில் நாடகம், ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி என இளம் தலைமுறையினரை எப்போதும் ஒருங்கு சேர்த்து உற்சாகமாக வைத்திருப்பதில் இராமனுக்கு ஒரு அலாதியான பேரின்பம்.

இராமன் எடுத்து வைத்த முன்னோடி விழிப்புணர்வூட்டல் முயற்சிகள்தான் மஹிய்யாவப் பிரதேசத்தில் இலை மறை காய்களாக உள்ள பல எழுத்தாளர்களும் சமூகத் தொண்டாளர்களும் உருவாவதிற்கு வழிவகுத்தது.

1970 களில் சிறுகதை எழுத்தாளர் அகஸ்தியரின் தொடர்பு இராமனுக்கு கிடைத்தது. அவர் புதிய சிந்தனையால் ஆட்கொள்ளப்பட்டார். முற்போக்கு இலக்கியங்களில் ஈடுபாடு ஏற்பட்டது. சிந்தனையில் மார்க்ஸிய விதையை ஊன்றி விட்டவர் அகஸ்தியர் தான் என்று அவர் எப்பொழுதும் கூறத் தவறுவதில்லை. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் சேர்ந்து பல நூல்கள் வெளிவருவதற்கான பணியில் பொதி சுமப்பனுக்கு ஒப்பான பங்கினை இராமன் வழங்கினார் என்றால் அதுவே உண்மை.

"கண்டி இலக்கிய செய்தி மடல்" என்ற சஞ்சிகையினையும் "இலக்கிய உலகில் இவர்கள்," "இது கதையல்ல நிஜம்" ஆகிய நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

"இராமன்" கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் என்ற இலக்கியச் செயற்பாட்டின் மூலம்



150க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் இலக்கியவாதிகளுடைய நூல்களை அறிமுகம் செய்து வைப்பதில் இராமனின் அயராத உழைப்பும் இலக்கிய ஆர்வமும் அனுபவமும் பாராட்டுக்குரியவை. இவ்வமைப்பின் செயலாளர் இக்பால் அலி ஆவார்.

இராமனின் இலக்கிய செயற்பாடுகள் பற்றி நோக்குமிடத்து இத்தனை பெரும் தகைமைகளைக் கொண்ட பெரும் அறிஞர்களோடும் எழுத்தாளர்களோடும் உறவுகளையும் வலையமைப்பினையும் கொண்டிருந்த காலத்தில் அரசியலிலும் இலக்கியத் துறையிலும் தம் பெயரை நிலையானதாக பதிவு செய்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களுடனும் ஒரு மிக நெருக்கமான உறவைப் பேணி வந்தார்.

அவருடைய " நான் என்னும் நீ " கவிதைத் தொகுதி அறிமுக விழா கண்டி சிட்டி மிசன் மண்டபத்தில் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் மூலம் பெருவிழாவாக நடத்தப்பட்டது. அன்று கண்டி சிட்டிமிசன் மண்டபத்தில் ஒரு நாளும் காணாத சனக் கூட்டம் நிரம்பின. இந்த நூல் வெளியிட்டு விழாவுக்கு பின்னர் மறைந்த அஷ்ரப் அவர்களின் உள்ளத்திலும் கவர்ந்த ஒருவராக அவரது செயற்பாடு உயரச் செய்தது.

இவர் மலையகத்திலுள்ள எழுத்தாளர்களுடைய 23 நூல்களை தமது மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஊடாக பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

அவை மட்டுமல்ல வறிய நிலையிலுள்ள மலையக கவிஞர் குடும்பத்தினருக்கு ஒரு பெருந்தொகை நிதியினை சேகரித்து தமது சங்கத்தின் ஊடாக வழங்கிய இலங்கியப் பங்களிப்பானது இராமன் எடுத்த முயற்சியின் வெற்றி என்பதை மனங்கொள்ளல் வேண்டும். மலையகக் கவிஞர்களான மலைத்தம்பி ஈழக்குமா ஆகியோரை வாழும் போதே வாழ்த்தி வழங்கியமை ஒரு முக்கிய அம்சமாகும்.

முற்போக்கு எழுத்தாளர் எஸ். அகஸ்தியரின் நினைவாக அவரது புதல்வி நவஜோதி யோகரட்ணத்தின் அனுரணையோடு தினகரன் பத்திரிகையோடு இணைந்து அகஸ்தியர் ஞாபகார்த்த போட்டி நடத்தியமை இச்சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற சிறுகதைகளை அகஸ்தியரின் புதல்வி திருமதி நவஜோதி யோகரட்ணம் அவர்கள் நூலுருவில் கொண்டு வந்து அது பெரு விழாவாக கொண்டாடப்பட்டது.

புலம்பெயர் எழுத்தாளர்களான திருமதி ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், முற்போக்கு எழுத்தாளர் அமரர் அகஸ்தியர், விமல் குழந்தைவேல் உள்ளிட்ட உள்நாட்டு வெளிநாட்டு 150 க்கும் மேற்பட்ட எழுத்தாளர்களுடைய நூல்வெளியீட்டு விழாக்களை கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஊடாக மேற்கொள்ள இராமன் அரும்பணியாற்றியுள்ளார்.

"இலக்கியத்தின் மீதும் எழுத்தின் மீதும் ஆர்வமும் அக்கறையும் இருக்கும் எவருக்கும் கண்டி இரா.அ.இராமனைத் தெரியாமல் எவருக்கும் இருக்க முடியாது. ஒரு முறை இவரைச் சந்தித்து பேசி விட்டால் இவரது உருவம் மாத்திரமல்ல குரலும் பேச்சில் இருக்கும். ஆழமான அர்த்தங்களும் மனதில் பதிந்து விடும் "என்று கூறியுள்ளார் மலையகத்தின் மறைந்த எழுத்தாளர் ரூபராணி ஜோசப். இராமன் வெறுமனே தனி மனிதர் அல்லர். ஒட்டுமொத்தமான மலையக சமூக வரலாற்றின் பிரிக்க முடியாத அங்கம்" இராமனுக்கு மகுடம் சூட்டுகிறார் பிரபல எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப். இவர் மேலும் கூறுகையில் தன்னைச் சுற்றியுள்ள தன்னுடன் பழகுகின்ற அத்தனை இலக்கிவாதிகளிலும் ஒரு கம்பனை, பாரதியை. பாரதிதாசனைக் காணுகின்ற மனப்பக்குவம் கொண்டவர் இராமன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய இலக்கிய செயற்பாட்டாளரின் வெற்றிக்கு அரச உயர் விருதான கலாபூசணம் விருது முதல் இன்னும் எத்தனையோ பல்வேறு பட்டங்களும், கௌரங்களும் அவருடைய ஆளுமைக்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளன.

1999 களில் மத்திய மாகாண முஸ்லிம் கலாசார அமைச்சு, சாஹித்திய விழாவில் கலை இலக்கிய சேவையை கௌரவித்து கலைச் சுடர் பட்டம் வழங்கி கௌரவித்தது. 2003இல் ஊவா மாகாண அமைச்சு இலக்கியத்திற்காக ஆற்றிய சேவையைப் பாராட்டி தமிழ் வேந்தன் பட்டம் வழங்கி கௌரவித்தது. 2018 களில் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட தமிழ் மொழி தின விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர். 2019 களில் தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள் சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு இந்து சமய கலாசார திணைக்களம் நடத்திய கலைஞர்களுக்கான விருது வழங்குதல் விழாவில் கலைமாமணி என்னும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இரத்தின தீப விருது என இன்னும் பல தரப்பட்ட விருதுகளையும் பட்டங்களையும் பெற்றவர்.

இவர் இலக்கியச் செயற்பாட்டாளராகவும் கண்டி இலக்கியச் செய்தி மடல் பத்திரிகையின் ஆசிரியராகவும் எனப் பல்வேறு இயங்கு தளங்களில் தம்மை இலக்கிய பணிக்காக அர்ப்பணித்த அவரை நாம் ஒவ்வொருவரும் மனம் திறந்து பாராட்டுதல் வேண்டும்.

**இக்பால் அலி...**









# ஹாஷிம் உமர் பௌண்டேசனின் இப்தார்

ஹாஷிம் உமர் பௌண்டேசன் நடத்திய இப்தார் நிகழ்வு கொழும்பு சங்ரிலா ஹோட்டலில் ஹாஷிம் உமர் பௌண்டேசனின் ஸ்தாபகத் தலைவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகருமான புரவலர் ஹாஷிம் உமர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அரச மற்றும் தனியார் துறைகளின் தலைவர்கள், பணிப்பாளர்கள், ஊடக நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க உரையாற்றினார். இதன்போது சீட்டிழுப்பும் இடம்பெற்றது. சீட்டிழுப்பின் மூலம் தெரிவான ஆறு பேருக்கு பெறுமதிமிக்க கையடக்கத் தொலைபேசிகள் வழங்கப்பட்டன.











# File Close நடிகை











கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543



பாடசாலையில் படிக்கின்ற காலத்தில் இருந்து அறிவிப்பாளராக நடிகையாக வரவேண்டும் என்ற ஆவலோடு இருந்தவர். அதற்காக தன்னால் இயன்றவரை பல்வேறு முயற்சிகள் செய்து அது கைகூடாத போது தன் ஆசைகளை கைவிட்டு விட்டு வேறு துறைக்குள் பிரவேசிக்க முயன்றவருக்கு இரண்டு குறுப்படங்களில் வாய்ப்பு கிடைத்ததுள்ளது. இதன் மூலம் கலைத்துறைக்குள் காலடி வைத்தவர் உஷா. இவரை அண்மையில் சந்தித்து கலந்துரையாடிய போது அவர் அளித்த தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

எனது பெயர் உஷா. நான் பிறந்து வளர்ந்தது கொழும்பு முகாத்துவாரம். நான் படித்தது புனித அந்தோனியார் தமிழ் வித்தியாலயம். எனக்கு பாடசாலை காலத்தில இருந்து ஒரு அறிவிப்பாளராக ஒரு நடிகையாக வரணுன்னு தான் என்னுடைய கனவு. அதுக்கு நான் நிறைய try பண்ணினேன். ஆனால் அதுக்குரிய platform கிடைக்கல்ல. அதோட இதெல்லாம் நமக்கு சரி வராதுன்னு இந்த பீல்ட விட்டு கொஞ்ச காலம் விலகி இருந்தேன். அதுக்கு பிறகு திரும்பவும் ஏன் நாம திரும்ப முயற்சி செய்யக் கூடாதுன்னு நினைத்தேன். அந்த டைம் tik tok ல சசி அண்ணா அறிமுகமானாரு. அவர் மூலமா வவுனியால ஒரு டைரக்டர் அறிமுகமாகி ஒரு short film பண்ணினேன். அது இன்னும் ரிலீஸ் ஆகல்ல. அங்க தான் எனக்கு ஆஷான்னு ஒரு நண்பி கிடைத்தார். அவள் மூலம் நம்பிக்கை சினிமா குழுவில் சேர்ந்தேன். அதில் ஒரு short film பண்ண அதுல ஒரு பொலிஸ் கெரக்டர் கிடைத்தது. film பேர் file close. அதுக்கு பிறகு 2,3 project வந்துச்சி இன்னும் start பண்ணல. திரும்ப நான் நினைச்ச நமக்கு செட்டாகாது போலன்னு விலகலன்னு நினச்சேன். அந்த டைம் தான் கண்ணகி கலாயத்தில one day பயிற்சி பட்டறை செய்தாங்க. அங்க தான் ஒருத்தர சந்திச்சேன். அவர பார்த்ததுக்கு பிறகுதான் எனக்கு ஒரு நம்பிக்கை வந்துச்சி. அது யாருன்னா.....? தான் இயக்கி எடுத்த படத்துக்கு நம்ம நாட்டுல தியேட்டார் தரமுடியாதுன்னு சொன்னவங்க முன்னாடி படத்த ஓரத்துல போடாம அவரே ஒரு தியேட்டர கட்டி அத ரிலீஸ் பண்ணாரு பாருங்க துரைராசா சுரேஷ். சூப்பர் சுரேஷ் அண்ணா உங்களுக்கு ஒரு பெரிய செல்யூட். அத கேட்டதில இருந்து எனக்கு அவர் மேல ஒரு மரியாதை. அவர பார்த்ததுல எனக்கு முழு நம்பிக்கை இருக்கு. நம்பிக்கை இருந்தால் நாம நினைச்சதை சாதிக்கலாம். நம்ம நாட்டுல நிறைய திறமையானவாங்க இருக்காங்க. நிறைய பேர் இலை மறை காயா இருக்காங்க. அவுங்களுக்கு ஒரு சரியான platform கிடைக்காம. நம்ம நாட்டுலயும் திறமையானவங்கள வெளிக்கொண்டு வர முடிஞ்ச அதைவிட ஒரு பெரிய உதவி வேற ஏதும் இல்லை.

நமக்கு platform இல்லன்னு யாரும் யோசிக்காதீங்க.... முயற்சி செய்யுங்க. நிச்சயமா நீங்க நினைச்சது நடக்கும். என்னை மாதிரி சரி வராதுன்னு ஒதுங்கி ஒதுங்கி போறவங்களுக்கு சொல்லறது நம்பிக்கையாக இருங்க. கை விட்டிராதீங்க.. பேசுறவங்க பேசட்டும்... நாம சாதிப்போம். இந்த நேரத்துல நான் நிறைய பேருக்கு thanks சொல்லிக் கொள்ள ஆசைப்படுறன். முக்கியமா என் நட்பு அம்மு இதுவரைக்கும் எனக்கு full சப்போர்ட் பண்ணி என்னை கைவிடமா என்கூடவே இருக்காங்க. ரொம்ப தேங்க்ஸ் அதே நேரம் ஆஷா, தாஸ் அண்ணா, எனக்கு சப்போர்ட் பண்ணற என் நண்பர்களுக்கு என் மனமார்ந்த நன்றி. கண்ணகி கலாலய தலைவர் இளங்கோவுக்கும் நன்றி.








காதலி: டேய்,எங்க வீட்டில் யாருமேயில்லைடா!
காதலன்: ஒரு நிமிஷம் பொறு, இதோ வருகிறேன்.
ஒரு நிமிஷம் கழித்து
காதலன்: என்னடீ,உங்க வீடு பூட்டிகிடக்கு?
காதலி: அதே சொன்னேன்ல. வீட்டில் யாருமில்லை... எல்லோரும் ஊருக்குப் போயிட்டோம்னு.
காதலன்:....!?

பொண்ணு ஆயில்ய நட்சத்திரமா?"
"ஆமா! எப்படிக் கரெக்டா சொல்றீங்க?"
"அதான் முகத்துல 'ஆயில்' வடியுதே!"





ஒரு துப்பறியும் கம்பெனி நடத்திய இண்டெர்வியூவிற்கு சென்றார் சிவா
அதிகாரி : காந்தியை கொன்றது யார்?
சிவா : என்னை வேலையில் அமர்த்தியதற்கு நன்றி. கண்டுபிடித்துச் சொல்கிறேன்.
அதிகாரி : ??!!



மாதவன்: ஒருத்தன் அவன் போன்ல இருந்து ஒரு நம்பருக்கு கோல் பண்ணினாம் கோல் போகல்ல ஏன்?
மது சூதனன்: ஒரு நம்பருக்கு கோல் பண்ணினா எப்படி போகும்? 7 நம்பருக்கு கோல் பண்ண வேணாமா?



ராமன்: "நம்ம டீச்சருக்கு என்ன ஆச்சு ?"
வீமன் : "ஏன் கேக்கறே"
ராமன் : "திருக்குறளை போர்டுலே எழுதிட்டு, அவங்களே இதை எழுதினது யார்'னு கேக்கறாங்க !!"

*குமார்: "ஏண்டா உன் மனைவி கரண்டி, தட்டு எல்லாம் தூக்கி வீசரா ?"*
*காளி: "நான்தான் சொன்னேனே, அவளுக்கு 'வீசிங்' ப்ராப்ளம் இருக்குன்னு.!!"*



*யாழினி பொருள் வைக்க யூஸ் பண்ண முடியாத பை எது? வரதன் தொப்பை*



*ரமேஸ்: தாஜ்ம ஹாலுக்கு பெயிண்ட் அடிச்சா என்ன ஆகும்?*
*சுரேஷ்: செலவாகும்*





*சுமதி: அதிக Weight தூக்குற பூச்சி எது?*
*பரிமளா: மூட்டைப் பூச்சி*

நோயாளி என்ன டாக்டர்! என்னை அறுவை சிகிச்சை பண்ணுவீங்கன்னு பார்த்தா கடி ஜோக்கா சொல்லிட்டிருக்கீங்க.
டாக்டர் இதுதான் 'அறுவை; சிகிச்சை!

அம்மா : டேய் ஏன்டா வேர்க்க வேர்க்க சாப்டுட்டு இருக்க அந்த Fan ah போட வேண்டிதான
மகன் : இல்லமா அப்பாதான் வேர்வை சிந்தி சாப்பிட சொன்னாரு





*நாய்க்கு கோபம் வந்தால் என்ன செய்யும் ? "நாய்கிட்டதான் கேக்கணும் "*
*"அதாண்டா கேட்கிறேன் பதில் சொல்லு!!"*



# இந்தியாவுக்காக 5 தங்கப் பதக்கங்களை வென்ற மகன்

மாதவன் நெகிழ்ச்சி



நடிகர் மாதவனின் மகன் வேதாந்த் சிறுவயது முதல் நீச்சல் விளையாட்டில் அதிக ஈடுபாட்டுடன் பயிற்சி பெற்றுவருகிறார். தற்போது 17 வயதான அவர் இந்தியாவின் சார்பில் சர்வதேச அளவிலான நீச்சல் விளையாட்டு தொடர்களில் பங்கேற்று வருகிறார். கடந்த பெப்ரவரியில் நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகளில் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 5,000 வீரர்கள் பங்கேற்றனர். இதில் மகாராஷ்டிரா அணிக்காக வேதாந்த் பங்கேற்றிருந்தார். அதில் 5 தங்கம், 2 வெள்ளிப் பதக்கங்களை அவர் வென்றுள்ளார்.

இந்த நிலையில் மலேசியாவில் நடைபெற்ற மலேசியன் இன்விடேஷனல் ஏஜ் குரூப் சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்துகொண்டு வேதாந்த் 5 தங்க பதக்கங்களை வென்றார். இது குறித்து மாதவன் தனது ட்விட்டர் பதிவிட்டுள்ளதாவது, "மலேசியா நாட்டின் கோலாலம்பூரில் நடைபெற்ற மலேசியன் இன்விடேஷனல் ஏஜ் குரூப் சாம்பியன்ஷிப் போட்டியில் கடவுளின் ஆசிர்வாதத்தாலும் உங்கள் வாழ்த்துக்களினாலும் வேதாந்த் இந்தியாவுக்காக 50மீ, 100மீ, 200மீ, 400 மீ மற்றும் 1500 மீ ஆகிய பிரிவுகளில் 5 தங்க பதக்கங்களை வென்றிருக்கிறார். பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.



# கவர்ச்சி ரூட்டுக்கு ரம்யா பாண்டியன்



தமிழ் சினிமாவில் வித்தியாசமான கதைகளை தேர்வு செய்து நடித்துக் கொண்டிருக்கும் ரம்யா பாண்டியன், பட வாய்ப்புகள் குறைய துவங்கியதும் இப்போது ஒரேடியாக கவர்ச்சி ரூட்டுக்கு மாறிவிட்டார். முன்பு இவர் ஜாலியாக ஒரு மொட்டை மாடி போட்டோஷூட் நடத்தி இடுப்பழகை காட்டி இளசுகளை திணறடித்தார்.

அதன் மூலம் செம பேமஸ் ஆன ரம்யா பாண்டியன், விஜய் டிவியின் ஃபேவரிட் என்டர்டைன்மெண்ட் ஷோவான குக் வித் கோமாளி நிகழ்ச்சியின் இறுதிப்போட்டி வரை முன்னேறி அசத்தினார். பின்பு பிக் பாஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பட்டி தொட்டி எங்கும் பிரபலமானார்.

தமிழில் மட்டுமல்ல மலையாள படங்களிலும் நடிப்பதற்கான வாய்ப்பு பெற்ற ரம்யா பாண்டியன், கதாபாத்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்களில் நடித்தாலும் எதிர்பார்த்த அளவு பட வாய்ப்பு கிடைக்கவில்லை. இதனால் சமீப காலமாகவே தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில் கவர்ச்சி தூக்கலான புகைப்படங்களை பதிவிட்டு வாய்ப்பு தேடுகிறார். முன்பு கவர்ச்சியை இலைமறைவாக காட்டி வந்த ரம்யா பாண்டியன், இப்போது ஓபனாகவே கவர்ச்சி ரூட்டுக்கு மாறி உள்ளார். அதிலும் இப்போது அவர் கறுப்பு உடையில் எக்குத்தப்பாக போஸ் கொடுத்து இளசுகளை திணறடித்துள்ளார். இதில் அவருடைய மேல் அழகை அப்பட்டமாக காண்பித்துள்ளார். இந்த புகைப்படங்களை பார்த்த நெட்டிசன்கள் 'வரவர கொஞ்சம் ஓவரா தான் போறீங்க மேடம்' என்று அவருடைய ஹாட் புகைப்படங்களுக்கு கமெண்ட் செய்கின்றனர்.

# கீர்த்தி சுரேஷின் Open Talk



தென்னிந்திய மொழிகளில் பிரபலமாக வலம் வரும் கீர்த்தி சுரேஷ் தன் திருமணம் பற்றி முதல்முறையாக பேசியுள்ளார். தமிழில் விக்ரம் பிரபு நடிப்பில் வெளியான இது என்ன மாயம் என்ற படத்தின் மூலம் நாயகியாக அறிமுகமானார் கீர்த்தி சுரேஷ். அப்படம் அவருக்கு சரியான துவக்கத்தை தரவில்லை. இதையடுத்து அவர் சிவகார்த்திகேயனுடன் நடித்த ரஜினி முருகன் திரைப்படத்தின் வெளியீடு தள்ளிக்கொண்டே சென்றது. கடைசியில் ஒருவழியாக ரஜினி முருகன் திரைப்படம் பல தடைகளை தாண்டி வெளியாகி மாபெரும் வெற்றிபெற்றது. இப்படம் கீர்த்தி சுரேஷிற்கு மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. இதைத்தொடர்ந்து ரெமோ, பைரவா, சர்க்கார், சாமி 2 என தொடர்ந்து முன்னணி ஹீரோக்களின் படங்களில் நடித்து முன்னணி நாயகியாக உயர்ந்தார். தமிழில் மட்டுமல்லாது தெலுங்கிலும் பல படங்களில் நடித்து வந்தார் கீர்த்தி சுரேஷ். குறிப்பாக நடிகை சாவித்திரியின் வாழ்க்கை வரலாற்று படமான மகாநதி படத்தில் நடித்ததற்காக சிறந்த நடிகைக்காக தேசிய விருதை பெற்றார் கீர்த்தி சுரேஷ். இந்நிலையில் சமீபகாலமாக படங்களில் நடிப்பதை குறைத்து வந்தார் கீர்த்தி சுரேஷ். இதனால் அவர் விரைவில் திருமணம் செய்யப்போகிறார் என்றும், அதன் காரணமாகத்தான் அவர் படங்களில் நடிப்பதை குறைத்துக்கொண்டார் என்றும் வதந்திகள் பரவின. மேலும் அவர் கேரளாவை சேர்ந்த ஒரு தொழிலதிபரை காதலித்து வருவதாகவும் பரவலாக பேசப்பட்டு வந்தன. இந்நிலையில் தனது திருமணம் பற்றி நடிகை கீர்த்தி சுரேஷே சமீபத்தில் பேசியுள்ளார்.

இன்ஸ்டாவில் அடிக்கடி ரசிகர்களுடன் உரையாடுவதை வழக்கமாக வைத்துள்ள கீர்த்தி சுரேஷ் சமீபத்தில் ரசிகர்களின் கேள்விக்கு பதிலளித்தார். அப்போது ஒரு ரசிகர் கீர்த்தி சுரேஷின் திருமணம் பற்றி கேள்வி கேட்க அதற்கு கீர்த்தி சுரேஷ் வடிவேலுவின் புகைப்படத்தை போட்டு பதிலளித்தார். அப்புகைப்படம் திருமணம் பற்றி கீர்த்தி சுரேஷ் தற்போது யோசிக்கவில்லை என்பதை உணர்த்துவதாக இருந்தது.

இதையடுத்து ரசிகர்கள் கீர்த்தி சுரேஷ் விரைவில் திருமணம் செய்துகொள்ள போகின்றார் என நினைத்தால் இப்படி சொல்லிட்டாங்களே என பேசி வருகின்றனர்.

# வீட்டை பார்க்கணும்னு சொன்னார்.. இப்படி பண்ணுவாருனு நினைக்கல



தமிழில் ஜீவன் நடிப்பில் வெளியான யூனிவர்சிட்டி படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடியதன் மூலம் தமிழ் ரசிகர்களுக்கு அறிமுகமானவர் ஷெர்லின் சோப்ரா. தெலுங்கு மற்றும் ஹிந்தியில் நிறைய படங்களில் நடித்திருக்கிறார். இந்த நிலையில் நடிகை ஷெர்லின் பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், "கடந்த 12 ஆம் தேதி துபாயிலிருந்து மும்பை வந்தேன். அப்போது எனது மேனேஜர் என்னை அழைத்து முதலீட்டாளர் ஒருவர் உங்களது மியூசிக் வீடியோவில் முதலீடு செய்வது தொடர்பாக உங்களை சந்திக்க விரும்புகிறார் என்றார். அன்று மாலை பாடல் பதிவிற்கு பிறகு எனது மேனேஜர் என்னை முதலீட்டாளரை சந்திக்க ஹோட்டல் ஒன்றிற்கு அழைத்து சென்றார். அவர் பெயர் சுனில் பரஸ்மணி லோதா. அவர் எனது பெரிய ரசிகன் என்றார். அவரது பாடல்களில் முதலீடு செய்ய விரும்புவதாக தெரிவித்த அவர், எனது மேனேஜரிடம் முன் பணம் கொடுத்தார்.இந்த பணத்தை வைத்து சுமாரான மியூசிக் வீடியோ கூட உருவாக்க முடியாது. குறைந்த பட்சம் ரூ.15 முதல் ரூ.20 லட்சம் இருந்தால் மட்டுமே ஓரளவுக்கு நல்ல மியூசிக் வீடியோவை உருவாக்க முடியும் என்று கூறினேன். பின்னர் என்னிடம் அந்தத் தொகையைத் தர அவர் உறுதியளித்தார்.பின்னர் நான் அங்கிருந்து கிளம்பியபோது தன்னிடம் கார் இல்லையென்றும் தன்னை டிராப் செய்யுமாறும் சுனில் கேட்டார். அதற்கு சம்மதித்து என் காரில் அவரை ஏற்றிக்கொண்டேன். முதலில் என்னை வீட்டில் இறக்கி விட்டு பின்னர் அவரை அவரது இருப்பிடத்தில் இறக்கிவிடுமாறு டிரைவரிடம் கூறினேன். என் வீடு வந்ததும் என் வீட்டை பார்க்க வேண்டும் என சுனில் கேட்டார். அதற்கு சம்மதித்து என் வீட்டிற்கு அவரை அழைத்து சென்றேன். அவருக்கு இரவு உணவு அளித்தேன். உணவுக்கு பிறகு நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது அவர் என் மேல் கைவைக்கத் தொடங்கினார். தனக்கு விருப்பமில்லை என அவரை எச்சரித்தேன்.எனது அறைக்கு வந்து தொடர்ந்து பாலியல் தொல்லை கொடுத்தார். இதனையடுத்து சுனில் மீது காவல்துறையில் புகார் அளித்தேன். அவர் மீது 3 பிரிவுகளின் கீழ் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றார்.

# நடிகையை தரதரவென இழுத்துச் சென்ற கணவர்



சிம்புவின் சிலம்பாட்டம் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானவர் நடிகை சனா கான். தொடர்ந்து பயணம், தம்பிக்கு எந்த ஊரு போன்ற படங்களில் நடித்திருந்தார். அயோக்யா உள்ளிட்ட படங்களில் ஒரு பாடலுக்கு நடனமாடியுள்ளார். இதுதவிர இந்தி, தெலுங்கு படங்களில் சனா கான் நடித்திருக்கிறார். மேலும் ஹிந்தி பிக்பாஸ் நிகழ்ச்சியில் போட்டியாளராக கலந்துகொண்டு இறுதி நாள் வரை வந்து இரண்டாம் இடம் பிடித்தார். சமீப காலமாக திரைப்படங்கள் எதிலும் நடிக்கவில்லை. சனா கான் 2020 ஆம் ஆண்டு முஃப்தி அனஸ் சயத் என்பவரை திருமணம் செய்துகொண்டார். தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஹிஜாப் அணிந்த போட்டோவை பகிர்ந்திருக்கிறார். அவரது பதிவில், எனது கடந்த கால வாழ்க்கையில் பெயர், புகழ், பணம் எல்லாம் என்னிடம் இருந்தன. ஆனால் நிம்மதி இல்லாமல் இருந்தது. கடந்த 2019 ஆம் ஆண்டு ரம்ஜானின் போது கனவில் கல்லறை வந்தது. இதுதான் உன் முடிவு என கடவுள் சொல்வது போல இருந்ததது. அதன் பின் இஸ்லாமிய உரைகளை கேட்க ஆரம்பித்தேன். அதில் உங்கள் கடைசி நாள் ஹிஜாப் அணிந்த முதல் நாளாக இருக்க விரும்பவில்லை என்ற வாசகம் என்னை ஆழமாக சிந்திக்க வைத்தது. மறுநாள் எனது பிறந்த நாள். அன்றிலிருந்து ஹிஜாப் அணிய ஆரம்பித்தேன் என்று குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில் சமீபத்தில் மும்பையில் நடைபெற்ற இஃப்தார் விருந்தில் தனது கணவர் முஃப்தி அனஸ் சயத்துடன் சனா கான் கலந்துகொண்டார். இந்த விழாவில் அவரது கணவர் சனா கானை கையைப் பிடித்து விறுவிறுவென இழுத்து செல்கிறார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. கர்ப்பமாக இருக்கும் பெண்ணை இப்படியா இழுத்து செல்வது என ரசிகர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் சனா கான் அளித்துள்ள விளக்கத்தில், "எனக்காக கவலைப்பட்டதற்கு நன்றி. எங்கள் கார் டிரைவரை எங்களால் அழைக்க முடியவில்லை. நான் நீண்ட நேரம் அப்பகுதியில் நின்றதால் எனக்கு வேர்த்துக்கொட்டியது. இதனால் எனக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அதனால் அவர் என்னை அப்பகுதியிலிருந்து விரைவாக அழைத்து செல்லும் நோக்கில் அப்படி செய்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

# மோசமான வேலை பார்த்த ஷாலினி



கொலிவுட்டின் நட்சத்திர தம்பதியர்கள் ஆக ஜொலித்துக் கொண்டிருக்கும் அஜித் ஷாலினி இருவரும் எந்தவித கருத்து வேறுபாடும் இல்லாமல் தங்களுடைய ரசிகர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கின்றனர்.

இன்னிலையில் சீனியர் ஆர்டிஸ்ட் இடம் ஷாலினி மோசமாக நடந்து கொண்டதை தெரிந்ததும் நொந்து போய் மன்னிப்பு கேட்க சொன்ன அஜித்தை பற்றி, அந்த ஆர்ட்டிஸ்ட்டே சமீபத்தில் பேட்டி ஒன்றில் வெளிப்படையாக சொல்லி இருக்கிறார். தமிழில் மட்டுமல்ல தெலுங்கு, கன்னடம் போன்ற பிற மொழிகளிலும் ஏகப்பட்ட படங்களில் வில்லனாகவும் குணச்சித்திர கதாபாத்திரங்களிலும் நடித்து கலக்கியவர் நடிகர் பப்லு.

இவர் இப்போது சின்னத்திரையில் மூத்த நடிகராக டாப் சீரியல்களில் அப்பா போன்ற கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார். அதிலும் சன் டிவியில் ஒளிபரப்பாகும் கண்ணான கண்ணே சீரியல் இவருக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. இவர் நடிகர் அஜித்துடன் நிறைய படங்களில் இணைந்து நடித்திருக்கிறார்.

அந்த காலகட்டத்தில் ஒரு ரெஸ்டாரண்டில் அஜித்தின் மனைவி ஷாலினியும், பப்லுவும் அடிக்கடி சந்தித்துக் கொண்டதாகவும், ஆனால் அவர்கள் இதுவரை எந்த படத்திலும் இணைந்து பணியாற்றாததால் அவருடன் பேச தயங்கியதாகவும் தெரிவித்தார். ஆனால் ஒரு கட்டத்தில் ஓட்டல் உரிமையாளரிடம் இருந்து பப்லுவின் போன் நம்பர் வாங்கி அவரிடம் பேசிய ஷாலினி மன்னிப்பு கேட்டு இருக்கிறார்.

ஏனென்றால் பலமுறை பப்லு ஷாலினியிடம் பேச முயற்சித்த போதும், அதை அவர் கொஞ்சம் கூட கண்டு கொள்ளவில்லை. இது எப்படியோ அஜித்துக்கு தெரிய வர, யாரிடமும் இவ்வளவு மோசமாக நடந்து கொள்வது மேனஸ் இல்லை என்று பீல் பண்ணினாராம். என்னதான் பப்லு உன்னுடன் சேர்ந்து பணிபுரியாவிட்டாலும் அவர் சினிமாவில் உன்னை விட சீனியர். அவரிடம் பேசுவது தான் முறையாக இருக்கும் என்று ஷாலினிக்கு அட்வைஸ் கொடுத்த அஜித், அவரிடம் மன்னிப்பு கேட்கவும் அறிவுறுத்தினாராம்.

இதை அடுத்து பப்லுவிடம் ஷாலினியும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மன்னிப்பு கேட்டதாக சமீபத்திய பேட்டியில் தெரிவித்துள்ளார். பப்லு பல வருடம் கழித்து இந்த சீக்ரெட்டை லீக் செய்து அஜித் எவ்வளவு நல்ல குணமுடையவர் என்பதை வெளிப்படுத்தியுள்ளார். இந்த வீடியோவை தற்போது தல ரசிகர்கள் சோசியல் மீடியாவில் ட்ரெண்டாக்கிக் கொண்டிருக்கின்றனர்.



# முகம் பட்டு போன்று ஜொலிக்க



சரும பராமரிப்பு என்பது எல்லா காலத்திலும் முக்கியம். அதிலும் கோடை வெப்பத்தில் சூரியனின் புறஊதாக்கதிர்களினால் சருமம் பாதிக்கும்.

சருமத்தில் இருக்கும் மந்தம் போக்கி, ஜொலிப்பை உண்டு செய்துவிடும் பளபளப்பான ஃபேஸ் பேக் நம்மிடமே உண்டு. கோடைக்காலத்தில் சருமத்தில் உண்டாகும் பிரச்சினையில் மிக முக்கியமானது மந்தமான சருமம். சரும பராமரிப்பு இருந்தாலும் சருமம் டல்லாகவே இருக்கும்.

சருமத்துக்கு ஆரோக்கியமான பளபளப்பை அளித்து சூரியனிடமிருந்து சருமத்தை பாதுகாக்கும் ஃபேஸ் பேக் போடலாம். அதிலும் கோடையில் பழங்கள் உள்ளுக்கு பயன்படுத்துவது போன்று சருமத்துக்கு வெளிப்பூச்சுக்கும் பயன்படுத்தும் போது சருமம் அதிகமாக ஜொலிப்பதை பார்க்கலாம்.

உங்கள் சருமத்தை மினுமினுக்க வைக்கும் அற்புதமான ஃபேஸ் பேக் பற்றி பார்க்கலாம்.

கோடையில் பழ ஃபேஸ் பேக் போடுவதால் சருமத்துக்கு நீரேற்றம் கிடைப்பதோடு சருமம் குளிரவும் செய்கிறது. பழங்களில் வைட்டமின்கல், தாதுக்கள், அக்ஸிஜனேற்றங்கள் மற்றும் இயற்கையான சர்க்கரைகள் நிறைந்துள்ளன. இவை சருமத்துக்கு புத்துயிர் அளித்து ஊட்டமளிக்க செய்கிறது.

தர்பூசணி நீர்ச்சத்து நிறைந்த பழம். இது வைட்டமின் சி மற்றும் அக்ஸிஜனேற்றத்தின் செழுமையுடன் உள்ளது. இது ஒரு இயற்கையான டோனராக செயல்படுகிறது. சரும வீக்கத்தை குறைக்க உதவுகிறது.

# எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க

இன்று பலரும் தொலைந்து விட்டு தேடிக் கொண்டு இருப்பது மகிழ்ச்சி என்னும் உணர்வே. இந்த மகிழ்ச்சி என்பது திடீரென்று கிடைப்பதில்லை.

பயிற்சியின் மூலமே நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருக்க முடியும் என ஆய்வு தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த பதிவில் எப்பொழுதும் மகிழ்ச்சியாக வாழ பின்பற்ற வேண்டிய வழிகள் பற்றி பார்ப்போம்.



தினமும் ஒவ்வொரு மனிதரும் போதியளவு நேரம் தூங்க வேண்டும். குறைந்தது 6 மணித்தியாலங்களாவது கட்டாயம் தூங்க வேண்டும். போதியளவு நேரம் தூங்குவதனால் மனஅழுத்தங்களில் இருந்து விடுபட வைப்பதோடு மனதில் உள்ள துன்பங்களை குறைத்து நேர்மறை எண்ணங்கள் உருவாக வழிவகுக்கும்.

தினமும் குறைந்தது 10 நிமிடங்களாவது கண்களை மூடி அமைதியான இடத்தில் இருந்து தியானம் செய்ய வேண்டும். இயலுமான வரை தியானம் அதிகாலையில் செய்வது நன்று. தியானம் செய்வதால் மனதில் இருக்கும் குழப்பங்களை தீர்ப்பதோடு மனதில் அமைதி மற்றும் மகிழ்ச்சி ஏற்பட வழிவகுக்கும். நாம் விரும்பும் நம்முடைய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் எல்லா நேரங்களிலும் துணை நிற்கும் நண்பர்களோடு நம்முடைய நிகழ்கால சந்தோஷங்களை பகிருதல் மகிழ்ச்சிக்கு வழி வகுக்கிறது.

இயலுமானவரை மகிழ்ச்சியாக இருப்பதற்கு நன்றியுணர்வு மிக்க மனிதர்களோடு நல்ல உறவினைப் பேணிக் கொள்ள வேண்டும். எப்போதும் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய பசுமையான இடங்களுக்கு சென்று இயற்கையை இரசிக்க வேண்டும். இதனால் குழப்பத்தில் இருக்கும் மனது கூட எல்லாவற்றையும் மறந்து மகிழ்ச்சி அடையும்.

உடற்பயிற்சி தினமும் செய்வதால் உடம்பில் உள்ள எண்டோர்பின் மற்றும் செரோடோனின் ஹால்மோன் போன்ற சுரப்பிகள் அதிகளவில் சுரக்கப்பட்டு மகிழ்ச்சி உணர்வை அதிகரிக்கும்.

எப்போதும் மனதிற்கு பிடித்தமான மென்மையான இசையைக் கிரகித்தல் மனதிற்கு இதமான மகிழ்ச்சியை தரும்.

எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் ஒரு நிமிடமேனும் அவற்றை எல்லாம் ஒதுக்கிவிட்டு நம்முடைய மனதுக்கு பிடித்த விடயங்கள் மீது ஈடுபடுவதால் மனம் மிகுந்த மகிழ்ச்சியை உணரும். எப்பொழுதும் மனதுக்கு பிடிக்காத எதிரான விடயத்தை செய்ய கூடாது.

கோபம் வரும் வேளைகளில் அவசரப்பட்டு வார்த்தைகளால் திட்டாமல் மனதை அமைதிப்படுத்த வேண்டும்.

நாம் தவறு செய்யும் பட்சத்தில் யார் எவரென்று பாராமல் உடனே மனதால் மன்னிப்பு கேட்க வேண்டும். இயலுமானவரை எப்பொழுதும் பிறருக்கு தீமை செய்யாது எல்லா நேரங்களிலும் அடுத்தவர்க்கு நன்மை செய்ய வேண்டும். இது மனதிற்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

நன்றி செலுத்துதல் முடியுமானவரை எப்பொழுதும் நமக்கு நன்மை செய்பவர்களுக்கு உடனே அல்லது சந்தர்ப்பம் கிடைக்கும் நேரங்களில் எல்லாம் நன்றி கூறுதல் கட்டாயமாகும்.

இன்றைய வேலைப் பளுவுக்கு மத்தியில் அமைதி, மன மகிழ்ச்சி போன்றவற்றை தொலைத்து விட்டு தேடித் திரிபவர்கள் மேற்குறிப்பிட்ட வழிகளைப் பின்பற்றி எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.



# அழகு

ஒரு பெண் தன்னை அழகாகக் காட்டிக் கொள்ள விரும்புவது அவளுடன் பிறந்த குணம். அவளுடைய அந்தச் சுதந்திரமான ஆசை, கலாச்சாரத்தின் ஓர் அம்சமாகி விட்டது.

செல்வம் படைத்த ஆணையே பெண் விரும்பி மதிக்கிறாள். எழில் மிகுந்த பெண்ணையே ஆண் விரும்பி ரசிக்கிறான். இனப்பெருக்கம் நிகழ்வதற்காக இயற்கை சில தந்திரங்களைச் செய்திருக்கிறது. பூக்கள்கூட தங்களை வண்ணமயமாக அழகுபடுத்திக் கொள்வதால்தான் தேனீக்களைக் கவர்ந்திழுக்கின்றன. மிருக இனத்திலும் பறவை இனத்திலும் கூட இது பரவலாகக் காணப்படுகிறது.

மனிதர்கள் இந்த விஷயத்தில் வேறுபட்டவர்கள்.

ஓர் ஆண் தன்னை வீரியம் மிக்கவனாகக் காட்டிக் கொள்ள விரும்புகிறான். அந்தச் சக்தி உடல் பலமாகவும் இருக்கலாம், பண பலமாகவும் இருக்கலாம்.

ஆண்களுக்குப் பணம் என்னவெல்லாம் செய்யுமோ, அதைப் பெண்களுக்கு அழகு செய்து தரும். பணம் படைத்த ஆணிற்கு தடை என்பது பெரும்பான்மையாக இருப்பதில்லை. எங்கு வேண்டுமானாலும் அவனால் தடையின்றிப் போக முடியும். அழகுமிக்க பெண்ணிற்கோ, பணம் தேவையில்லை. அந்த அழகே போதுமானது. உலகில் பெரும்பான்மையான கதவுகள் அவளுக்காகத் திறந்து நிற்கும்.

செல்வம் படைத்த ஆணையே பெண் விரும்பி மதிக்கிறாள். எழில் மிகுந்த பெண்ணையே ஆண் விரும்பி ரசிக்கிறான்.

அன்றாட வாழ்வியலில் இதுவே நடைமுறை என்பதால், பெண்கள் தங்களை அழகாகக் காண்பிக்கப் பிரயத்தனப்படுகிறார்கள். இது இயல்பானதுதான்!

"பணத்தை விட அழகு வேகமாக அழியக்கூடியது அல்லவா? அதை முன்னிலைப்படுத்துவது பரிதாபம் அல்லவா?"

பணம், அழகு இரண்டுமே நிலையானவை அல்ல! அவற்றை வைத்து இறுதியான தீர்ப்புகள் வழங்க முடியாது.

காலம்காலமாக இப்புவியின் ஜனத்தொகையில், ஆண்களை விட பெண்களின் விகிதம் கூடுதலாகவே இருந்து வந்திருக்கிறது. பழங்காலத்தில், ஆண்களின் எண்ணிக்கை போர் காரணமாக மேலும் குறைந்தது. குறைவான ஆண்களுக்கு அதிகம் பெண்கள் போட்டி போட வேண்டியிருந்ததால், அழகு முன்னிலை பெற்றது. மாறாக, ஆண்களைவிடப் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருந்திருந்தால், நிலைமை தலைகீழாகி விடும். இன்றைக்குச் செயற்கைக் கருத்தடை காரணமாக ஆண் பெண் விகித நிலை மாறிவிட்டது.

# "வரலாறு படைத்த அன்னை வானொலி புகழ் விண்ணைத் தொட்டுத் திகழ்கிறது"

## விசாரத, வித்வான், கலாபூஷணம் பிரபல இசையமைப்பாளர் ஏ. மகேந்திரன் மகிழ்ச்சி

இலங்கைத் தமிழிசைக் குழுக்களுக்கு இனிய வசந்தகாலம் 1980 களில் ஆரம்பமாகிறது எனலாம். திரும்பும் இசையெல்லாம் இசை நிகழ்ச்சிகள். மேடை, திருமண, திருவிழா நிகழ்ச்சிகளில் போட்டி போட்டுத் திறமைகளைக் காட்டிவந்தனர் இசைக்கலைஞர்கள்.

அன்றைய முன்னணி தமிழிசைக் குழுக்களின் வரிசையில் விசாரத, கலாபூஷணம், வித்வான் ஏ. மகேந்திரனின் "மகேந்திராஸ்" குழுவும் களத்தில் கலக்கியது ரசிகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

இன்று பிரபலமாகியுள்ள பல பாடகர்கள், பாடகிகள் மகேந்திராஸ் குழுவில் பங்கேற்று பயிற்சி செய்யப் பெற்றுப் பாடியவர்கள்தாம்.

சினிமாப் பாடலுக்குள் வட்டமிட்ட பாடகர் பாடகிகளின் திறமையை பட்டைத் தீட்டும் எண்ணத்துடன் சுயமாக மெட்டமைத்துப் பாடும் ஆற்றலை "அரங்கேற்றம்" என்ற நிகழ்ச்சி மூலம் வெளிப்படுத்த ஆரம்பகர்த்தாவாக விளங்கியவர் மகேந்திரன் மாஸ்டர்.













முதன் முதலாக ரூபவாஹினியில் குரல் பரிசோதனை நடத்தி பல பாடக, பாடகிகளுக்கு "உதயகீதம்" நிகழ்ச்சியில் பாடும் அரிய வாய்ப்பை ஏற்படுத்தியதோடு நேயர்களின் நெஞ்சங்களில் "இதய கீதமாக" ஒலிக்க வழியமைத்துக் கொடுத்தவர். இலைமறை காயாக இருந்த புதிய கலைஞர்கள் நாடளாவிய ரீதியில் புகழ்பெற்று விளங்கினர்.

சுயாதீன தொலைக்காட்சியில்" புதுத் தென்றல்" நேரலை தமிழ் நிகழ்ச்சியை அறிமுகப்படுத்திய பெருமை இவரையே சாரும்.

தமிழ்நாடு இசைக் கல்லூரியில் "வித்துவான்" பட்டம்பெற்ற இவருக்கு இதுவரை இரண்டு தேசிய விருதுகள் கிடைத்துள்ளன.







"நினைவுடன்" என்ற இந்திய சின்னத்திரைக்கு இசையமைத்த முதல் இலங்கையர் என்ற பதிவும் இவரது இசையாளுமைக்கு அங்கீகாரமாகும். "அந்த தேவதை யாரோ?" நம் நாட்டுத் திரைப்படமும் இவரது இசை உருவாக்கத்தில் என்பது இன்னுமொரு மகிழ்ச்சித் தகவல்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகராக செயலாற்றும் ஏ. மகேந்திரன் மாஸ்டர் சந்தைப்படுத்தல் முகாமைத்துவப் பகுதிக்கான சிரேஷ்ட ஆலோசகராகவும் பணியாற்றிவருகிறார். இவரது வருகையின் பின்னர் புத்தூக்கம்பெற்று அதிகம் இலாப மீட்டும் களமாக ஏற்றம் காண்கிறது.

ஒலிபரப்புத்துறையில் நீண்டகால ஆளுமைமிக்க தலைவர் ஹட்சன் சமரசிங்க இவரது புதிய எண்ணங்களுக்கு அங்கீகாரமும் ஒத்துழைப்பும் வழங்கி பக்கபலமாக நிற்பதால் தலைவரோடு கைகோத்து இ.ஒ.கூட்டுத்தாபனத்தை வெற்றிப் பாதையில் வீறுநடைபோட அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகிறார்.

தனது இசைப் படைப்புகளை உருவாக்கி பதிவுசெய்வதற்கென்றே தனக்கென நவீன ஒலி கருவிகளை உள்ளடக்கிய "பிரியம்" ஒலிப்பதிவு கூடத்தை நடத்திவருகிறார்.

அதிநவீன இசைக் கருவிகளின் உருவாக்கத்தில் இவரது "ஆதரய" சிங்கள இறுவட்டு போக்குவரத்து, ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன முன்னிலையில் அண்மையில் வெளியிடப்பட்டது.

புதுமையான பல நிகழ்ச்சிகளை உருவாக்கி அறிமுகப்படுத்திவரும் ஏ. மகேந்திரன் மாஸ்டரின் மற்றுமொரு எண்ணத்தில் உதித்த "மதுரகீதம்" அமோக வரவேற்பைப் பெற்றுவருகிறது. மாதமொரு மாபெரும் இசை நிகழ்ச்சியை நிலையக் கலையகமான சமரகோன் மண்டபத்தில் நடத்தி ஆளுமைமிக்க சிரேஷ்ட கலைஞர் ஒருவரை கௌரவித்து தங்கப் பதக்கம், விருது வழங்கிவருகிறார்.

இசைத்துறை வழிகாட்டிகளாக தனது அப்பா மற்றும் கலாபூஷணம் கே.எம். சவாஹிர் மாஸ்டர், "மூசிக்நூரி" நயீம் மாஸ்டர், என்டனி சாமி மாஸ்டரை நன்றியுடன் என்றும் நினைவுகூர்கிறார். அன்னை வானொலி புகழ் விண்ணைத் தொடவேண்டுமென்று விரும்புகிறார் வாழ்த்துகிறோம்.

"கலாபூஷணம்"
**கலைஞர் கலைக்கமல்**

## நிறம் தீட்டுங்கள்



## சரியான விடையைத் தெரிவுசெய்க



உயிருள்ளவை, உயிரற்றவை

| | | | |
|---|---|---|---|
| | உயிருள்ளது / உயிரற்றது | | உயிருள்ளது / உயிரற்றது |
| | உயிருள்ளது / உயிரற்றது | | உயிருள்ளது / உயிரற்றது |
| | உயிருள்ளது / உயிரற்றது | | உயிருள்ளது / உயிரற்றது |
| | உயிருள்ளது / உயிரற்றது | | உயிருள்ளது / உயிரற்றது |

சரியான விடையைத் தேர்வு செய்க

1. மணி அடி / பம்பரம் ஆடு
2. கம்பு எடு / எலிப் பல்
3. மரப் பல்லி / மணி அடி
4. ஆண் கரடி / பாடம் படி

## வழிகாட்டுங்கள்




## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



# முகத்திற்கு அழகு சேர்க்கும் முடியலங்காரம்

**ஆடைபாதி அழகுபாதி போல் முடி அலங்காரம் செய்தலும் அழகைத் தருகிறது. முடியினை அலங்காரம் செய்வதனூடாக முகம் அழகு பெறும்.**

நாகரீக வளர்ச்சியில் மனிதன் தன்னை மறைத்துக் கொள்ள கற்றுக் கொண்ட பின்னால் படிப்படியாக தன்னை அழகு படுத்துவதிலும் முன்னேற்றம் காணத் தொடங்கினான்.

இறைவன் அழகானவன். அழகையே விரும்புகிறான். அழகு என்பது உடலழகு மாத்திரமல்ல உளம், இடம் என்பனவும் சேர்ந்த சுத்தமாகும். அதனால்தான் அகத்தின் அழகு முகத்தில் தெரிகிறது என்பார்கள்.

அகம் தூய்மை காணும் போது முகம் வெண்மை காணும் முடி அலங்காரத்தை பொருத்தவரை அதில் பல்வேறு வடிவங்களில் கத்தரிக்கப் படுகிறது.

பல்வேறு சமூகமும் சமயங்களும் முடியினை இவ்வாறுதான் கத்தரிக்க வேண்டும் இந்தளவுதான் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்ற கட்டுக் கோப்புகளை வரையறை செய்துள்ளன. பாடசாலை சூழலைப் பொருத்தவரை மாணவர்கள் முடியினை இந்த வரம்புக்குள்தான் வெட்டிக்கொள்ள வேண்டும் என்ற அறிவுறுத்தல்களை வழங்கி மாணவர்களின் பெற்றார்களிடமும் விடயங்களை தெளிவுபடுத்தி பிள்ளைகளின் ஒழுக்க விதிகளில் கவனம் செலுத்துமாறு வேண்டி நிற்கிறது.

இதன் அடிப்படையில் நோக்கும்போது முடி வெட்டுதல் அழகை எதிர்பார்த்து மட்டுமல்ல அங்கு ஒழுக்கம் என்பதும் மிக பிரதானமாக கடைபிடிக்கப்பட வேண்டிய ஒன்றாக அமைகிறது.

இன்றைய சூழலில் ஒவ்வொருத்தரும்தான்விரும்பிய அலங்காரத்தில் முடியினை வெட்டி தமக்கான *method* அல்லது *stile* இதுதான் என்ற கொள்கையுடன் இருப்பதையும் நாம் காணலாம்.

ஒருவருக்கு பிடித்தது இன்னொருவருக்கு பிடியாமல் இருக்கலாம். சில அலுவலகங்களில் முடி இந்த முறையில்தான் வெட்ட வேண்டும் அறிவுறுத்தல்களும் உண்டு.







எனவேதான் வேலைத் தளங்களில் உள்ளவர்கள் ஆடம்பரமற்ற சாதாரண முறையில் முடிகளை சரி செய்து கொள்வதை நாம் பல இடங்களில் அவதானிக்கலாம்.

வெளிநாடுகளில் முடி அலங்காரம் செய்பவர்கள் சிலர் கழுத்துப்பட்டிகள் (*Tie*) மற்றும் வெண்மையான ஆடைகள் அணிந்து இருப்பார்கள். அதைப் பார்க்கும்போது இவர்களிடம் வெட்டினால் நன்றாகயிருக்குமே மனம் தோன்றும். கவர்ச்சியுடன் அவர் இருப்பதன் காரணமாக பல வாடிக்கையாளர்களை கவரும் விடயமாகவும் அது உள்ளது. மற்றும் குளிரூட்டப்பட்ட கடை அலங்காரம் என்பன வாடிக்கையாளர்களை திரும்பி பார்க்க வைக்கும் ஒரு சிறந்த சிந்தனையாகும்.

"வியாபாரத்திற்கு அழகு விளம்பரம் என்பார்கள் "அது இங்கு நடைமுறைப் படுத்தப் படுகிறது. இலங்கையிலும் தலை நகரங்களில் இம்முறை காணப்படுகிறது. இதுவொரு சிறந்த நேர்மையான சுய தொழிலாகும்.

பிறரை திருப்திப் படுத்தி அவரது அழகை மேம்படுத்தும் தொழில் என்று சொல்லலாம். ஆரம்ப காலங்களில் முஸ்லிம்கள் இந்த தொழிலை செய்வதில் விருப்பின்றி இருந்ததை அறிவோம்.

பிற்காலத்தில் இந்த தொழிலின் மகத்துவம் நேர்மை, பொய், களவில்லாத தன்மை என்பதை புரிந்து கொண்டதால் அநேகர் இப்போது முடி அலங்காரம் செய்யும் தொழிலைச் செய்து வருகிறார்கள்.

அந்த வகையில் எமது கிண்ணியா மண்ணிலும் பல சகோதரர்கள் அழகான காட்சி அறைகளுடன் இந்தப் பணியை செய்கின்றார்கள்.

இஸ்லாமிய கடமைகளான ஹஜ் மற்றும் உம்றா வழிபாடுகளில் முடி இறக்குதல் அல்லது சில பகுதிகளை கத்தரித்தல் என்பன முக்கிய செயற்பாடுகளில் ஒன்றாக இருந்து வருகிறது.

எனவேதான் மனித செயற்பாடுகள் பல; இறைவனின் விரும்பத்தை அவனது பொருந்திக் கொள்ளக் கூடியதாகவும் அமைந்துள்ளது.

செய்யும் தொழிலே தெய்வம் என்பார்கள். நேர்மை, உண்மைத்தன்மை, நம்பிக்கை என்பன செய்கின்ற தொழிலில் ஒவ்வொருவரிடமும் இருத்தல் வேண்டும் .

அதுவே பலரை ஈர்த்தெடுக்கும். முடிவெட்டுதலும் ஒரு கலைதான். எதையும் மனம் விரும்பி செய்வதனூடாகத்தான் வாழ்க்கைக்கான வெற்றி தங்கியுள்ளது. சாஜி சலூன் என்ற பெயரில் கடை நடத்தி வரும் இவர் ஒரு பாடகராகவும் தனது திறமைகளை வெளிக்காட்டி வருவதோடு சமூக அக்கறை கொண்ட ஒருவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நேர்காணல்: கவிச்சுடர்
**ஏ.எம். கஸ்புள்ளா**

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181

# புராணப்படனம்

இஸ்லாமிய இலக்கிய மரபில் பல்வேறு கலை, இலக்கியச் செயற்பாடுகள் சமூகத்தளத்தில் நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே இயங்கி வந்துள்ளன. இதன் நீட்சி வடிவ மாற்றம் அல்லது செயற்பாட்டு மாற்றத்தினூடாக நவீனப்பட்டு அல்லது காலமாற்றத்தின் பாற்பட்டு நிகழ்கிறது.

இஸ்லாமியப்புலவர்களால் முன்னெடுக்கப்பட்ட நாமா, கிஸ்ஸா, மசாலா படைப்போர் மற்றும் பதம் பாடுதல், பக்கீர் பைத், சலவாத்து மாலை, புராணப்படனம் எனப் பலவகை கடந்த நூற்றாண்டில் கோலோச்சியுள்ளது.

அவற்றின் பெறுமானம் இளந்தலைமுறைக்குக் கடத்தப் படாமை நமது கலை இலக்கியத்தளத்தின் வரலாற்றுப் புரிதலுக்கு தடையாகிறது என்பது கவனத்துக்குரியது. அழிந்து போன அல்லது அழிநிலையிலுள்ள கலை இலக்கியங்களுக்குப் புத்துயிரூட்டுவதும் சமூகக்கடமையாகிறது.

புராணப்படனம் என்பது புராணங்களைப்பாடி அவற்றிற்குப் புலவர்கள் பொருள் விளக்கமளிக்கும் ஒரு அவைசார் செயற்பாடாகும். அக்காலத்தில் புராணங்களைப் பாடவல்ல கலைஞர்கள் இருந்துள்ளனர். அவர்கள் இலக்கியங்களிலிருந்து பாடல்களைத் தெரிவு செய்து அழகிய குரலில் ராகமெடுத்துப் பாடுவார்கள். அப்பாடல்களுக்கு மொழிப்புலமையும் செய்யுளாற்றலும் மிக்கப் புலவர்கள் பொருள் விளக்கமளிப்பார்கள். அவையோர் வினா எழுப்புவார்கள். புலவர்கள் விடையளிப்பார்கள். இவ்வாறான ஒரு இலக்கிய அவை முன்னம் இருந்துள்ளது. இதனூடாக புராதன இலக்கியங்கள் உயிர்ப்பூட்டப்பட்டிருந்தன.

கதப்பிரசங்கமென அறியப்பட்ட செயல்வடிவத்தையொட்டிய ஆனால் அதிலிருந்து வேறான படனம் பொருள் கூறுதல் நமது வழக்கிலிருந்துள்ளது.

அகில இலங்கைத்தமிழ் தினப்போட்டிகளில் முஸ்லிம் நிகழ்ச்சி என்ற பெயரில் திறந்த குழுநிலைப் போட்டியொன்றுள்ளது. முஸ்லிம் மாணவருக்கான அவர்களது கலை, இலக்கிய, கலாசார மயப்பட்ட இப்போட்டியில் கடந்த காலங்களில் வெவ்வேறு நிகழ்ச்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பக்கீர் பைத், பிறைப்பாட்டு, கதம்பம், நாடகம், வார்ப்பு நாடகம், வானொலி நாடகம், கவிதா நிகழ்வு என நீண்ட பட்டியலொன்றுள்ளது.

அதன் தொடர்ச்சியாக இம்முறை 'புராணப்படனம் இலக்கிய அவை'' என்ற பழைமையில் புதுமை காணும் நிகழ்ச்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சமூகப் பெறுமதி மிக்கதாகப் புராண படனம் பொருள்கூறும் பாரம்பரிய நிகழ்த்துகைக்கு புத்துயிரூட்டும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கென சீறாப்புராணம் முன்மொழியப்பட்டுள்ளது. இதிலிருந்து இரண்டு அல்லது மூன்று பாடல்களைத் தெரிவு செய்து அவற்றை நிகழ்த்துகைக்குட்படுத்தல் வேண்டும். இலக்கிய அவையில் ஆறு முதல் எட்டுப்பேர் பங்கு பெறலாம். இவர்களில் புராணம் பாடுவோர், பொருள் கூறும் புலவர்கள், வினா எழுப்பும் அவையோர் எனப் பாத்திரங்கள் அல்லது நிகழ்த்துகைக்காரர் இடம் பெறுவர். இலக்கிய அவையை நவீன மயப்படுத்தும் பொருட்டு புத்தாக்கப் பாத்திரத்தையும் பயன்படுத்த முடியும்.

பாடல்கள் கர்நாடக சங்கீத இராகங்களைத்தழுவியதாக அல்லது விருத்தமாக அல்லது பாவோதல் மரபில் அல்லது கஸீதா மரபில் அல்லது புதிய இசைவடிவத்தில் பாடப்படுவதோடு அவற்றுக்கான பொருள் விளக்கத்தைப் பொருள்கூறு புலவர்கள் அழகுற நிகழ்த்தல் வேண்டும்.

இலக்கிய அவைக்கென பொருத்தமான ஆடை அலங்காரம் மற்றும் எளிய மேடைஏற்பாடு அமையலாம். எனினும் மேடைக்காட்சியமைப்புக்கு வழங்கும் முக்கியத்துவம் நிகழ்த்துகைக்கு வழங்கும் முக்கியத்துவம் சார்ந்து அமைதல் வேண்டும்.

இளஞ் சமூகத்துக்கு பாரம்பரிய வடிவங்களை அறிமுகம் செய்யும் இத்தகைய முயலுகைகள் பாராட்டுக்குரியன.

மறுவாசல்
முல்லை முஸ்ரிபா

## மகடூஉ 100 - மகளிர் கவிதை

'இந்தக்கவிதைகள் புதிய ஐந்தாம் திசையைச் செதுக்குகின்றன. நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் ஐம்பூதங்களோடு ஆறாம் பெரு சக்தியாகப் பெண்ணை அடையாளம் காட்டுகின்றன. பெண்மையை அடையாளம் காட்டுகின்றன.''

ஆண்டாள் பிரியதர்சினியின் பின்னட்டைக் குறிப்பு பெண் கவிதையின் பெறுமானத்தை செதுக்குகிறது. வளரி வெளியிட்டுள்ள மகடூஉ 100 பெண் கவிஞர்களின் கவிதைகளடங்கிய தொகுப்பு அதன் கனதியை அவாவி நிற்கிறது. அருணா சுந்தரராசன் தொகுப்பு வளரி எழுத்துக்கூடம் வெளியீடாக 2022 செப்டம்பரில் வந்துள்ளது.




'ஆணாதிக்கச் சதிகள் தகர்த்து மூடநம்பிக்கை மூழ்காமல் பகுத்தறிவு நெறியில் தமிழ்ப்பெண்கள் தலை நிமிர்ந்திட ஓய்வின்றி உழைத்த தந்தை பெரியாருக்கும் மகாகவி பாரதியாருக்கும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுக்கும் ''சமர்ப்பித்துள்ள இந்தக்கவிதைப் பனுவல் வளரியின் வேராக பரந்து விரிந்திருக்கும் பன்னாட்டுப் பெண் கவி உறவுகளுக்கு நன்றியோடு வெளி வந்துள்ளது.

உலகெங்கும் வாழும் தமிழ்ப்பெண் கவிகளின் கவித்திரட்சி 'மகடூஉ 100'. ஒரே தொகுப்பில் நூறு வானம்

ஒவ்வொரு வானமும் புதுப்புது விடியல்; ஒவ்வொரு விடியலும் புதுப்புது தரிசனம்; ஒவ்வொரு தரிசனமும் புதுப்புது பிரகடனம் என அணிந்துரைக்கிறார் ஆண்டாள் பிரியதர்சினி. இந்தத் தொகுப்பின் அணிந்துரையில் காத்திரமான பெண்மொழியைக் கனதியோடு தருகிறார் ஆண்டாள்.

மண்ணில்தான் ஒருநூறு வேறுபாடுஉண்டு. விண்ணில் மாறுபாடு ஏதுமில்லை என பெண்தன்மையை விண்ணுயர்த்திப் பேசுவது பெண் குணாம்சக் கவிதைகளில் நிரம்பி வழிகிறது. ஓராயிரம் நிறம் கொண்டது காதல் முதல் பறவைகளுக்கு இறகுகள் பொருத்தியவள் வரையான மகடூஉ 100 கவிதைகள் பாடுபொருளில் பெண்மொழிதலை முன்னிறுத்துகின்றன.

'ஓயாத அலைகளில் ஓராயிரம் நிறங்கொண்ட பெண் தீராப்பிரியங்களின் பெருவெளி'' என பெண்வெளியை கவிதை நிறுவுகிறது. மகடூஉ நூறெங்கும் பெண் மனம் அலைவுறுகிறது; துடித்தெழுகிறது; வீரிக்கிறது; தியாகிக்கிறது; உணர்வில் பொங்குகிறது; தீயாகிறது; புயலாகிறது; பூவாகிறது; புது வனமாகிறது.

'பூவாகி, காயாகி, கனியாகித் தழைத்திடுமே சிறுவிதை ஊனாகி, உயிராகி, மதியாகி வாழ்ந்திடுமே பெண்கவிதை'' என பெண் கவியுரைக்கிறாள்.

பெண் பொருளைப்பாடுபொருளாக்கும் பாங்கு, பெண்மொழியை உயிர்துடிப்புறச் செய்யல், கவிச்சொல்முறை, சொற்தேர்வு, சொல்லிறுகக்கவி இழைத்தலென மகடூஉ 100 மேலும் அவாவுற வேண்டும். 'மூன்று நாழிகை கழித்து அழுகிறோம்' 'போன்றதான பொருள்கூறுமுறை வளரலாம்.

ஆண்டாள் பிரியதர்சினி பின்னட்டையில் 'தமிழ் இலக்கியத்தின் நெடும்பரப்பு இனிமேல் மகடூஉ 100க்கு முன்னால்; மகடூஉ 100க்கு பின்னால் என வகைப்படுத்தப்படும்'' என்கிறார். இந்தக்கூற்று மெய்ம்மையெனில் இனிவரும் காலம் பெண்மொழி கிளர்த்தியெழ வேண்டும்.

'காலக்கீறல்களை முதுகில் சுமந்து மீண்டும் மீண்டும் உயிர்த்தெழல் பற்றிப் பறவைகளுக்கே கற்றுத் தந்தவள் இவள். தன் சிறகுகளை நம்பும் சுயம்பி''வளரிக்கு வாழ்த்துக்கள்.

## சிங்கார நினைவு 7

ஈழத்து இசை நாடகக் கலைக்குப் புத்துயிரூட்டியவர் மெட்ராஸ் மெயில். மெட்ராஸ் மெயில் என்ற ஒருவருடைய பெயரை நான் அறிந்த போது அவர் பற்றிய தேடல் ஆவல் ஏற்பட்டது. அது படிக்கும் காலம். அவரைக்காண முடியவில்லை. பின்னொருநாள் கல்வித்திணைக்களம் போன போது மிகச்செழுமையான சற்றுப்பருத்த மிகக்கருமையான சுறுசுறுப்பான ஒரு மனிதரைக்கண்டேன். பிறகுதான் நான் கண்டவரின் பெயர் மெட்ராஸ் மெயில் எனத் தெரிந்து கொண்டேன்.

முல்லைத்தீவின் கலைகளோடு தொடர்புற்ற நாமம் அது. செல்லையா மெட்ராஸ் மெயில் 1945இல் முல்லை புதுக்குடியிருப்பில் பிறந்தவர். அவரது தந்தையார் மெட்ராஸ் மெயில் என்ற பெயரைத் தன் மகனுக்குச் சூட்டியிருக்கிறார். இந்தப் பெயர் திரையுலகப்பெயர். 1936இல் வெளிவந்த திரைப்படம் மெட்ராஸ் மெயில் படத்தின் மீதான தீராத காதல் தந்தைக்குள் வளர்ந்து ஒன்பது வருடத்தின்பின் பிறந்த மகனை மெட்ராஸ் மெயில் ஆக்கினார் செல்லையா.

இவர் செல்லையா மெட்ராஸ் மெயிலானார். புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம், யாழ். சோமஸ்கந்தாக் கல்லூரி, கொழும்பு பல்கலைக் கழகம் என்பவற்றில் கற்ற மெட்ராஸ் கல்வித்துறை நிர்வாக உத்தியோகத்தராகக் கடமை புரிந்தவர்.

கலை, இசை, நாடகம், நாட்டுக் கூத்து, நாட்டார் பாடல் என கலைத்துறைக்கு அரிய பங்காற்றிய முல்லையின் ஆளுமை மெட்ராஸ் மெயில் அவர்கள்.

எழுத்தாளராகவும் திகழ்ந்த இவர் வன்னி வள நாட்டார் பாடல் (1981), ஆனையை அடக்கிய அரியாத்தை (1993), இசை நாடக மூத்த கலைஞர் வரலாறு (1999), மண் வாசனையில் மூன்று நாடகங்கள் (2000), மரபு வழி இசை நாடகங்கள் ஒன்பது(2001) ஆகியவற்றை கலை இலக்கியப்புலத்திற்குத் தந்தார். இவற்றுக்கென வடக்கு சாகித்ய விருதை இருமுறை வென்றார். தேசிய சாகித்ய விருதும் கண்டார்.

செல்லையா மெட்ராஸ் மெயில் என்ற கலைஞர் நாட்டுக் கூத்துக்கலைக்கு உயிரூட்டியவர். பாரம்பரிய கலையார்வலர், அண்ணாவிமார்களோடு சேர்ந்து கலை வளர்த்தவர்; ஊக்குவித்தவர், பாதுகாத்தவர், ஆவணவாக்கம் செய்தவர்.

கிராமிய ஆடற்கலைஞரான மெட்ராஸ் மெயில், மயிலாட்டம், கோலாட்டம், கும்மி, ஒயிலாட்டம், கரகம், காவடி, குதிரையாட்டமென களத்தில் கலை படைத்தவர்.

பன்முகக்கலை வடிவமான மெட்ராஸ் மெயில் கூத்து இசை நாடகங்களைத் தயாரித்திருக்கிறார். கண்ணகி வழக்குரை, காத்தவராயன் கூத்து, வேழம்படுத்த வீராங்கனை கூத்து என்பன முக்கியமானவை. இசை நாடகத்திலும் காலூன்றினார். வள்ளுவர் வாக்கு, சத்தியவான் சாவித்திரி, வள்ளி திருமணம் என்பன இவரது தயாரிப்பிலானவை. இவற்றுள் வேழம்படுத்த வீராங்கனை கதை முல்லைத்தீவுக்குரிய தனிச்சிறப்பானது.

கூத்து நெறியாளராக பரிமாணமடைந்த இவர் கோவலன் கூத்தை முல்லையில் மேடையேற்றினார். பாண்டியனாக தன் நடிப்பாற்றலை வெளிப்படுத்தினார். வேழம்படுத்த வீராங்கனையைத் தனித்துவத்துடன் நெறியாள்கை செய்தார்.

இத்தகைய கலை ஆளுமை 2010இல் அமரத்துவமடைந்தார். எனினும் அவர் வளர்த்த கூத்துக்கலையின் இசை முல்லை மண்ணில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. செல்லையா மெட்ராஸ் மெயில் முல்லைக்குச் சிங்கார நினைவுதான்.

## பூச்சியாதல்

ஒளவன் கவிதை

சிறு பூச்சியாகிக்கரையும் பொழுதுள்
இறகின் கனத்தில் தவிக்கிறது காலம்
பூச்சியின் ஓடுபாதையில்
சுவடுமற்ற வெம்பலின் அலைதலை
எவரும் கண்டிரா கண்ணீரின் தெறிப்பை
பொத்திற்றுப் பொழுது
அதன் காலடிச்சுவடெங்கே
சிறு பறப்பின் வலியெங்கே
திசை கடக்கும் ஆவல்பூத்த கனவெங்கே
பொழுதின் அலைச்சலை அள்ளிப்பறக்கும்
சிறுபூச்சி
நீயாகி
பெருவனத்தின் உச்சியொன்றில் தெரிகிறாய்
முகங்கரையா விம்பம்
நீ
வனமெங்கும் விருட்சமாகி
கிளையாகி
பறவையாகி
சிறகாகி
நான்
அலையும் பூச்சி

## மணவையின் மருத்துவ குறிப்பு

# கண்புரை அறுவை சிகிச்சை என்றால் என்ன?

கண்ணுக்குள் இருக்கும் இயற்கையான க்ரிஸ்டலைன் லென்ஸ் மங்கலாகி விடுவது தான் மிகவும் பிரபலமான கண் நோயான 'கண்புரை' (Cataract) என்பது. இதன் காரணமாக கண்பாதை தடிபட்டு உங்களது பார்வையைக் குட நீங்கள் இழக்க நேரிடலாம். 'மோதியாபிந்து' (Motiyabindoo கண்புரை) என்பது பெரும்பாலும் முதியோர்களை தாக்கும்; ஆயினும் இது குழந்தைகளையும் பாதிக்கலாம். சிகிச்சை அளிக்காமல் விட்டு விட்டால் இதனால் பார்வை முழுவதுமாகவும் பறிபோய்விடலாம்.

அதிருஷ்டவசமாக, கண்நோயை உண்டாக்கும் குருட்டுத்தன்மையை மாற்றி விட முடியும். உங்களது வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளில் மங்கலான பார்வை குறுக்கிடும்போது, கண் மருத்துவரிடம் ஆலோசனை பெற்று, பின்னர் 'மோதியாபிந்து' (Motiyabindoo கண்புரை) அறுவை சிகிச்சையை செய்து கொள்ளலாம். மேலும், கண்புரை அறுவை சிகிச்சையை செய்து கொள்வதை தாமதப்படுத்தினால் உயர் கண் ரத்த அழுத்தம், ஆப்டிக் டிஸ்க் சேதமடைவது, க்ளூகோமா போன்ற பிற கோளாறுகள் உருவாகவும் வழிபிறக்கும்.

கண்புரை அறுவை சிகிச்சையை சரியான நேரத்தில் செய்து கொள்ளுமாறு ஆலோசனை தரும் உங்களது டாக்டர் அறுவைச் சிகிச்சையையும் செய்வார். கண்புரை அறுவை சிகிச்சை செய்து முடிக்க மொத்தமே 2030 நிமிடங்கள் மட்டுமே ஆகும். மருத்துவமனையில் இரவு தங்க வேண்டிய அவசியமே இராது.

கண்புரை அறுவை சிகிச்சையை சரியான நேரத்தில் செய்து கொள்ளுமாறு ஆலோசனை தரும் உங்களது டாக்டர் அறுவைச் சிகிச்சையையும் செய்வார். கண்புரை அறுவை சிகிச்சை செய்து முடிக்க மொத்தமே 2030 நிமிடங்கள் மட்டுமே ஆகும். மருத்துவமனையில் இரவு தங்க வேண்டிய அவசியமே இராது.

கண்புரை அறுவை சிகிச்சைக்கு எப்படி தயார் செய்து கொள்வீர்கள்? கண்புரை அறுவை சிகிச்சைக்கு உடல், உளர்வு, உளவியல் ரீதியான முன்னேற்பாடுகளும் நிதியுதவியும் தேவை. கண்புரை அறுவை சிகிச்சை தொடர்பான ஆலோசனை பெறும்போது உறவினர் (அ) ஒரு நெருங்கிய நண்பருடன் சென்றால் நல்லது. கண்புரை சிகிச்சைக்கான சரியான வகையான லென்ஸை தேர்வு செய்யும் முடிவெடுக்கவும் இது உதவும்.கண்புரை அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்கு முன், மருத்துவர் ஒருவரிடம் சென்று உடல் பரிசோதனை செய்து உடலின் செயல்பாடு மற்றும் பொதுவான அலகுகளான இரத்த அழுத்தம், இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு, ECG ஆகியவை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதை உறுதி செய்யவும். அறுவை சிகிச்சைக்கு முன்பு உண்பதற்கு சிலவகை மருந்துகளை உமது கண் மருத்துவர் உமக்குப் பரிந்துரைக்கலாம்.



தமிழகத்தில் மருத்துவ சிகிச்சைகளை பெற விரும்புவோருக்கு இலவசமாக வழி காட்டி உதவிகளைப் பெற்றுக்கொள்ள
மணவை அசோகன்
(0778978792)

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் -7



"உடல்நிலை வளர்ச்சிக்காக அம்மா பனங்கள்ளு கொடுத்தார்" என்று நாடகக் கம்பனியில் அண்ணன் சக்கரபாணி உட்பட யாருக்கும் சொல்லாதே; அதற்குப் பதிலாக கசாயம் கொடுத்தார் என்றுதான் நீ சொல்ல வேண்டும் என சத்தியபாமா எம்.ஜி.ஆரைக் கேட்டுக் கொண்டார்.

ஒரு மாத முடிவில் எம்.ஜி.ஆரின் உடல் வளர்ச்சியடைந்திருந்தது. நன்றாக சாப்பிடும் நிலையையும் அடைந்து விட்டார். அம்மா, எம்.ஜி.ஆரை நோக்கி "உடல் வளர்ச்சியடைந்தது போல் உனது மன உறுதி, தன்னம்பிக்கை, தொழில் என்பனவும் வளர்ச்சியடைய வேண்டும் ராமச்சந்திரா" என மகிழ்வோடு வாழ்த்தினர். "அதுதான் எனது நோக்கமும் கூட. உடல் வளர்ச்சியும் தேவைதான். அதுபோல எனது தொழிலிலும் நான் முன்னேற வேண்டும் அம்மா" என எம்.ஜி.ஆர். கூறியதும் சத்தியபாமா அவரைக் கட்டியணைத்து உச்சி முகர்ந்து மிகவும் ஆனந்தப்பட்டார். "ராமச்சந்திரா... உனது தொழிலில் நீ மென்மேலும் உயர வேண்டும். எந்தக் குறையும் இல்லாது வளர்ச்சி அடைய வேண்டும் என நான் கடவுளை வேண்டிக் கொள்கிறேன்" என்று கூறி எம்.ஜி.ஆரை நாடகக் கம்பனிக்கு அனுப்பி வைத்தார்.

மீண்டும் நாடகக் கம்பனிக்கு எம்.ஜி.ஆர். சென்றதும் முதலாளி, சக்கரபாணி உட்பட எல்லோரும் "ஓரளவு உனது உடம்பு நன்கு வளர்ச்சியடைந்திருக்கிறது" என்று கூறி சந்தோஷப்பட்டார்கள். நாடகக் கம்பனியில் எம்.ஜி.ஆருக்கு தினமும் பல பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. அந்தக் கால கட்டத்தில் எம்.ஜி.ஆருக்கு சண்டைப் பயிற்சி மிகக் கடுமையாக இருந்தது. எம்.ஜி.ஆர். சண்டைப் பயிற்சியை மிகவும் சுறுசுறுப்பாகக் கற்றுக் கொண்டார். எம்.ஜி.ஆர். சிறுவயதிலேயே புத்திக் கூர்மையுடன் பயிற்சிகளை மேற்கொண்டதால் நாடகக் கம்பனி முதலாளி பெருமையடைந்தார். பயிற்சிகளை சொல்லித் தரும் வாத்தியார்களிடம் எம்.ஜி.ஆர். மிகவும் மரியாதையாகவும் பயபக்தியுடனும் நடந்து கொண்டார். பயிற்சிகளில் எம்.ஜி.ஆருக்கு நடனம் கற்றுக் கொள்வது சற்றுக் கடினமாகவே இருந்தது. அந்தக் காலத்தில் நாடகங்களில் ஆண்கள்தான் பெண் வேடமும் போட வேண்டும். எனவே நாடகத்தில் நடனம் முக்கியம். எம்.ஜி.ஆருக்கு பாட்டும் நடனமும் சரியாக வரவில்லை. எம்.ஜி.ஆரின் நடன ஆசிரியரான சிறிராமுலு என்பவர் மிகவும் கோபக்காரர். எம்.ஜி.ஆர். அவரிடம் நடனம் கற்கும்போது பல தடவைகள் தப்பும் தவறுமாக ஆடி அடி வாங்கியுள்ளார். எப்படியோ மிகவும் சிரமப்பட்டு எம்.ஜி.ஆர். நடனத்தைக் கற்றுக் கொண்டார். இந்த நடனக் கலை பிற்காலத்தில் சினிமாவுக்கு மிகவும் உதவியாக இருந்தது.

எம்.ஜி.ஆர். தொடர்ந்து தனது நடிப்பில் எந்தக் குறையும் ஏற்பட்டு விடக் கூடாது என்ற எண்ணத்துடன் "அடுத்து நமக்கு என்ன வேடத்தில் நடிப்புப் பாத்திரம் கிடைக்கும்? அதில் நாம் எவ்வாறு புகழ் அடைய வேண்டும்?" என்று திட்டமிட்டு தனது பணிகளைத் தொடர்ந்தார். பல நாடகங்கள் நடித்துக் கொண் டிருக்கும்போது தனக்கு போதுமானளவு சம்பளம் நிர்ணயிக்கிறார்கள் இல்லை என கவலைப்பட்டார். ஏதோ கிடைப்பதை அம்மாவுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் தொடர்ந்து நாடகங்கள் நடித்தும் போதியளவு சம்பள அதிகரிப்பு இல்லை என்ற கவலை தொடர்ந்திருந்தது. எம்.ஜி.ஆர். நாடகங்களில் நடிக்கும்போது முக்கியமான பாத்திரங்களில் நடிப்பவர்களாக பி.யு. சின்னப்பா, காளி, என். ரத்தினம் ஆகியோர் நடித்துக் கொண்டிருந்தார்கள். பெரிய நடிகர்களுக்கு சாப்பாடு, உடை, தங்கும் வசதி, சம்பளம் அதிகமாக இருக்கும். முக்கிய வேடங்களில் நடிப்பவர்கள் மற்றைய சக நடிகர்களுடன் அதிகம் பழக மாட்டார்கள். இப்படிப்பட்ட பெரிய நடிகர்களுடன் பேச வேண்டும், பழக வேண்டும் என்றெல்லாம் எம்.ஜி.ஆருக்கு மிகவும் ஆசை. ஆனால் எம்.ஜி.ஆரால் முடிவதில்லை. எம்.ஜி.ஆர். சிறுவர் என்ற காரணத்தினாலும் கம்பனிக்கு புதியவர் என்ற காரணத்தினாலும் பெரிய நடிகர்களுடனான தொடர்பு குறைவாகவே இருந்தது. "இவர்களைப் போல் நடித்துப் புகழ் பெற வேண்டும். அப்போதுதான் அதிக சம்பளம் கிடைக்கும்; அம்மாவுக்கும் அதிகமாகப் பணம் அனுப்ப முடியும்" என்று எம்.ஜி.ஆர். எண்ணி அதன்படி தனது பணியைத் தொடர்ந்தார்.

(தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றிய அறநெறி புத்தாண்டு விழா



தினகரன் வாரமஞ்சரி











அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையுடன் எதிர்வரும் 2023.04.29 ஆம் திகதி சனிக்கிழமை மட்டக்குளி, காக்கைதீவு கடற்கரை பூங்காவில் அறநெறி பாடசாலை மாணவ மாணவிகளுக்காக தமிழ், சிங்கள புத்தாண்டு விழாவொன்றை நடத்தவுள்ளது.

இதன்போது அறநெறிப் பாடசாலை மாணவ மாணவிகளுக்கு இடையே பண்ணிசைப் போட்டி, கோலப் போட்டி, 100 மீட்டர் ஓட்டப் போட்டி, பணிஸ் உண்ணும் போட்டி, பலூன் உடைக்கும் போட்டி, சங்கீத கதிரைப் போட்டி, விநோத உடைப் போட்டி, யானைக்கு கண் வைக்கும் போட்டி, கோலப் போட்டி, அறநெறி அழகு ராணிப் போட்டி, மாவில் நாணயம் தேடும் போட்டி என பல்வேறு போட்டிகளை நடத்தவுள்ளது. இதில் சில போட்டிகள் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் அறநெறி பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களுக்காகவும்நடத்தப்படும். இந்தப் போட்டிகள் கொழும்பில் நடத்தினாலும் இதில் நாட்டில் உள்ள அனைத்து அறநெறி பாடசாலைகளும் பங்குபற்றலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் புத்தாண்டு விளையாட்டு விழாவில் தெரிவு செய்யப்படும் அழகு ராணிக்கு மேசை மின் விசிறி பரிசாக வழங்கப்படும். அழகு ராணி போட்டியில் அறநெறி பாடசாலையில் பயிலும் 13 வயதுக்கு மேற்பட்ட மாணவிகள் பங்குபற்றலாம்.

கோலப் போட்டியில் வெற்றி பெற்றால் Rice Cooker ஒன்று பரிசாக வழங்கப்படும். இந்த ரங்கோலி கோலப்போட்டியில் அறநெறிப் பாடசாலையில் பயிலும் எந்த வயதினரும் பங்குபற்றலாம். கோலம் போடும் போட்டியில் கலந்து கொள்பவர்கள் கோலம் போடுவதற்குத் தேவையான அனைத்தும் போட்டியில் கலந்து கொள்பவர்களே கொண்டு வரவேண்டும். இங்கு நடத்தப்படும் அனைத்து போட்டிகளுக்கும் சுடு தண்ணீர் போத்தல், கிளாஸ் பெட்டிகள் என பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

இது தவிர இங்கு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கெரோக்கி பாடல்கள் பாடுவதற்கும் வாய்ப்புகள் வழங்கப்படும். எனவே கெரோக்கி பாடல்கள் பாடக்கூடியவர்களும் இதில் கலந்து கொள்ளலாம். இதில் அறநெறி பாடசாலைகளில் இருந்து எத்தனை மாணவர்களும் பங்கு பற்றலாம். எத்தனை ஆசிரியர்களும் பங்கு பற்றலாம். எத்தனை பெற்றோர்களும் கலந்து கொள்ளலாம்.

இங்கு நடத்தப்படும் இந்துமத அழகு ராணிப் போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி மாலை 4 மணிக்கு நடத்தப்படும். இதில் கலந்து கொள்பவர்கள் சேலை அல்லது பாவாடை சட்டை தாவணி அணிந்து கூந்தலில் பூ சூடி நெத்தியில் விபூதி, ஆகியன திலம் இட்டிருக்க வேண்டும். கைகளில் வளையல்களும் கால்களில் கொலுசும் அணிந்திருக்க வேண்டும். இங்கு நடை, உடை, பாவனை ஆகிய அனைத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

பூமாலை கட்டும் போட்டியில் அறநெறி பாடசாலையில் பயில்கின்ற மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் எவரும் கலந்து கொள்ளலாம். பூ மாலை கட்டுவதற்குரிய பூக்கள் மற்றும் தேவையான அனைத்தும் போட்டியில் கலந்து கொள்பவர்களே கொண்டு வரவேண்டும். இப்புத்தாண்டு விழாவின் இறுதியில் நம் நாட்டுப் பாடகர்களும் பாடகிகளும் கலந்து கொள்ளும் இன்னிசை பாட்டு நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

# மனம் கவரும் வகையில் மணப்பெண் அலங்காரம் Shareefaவின் கலை வண்ணம்












மணமகள் அலங்காரம், சிகை அலங்காரம், முகம் அலங்காரம் என அழகு அலங்காரம் பல செய்து மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்து வருபவர் M. Shareefa..

இவர் கடந்த ஒன்பது ஆண்டுகளாக மணமகள் அலங்காரங்களுடன் சிகையலங்காரம் ஆகியவற்றை சிறப்பாக செய்து இத்துறையில் குறுகிய காலத்திற்குள் பிரபல்யமாகி பேரபிமானம் பெற்று வரும் ஒரு இளம் பெண்மணி என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தக் கலையை முறையாக கற்று கடந்த காலங்களில் தனது வீட்டில் வைத்து சுயதொழிலாக செய்து வந்த இவர், இவரைத் தேடி வருகின்ற, இவரை நாடி வருகின்ற வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்க அதிகரிக்க தனது அழகுக் கலை நிலையத்தை விஸ்தரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். இதன் பயனாக இவ்வளவு காலமும் வீட்டில் வைத்து அலங்காரங்களை செய்து இந்தப் பெண் அதற்கென ஒரு நிலையத்தை அமைக்க முயற்சி செய்தார். இவரது எண்ணப்படி இந்த நிலையத்தை அமைப்பதற்கான நிலையத்தை தேர்ந்தெடுத்து அங்கு தனது அழகுக் கலை நிலையத்தை அண்மையில் திறந்து வைத்தார்.

Sherry bridals என்னும் மணமகள் அலங்கார நிலையத்தை கடந்த வாரம் இவர் கொழும்பு 10, மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டத்தில் இல. A/14/S/07, ஜே. ஏ. மில்டன் பெரேரா மாவத்தை எனும் முகவரியில் திறந்து வைத்துள்ளார்.

இது வரை காலமும் நூற்றுக்கணக்கான மணப் பெண்களுக்கு அழகு அலங்காரத்தை செய்துள்ள இவர், அவ்வப்போது மணப் பெண்கள் தவிர திருமணம் வீடுகளுக்கு செல்ல வரும் பெண்களுக்கும் இளம் பெண்களுக்கும் முக அலங்காரம், சிகை அலங்காரம் என பல்வேறு அலங்காரங்களை செய்து வருகிறார்.

இவர் இவற்றுக்கு குறைந்த கட்டணத்தை அறவிட்டு இங்குள்ள மக்களுக்கு வழங்கும் சேவையாக தொடர்ந்து வருகிறார்.

சில வேளைகளில் திருமணம் நடைபெறும் மணடபங்கள், மணப்பெண் இல்லங்கள் ஆகியவற்றுக்கும் சென்று அலங்காரப் பணிகளை செய்து அனைவரையும் உற்சாகத்தில் ஆழத்தி வருகிறார்.





இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.